# பொருளடக்கம்


## பகுதி - I கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகள் (பெரியது)

- சிலுவையின் பயணம் நம்பிக்கையின் பயணம் - 1
  (இளைஞர்களுக்கான சிலுவைப்பாதை சிந்தனைகள்)
  அருட்பணி. பேட்ரிக் பால், சென்னை – மயிலை உயர்மறைமாவட்டம்
- நீங்கள் வாழ்வு பெறும் பொருட்டு - 16
  (மீட்பின் பாதையில்)
  அருட்சகோ. ஜெயராணி, CIC, கல்லாத்துப்பட்டி
- சாமி படைச்ச பூமி - 31
  (இயற்கையோடு சிலுவைப்பாதை)
  அருட்சகோ. ராஜன், பூந்தமல்லி
- தந்தையே! இவர்களை மன்னியும் - 46
  (மூத்த சகோதரரின் மனநிலையில்)
  அருட்சகோ. குழந்தை பா, பூந்தமல்லி
- இயேசுவின் பாதையும் நமது பயணமும் - 64
  (மனசாட்சியோடு பேசும் சிலுவைப்பாதை)
  அருட்தந்தை. விசுவாசம், SdC கடலூர்
- இயேசுவின் கல்வாரிப்பயணம் - 81
  (மனமாற்றத்திற்கான சிலுவைப்பாதை)
  அருட்சகோ. சிறிய புஷ்பம், FIHM கடலூர்
- இயேசுவோடு கல்வாரிப் பயணம் - 92
  (எண்ணத்தை சீரமைபதற்கான சிலுவைப்பாதை)
  திருமதி. சான்ரோ, மெல்ரோசாபுரம்

## பகுதி - II கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகள் (சிறியது)

- புனித குவனெல்லாவின் சிந்தனைகள் வழியில் சிலுவைப்பாதை - 103
  – போனிஜோ
- இயேசுவின் பாதையோடு நம் பாதையும் - 107
  – அருட்சகோ. ராஜான், பூந்தமல்லி
- சிலுவை அன்றும்... இன்றும்... - 115
  – அருட்சகோ. குழந்தை பா, பூந்தமல்லி

**பகுதி - III ஆங்கில சிலுவைப்பாதைகள்**

- Jesus - My Great Saviour - 123
  - Miss. Olga
- The Way to Calvary - 136
  - Mrs. Zandra

**பகுதி - IV தவக்கால சிந்தனைகள்**

- விபூதி புதன் முதல் சனி வரை - 144
  - அருட்பணி. ஞானராஜ், SdC
- தவக்கால முதல் வாரம் - 149
  - அருட்பணி. அமல்ராஜ், SdC
- தவக்கால இரண்டாம் வாரம் - 165
  - அருட்பணி. பிரான்சிஸ் அசிசி, SdC
- தவக்கால மூன்றாம் வாரம் - 172
  - அருட்பணி. பிரான்சிஸ், SdC
- தவக்கால நான்காம் வாரம் - 179
  - அருட்பணி. பெரியநாயகம், SdC
- தவக்கால ஐந்தாம் வாரம் - 190
  - அருட்சகோ. இக்னேசியஸ் ஸ்டாலின், SHS
- புனித வாரம் - 198
  - அருட்பணி. பேட்ரிக் பால்

**பகுதி - V தவக்காலப் பாடல்கள்** - 210


**இலவச இணைப்பு**

**புனித வார திருவழிபாட்டுக் கையேடு**

## தந்தை ஆசியுரை



நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு பயணமும் சொகுசாக இருக்க வேண்டும், விரைவாக செல்ல வேண்டும், பாதுகாப்பாக அமைய வேண்டும், என்றெல்லாம் நினைப்போம். அதனால்தான் பயணம் போகிறவர்களை பார்த்து "Have a happy journey, safe journey, pleesent journey" என்று சொல்லி வழியனுப்பி வைக்கிறோம். ஆனால் இயேசு பிறருக்கு புதுவாழ்வு தருவதற்காக கடினமான, துன்பம் நிறைந்த பாதையின் வழியாக பயணம் மேற்கொள்வதை நாம் பார்க்கிறோம். குறிப்பாக இயேசுவின் பயணம் பாவிகள், ஏழைகள், நோய்வாய்ப்பட்டவர்கள், சமுதாயத்தால் புறந்தள்ளப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் இவர்களுக்கான பயணமாக இருந்தது. அவர்களின் வாழ்வில் நம்பிக்கையும், ஒளியையும், மன்னிப்பையும் கொடுக்கின்ற பயணமாக இருந்தது.

மேலும், இயேசு ஏன் எருசலேமிற்கு பயணம் மேற்கொள்கிறார்? எப்படிப்பட்ட அரசனாக நுழைகிறார்? என்று சிந்திக்கின்ற போது அவரிடம் படைத்திறன் இல்லை; அடக்குமுறை ஆயுதங்கள் இல்லை; வரவேற்க அமைச்சர்கள் இல்லை; படைவீரர்களின் உற்சாக கோஷம் இல்லை; வெறும் ஆளாக செல்கிறார். வெறுங்கையோடு போகிறார். யாருக்காக? எதற்காக? நம்மையெல்லாம் மீட்கவும், நாம் புனிதத்தை உணரவும்தான். “ஓசான்னா” பாடி வரவேற்ற அதே மக்கள் “அவனை சிலுவையில் அறையும்” என்று வசைபாடுகின்றனர். சிவப்பு கம்பளம் விரித்து உபசரித்து மக்கள், அவரின் தோலை உரிக்க தீர்ப்பிட கோஷம் எழுப்புகின்றனர். ஆனால் இயேசு இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், மக்களின் மீட்பையும் வாழ்வையும் மட்டுமேகருத்தில் கொண்டு தன் பயணத்தை தொடர்கிறார். ஆகவே, இயேசுவின் பயணம் வாழ்வின் பயணம்.

சிலுவைப் பாதையில் உள்ள பதினான்கு தடங்களையும் இன்றைய குடும்பங்களும், சமூகமும் அனுபவிக்கின்ற நிலைபாட்டை யாராலும் மறுக்க முடியாது. குறிப்பாக குடும்பத்திலும் சமுதாயத்திலும் நிலவும் அநீயாய தீர்ப்பு, தீராத நோய், இலஞ்சம், ஊழல், ஆராத இரணங்கள்

(உள்ளத்திலும், உடலிலும்) வன்முறை அரசியல், மதவாத அடக்குமுறைகள் இவற்றோடு இன்றும் இயேசு பயணித்து கொண்டிருக்கிறார். நாம் எந்த அளவிற்கு சீமோனைப்போல, வெரோணிக்காவைப் போல, எருசலேம் பெண்களைப் போல புண்ணிய வாழ்வால், நேர்மறையான எண்ணத்தால் இயேசுவிற்கு ஆறுதலாகவும், உடன்பயணிப்பவராகவும் இருக்கிறோம் என்று சிந்தித்து பார்க்க அன்போடு அழைக்கிறேன்.

எங்கள் சபை ஸ்தாபகர் புனித லூயிஸ் குவனெல்லாவும் இயேசுவை பின்பற்றி எண்ணத்திலும், உள்ளத்திலும் துன்பம் கலந்த பயணத்தை துணிவோடு மேற்கொண்டார். ஜெபத்தையும் துன்பத்தையும் தன்னுடைய ஆன்மீக தாரகமந்திரமாக கொண்டு துன்பப்பட்டு அல்லது மடி என்று கூறி வாழ்ந்தார். மேலும் “பிறருக்கு நன்மை செய்ய நாம் கல்வாரி ஏற வேண்டும்” என்று தன் வாழ்வால் நமக்கு கற்பித்தார்.

இந்த சிலுவைப்பாதை புத்தகத்தை தொகுத்து வழங்கியுள்ள அருட்பணி. ஆரோக்கியராஜ், SdC அவர்களுக்கும் இந்த புத்தகம் உருவாக தங்களுடைய தெய்வீக சிந்தனையை வழங்கியுள்ள அத்துணை எழுத்தாளர்களையும் மனமாற பாராட்டுகிறேன். உங்கள் சிந்தனைகள் பலரின் மனமாற்றத்திற்கான தூண்டுகோலாக அமைய வாழ்த்துகிறேன். ஆண்டவரின் பாடுகளை தியானித்து இறையாசீர் பெறுவோம்.

DIVINE PROVIDENCE PROVINCE
Provincial Superior
GUANELLIANS

இறையாசீருடன்

Fr. A. Soosai Rathinam SdC

அருட்பணி. **சூசைரத்தினம்,** அ.ப.
(இறைபராமரிப்பு மாநிலத்தலைவர்)

## ஆசிரியர் வாழ்த்துரை



''சிலுவை பற்றியச் செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால், மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை." (1கொரி 1:18)

இறைமகன் இயேசு கிறிஸ்துவின் சிலுவை சாவினுடைய ஒப்பற்ற இறை வல்லமை, இறை ஆற்றல் சிலுவை அடையாளத்தாலும், சிலுவை வணக்கத்தாலும் நம்மீது மொழியப்படுகிறது. "சிலுவை இறைவனின் வல்லமை" என்று திருத்தூதர் பவுலும், "சிலுவை ஒன்றில் தான் எனது மீட்புள்ளது" என்று புனித லூயிஸ் குவனெல்லாவும், "சிலுவையே எனது ஒரே அடைக்கலம்" என்று புனித தாமஸ் அக்வினாசும், "சிலுவையின் நிழலில் கிறிஸ்தவ வாழ்வு பத்திரமானது" என்று புல்டன் ஷீனும் பறைசாற்றுகின்றனர்.

ஆகவே, சிலுவைதான் இறையாசிரின் உறைவிடம். சிலுவை அடையாளம் இறையருள் மற்றும் மீட்பின் அடையாளம் ஆகும். மேலும் நமது மீட்புக்காக இயேசு கிறிஸ்து இறந்த சிலுவை, அளவற்ற இறைவனின் பேரன்பிற்கான அடையாளமாகவும், பேரிரக்கத்தின் உறைவிடமாகவும் இருக்கிறது. ஆகவே தான் தவக்காலத்தில் இருக்கின்ற நாம், இயேசுவின் பாடுகளையும், சிலுவையின் மகிமையையும் புரிந்து கொள்ளவும், நம்மையே நாம் சீர்தூக்கிப்பார்த்து நம் பாவ வாழ்விலிருந்து மனமாறி இயேசுவின் பாதையில் வழிநடக்கவும் "**மீட்பளிக்கும் வாழ்வின் பயணம்**" என்ற சிலுவைப்பாதை புத்தகம் தொகுத்து வழங்கப்பட்டிருக்கிறது.

**''மீட்பளிக்கும் வாழ்வின் பயணம்'' சிலுவைப்பாதை புத்தகத்தின் தனிச்சிறப்புகள்:**

? ஏழு ஆண்டவரின் திருப்பாடுகள் (பெரியது)

? மூன்று ஆண்டவரின் திருப்பாடுகள் (சிறியது)

? இரண்டு ஆங்கில சிலுவைப்பாதைகள்

? நாற்பது நாள் மறையுரை சிந்தனைகள்

? **புனித வார திருவழிபாட்டுக் கையேடு :**

(திருப்பலி முன்னுரை, வாசக முன்னுரை, மன்றாட்டுகள், மறையுரைகள்)

குவனெல்லிய பதிப்பகத்தின் வழியாக இயேசுவின் திருப்பாடுகளை எல்லாரும் தியானிக்கவும், மனமாறி மீட்படையவும், சிலுவையின் மகத்துவத்தை உணரவும், **“மீட்பளிக்கும் வாழ்வின் பயணம்”** உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த சிலுவைப்பாதை புத்தகம் உருவாகுவதற்கு ஆக்கத்தையும், ஆற்றலையும் கொடுத்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இயேசுவின் பாடுகளை சிந்தித்து, வாழ்வை சீர்தூக்கி பார்க்கவும், புண்ணிய வாழ்வு வாழவும் அருமையான சிந்தனைகளை வழங்கிய அனைத்து அருட்தந்தையர்களையும், அருட்சகோதரர்களையும், அருட்சகோதரிகளையும், குறிப்பாக குவனெல்லிய குடும்ப அருட்தந்தையர்களையும், அருட்சகோதரிகளையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். மேலும் பிழைத்திருத்தங்களுக்கு உதவியாக இருந்த பேராசிரியர்களையும், புனித வளனார் குருமட சகோதரர்களையும், இறைபராமரிப்பு மரியன்னை விடுதி மாணவிகளையும், நண்பர்களையும் இறைவன் நிறைவாக ஆசிர்வதிப்பாராக. இந்த புத்தகம் உருவாக உழைத்த, உதவி செய்த அனைத்து நல்ல உள்ளங்களையும் மனதார வாழ்த்தி செபிக்கிறேன்.

? நமது பாவங்களுக்காக, நமது அக்கிரமங்களுக்காக இயேசு இரத்தம் சிந்தினார்? (கொலோ 1:20) இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தால் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. இந்த சிலுவைப் பாதைப் புத்தகததின் வழியாக இயேசுவின் பாடுகளை தியானித்து, மனமாறி, இறையருளை நிரம்ப பெறுவோம்.

இறைத்தோழமையில்
அருட்பணி. **செ. ஆரோக்கியராஜ்,** அ.ப.

# சிலுவைப்பயணம் நம்பிக்கையின் பயணம்
## (இளைஞர்களுக்கான சிலுவைப்பாதை)

அருட்பணி. பேட்ரிக் பால்
சென்னை ? மயிலை உயர் மறைமாவட்டம்

பெரும்பான்மையான இளையோர் ஆற்றலைக் கொண்டிருக்கும் நாடுதான் நம் இந்தியத் திருநாடு. மனித ஆற்றலில் இளையோர் ஆற்றல்தான் ஈடுஇணையற்றது. எதையும் செயல்படுத்தும் திறன்கொண்டது. ஆற்றல் என்றாலே அதில் ஆபத்தும் அடங்கியுள்ளது. சீரான வேகத்துடனும் கட்டுப்பாட்டுடனும் ஆற்றல் செயல்படுத்தப்படா விட்டால் ஆக்கச் சக்தியாக உதவுவதற்குப் பதிலாக, அழிவுச் சக்தியாக அனைத்தையும் நாசமாக்கிவிடும். இளையோர் ஆற்றலும் அதுபோன்றதே. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வதுதான் விவேகமுள்ள அணுகுமுறை. கடவுள் நமக்களித்துள்ள இந்த இளமைப்பருவத்தை ஆசிராகப் பயன்படுத்திக்கொள்ள தகுந்த உதாரணம் நம் ஆண்டவர் இயேசுவைத் தவிர வேறொருவர் இருக்கமுடியாது. அவரது சிலுவைப் பயணம் ஒரு விசுவாசப் பயணம். அடுத்து என்ன வரும் என்று தெரியாத நிலையிலும் நம்பிக்கையோடு பயணித்தார். சிலுவையில் வெற்றி கண்டார். ஒவ்வொரு இளைஞன் இளம்பெண்ணின் வாழ்க்கைப் பயணமும் ஒரு விசுவாசப் பயணமாக மாறிட இந்த இளையோர் சிலுவைப் பாதை சிந்தனைகள் வழிகோலிடும்.

### முதல்நிலை : இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்** : அதெனென்றால் உமது பாரமான திருச்சிலுவையாலே உலகை மீட்டு இரட்சித்தீர்.

எண்ணங்களின் பின்னல்தான் மனிதன். அவன் எப்படி கணிக்கப்படுகிறானோ, அப்படியே மாறிவிடுவதற்கு பல வாய்ப்புகள் உள்ளன. எப்படி பார்க்கப்படுகிறானோ, அப்படியே மாறிக்கொள்ளவும் மனிதன் தயங்குவதில்லை. நேர்மறை சிந்தனைகள் ஒருவருக்கு குறைவின்றி கிடைக்கப்பெற்றால், அவர் வளர்ச்சியை நோக்கியே பயணிக்க நற்சூழல் ஏற்படுகிறது. ஆனால், எதிர்மறையான சிந்தனைகளே ஒருவருக்கு நாளும் பொழுதும் கிடைக்கப்பெறுகிறது

என்றால், தளர்ச்சியை ஏற்படுத்தும் இந்த எதிர்மறை சூழலை உடைத்துக்கொண்டு வெளிவருவது சற்று கடினமான காரியமே.

'நீ உதவாக்கரை, தடிமாடு, சோம்பேறி, சனியன், சகுனி' என்றெல்லாம் உங்களைப் பார்த்து யாரேனும் சொல்கிறார்களா? நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள், ஏனென்றால் இயேசுவை பார்த்தும் இவ்வுலகம் சொன்னது : "இவன் பெருந்தீனிக்காரன், பாவிகளோடு விருந்து உண்கிறான்" என்று சுய ஆய்வு செய்து பாருங்கள். உண்மைஇருந்தால் மாற்றிக்கொள்ளுங்கள். பொய் என்றால் காலில் படிந்துள்ள தூசியை உதறிவிட்டு வேலையைப் பாருங்கள். உங்கள்மீது தொடுக்கப்படும் அனாவசிய தீர்ப்புகளைக் கண்டு கலங்காதீர்கள். இயேசுவுக்குக்கொடுக்கப்பட்ட தீர்ப்புதான் எல்லாவற்றையும் மாற்றியது. தீர்ப்புகள் உனக்கும் மாற்றம்தரும். ஏற்றுக்கொள்! மாற்றிக்கொள்!

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

**அனைவரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும் .

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாரக்கடவது.

## இரண்டாம் நிலை : இயேசு சிலுவை சுமக்கிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

சுமை என்றாலே கடினம்தான். ஒவ்வொருவருக்கும் ஒரு சுமை. இதுதான் சுமை, இது சுமையில்லை என்று யாரும் எதையும் வரைமுறை வைத்து சொல்லிவிட முடியாது. சிலருக்குச்சுமையாகத் தோன்றுபவை, அவற்றை சுமப்பவருக்குச்சுகமாகவும் மாறலாம். உதாரணத்திற்கு; படிப்பது கடினமா? என்று கேட்டால் ஒவ்வொருவரும் ஒரு பதிலைச் சொல்ல வாய்ப்புள்ளது. ஒன்றாம் வகுப்பில் பயிலும் குழந்தைக்கு ஒன்றாம் வகுப்பு கணிதம் கடினம்தான். ஆனால் பத்தாம் வகுப்பு பையனுக்கு ஒன்றாம் வகுப்பு பாடம் ஒன்றும் கடினமல்ல. சுமையல்ல. சமைப்பது கடினமா? என்று கேட்டால், கேட்கப்படும் நபர்களைப் பொறுத்து பதில் மாறுபடுகிறது. பெற்ற தாயைப் பொறுத்தவரை பிள்ளைக்குச்சோறு படைப்பது கடினமல்ல.

உணவகத்தில் வேலையாள் உணவு சமைப்பது கண்டிப்பாக கடினம்தான்.

இளைஞனே! நீயும் சுமக்கிறாய். விரும்பாத செயல்களை உன் பெற்றோரின் மகிழ்ச்சிக்காக செய்யும்போது அவர்களின் ஆசைகளை நீ சுமக்கிறாய். ஆடி ஓடி அனுபவிக்க வேண்டிய நேரத்திலும், குடும்பத்திற்காக இழக்கின்ற ஒவ்வொரு சந்தோஷத்தையும் சுகமாக நீ சுமக்கிறாய். சுமப்பதற்கு உள்ளம் ஒத்துக்கொண்டால் சுமைகூட சுகமாகவே இருக்கும். இஷ்டப்பட்டு கஷ்டப்பட்டால் இழப்பது இனிமையானதே. உனது பெற்றோருக்காக, உனது குடும்பத்துக்காக, உனது எதிர்காலத்துக்காக, உனது சமுதாயத்துக்காக நீ சுமக்கின்ற ஒவ்வொரு சுமையும் சுவையானதே. விரும்பி ஏற்றுக்கொள்! வெறுப்பை மாற்றிக்கொள்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## மூன்றாம் நிலை : இயேசு முதல் முறை கீழே விழுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

வளர்ச்சியையும் நகர்தலையும் வைத்து ஒரு பொருளுக்கு உயிர் இருக்கிறதா இல்லையா என்று சொல்லிவிடலாம். தாவரங்கள் வளர்கின்றன. எனவே அவற்றிக்கு உயிர் இருக்கிறது. விலங்குகள் வளர்கின்றன, நகரவும் செய்கின்றன, எனவே அவற்றிற்கும் உயிர் இருக்கிறது. வளர்ச்சியும் நகர்தலும் இருந்தால்தான் அவற்றிற்கு சறுக்கல் இருக்க முடியும். காய்க்காத எந்த மரமும் கல்லடி படப்போவதில்லை. முயற்சியில்லாத எந்த மனிதனும் முன்னேறப் போவதில்லை. எங்கே முயற்சி இருக்கிறதோ அங்கேதான் முட்டல்களும் மோதல்களும் ஏற்படும். எங்கே தோல்வி இருக்கிறதோ அங்கேதான் வெற்றிக்கான தேடல் பிறக்கும். தாமஸ் ஆல்வா எடிசன் ஒரு போராளி, ஆயிரம் முறை தோற்றுப்போனார். அத்தோடு ஆடி அடங்கி உட்கார்ந்து விடவில்லை. முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என சாதித்துக்காட்டினார். சரித்திரம் மாற்றினார்.

இளையோரின் பருவம் வளரிளம் பருவம். புதிய பாதைகளை, புதிய பயணங்களை ஆசையோடு ஆர்வத்தோடு முன்னெடுக்கும் முத்தான பருவம், பயணங்கள் என்றாலே பள்ளங்களும் இருக்கும்

என மனதில் வைத்துக்கொள்ளுங்கள். தடைகளைக் கண்டு தடுமாறத் தேவையில்லை. முயலாதவரை முடியாதுதான். தோல்வி தடுக்கிறது என்றால் பயணம் தொடர்கிறது எனப் பொருள். பயணம் தொடர்கிறது என்றால் போராட்டம் வலுக்கிறது எனப் பொருள். எதிரி இணங்கிப் போவது தான் போராட்டத்தின் வெற்றி. இணங்கிப்போவது நீங்களா? தோல்வியா? தடுக்கி விழுந்தால், எழுந்து நடத்திடுங்கள்! விடை ஒன்றுதான். விரும்பியது கிடைக்கும்வரை விடாது முயலுங்கள்! இளமையின் இரகசியம் இதுதான்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**நான்காம் நிலை : தன் அன்புத் தாயைச்சந்திக்கிறார்.**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்**: அதெனென்றால்......

பிள்ளைக்கு அறுபது ஆனாலும் பெற்றவளுக்குப் பிள்ளை பிள்ளைதான். அரவணைத்து அமுதூட்ட ஆசைப்படுவாள். அள்ளியெடுத்து கிள்ளி மகிழவும் தயங்கமாட்டாள். தாயின் குணம் கடைசிவரை மாறுவதேயில்லை. பிறகு ஏன் பிள்ளையின் மனதில் மட்டும் பித்துப்பிடித்து விடுகிறது? ஆறு வயது வரை அன்னையவள் முந்தானையைப் போர்வையாக்கிய ஒவ்வொரு மகனும், அரும்புமீசை வந்தவுடனே, அடங்க மறுக்கிறான். அவள் அன்பை வெறுக்கிறான். படித்து முடித்தால் பண்பட்டு விட்டோமென, பகட்டில் மிதக்கிறான், பெற்றவள் மனதை மிதிக்கிறான்.

தனிநபர் சுதந்திரத்தை தாறுமாறாகப் பயன்படுத்துவதன் விளைவுகளே இவை. பருவம் கனிந்தவுடனே, தாயின் அன்பு தொல்லையாகத் தோன்றுகிறது. தந்தையின் அக்கறை அவதியாக மாறுகிறது. பெற்றோரின் பாதுகாப்பு கட்டுப்பாடாக உருவெடுக்கிறது. மனஉள மாற்றத்தின் கோளாறுகளே இவை. பெற்றோரின் அறிவுரை ஒவ்வொன்றும் பிள்ளைக்கு இருளில் கைகொடுக்கும் தீப்பந்தம் போன்றது. உழைக்கும் வேகம் உங்களில் துளிர்க்கின்றபோது, உழைப்பின் களைப்பு அவர்களைத் தாக்குகிறது. இதுதான் எதார்த்தம். உன்னைச் சார்ந்திருக்கிறார்கள் என்று சங்கடப்படாதே! அவர்கள்மீது சாய்ந்துகொண்டதால்தான் இன்று நீ சாதித்து சிறக்கிறாய்.

சினுங்கிக்கொள்ளாதே! பெற்றோர் வரமும் சிலக்காலமே! மறைந்து போனால் திரும்ப வராது!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஐந்தாம் நிலை : சீமோன், இயேசுவுக்கு உதவி செய்கிறார்.

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

நட்பு என்பது என்ன? 'தோள் கொடுப்பான் தோழன்' என்பதுதான் நட்பின் இலக்கணம். சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோனும் இயேசுவுக்கு இதைத்தான் செய்தார். ஆனால் இயேசுவின் பார்வையில் 'தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை'. (யோவான் 15:13) இது நம்பிக்கையைக் காப்பாற்றிக்கொள்கின்ற நட்பு மட்டுமல்ல, நாணயத்தோடு நடந்துகொள்ள தூண்டியிழுக்கின்ற நட்பும்கூட. 'உங்களை நான் நண்பர்கள் என்றேன்' என்று இயேசு சீடர்களைப்பார்த்து சொல்கிறார். அவர் தம் நண்பர்களைப் பாராட்டினார். பேய்களை ஓட்டி நோய்களை நீக்கியபோது கண்டித்தார். காற்றையும் கடலையும் அடக்கியபோது எச்சரித்தார். குருட்டு வழிகாட்டிப் பரிசேயரைப் பார்த்தபோது கடிந்து கொண்டார். பேதுரு தடைக்கல்லாக வழிமறித்தபோது சாடினார். இப்படி தம் நண்பர்களுக்காக அனைத்தையும் தியாகமாக்க அவர் துணிந்து முன்வந்தார்.

இன்று நண்பர்கள் மத்தியில் எப்படிப்பட்ட நட்புறவு நிலவுகிறது. ஒன்றாக ஊர்சுற்றவும், ஒய்யாரமாக பொழுதைக் கழிக்கவும், விழாக் கோலங்களில் தோள் கொடுக்கவும், சோதனைக் காலங்கள் துயர் துடைக்கவும் நண்பர்கள் கூட்டம் நமக்குத் தேவைப்படுகிறது. பாராட்டிப் பேசும் நண்பர்களைக்காட்டிலும், இன்று பகட்டாகப் பேசும் நண்பர்களே அதிகம். உள்ளதைப் பேசும் நண்பர்களைக்காட்டிலும், இன்று உணர்வுப்பூர்வமாகப் பேசும் நண்பர்களே அதிகம். கண்டித்துப் பேசும் நண்பர்களைக் காட்டிலும், இன்று வஞ்சித்துப் பேசும் நண்பர்களே அதிகம். இறைஅர்த்தம் பேசும் நண்பர்களைக் காட்டிலும், இன்று ஈரர்த்தம் பேசும் நண்பர்களே அதிகம். நண்பர்களின் பங்கு நம் ஒவ்வொருவர் வாழ்விலும் இன்றியமையாத ஒன்று. உன் நண்பர்கள் யாரெனச் சொல், நீ யாரென நான் சொல்கிறேன். நண்பர்கள்தான் நம்

முகவரி, 'நம்பிக்கைக்குரிய நண்பர்கள் நலம் அளிக்கும் மருந்து போன்றவர்கள்.' (சீராக் 6:16) நல்ல நண்பரைத் தேர்ந்தெடு! நானிலம் போற்ற வாழ்ந்திடு!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**ஆறாம் நிலை :**

**வெரோணிக்கா இயேசுவின் முகத்தைத் துடைக்கிறார்**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்**:அ தெனென்றால்......

பெண்கள் ஒவ்வொருவரும் இந்நாட்டின் கண்கள். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருப்பது உண்மைதான். தத்தம் வாழ்க்கைச் சூழலில் பெண்கள் ஏற்றுக்கொள்ளும் பொறுப்புகள் ஏராளம்! ஏராளம்! தாயாகிறாள்! தாரமாகிறாள்! தலைவியாகிறாள்! தமக்கையாகிறாள்! குடும்பம் என்னும் கோயிலில் குருவும் அவள்தான். தெய்வமும் அவள்தான். குடும்பம் என்னும் பள்ளிப் பாசறையில் பாடமும் அவள்தான். பயிற்றுநரும் அவள்தான். அத்தனை அதிசயத்தையும் அடுக்கடுக்காய் வைத்துக்கொண்டு, அடக்கத்தோடு நடந்துகொள்பவள்தான் பெண். ஆயினும் சமூக அநீதிகளின் சந்தர்ப்ப வாதத்திலிருந்து அவள் தப்பித்துக்கொள்ள இன்றும்கூட வழிகள் பிறக்கவில்லை. வீடு முதல் வீதிவரை பாதுகாப்பை இழந்த பரிதாபத்துக்குரியவள்தான் பெண்.

நம் குடும்பங்களில் பெண்களின் நிலை என்ன? காலையில் கண்விழித்து மாலையில் கண்ணுறங்கும்வரை வீடு, வாசல், மாமன், மருமகன், பேரன், பிள்ளைகள், அண்ணன், தம்பி என உள்ளவரை உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்பவள்தான் பெண். உழைப்பை மட்டும் சூசகமாக உருக்கி எடுத்துக்கொண்டு ஓரம்கட்டிவிடுகிறோமா பெண்களை? 'கழுதை கெட்டால் குட்டிச்சுவர், பெண்புத்தி பின்புத்தி' என்றெல்லாம் வசதிக்கேற்ப வாய்ஜாலங்களை வக்காலத்து வாங்க வைத்துக்கொண்டு, கொஞ்சமாவது பேசவிடுகிறோமா அவர்களை? வீட்டிலும்கூட பெண்கள் பேசினால் தவறு, பார்த்தால் தவறு, சிரித்தால் தவறு, சினமுற்றால் தவறு. இப்படி இயந்திரங்களாக மட்டும் இயக்கம்பெறும் பெண்கள், எண்ணங்களில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. பேசாதே! போகாதே! நிற்காதே!

பார்க்காதே! என வேலியமைத்து கேலி செய்வதை விடுத்து, நம் குடும்பத்து பெண்களின் உள்ளக் குமுறல்களுக்கு மதிப்பளிப்போம்! அவர்களின் உணர்வுகளுக்குப்பதில் கொடுப்போம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஏழாம் நிலை : இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

தோல்வியை எதிர்கொண்டவனுக்குத்தான் வெற்றியைச்சுவைக்க அருகதை உள்ளது. ஏற்றம் இருந்தால் இறக்கமும் இருக்கும். மழை என்றால் வெயிலும் இருக்கும். ஒளி இருந்தால் இருளும் இருக்கும். கிழக்கு என்றால் மேற்கும் இருக்கும். மேடு இருந்தால் பள்ளமும் இருக்கும். இதுதான் வாழ்க்கையின் எதார்த்தம். பள்ளியிலோ கல்லூரியிலோ பாடங்கள் கடினம் எனச்சொல்லி மாணவர்கள் பயிலுவதை நிறுத்திக்கொள்ளவில்லையே! படிப்பும் இருக்கிறது. மாணவரும் படிக்கின்றனர். படித்தால் வெற்றி! பாசாங்கு செய்தால் தோல்வி ? இந்நியதி அனைவரும் அறிந்ததே. ஆயினும்கூட தோல்வியின் சவாலையும் தாண்டி நாம் படிப்பதில்லையா? பள்ளி கல்லூரி செல்வதில்லையா? இன்று உனக்குமுன் வைக்கப்படும் கேள்வி! எத்தனை முறை தோற்றுப்போனாய் என்பதல்ல. எத்தனைமுறை எழுந்து நடந்தாய் என்பதுதான்.

உயிருள்ள ஆற்று மீன்கள் மட்டுமேஎதிர்நீச்சல் போடும். செத்த மீன்கள் கொத்துகொத்தாய் போகும். சொரணையே இல்லாமல் மொத்தமாய்ப் போகும். புதிய சூழல்கள், புதிய மனிதர்கள், புதிய பணிகள், புதிய பயணங்கள் ? இப்படி எதார்த்தங்கள் எப்படியென்றாலும் அசராமல் எதிர்கொள்ளும் பருவம்தான் இளமைப்பருவம். இதில் இயலாததைத் தொடர இறுக்கம் ஏற்பட்டாலும், தடைகளைத் தகர்க்க தயக்கம் மேலெழுந்தாலும், புதுமையைப் பார்க்க கலக்கம் படர்ந்தாலும், இளையோர் வாழ்வில் தோல்விதான் மிஞ்சும், விவேகம் கலந்த துணிச்சலும், வெற்றியைச் சுவைக்கும் வேகமும், இயன்றதை இயக்கும் ஈடுபாடும், இறைநம்பிக்கை பிணைந்த தன்னம்பிக்கையும், தோல்விகளைத் தூள்தூளாக்கும் வெற்றிகளை விரைவாக்கும்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**எட்டாம் நிலை :**

**எருசலேம் பெண்களுக்கு இயேசு ஆறுதல் கூறுகிறார்**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு பாரம்பரியமும், கலாச்சாரப் பின்னணியும் உள்ளது. உண்ணும் உணவு, உடுத்தும் உடை, இருக்கும் இடம், பெயர், தொழில், குடும்பம், உறவு என அனைத்திலும் தனித்தன்மைஉள்ளது. ஒரு மனிதனின் வரலாறு இத்தனைக் கூறுகளையும் ஒருங்கிணைத்தே புரிந்துகொள்ளப்படுகிறது. குடும்ப வாழ்வில் சிறுக சிறுக மாற்றங்களைப் புகுத்திவிட்டால், கலாச்சார கடைவீதியிலும் கள்ளங்கபடுகளைக்கலந்துவிட முடியும். இன்று நிகழ்வதும் இதுதான். கண்ணெதிரிலேயே கலாச்சார சீரழிவுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஒழுக்கமும் அறநெறியும் செல்லாக்காசாக செல்லரித்துப் போய்விட்டன. யாருக்குத் தேவை நற்சான்று? சம்பாதித்த நற்பெயரை வைத்து இன்று நாலுகாசு சம்பாதிக்க முடியுமா? ஒழுக்கமான வாழ்க்கைமுறையை வைத்து ஒஹோவெனத்தான் வாழ்ந்துவிட முடியுமா? அலுத்துக்கொள்ளும் இளைய சமுதாயத்திற்கு இன்று ஆண்டவன் தரும் அறிவுரைத்தான்: ‘‘எனக்காக அழவேண்டாம், உங்களுக்காகவும் உங்கள் தலைமுறைக்காகவும் அழுங்கள்”.

உணவில் துரிதம், உடையில் நளினம், உறவில் சலனம் என எங்கும் எதிலும் உண்மையைக் காணமுடிவதில்லை. பணத்தை முதன்மைப்படுத்தும் பாடசாலைகள், பகட்டை மையமாக்கும் சேவை மையங்கள், பாலுறவுகளை பரிந்துரைக்கும் சமூக உறவுகள் ? இப்படி வாழ்க்கையின் அர்த்தம் தெரியாமல் வாழ்வியல் மகத்துவம் புரியாமல் இன்றைய உடனடி நவீனத்துவக் கலாச்சாரம் களங்கமில்லா குடும்ப வாழ்வையும் காலாவதியாக்கி விட்டது. நடப்பது நடக்கட்டும்! நமக்கேன் வீண் வம்பு! என்று சொல்லி நழுவிக்கொள்வதை விட்டுவிட்டு, நாடு நலம்பெற நல்மனம் கொண்ட இளைஞர் பெருங்கூட்டம் எழுச்சிபெற வேண்டும். இன்றைய பேராட்டமேநாளைய விடுதலை! இன்று எழுப்பும் உரிமைக் குரலே, நாளை மலரும் வெற்றி முழக்கம்! எனவே

சமூகத்துக்கு எதிரான எல்லா சாபக்கேடுகளையும் சரிசெய்ய ஒன்றுபடுவோம்! சாக்கடையில் இறங்கி சேற்று மூட்டைகளை சுத்தம் செய்வோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்**: எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஒன்பதாம் நிலை : இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்**: அதெனென்றால்......

இயேசுவின் மூன்றாம் இடறல் நம் ஒவ்வொருவரின் பலவீனத்தையும் பளிச்செனப் படம்பிடித்துக் காட்டுகிறது. அன்று பாலைவனத்தில் பசாசின் மாயைக்கு மயங்காதவர், இன்று பாடுகளின் பாதையில் பலம் குறைந்து, பாரம் மிகுந்து இடறல் படுகிறார். தடுக்கி விழுகிறார். சுற்றும்வரை தான் பூமி, சுடும்வரை தான் நெருப்பு, போராடும்வரை தான் மனிதன். இயேசு தன்னை மனிதன் என இங்கு முத்திரை பதித்து நிரூபித்துவிட்டார். துன்பக் கிண்ணம் தாங்கிக்கொள்ள கடினமானதாய் இருந்தாலும், கொடுக்கப்பட்டதால் கொட்டிவிடாமல் குடித்துவிட்டார். இடறலையே இகழ்ச்சிக்குள்ளாக்கி விட்டார். இன்று தோல்வியால் துவண்டுபோகும் இளைஞர்கள் எத்தனைபேர்? வீழ்ந்துவிடுவோம் என்பதால் எழுந்து நடக்காமலேயே இருப்போர் எத்தனைபோ? இயேசுவின் வீழ்ச்சியும் எழுச்சியும் இன்று நமக்கு அவரது பாடுகள் நடத்தும் பாடங்களாக அமைய வேண்டும்!

கல்வியில் தோல்வி, கலையில் தோல்வி, உழைப்பில் தோல்வி, உறவுகளில் தோல்வி ? இப்படி இடறல் எண்ணிக்கையை மளிகைக்கடை பட்டியல் நீளமாக்கும் இளைஞர் இளம்பெண்களே! சிந்துத்துப் பாருங்கள். உண்மையில் தோல்வி உங்களைத் துரத்தவில்லை. வெற்றியைத் தான் நீங்கள் துரத்திக் கொண்டிருக்கிறீர்கள். கிடைக்கும்வரை ஓய்ந்துவிடாதீர்கள். சிகரம் தூரம் என்பதற்காக செத்துமடியும் இளையோரும், உயரம் அதிகம் என்பதற்காக உயிரை மாய்த்துக்கொள்ளும் கோழைகளும் இன்று மலிந்துவிட்டார்கள். சிகரம் என்றாலே தூரம்தான்! உயரம் என்றாலே அதிகம்தான்! கல்வி கடினம் என்பதாலும், எதிர்காலம் போர்க்களம் என்பதாலும் தற்கொலை செய்துகொண்டு சமாதியாகும் சாதனையாளர்கள் நம்மவர் நடுவே பெருகிக்கொண்டிருக்கிறார்கள். வெற்றியைத் தேடுவோர்க்கு சாதனை உடனடி! தோல்வி ஏணிப்படி!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பத்தாம் நிலை : இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்.

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அவமானத்தைப் பற்றி கவலைப்படாத நமக்காக இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன. உடைகளின் உன்னதம் தெரியாத நமக்காக இயேசுவின் உடைகள் உரியப்படுகின்றன. உடலை மறைக்க ஒட்டுத்துணியும் இல்லாத வெகுசன மக்களுக்காக இயேசு நிர்வாணப்படுத்தப்படுகிறார். உலகை வளைக்க ஒட்டுத்துணியையும் உரித்துக்காட்டும் வெட்கம்கெட்ட மாக்களுக்காகவும் இயேசு நிர்வாணப்படுத்தப்படுகிறார். இன்று இணையதளத்தின் இருமபு வலைக்குள் சிறைவைக்கப்படும் அத்தனை இளையோருக்கும் என் அன்பான வேண்டுகோள்! கும்மிருட்டு கண்ணாமூச்சு விளையாட வேண்டுமானால் தேவைப்படலாம். கண்களை மூடிக்கொண்டே இருந்தால் விளையாட்டும் வினையாகிவிடும்! விபரீதமாகிவிடும்! கணினி உலகின் கண்ணாமூச்சுதான் நம்மில் பலர் நாள்தோறும் சல்லாபிக்கும் ஆபாசப் பட்டறை. சாறுண்ணி போன்ற இந்த வாலிப சிற்றின்பம் நம்மையே தின்றுவிடும்! விரைவில் கொன்றுவிடும்! இதுதான் நிதர்சனம்!

அரைகுறை ஆடைகள், அதிகப்படியான ஆடைகள் இரண்டுமேஆபாசம்தான், தேவைக்குமேல் வைத்திருக்கிற ஒவ்வொன்றும் என் அடுத்திருப்பவருக்கு உரியது. தேவைக்குமேல் வருகின்ற ஒவ்வொன்றும் தீயோனிடமிருந்தே வருகிறது. அலமாரியில் எத்தனை துணிகளை விதவிதமாய் அடுக்கிக்கொள்கிறோம்? யாருக்கோ சேரவேண்டியது என் துணிப்பெட்டியில் தூங்கிக்கொண்டிருக்கிறதே! திருவிழாவுக்கெல்லாம் துணியெடுக்கும் கலாச்சார மமதையிலிருந்து மீண்டெழுவோம்! ரகரகமாய் உடையணியும் ரவுடிக் கலாச்சாரத்திலிருந்து விடுதலையாவோம்! உடலின் மேன்மையையும், ஆடைகளின் அழகையும் காப்பாற்றுவோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**பதினொன்றாம் நிலை :**

**இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்.**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

தொழுநோயாளரைத் தொட்டதற்காக இயேசுவின் கரங்கள் துளைக்கப்படுகின்றன. பாவிகளைத் தேடிச் சென்றதற்காக இயேசுவின் பாதங்கள் துளைக்கப்படுகின்றன. அடிமைஉருவை ஏற்றதற்காக இந்த அன்பரின் தேகம் சிலுவையில் ஏற்றப்படுகிறது. இளைஞனே! துளைக்கப்படுவாய் என்று தெரிந்தாலும் நீ உதவி செய்ய துணிந்துசெல்! உடைக்கப்படுவாய் என்று தெரிந்தாலும் ஊக்கத்தோடு நீ நடந்துசெல்! இயேசுவின் கைகளும் கால்களும் இம்மண்ணில் நீ மட்டுமே! அவிலா தெரசாவின் ஆழமான செபம் உன் காயங்களுக்கு மருந்தாகட்டும்.

கிறிஸ்துவுக்கு உடல் இல்லை ? உன் உடலைத் தவிர!
அவருக்கு கைகளும் கால்களும் இங்கு இல்லை ? உன்னுடையவற்றை தவிர!
உன் கண்கள் வழியாகவே அவர் பார்க்கிறார்!
உன் கால்களைக் கொண்டே அவர் நன்மைசெய்ய நடக்கிறார்!
உன் கரங்களைக் கொண்டே அவர் உலகை ஆசீர்வதிக்கிறார்!
உன் கைகள் அவருடையவை!
உன் கால்கள் அவருடையவை!
உன் கண்கள் அவருடையவை!
உன் உடல் அவருடையது!
உன் உடலைத் தவிர அவருக்கு இங்கு வேறு உடல் இல்லை!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**பன்னிரெண்டாம் நிலை : இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்.**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

உயிரற்ற நம் இயேசுவின் திருமுகத்தை உற்றுநோக்குவோம்!
சிதைந்துபோன முகங்களை சீரமைக்கும் திருப்பயணம் தான்
இயேசுவின் மண்ணகப் பயணம்!
சீரழிந்த சொந்தங்களை மீண்டும் சேர்க்கும் திருப்பயணம் தான்
இயேசுவின் மண்ணகப் பயணம்!

உருவிழந்த உயிர்களுக்கு உருக்கொடுக்கும் உன்னதப் பயணம்தான்
இயேசுவின் மண்ணகப் பயணம்!
உதிரம் சிந்தும் உள்ளங்களுக்கு ஊக்கம்தரும் புண்ணியப் பயணம்தான்
இயேசுவின் மண்ணகப் பயணம்!

இப்படி, மனித மாண்புகள் காக்கப்பட, மானிடர் வாழ்வு போற்றப்பட மகிமையைத் துறந்து, வெறுமையை அணிந்தார், மாதவன் இயேசு. பார்த்துப் பார்த்து பரமன் படைத்த இந்தப் பாரென்னும் பூஞ்சோலை, பொட்டல் காடாய்ப் போனது, பொய்யின் வீடாய் ஆனது. அனைத்தையும் பார்த்து அழகுபார்த்த அந்த அன்பான கடவுள், ஆதங்கப்பட்டார். மிகவும் வேதனைப் பட்டார். நான் படைத்த இந்த நானிலப் பூங்கா, நலிந்து போகலாமா? நான் படைத்த என் மானிட மழலைகள் மடிந்து போகலாமா? எழுந்த ஏக்கக் கேள்விகளுக்கு பதிலொன்று கிடைத்தது. மகன் இயேசுவைக் கொடுத்து, மண்ணின் பாவங்களுக்காக போரொன்று தொடுத்தார்.

கடவுள் யார்? அவர் அன்பானவர், அரவணைப்பவர், மன்னிப்பவர், மனதுருகுபவர், தந்தையின் திருமுகத்தைத் தக்கவாறு அறிந்துகொள்ள கிடைக்கப்பெற்ற அருள்முகம்தான் இயேசு என்னும் திருமுகம்! பார்க்கமுடியாத பரமனின் திருமுகத்தைப் பளிச்செனப் படையலாக்கும் பாங்கான பார்முகம்தான் இயேசுவின் திருமுகம்! கனிவு ததும்பும் கடவுளின் திருமுகத்தை கச்சிதமாய்க் காட்டும் கருணை முகம்தான் இயேசுவின் திருமுகம்! இரக்கமுள்ள இறைவனின் இனிய முகத்தை இதமாய்க் காட்டும் நல்முகம்தான் இயேசுவின் திருமுகம்! அவர் கட்புலனாகாத கடவுளின் சாயல்.

குற்றமறியாத அவரது குழந்தை முகம் இன்று குறைநிறைந்து சிதைகிறது!

தவறு செய்யாத இந்த தலைவனின் முகம் இன்று தாறுமாறாய் கிழிகிறது!

பாவம் புரியாத நம் பகலவன் முகம் பொலிவிழுந்து சாய்கிறது!

யார் செய்த பாவம்? இந்த புனிதமுகம் புடமிடப்படுகிறது.

நாம் செய்த பாவம்! இந்தப் புனிதமும் புண்ணாக்கப்படுகிறது.

துன்பங்களைத் தாங்கிக்கொள்ளாத நம் கோழை மனங்களும், சொந்தங்களை ஏற்றுக்கொள்ளாத நம் கோர உள்ளங்களும் இயேசுவின் முகத்தை கூறுபோடுகின்றன.

உறவுகளை மதியாத நம் வேகமும் நேரமும், உடைகளால் மறையாத நம் தேகமும் மானமும் இயேசுவின் முகத்தை உடைத்தெறிகின்றன.

பிறர்நலம் பேணாத தனிமையும், சிறுமையும், பசியைப் போக்காத வளமையும், பெருமையும் இயேசுவின் முகத்தை தகர்த்தெறிகின்றன.

கடவுளைத் தேடாத கேள்வியும், கல்வியும், கடவுளைப் பாடாத போற்றலும் புகழ்ச்சியும் இயேசுவின் முகத்தைப் புடம்போடுகின்றன.

நல்லதைப் பேசாத நாக்கும் வாக்கும், உள்ளதைப் பேசாத உள்ளத்தின் போக்கும் இயேசுவின் முகத்தை உருக்குலைக்கின்றன.

நாம் பார்க்கும் இயேசுவின் திருமுகம் வாழ்வில் தெளிவுகளைக் கொண்டுவரட்டும்! நலிவுற்ற இயேசுவின் திருமுகம் தளர்ந்த நம் உறவுகளை மீட்டுத் தரட்டும்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**பதிமூன்றாம் நிலை :**

**இயேசுவின் உடல் மரியின் மடியில் கிடத்தப்படுகிறது.**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்**: அதெனென்றால்......

பிறந்தவர் அனைவருக்கும் கடவுள் தருகின்ற கடைசி பரிசு இறப்புதான். பிறந்தவர் இறக்க வேண்டும். வாழ்ந்தவர் மறைய வேண்டும். இதில் பிறப்பை வைத்து இறப்பு கணிக்கப்படுவதில்லை. பிறந்த குழந்தைக்கு வாழ்வு, வாழ்ந்து களைத்தவருக்கு சாவு என்று சொல்லிவிட முடியாது. ஆறுவயது குழந்தையும் இறக்கிறது. அறுபது வயது வயோதிகரும் இறக்கிறார். வாழ்பவர்கள் மத்தியில் யார் முதலில் இறப்பது என்பதை கடவுளே உறுதிசெய்கிறார். ஆனாலும்கூட, இறப்பைக் குறித்து சிந்திக்கின்றபோது, ஒரு இறையவரின் இறப்பை மட்டும் யாராலும் ஏற்றுக்கொள்ளவே முடியாது. உடல்நலக் குறைபாடு, தற்கொலை, விபத்து, இயற்கைச் சீற்றம் இப்படி ஆயிரம் காரணங்களைக் காட்டினாலும் பிள்ளைகளுக்குமுன் பெற்றோரே முதலில் இறக்க வேண்டும் என்று ஒவ்வொரு பெற்றோரும் விரும்புவார்கள்.

அன்னை மரியின் வாழ்க்கையில் அப்படி ஒன்றும்

ஆசைப்பட்டவாறு நிகழ்ந்துவிடவில்லை, அவருடைய மகன் அணுஅணுவாய் சித்தரவதை அனுபவித்ததைப் பார்த்தாள், ஆதங்கப்பட்டாள், வேதனைப்பட்டாள், மரியாள் கடவுளுக்குத் தந்த 'ஆம்' என்ற பதிலில் இத்தனை அர்த்தம் இருந்ததுபோலும். பெருந்தன்மையோடு அனைத்தையும் ஏற்றுக்கொண்டாள். காரணம், இயேசுவின் வாழ்வுதான் அவளுக்கு கொடுக்கப்பட்ட மாபெரும் மணிமகுடம். இன்று பெற்றோர் பார்க்கின்றபோதே நாம் விடைபெறும் வாய்ப்பு ஏற்பட்டால், நாமும் அவர்களுக்குக் கொடுக்கும் வெகுமதி இதுவாகத்தான் இருக்கமுடியும்: "நற்பெயர்', 'இந்தப் பையன் அருமையான பையன்! வாழ்ந்திருக்கக் கூடாதா?' 'இந்தப் பெண் அடக்கமானவள், அன்பானவள், இருந்திருக்கலாமே?' இதைவிடப் பெருமையை நம் பெற்றோருக்கு நாம் கொடுத்துவிட முடியாது. ஒவ்வொருநாளும் வாய்ப்புதான். பயன்படுத்திக்கொள்வோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதினான்காம் நிலை : இயேசு அடக்கம் செய்யப்படுகிறார்.

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

விதைகள் மடிந்தாலும் வீரியம் குறைவதில்லை. மனிதர்கள் அழிந்தாலும் மாண்புகள் அழிவதில்லை, விதைகள் மடிந்து விருட்சங்களாகின்றன. மனிதர்கள் மடிந்து மகான்களாகின்றார்கள். ஒவ்வொரு உயிருக்கும் ஒரு கடமைஉள்ளது. மரம் தன் கடமையைச் செய்கிறது. மழை தன் கடமையைச் செய்கிறது. கதிரவன் தன் கடமையைச் செய்கிறது. காற்று தன் கடமையைச் செய்கிறது. இப்படி படைக்கப்பட்ட ஒவ்வொன்றும் அச்சு பிசகாமல் அவற்றின் செயல்பாடுகளை விசுவாசத்தோடு செய்கின்றன. நமக்கும் கடப்பதற்கு இலக்கு ஒன்று உண்டு. அதை உணர்ந்து கொண்டவர்கள் வாழ்க்கையை இழப்பதில்லை. மாறாக இரசிப்பார்கள். 33 ஆண்டுகால இயேசுவின் வாழ்க்கையில் எதுவும் எதேச்சையாக நிகழவில்லை. எல்லாவற்றுக்கும் ஒரு காரணம் இருந்தது. இயேசுவின் ஒட்டுமொத்த வாழ்க்கை வரலாறும் ஒரு பொற்குவியல் போன்றது. முத்துப் புதையல் போன்றது.

வாசத்தை சுவாசித்துக்கொண்டிருக்கிற நீங்களும் நானும்

காரணத்தோடு இம்மண்ணில் பிறந்திருக்கிறோம். இப்புவியில் நாம் இருப்பது விபத்தால் அல்ல. இறைவன் வகுத்த ஈடுஇணையற்ற திட்டத்தால். இறைவனின் திட்டத்தை திட்டவட்டமாய் நிறைவேற்றியதால்தான் இயேசு சொன்னார்; ‘எல்லாம் நிறைவேறிற்று’. அன்பு சகோதரனே, சகோதரியே! வாழ்வது ஒருமுறை, வாழ்த்தட்டும் தலைமுறை என்ற மேலான சிந்தனை நம்மைவழிநடத்த வேண்டும். ஜென்மங்களை நம்பி ஏமாந்துபோகிறவர்கள் நாமல்ல. நாம் எப்படிப் பிறந்தோமோ அதுதான் கடவுள் நமக்களித்த அன்பளிப்பு, நாம் எப்படி இறப்போமோ அதுதான் நாம் கடவுளுக்கு அளிக்கவிருக்கும் அன்பளிப்பு. பிறக்கும்போது பலர் உன்னைச் சுற்றி சிரித்துக்கொண்டிருக்க, நீ அழுதுகொண்டே பிறந்தாய், இறக்கும் போது பலர் உன்னைச் சுற்றி அழுதுகொண்டிருக்க நீ சிரித்துக்கொண்டே இறக்க வேண்டும். இயேசு இறந்தார், சாதித்த மகிழ்ச்சியில் இறந்தார். நீயும் சாதனை வீரராய் சாயவேண்டும் என்பதுதான் அவரது விருப்பம், நிறைவேற்றுவாயா?

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......



# நீங்கள் வாழ்வு பெறும் பொருட்டு
## (மீட்பின் பாதையில்.....)

சகோ. ஜெயராணி CIC
கல்லாத்துப்பட்டி

**முன்னுரை**

அடிப்பதற்கு இழுத்துச் செல்லும் ஆட்டுக்குட்டியைப் போல், உங்கள் முன்னே வாயில்லா பூச்சியாய் வதங்கி நின்று கொண்டிருக்கும் என்னை யாரென்று தெரிகிறதா? உலகை மீட்க பரமதந்தையால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட மானுடமகன் நான். தந்தை எனக்கிட்ட கட்டளைகளை சிரமேற் கொண்டு, நல்லனவற்றை பேசி, நன்மைகள் பல புரிந்த எனக்கு இன்று தீர்ப்பு கூறும் நாள். இவ்வுலக முடிவிலே தீர்ப்பிட வந்த எனக்கு பிலாத்து தீர்ப்பு வழங்கப் போகிறான். அன்று ஓசான்னா பாடி, புகழ்ந்த மனிதர்கள் இன்று ஒழிக! ஒழிக!! என ஓலமிடும் குரல் உங்கள் காதுகளில் ஒலிக்கின்றதா? “அவனை சிலுவையில் அறையும்! சிலுவையில் அறையும்!” என சிந்தை தடுமாறி கூக்குரல் இடுவது உங்கள் செவிகளில் கேட்கிறதா? சிலுவை மரணம் ஏற்கும் அளவிற்கு நான் என்ன குற்றம் செய்தேன்? இரவெல்லாம் கசையால் அடித்து, காறி உமிழ்ந்து, குற்றுயிராய் என்னை பிலாத்துவின் அரண்மனைக்கு இழுத்துச் செல்லும் கொடூரக் காட்சியைக் காண என்னுடன் வருகிறீர்களா வாருங்கள் என் சிலுவைப் பாடுகளைக்காணுங்கள்.

**<u>முதல்நிலை : இயேசு தீர்ப்பிடப்படுகின்றார்</u>**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்** : அதெனென்றால் உமது பாரமான திருச்சிலுவையாலே உலகை மீட்டு இரட்சித்தீர்.

நேற்று இரவு கெஸ்தமனித் தோட்டத்தில் என் ஆன்மா சாவுக்கேதுவான வருத்தமுற்றிருக்கிறது என்று கூறி இரத்த வியர்வையில் மூழ்கி, எனது ஆன்மாவில் நான் அனுபவித்த துக்க துயரத்தை யாரிடம் கூறுவேன்? முத்தமிட்டு காட்டிக்கொடுத்த யூதாஸ் ஓடிவிட்டான். இரவும், பகலும் என்னோடு இருந்து, உண்டு, உறங்கி வாழ்ந்துவந்த மற்ற சீடர்கள் எங்கே? உமக்காக என் உயிரையே கொடுப்பேன் என்ற பேதுரு எங்கே? இதோ! தனிமரமாய், அடிகளால்

நொறுக்கப்பட்டு, கயிற்றால் இறுகக்கட்டப்பட்டு கள்வனைப் போல் பிலாத்து முன்னிலையில் நிற்கின்றேனே! என்ன குற்றம் செய்தேன்? கொலை செய்தேனா? கொள்ளை அடித்தேனா? என்ன குற்றம் செய்தேன்? இறை அரசை அறிவித்தது குற்றமா? நோயாளர்களைக் குணப்படுத்தியது குற்றமா? இறந்தவர்களுக்கு உயிர்கொடுத்தது குற்றமா? ஏழைகள் மீது இரக்கம் காட்டியது குற்றமா? நான் தேர்ந்தெடுத்த மக்களால் கைது செய்யப்பட்டு, பொய்ச்சான்றுகளால் குற்றஞ்சாட்டப்பட்டு, அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்பட்டு பிலாத்துவின் முன் நிற்கின்றேன். நான் குற்றவாளி அல்ல என்று பிலாத்து அறிவான். சிலுவையில் அறையும்! சிலுவையில் அறையும்! என்ற மக்களின் கூக்குரல் அவன் காதுகளை செவிடாக்கிவிட்டது. அதிகாரம் அவன் கண்ணை மறைத்து விட்டது. அவன் மனைவி விடுத்த எச்சரிக்கையும் காற்றோடு கலந்துவிட்டது. “இவனது இரத்தப்பழியில் எனக்குப் பங்கில்லை” என்று கைகழுவி இவனை சிலுவையில் அறையும் என தீர்ப்பு வழங்கிவிட்டான் பிலாத்து. ஒரு பாவமும் அறியாத நான் சிலுவைமரண தீர்ப்புக்கு ஆளாகிவிட்டேன் இது தர்மமா? நீதியா? நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

**ஜெபம் :**

சிலுவை தீர்ப்புக்கு ஆட்பட்ட எங்கள் தெய்வமே! குற்றவாளிகள் பலர் தப்பினாலும், நிரபராதி ஒருவன் தண்டிக்கப்படக்கூடாது. தன்னிடம் உள்ள குற்றத்தைக் காணாது அடுத்தவர் மீது குற்றம் கண்டுபிடித்து அகம் மகிழும் உலகம் இது. ஒரு விரலை நீட்டி மற்றவரை குற்றஞ்சாட்டும் பொழுது மற்ற மூன்று விரல்களும் தன்னை நோக்கி இருப்பதை யாரும் உணர்வதில்லை. இன்று குடும்பத்தில், நாட்டில், ஊரில், உலகத்தில் இதுதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதனால் எங்கும் சமாதானம் அமைதி மகிழ்ச்சி அற்றுப்போய்விட்டது. அமைதியின் தெய்வமே! பிலாத்துவைப் போல் அநீதிக்குப் பணியாமல் உண்மைக்குப் பயந்து யாரும் யாருக்கும் தீர்ப்பிடாமல் வாழும் உள்ளத்தை எங்களுக்குத் தருமாறு உம்மைவேண்டுகிறோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

**அனைவரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும் .

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாரக்கடவது.

## இரண்டாம் நிலை : இயேசு சிலுவை சுமத்தப்படுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்**: அதெனென்றால்......

பிலாத்துவின் தீர்ப்பினால் அக்கிரமத்திற்கும் அநீதிக்கும் வெற்றி கிடைத்துவிட்டது. எப்போது என்னை ஒழிப்போம் என்று காத்திருந்த கூட்டம் இதோ கொலைவெறியோடு என்னை இழுத்துச்சென்று கல்தூணிலே கட்டி கசையால் அடிக்கின்றது. யூதர்களின் அரசனே! இதோ உனக்கு கிரீடம் என முள்முடியை என் தலையில் வைத்து அழுத்தி காறி உமிழ்ந்து செந்நிற அங்கியை அணிவித்து ஆர்ப்பரித்தது. எட்டுப்பேர் சுமக்கக் கூடிய கரடு முரடான மரத்திலே செய்யப்பட்ட சிலுவையை தூக்கி வந்து இதோ என் தோள்மேல் வைத்து வெற்றி முழக்கமிடுகின்றனர். இரத்தம் ஆறாய்ப் பெருக உடலெல்லாம் இரணமாகி நெருப்பிலிட்ட புழு போல் உடலும் உள்ளமும் துடிதுடிக்க நான்படும் வேதனை தந்தையே உமக்குத் தெரிகிறதா! என் சித்தப்படி அல்ல உன் சித்தத்தை நிறைவேற்ற இந்தப்பாரச் சிலுவையை சுமந்து செல்கின்றேன்.

"சுமைசுமந்து சோர்ந்திருப்போரே, எல்லோரும் என்னிடம் வாருங்கள்" என அரவணைத்த எனக்கு அன்பு மகனே! மகளே! நீ தரும் பரிசு இதுதானா? உங்கள் கடுஞ்சொற்களால் எத்தனை உள்ளங்களை துடிக்க வைக்கிறீர்கள் அதுதான் என் தலையில் உள்ள முள்முடி. உடலாலும் உள்ளத்தாலும் எத்தனை இழிவான செயல்களைச் செய்து உங்களை களங்கப்படுத்தி வருகின்றீர்கள். அதுதான் என் உடலில் உள்ள கசையடிகள், நீங்கள் செய்கின்ற பாவங்கள்தான் என் தோளில் உள்ள பாரச்சிலுவை. என் சிலுவை பாரத்தை குறைக்க மாட்டீர்களா? என் உடல் வேதனையை குறைக்க மாட்டீர்களா?

**ஜெபம் :**

கருணை நிறைந்த இயேசுவே! உம் வேதனைக்கெல்லாம் காரணம் யூதர்கள் மட்டும் அல்ல நாங்களும்தான் என்பதை உணர்கின்றோம். பாவச்செயல்களை செய்யாதிருக்கும் உள்ளத்தை எங்களுக்குத் தருமாறு உம்மிடம் வேண்டுகிறோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## மூன்றாம் நிலை : இயேசு முதன்முறை தரையில் விழுகின்றார்.

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

என் அவல நிலையைப் பார்த்தீர்களா? தலையிலிருந்து வழிகின்ற இரத்தம் என் கண்களை மறைக்கின்றது. செல்லும் பாதை தெரியவில்லை. பாரச்சிலுவை தோளை அழுத்த உடல் காயங்கள் ஓரடி எடுத்துவைக்க முடியாமல் வேதனைப்படுத்த கால்கள் தடுமாறி விழுந்துவிட்டேன். கை கொடுத்து தூக்கிவிட கருணைமிக்கோர் ஒருவரும் இல்லை. உதவிக்காக ஏங்குகிறது என் உள்ளம். பாரமான வண்டியை இழுக்க முடியாமல் கீழே விழுந்த காளைகளை சாட்டையால் அடித்து துன்புறுத்தும் வண்டிக்காரன் போல் உதவி இன்றி தவிக்கும் என்னை வீரர்கள் அடிமேல் அடியடித்து துன்புறுத்துவதைப் பார்த்தீர்களா? நான் எழுந்து நடக்க உன் கரத்தை நீட்டி உதவி செய்ய மாட்டாயா?

என் மகனே! மகளே! உன் பாவங்களைப் போக்க உனக்கு மீட்பு அளிக்க நான் கீழே விழுந்து எழுகின்றேன். ஆனால் நீயோ பாவச்சேற்றிலே விழுந்து விழுந்து அதிலிருந்து எழ முயற்சிக்காமல் உன்னையே அழித்துக்கொண்டிருக்கிறாயே! எப்பொழுது எழப்போகிறாய்?

**ஜெபம் :**

அன்பு தெய்வமே! நாங்கள் செய்த பாவங்களே நீர் தடுமாறி விழக்காரணம் என்பதை உணர்கின்றோம். வேதனைகளில் பாவச் சோதனைகளில் எங்களைக்காப்பாற்றி இரட்சிக்க வேண்டுமாய் உம்மைமன்றாடுகிறோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## நான்காம் நிலை : இயேசு தம் தாயைச்சந்திக்கின்றார்.

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

கீழே விழுந்த நான் தட்டுத்தடுமாறி எழுந்து தலை நிமிர்ந்தேன்! அதோ! என் அன்புத்தாய்! பத்துமாதம் சுமந்து பெற்று பாலூட்டி சீராட்டி வளர்த்தவள். கண்களிலே நீர் ஆறாய்ப் பெறுக்கெடுத்தோட

தலைவிரிகோலமாய் நிற்கின்றாள். அம்மா என்றழைக்க உடலில் சக்தி இல்லை. அம்மா! உன் உதிரத்தை பாலாக்கி ஊட்டி வளர்த்தாயே! உன் மகனின் அவலநிலையைப் பார்த்தாயா? குழந்தைப் பருவத்திலே கால்தடுக்கி நான் விழுந்தபோது பதறி தவித்து ஓடிவந்து தூக்கி மார்போடு அணைத்து தழுவி முத்தமிட்டு என் அழுகையை நிறுத்தினாயே. இதோ இன்று உடல் வேதனையால் வெந்து தவிக்கின்றேனே! ஓடி வந்து அரவணைத்து அன்பு மழையால் ஆறுதல் தர மாட்டாயா? அன்று பாஸ்கா திருவிழாவில் நான் காணாமல் போய்விட்டதாய் எண்ணி மூன்று நாள்கள் காடுமேடெல்லாம் அலைந்து திரிந்து என்னைக் கண்டவுடன் மகனே! என்னை விட்டு எங்கே சென்றாய்? என்று கதறித் துடித்தாயே! அந்த உன் அன்பு மகன் இதோ உலகைவிட்டே செல்லப்போகிறேன். ஏனம்மா அப்படிப் பார்க்கின்றாய் "இவ்வளவு கொடுமைகளை நீ அனுபவிப்பாய் என்று தெரிந்திருந்தால் உன்னை பெற்றிருக்கமாட்டேன்" என்று எண்ணுகிறாயா? அன்று இறைவனின் சித்தத்தை நிறைவேற்ற என்னை ஈன்றெடுத்தாய். நான் என் தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற இந்த சிலுவைப்பாடுகளை மனமுவந்து ஏற்றுள்ளேன். அம்மா! என்று அழைக்க இயலாதவன் எப்படி இவ்வாறெல்லாம் பேசுகிறேன் என்று சிந்திக்கிறீர்களா? எங்கள் உதடுகள் பேசவில்லை உள்ளங்கள்தான் பேசின. பெற்ற தாய் தன் குழந்தையின் உள்ளத்தை நன்கு அறிவாள் இல்லையா?

பெற்றெடுத்த உள்ளம் தெய்வம் அல்லவா, உங்கள் பெற்றோரை எவ்வாறு நேசிக்கிறீர்கள்? மதிக்கிறீர்கள்? முதிர் வயதில் அவர்கள் உங்கள் அரவணைப்பில் வாழ்கின்றார்களா? அல்லது முதியோர் இல்லத்தில் பாசத்திற்கு ஏங்கி பரிதவித்து வாழ்கிறார்களா? உங்களை பெற்று எடுத்து வளர்த்து வாழ்வு தர அவர்கள் பட்டபாடுகளை நினைத்துப்பார்ப்பீர்களா?

**ஜெபம் :**

நேசமுள்ள இயேசுவே! எந்த நேரங்களிலும் எங்கள் பெற்றோரை கண்கலங்காமல் பாதுகாக்கும் கடமைஉணர்வை எங்களுக்குத் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**ஐந்தாம் நிலை :**

**<u>சிலுவையை சுமக்க சீமோன் இயேசுவுக்கு உதவுகிறார்.</u>**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

தாயைச்சந்தித்த மகிழ்ச்சி சற்றே உள்ளத்தில் இருந்தாலும் உடலின் தளர்ச்சியால் ஓரடிக் கூட எடுத்துவைக்க முடியவில்லை. ஆறுதல் தேடி அலைகின்றது கண்கள். முன் பின் என்னைப் பார்த்திராத சிரேனே என்ற ஊரைச்சேர்ந்த சீமோன் என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று தெரியாமல் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு வருகிறான். ஈரமற்ற யூதர்களின் இதயத்தில் இரக்கம் தோன்றியதா? இறந்துவிடுவேன் என்ற பயமா? அல்லது சீமோனையும் துன்புறுத்த எண்ணினார்களோ? தெரியவில்லை. அவனை இழுத்து வந்து நான் சுமந்துவந்த சிலுவையைச்சுமக்க வைத்து அழைத்துச் செல்கின்றனர். சிறிது நேரம் என் சுமையைத் தாங்கிய சீமோனை நன்றியுடன் நோக்கினேன். காலத்தினால் அவன் செய்த சிறு உதவி காலம் உள்ளவரை நிலைத்திருக்கும் அல்லவா?

என் மகனே! மகளே! தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என எண்ணாது நம்மைச் சுற்றியுள்ளோரின் சுமைகளைப் பாருங்கள். வறுமை, நோய், முதுமைதனிமை, ஏழ்மைஎன்ற எத்தனை எத்தனை சுமைகளோடு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்? அவர்கள் சுமைகளை நீங்கள் இறக்கி வைக்க உதவக்கூடாதா? பசித்தவனுக்கு உணவு கொடுங்கள் தாகமுற்றவனுக்கு தண்ணீர் கொடுங்கள் ஆடையில்லாதவனுக்கு ஆடை கொடுங்கள். ஏழைகளின் முகமலர்ச்சியில் இறைவனைக் காணுங்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே என்னருகே அமரும் பாக்கியம் பெறுவீர்கள். கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்.

**<u>ஜெபம் :</u>**

இரக்கம் மிகுந்த இயேசுவே! பிறருடைய இன்பங்களிலே பங்கேற்காவிட்டாலும் துன்பங்களிலே துணைநிற்கும் நல்ல உள்ளத்தை எங்களுக்குத் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**ஆறாம் நிலை :**

**வெரோணிக்கா இயேசுவின் முகத்தைத் துடைக்கின்றாள்.**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

என் கண்கள் பஞ்சடைந்து விட்டன. கால்கள் துவண்டுவிட்டன. இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது கொல்கொதா மலை? பார்வையற்றோருக்கு பார்வை கொடுத்தேன். முடவர்களை நடக்க வைத்தேன். ஊமைகளைப் பேச வைத்தேன். இதோ எனக்கு இழைக்கப்படும் கோரக் கொடுமைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்போரில் என்னால் பயன் பெற்றவர் எத்தனையோ பேர் இருப்பார்கள் இல்லையா? அவர்கள் ஒருவருக்காவது எனக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏன் ஏற்படவில்லை?. போர் வீரர்களிடம் அச்சமா? தந்தையே இந்தத் துன்பக்கிண்ணம் எப்போது என்னை விட்டு நீங்கும். அதோ! ஓடோடி வருகின்றாள் ஒரு பெண் வீரரெல்லாம் தடுத்து நிறுத்திய போதும் உதறித்தள்ளி என் முன்னே கண்களில் நீர் வடிய கலங்கி நிற்கின்றாள். அருள் ஒளி வீசும் உம் திருமுகம் எங்கே? கருணை பொழியும் உம் கண்களின் ஒளி எங்கே? இரக்கமற்ற கொடியவர்கள் காறி உமிழ்ந்ததனாலும், வியர்வையாலும், இரத்தத்தாலும், கறைபடிந்து பொலிவிழுந்ததோ என எண்ணி, தான் கையில் கொண்டுவந்த துண்டினால் என் முகத்தை துடைத்து எனக்கு ஆறுதல் வழங்குகிறாள். அவளுக்குப் பரிசாக என் முகத்தை அத்துண்டிலே பதியவைத்து ஆசிவழங்கினேன். அவள் பெயர் என்றும் நிலைத்திருக்கும் அல்லவா?

**என் மகனே! மகளே!**

உங்கள் கண்முன்னே எத்தனையோ கொடுமைகள் நடக்கின்றனவே ஏன் நீங்கள் அதைக் கேட்பதில்லை. பாலியல் பலாத்காரத்திற்கு உட்படும் சிறுமிகள், பணத்தையே குறிக்கோளாகக் கொண்டு விபசாரம் செய்வோர், கணவன் மனைவிக்குச் செய்யும் துரோகம், மனைவி கணவனுக்குச் செய்யும் துரோகம், புற்றீசல் போல் மலிந்து கிடக்கும் பாவங்களுக்கு எதிராக ஏன் குரல் எழுப்புவதில்லை நீங்கள்? அச்சமா? நமக்கேன் என்ற எண்ணமா? உனக்கு உன் குடும்பத்தில் யாருக்காவது இந்த நிலை ஏற்பட்டால் என்ன செய்வாய்?

**ஜெபம் :**

அக்கிரமத்திற்கு குரல் கொடுத்த அன்பு இயேசுவே! அக்கிரமங்களைத் தட்டிக்கேட்கும் அஞ்சா நெஞ்சத்தை எங்களுக்குத் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஏழாம் நிலை : இயேசு இரண்டாம் முறை கீழே விழுகின்றார்.

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

சுட்டெரிக்கும் வெயில், சோர்ந்து விழும் கை கால்கள் விழுந்து எழுந்து கரடுமுரடான கல்வாரி மலையை நோக்கித்தவழ்ந்து செல்கின்றேன். என்னால் ஓரடிக்கூட எடுத்து வைக்க முடியவில்லை. பாதங்களில் கல்லும் முள்ளும் குத்தி இரத்தம் வழிகிறது. அம்மா, என் வேதனையைத் தாங்க முடியவில்லை விழுந்து விட்டேன். தாயே! என்னால் எழ முடியவில்லை. கொடிய யூதர்கள் கொடூரமாய் என்னை அடிக்கிறார்களே! என்ன செய்வேன்! என்ன செய்வேன்!

**என் மகனே! என் மகளே!**

நான் இவ்வாறு வேதனைகள் அனுபவிக்க யார் காரணம்? மாசற்ற என் திருச்சபை இன்று கார் மேகங்களால் சூழப்பெற்று கறை படிந்து விட்டதே அந்த காரணமா? புனிதமாய் கருதப்பட்ட துறவு வாழ்க்கை நாகரிக போர்வையில் தன்னை மறைத்துக் கொண்டு தடம் மாறி கொண்டிருக்கின்றதே அந்த காரணமா? ஏழ்மையிலும் எளிமையிலும் வாழ்ந்தவன் நான். உங்களின் வாழ்க்கை எவ்வாறு இருக்கின்றது? எனக்காக உலக வாழ்க்கையை அர்ப்பணித்த நீங்கள் என்னை பின் தொடர்ந்து வரக்கூடாதா? நான் விரும்பும் பணிகளை நீங்கள் செய்வதில்லை. என்னை வருத்தும் வேதனைகள் போதாதா? எப்பொழுது சிலுவையை இறக்கப் போகிறீர்கள்?

**ஜெபம் :**

இயேசுவே! நாங்கள் தடம்மாறி தவறி விழும்பொழுதெல்லாம் எம் மனதிற்கு விளக்காய் உம் வார்த்தைகளையும், எம் காயத்திற்கு மருந்தாய் உம் ஆவியையும் அனுப்பி எம்மைதூக்கி நிறுத்தும், உம்மைக்கீழே விழவைக்கும் பாவங்களை நாங்கள் செய்யாதிருக்கும் துறவு வாழ்க்கையின் தூய்மையை உணர்ந்து வாழ வரம் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**எட்டாம் நிலை :**

**இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகின்றார்**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்**: அதெனென்றால்......

இது என்ன அழுகை சத்தம்? எருசலேம் பெண்கள் என் இழிநிலை கண்டு கண்ணீரும் கம்பலையுமாய் அழுது கொண்டு வருகின்றனரா? பெண்கள் இரக்கக்குணம் உடையவர்கள் அல்லவா? பூவினும் மென்மையான இதயம் படைத்தவர்கள் அல்லவா? அதனால் தான் நான் படும் பாடுகளை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை போலும். பெரும்பாடுள்ள பெண்ணை குணமாக்கியது, பல்லாயிரம் பேருக்கு உணவு அளித்தது விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை கயவர்களிடமிருந்து காப்பாற்றியது உடன் ஊனமுற்ற பெண்ணை குணப்படுத்தியது பேதுரு மாமியாரை குணப்படுத்தியது, தொழுநோயாளிகளை குணப்படுத்தியது இறந்து போன சிறுமியை உயிர்ப்பித்தது போன்ற எனது செயல்களை நேரில் கண்டவர்கள் அல்லவா அவர்கள். நீதிமான் ஒருவருக்கு அநீதியாக தீர்ப்பிடப்பட்டுள்ளதை எண்ணி மார்பில் அடித்துக்கொண்டு அழுகின்றனர். என் தாயிடம் கூட பேசாத நான் அவர்களுக்கு ஆறுதல் கூறாமல் இருக்க முடியவில்லை. எருசலேம் பெண்களே! எனக்காக அழாதீர்கள். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் பச்சை மரத்திற்கு இந்த நிலை என்றால் பட்டமரத்திற்கு? கருவிலேயே உங்கள் குழந்தைகளுக்கு கல்லறை கட்டும் இழி நிலைக்காக அழுங்கள். வரதட்சனை கொடுமையால் எரிக்கப்படும் இளம் பெண்களுக்காக அழுங்கள், வரதட்சனை கொடுக்க முடியாமல் திருமணம் ஆகாது முதிர் கன்னிகளாக வாழும் பெண்களுக்காக அழுங்கள். நாகரிகம் என்ற பெயரில் தங்கள் வாழ்க்கையை சீரழித்துக் கொண்டிருக்கும் உங்கள் மகனுக்காக, மகளுக்காக அழுங்கள். பெண்களே பெண்களுக்கு எதிரிகளாக இருக்காதீர்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு பாவச்செயலும் என் இதயத்தை கிழித்து வேதனைப்படுத்துகிறது என்பதை மறவாதீர்கள் நான் வேண்டுவது பரிதாபக் கண்ணீர் அல்ல மனமாற்றக் கண்ணீர்

**ஜெபம் :**

நாங்கள் பாவத்தில் விழும் போதெல்லாம் உம்மைகசையால் அடித்து காயப்படுத்துகின்றோம் என்பதை உணர்ந்து மனஸ்தாபக் கண்ணீர் சிந்தி மனமாற வேண்டுகின்றோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**ஒன்பதாம் நிலை :**

**இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகின்றார்.**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

நான் ஒரு முறை இருமுறை மூன்று முறை மட்டும் விழவில்லை பல முறை விழுந்து விட்டேன். குற்றுயிரும் குலை உயிருமாய் சிதைந்துள்ள உடல் பலவீனத்தால் மட்டும் நான் விழ வில்லை. நீங்கள் செய்யும் ஒவ்வொரு பாவச்செயலாலும் விழுகின்றேன் கிறிஸ்தவர்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு தந்தை உனக்களித்த பத்துக் கட்டளைகளை கடைபிடிக்காமல் வாழ்கிறீர்களே! அப்பொழுதெல்லாம் நான் விழுகின்றேன். நாளும் கிழமையும் பார்த்து பிற தெய்வங்களை வழிபடுகின்றீர்களே! அப்பொழுது நான் விழுகின்றேன். என் தந்தை பெயரால் பொய்யாணை இட்டு, பிறரை சபித்து வாழ்கிறீர்களே! அப்பொழுது விழுகிறேன். தந்தையையும் தாயையும் காப்பாற்றாது அலைகழித்தும், கொலை செய்து கொள்ளையடித்து மாற்றானின் மனைவி மீது மோகம் கொண்டு, பிறரை வஞ்சித்து செல்வம் சேர்த்து மற்றவரை அழ வைத்து நீ சிரித்து வாழ்கின்றாயே அப்பொழுதெல்லாம் நான் விழுகிறேன் என்பதை அறிவாயா? எப்பொழுது என்னை எழுந்து நிற்கச் செய்யப்போகிறாய்?

**ஜெபம் :**

அன்பு இயேசுவே அகந்தையில் விழுந்து ஆணவச் செயல்களில் நாங்கள் ஈடுபடாமல் நீர் எமக்காக சிந்திய இரத்ததால் பாவக்குழியிலிருந்து எழுந்து உமது அன்பின் அரவணைப்பில் நாங்கள் வாழ நீர் உதவ வேண்டுமென்று உம்மைமன்றாடுகின்றோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**பத்தாம் நிலை : இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன.**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்**: அதெனென்றால்......

விழுந்தும், எழுந்தும், தவழ்ந்தும் இதோ நான் மரிக்கப்போகும் கல்வாரி மலையை அடைந்துவிட்டேன். கொடூர யூதர்களின் அடுத்த செயல் ஆரம்பமாகிவிட்டது. கசையடியால் உண்டான காயங்களோடு ஒட்டிக் காய்ந்திருந்த என் ஆடைகளை உரித்து இழுக்கின்றனர். ஐயோ! கசையடி பட்டபோது உண்டான வேதனையை விட இப்பொழுது என் உடலின் சதைகள் கிழிந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடுகிறதே! நான் என்ன செய்வேன்? அன்பு, அமைதி, கருணை, இரக்கம், இன்பம் என்னும் ஆடைகளை இவ்வுலகிற்கு அளித்த நான் இன்று ஆடையின்றி அவமானச் சின்னமாய் கூனிக் குறுகி நிற்கின்றேன். யாருக்காக? எருதின் புண் காக்கைக்குத்தெரியுமா? என்னை நிர்வாணமாய் நிற்க வைத்துவிட்டு என் ஆடையை யார் எடுத்துக் கொள்வது என சீட்டு போட்டுப்பார்க்கிறார்கள். தந்தையே, என் வேதனையைக் கண்ணோக்கிப்பாரும்.

**என் சகோதரனே! சகோதரியே!**

உங்கள் உடல் தூய ஆவியின் ஆலயம் என்பது உங்களுக்குத் தெரியாதா? காமக்களியாட்டங்களால் உங்கள் ஆலயத்தைக்குப்பைத் தொட்டியாக்கிவிட்டீர்களே! பெண்களே, அரைகுறை ஆடையணிந்து அடுத்தவரின் காமக் கண்ணோட்டத்திற்கு ஆளாகி நிற்கிறீர்களே! இது அவமானம் இல்லையா? தகாத உடலுறவு கொண்டு தீராத வியாதிகளைப்பெற்று உலகினரால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறீர்களே! ஏன் இந்த அவலம்? மனைவியைத்தவிர மற்றவரை சகோதரியாக, தாயாக, தங்கையாக நோக்குங்கள், பெண்களே, உங்கள் கணவனைத் தவிர மற்ற ஆண்களை தந்தையாக சகோதரனாக எண்ணுங்கள். பார்வை தெளிவுடையதாக இருந்தால் உங்கள் வாழ்க்கை பூஞ்சோலையாய் புனிதமடையும்.

**ஜெபம் :**

எங்களுக்காய் ஆடையிழந்து அவமானச் சின்னமாய் உருகுலைந்த இயேசுவே, என் உடல் நீர்; வாழும் இல்லம் என்பதை உணர்ந்து தகாத எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் இடம் கொடாத நல்ல மனத்தைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**பதினொன்றாம் நிலை :**

**இயேசுவைச்சிலுவையில் அறைகின்றார்கள்.**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இரக்கமற்ற யூதர்கள் எனக்களித்த வேதனையின் இறுதிக்கட்டம். சிலுவை மரத்தினிலே என் கைகளை விரித்து படுக்க வைத்து எனது கைளிலும் கால்களிலும் கூர்மழுங்கிய ஆணிகளில் அடிமேல் அடி அடித்து துளைத்தபோதும் தங்களது வெறி அடங்காமல் எனது காயங்களைப் பெரிதாக்கி இன்பம் காண்கின்றனர். அங்கங்கள் பிசகி சதை கிழிய மூட்டுகள் முறிய நரம்புகள் தெறிக்க இரத்த நாளங்கள் அறுந்துபோக இரத்தம் வெள்ளமாய் பெருக்கெடுத்து ஓடுகிறது. மூன்று ஆணிகளிலே என் உடல் தொங்கிகொண்டிருக்கின்றது. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை என் உடல் வேதயைால் துடிக்கிறது. உங்கள் மீது கொண்ட அன்பினால் இந்த கொடூர வேதனையை அனுபவிக்கின்றேன். நீங்கள் செய்த பாவங்களுக்கு நான் பரிகாரப் பழியானேன். கல்நெஞ்சம் கொண்ட யூதர்கள் இதோ இரண்டு கள்வர்களுக்கு இடையே என்னை நிறுத்திவிட்டனர். சிலுவையில் தொங்கும் என்னை பாருங்கள்.

**என் மகனே! மகளே!**

மனித உயிர்களுக்கு இன்று மதிப்பில்லை. சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், தீவிரவாத தன்மையினால் மனிதர்கள் தங்களுக்குள்ளே அடித்துக் கொண்டு மாய்ந்து போகின்றனர். மனிதனின் உடலில் ஓடவேண்டிய இரத்தம் வீதிகளிலே ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடுகிறது. அன்று கல்வாரியில் ஓடிய இரத்ததிற்குப் பரிகாரமா? ஏன் இந்த அவலம்?. மனிதனே மனம் திரும்புவாயா?

**ஜெபம் :**

என் அன்பு இயேசுவே! அவமானச் சின்னமாய் சிலுவையிலே அறையுண்டு அதை மனிதப்பொருளாக மாற்றினீரே. அந்த திருச்சிலுவையின் மகிமையினால் வல்லமையினால் நாட்டில் நிலவும் தீயச்சக்திகள் அழிந்தொழிய அருள்தாரும் அப்பா.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பன்னிரெண்டாம் நிலை : இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

உச்சி வெயில், தாகத்தினால் தவித்து தண்ணீர் தண்ணீர் என்று கேட்கிறேன். புளித்த திராட்சை ரசத்தை கடற்பஞ்சில் தோய்ந்து இதோ என் வாயில் வைக்கின்றனர். மற்றவர்களை இவன் காப்பாற்றினானே! இப்பொழுது தன்னையே விடுவித்துக் கொள்ளட்டும் என்று ஏளனமாய் கூக்குரல் இடுகின்றனர். அருகில் இருந்த ஒரு கள்வன் நீ மெசியா தானே! உன்னையும் காப்பாற்றி எங்களையும் காப்பாற்று என்கிறான். மற்றவன் ஒரு குற்றம் செய்யாத இவரை ஏன் பழிக்கின்றாய் என்று கடிந்து, என்னை நோக்கி, நீர் ஆட்சியுரிமைபெற்று வரும்போது என்னை நினைவில் கொள்ளும் என்று கூறுகிறான். கடைசி நேரத்தில் தன் பாவத்தை உணர்ந்த நல்ல கள்வன். இன்றே என்னோடு வான்வீட்டில் இருப்பான். இதோ சிலுவையின் அடியில் யார் நின்று கொண்டிருப்பது? என் அன்பு தாய் அல்லவா! மகனே! மகனே! என்று கதறும் குரல் என் காதில் ஒலிக்கின்றது. அருகே என் அன்புச் சீடர் அருளப்பர். அம்மா! இவரே உன் மகன் என்று அருளப்பரிடம் ஒப்படைத்துவிட்டேன். சீடரிடம் இவரே உன் தாய் என்று ஒப்படைத்துவிட்டேன். அவருக்கு மட்டுமல்ல என் அன்புத் தாய் உங்கள் அனைவருக்கும் தாய்தான். ஐயோ! வேதனை தாங்க முடியவில்லை. என் கடவுளே! என் கடவுளே! ஏன் என்னை கைவிட்டீர். இதோ உன் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன். என்ற குரல் தந்தையின் காதுகளில் ஒலித்துவிட்டது. இதோ என் தந்தை இருகரம் நீட்டி என்னை அழைக்கிறார். நான் என் தந்தையிடம் செல்கின்றேன் எல்லாம் நிறைவேறிற்று.

**ஜெபம் :**

பிற்பகல் மணி மூன்று, வானம் இருள கோயில் திரைச்சிலை கிழிய, இயேசுவின் தலை சாய்ந்துவிட்டது. எமக்காக பிறந்து, எமக்காக வாழ்ந்து, எமக்காக மரித்த இயேசுவே, இந்த உலகம், உடல், அலகை ஆகியவற்றை எதிர்த்து நிற்க ஆற்றல் தாரும். எங்கள் மரணவேளையில் என் மீது இரக்கமாயிரும். பரகதியில் உம்மோடு வாழ வரம் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**பதிமூன்றாம் நிலை : தாயின் மடியிலே இயேசு.**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**அன்புடையோர்களே!**

பெற்ற தாயின் மடியிலே பிணமாய் கிடக்கிறார் இயேசு! பெற்ற வயிறு பற்றி எரிகிறது. பிள்ளையின் கோலம் கண்டு மகனே! பூரண நிலவாய் ஒளிர்ந்த உன் திருமுகம் எங்கே? கருணை பொழியும் உன் கண்கள் எங்கே? எளியோர்க்கு உதவிட ஓடிவரும் உன் கால்கள் துவண்டு விட்டதா? ஏழைகளை அன்போடு அரவணைத்த உன் கரங்கள் ஓய்ந்துவிட்டதா? இந்தக் கோலத்தைக் காணவா உன்னை பெற்றெடுத்தேன்?. என் கண்ணே! என் மணியே! கண் திறந்து என்னை ஒரு முறை பார்க்க மாட்டாயா? கதறுகிறார் அன்னை மரியாள். எல்லாம் முடிந்துவிட்டது. அன்னையின் ஏழாவது வியாகுலம் அரங்கேறி விட்டது.

**ஜெபம் :**

அன்னை மரியே! வியாகுல மாதாவே! அன்று ஆபேலின் இரத்தம் முதல், இன்று வரை இப்பூமியை நனைத்த அத்தனை மாசற்ற மனிதர்களின் இரத்தத்திற்காய் மனமுருகி உம்மிடம் மன்னிப்பு வேண்டுகிறோம். எங்கள் மூதாதையர் செய்த பாவங்களுக்காகவும் நாங்கள் செய்யும் பாவங்களுக்காகவும் எங்களை மன்னியும். நாங்கள் பாவக்குழியில் விழுந்து நித்திய நரகத்திற்குச் செல்லாதிருக்க உமது அன்புத் திருமகனிடம் வேண்டிக்கொள்ளும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**பதினான்காம் நிலை :**

**இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்.**

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்**: அதெனென்றால்......

இயேசுவின் சீடர்களாய் இருந்த யோசேப்பும் நிக்கேதேமு என்பவரும் தூய வெள்ளைத் துணியால் இயேசுவின் உடலைச் சுற்றி நறுமணப்பொருள்களைத் தூவி, அருகே இருந்த புதிய கல்லறையில்

அடக்கம் செய்து. அதன் மேல் ஒரு கல்லை வைத்து மூடிச்சென்றனர். ‘‘நரிகளுக்குப் பதுங்கு குழிகள் உண்டு. மனுமகனுக்கோ தலைசாய்க்கக்கூட இடமில்லை” என்று இதோ தலை சாய்ந்து உறங்கிவிட்டார்.


**ஜெபம் :**

நாங்கள் வாழ்வு பெறும் பொருட்டு உமது உயிரை எங்களுக்காக கொடுத்த நல்ல ஆயனே. அன்பின் கட்டளை எமக்கு கொடுத்த இறைவா, அயலாரை அன்பு செய்யும் நல்ல உள்ளத்தைத்தாரும். பிறருக்காக வாழும் தியாக உள்ளத்தைத்தாரும். அனாதைகள், ஆதரவற்றோர், நோயுற்றோர், துயருற்றோர் இவர்களைத் தேடிச்சென்று ஆதரவு கரம் நீட்டும், உள்ள உறுதியைத்தாரும். எங்கள் நிம்மதியை இவ்வுலகின் மாயைகளில் தேடாமல் உயிருள்ள உமது வார்த்தைகளில் தேட வரம் தாரும். எங்கள் இதயத்தின் எண்ணங்கள், ஏக்கங்கள், விண்ணப்பங்கள் உமது பாதத்தில் வைக்கின்றோம். உமது சித்தம் எங்களது பாக்கியம், உமது சிலுவை பாடுகளில் பங்கேற்ற நாங்கள் நிலையில்லா இவ்வுலக வாழ்வை நாடாமல் நித்திய வாழ்வை நாடிச்செல்ல அருள்புரியும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......



# சாமி படைச்ச பூமி
## (இயற்கையோடு சிலுவைப்பாதை)

அருட்சகோ. ராஜன்
பூந்தமல்லி.

**முன்னுரை :**

எல்லாருக்கும் வணக்கம்! நான்தாங்க சாமி படைச்ச "பூமி". தவக்காலம் வந்திருச்சி, பக்தி முயற்சிகளையெல்லாம் அதிகரிக்கனும்னு சாமிபோன சிலுவைப் பயணத்தை சிந்திச்சி, தியானிக்கனும்னு கோவிலுக்கு வந்திருக்கிங்களா! வாங்க! வாங்க! நான்கூட அதற்கு உதவி செய்யலாம்ன்னுதான் வந்திருக்கேன். வாங்க உங்களுக்கு சாமிபோன பாதையையும், நீங்க போக வேண்டிய பாதையையும் நான் காட்டுறேன். உங்களையும், என்னையும் படைச்ச நம்மசாமி, நம்மள பார்த்து "எல்லாம் நல்லது" ?ன்னுதான் பார்த்தாரு. ஆனால் இன்னைக்கு நம்மநிலைமைஎன்ன? நாமஎந்த அளவுக்கு நல்லதா இருக்கோம்? இதுக்கு காரணம் யாரு? இதையெல்லாம் பற்றிச் சிந்திச்சுப் பார்க்காம நாம் இந்த இயேசு சாமியோட பயணத்துல பங்கெடுத்திட முடியுமா!

நீங்களும் நானும் திருந்தி வாழனும்ன்னுதான், நமக்கெல்லாம் முன்மாதிரி காட்டறதுக்குத்தான், பூமி?ங்கிற என்னைத் தேர்ந்தெடுத்து நம்ம இயேசு சாமி உங்க உருவத்துல இங்க வந்துப் பிறந்தாரு. அவர் பிறந்து வளர்ந்து, பாடுகள்பட்டு, இறந்து, உயிர்த்து ஏறக்குறைய 2000 வருஷம் ஆகிப்போனாலும் இன்னைக்கும் அவரோட வாழ்க்கை நமக்கு எவ்வளவு அர்த்தமானது, முன்மாதிரியானதுன்னு நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. அதனாலதான் அவரோட பாடுகளைப் பற்றி சிந்திக்க நீங்க அவரைத் தேடி வந்திருக்கீங்க. ரொம்ப சந்தோஷம், வாங்க நாம எல்லாரும் சேர்ந்தே இந்த சிந்தனைப் பயணம் போவோம். ஆனால் மக்களே, இந்த சிலுவைப்பாதை உங்க வாழ்க்கைப் பாதையை பாதிக்கனும் இது வெற்றுச் சடங்கா இல்ல, உங்க உள்ளத்தை குத்துகிற பயணமா, உங்க சிந்தனையையும் செயலையும் மாற்றுகிற அர்த்தமுள்ள பயணமாக இருக்கனும். அதற்கு ரெடின்னா வாங்கப் போவோம் இயேசு சாமியோட பாதையில...

## 1. சாமிக்கு சிலுவைத் தீர்ப்பு.

இதோ! இங்கதான், இயேசு சாமிக்குத் தீர்ப்பு கொடுக்கிறாங்க. குற்றவாளி ஒருத்தரை சிலுவையில் அறைஞ்சி கொல்லனும்ங்கிறது யூத மரபிலே இல்லாத தண்டனை. இது உரோமையர்களோட குற்றவாளிகளுக்கு கொடுக்கப்படுற தண்டனைதான். ஆனால் நாம மீட்புப்பெறனும்னு நம்மைத் தேடி வந்த இயேசு சாமியை எந்த அளவுக்கு கேவலப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு கேவலப்படுத்தி, ஒரு இழிவான தண்டனையை கொடுக்கனும்ங்கிறதுக்காகவே ஒரு உரோமைத் தலைவர் மூலமாக “சிலுவைச் சாவு” ன்னு தீர்ப்புக் கொடுக்க வைக்கிறாங்க. ஒரு மனுசன கேவலப்படுத்துறதுல என்ன ஒரு புத்திசாலித் தனம்! இது வேற யாருக்கும் இல்லைங்க, நம்ம இயேசு சாமிக்கே நடக்குது. என்ன ஒரு அநியாயம்!

உங்க இரத்தம் கொதிக்குதா? கொஞ்சம் பொறுங்க, நீங்க இந்த மாதிரி எத்தனைப் பேருக்கு தீர்ப்பு எழுதியிருக்கீங்க...! அவனா, அவன் அப்படித்தான் செய்வான், இவளா, இவ புத்தியே இப்படித்தான்.... ன்னு எத்தனைப் பேரை மட்டம்தட்டி குற்றவாளி?ன்னு தீர்ப்புக் கொடுத்திருப்பீங்க! அதுமட்டுமா, பூமியாகிய எனக்கு என்னென்ன கெடுதல் செய்ய முடியுமோ அத்தனையும் செஞ்சிட்டு, அதோட விளைவா ஏற்படுகிற சீரழிவுகளுக்கு இயற்கைதான் காரணம் அல்லது சாமிதான் காரணம்?ன்னு எங்களையும் குற்றவாளிகள்ன்னு தீர்ப்பு கொடுக்கிறீங்களே! இது நியாயமா? இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னால் எழுதுன தீர்ப்பக்கேட்டே உங்களுக்கு இவ்வளவு ஆதங்கம் வருதுன்னா, இன்னைக்கு உங்க வாழ்க்கையில அரங்கேறுற தீர்ப்புக்களைக் கேட்டு உங்க மனம் குத்த வேண்டாமா? உங்க மனம் மாற வேண்டாமா? வாங்க செபிப்போம்.

**செபம் :**

அன்பு இயேசு சாமியே! எங்களுக்குள்ள நாங்க வளர்த்து வைத்திருக்கிற இந்த தீர்ப்பிடுகிற மனநிலையை எண்ணி உங்ககிட்ட மன்னிப்பு கேட்கிறோம். எங்களுக்குள்ள இருக்கிற இந்தத் தவறிலிருந்து திருந்தி வாழவும் மத்தவங்க தவறும்போது அவர்களை திருத்தி வாழவும் நல்ல மனசை கொடுங்க சாமி.

## 2. சாமியின் தோளில் சிலுவை

இதுதான் நம்ம பயணத்தோட அடுத்த நிலை. “கொலை செய்யப்பட வேண்டிய குற்றவாளி'' ன்னு தீர்ப்பெழுதினப் பிறகு,

சும்மாவிடுவாங்களா! கசையடி, முள்முடி, அதையெல்லாத்தையும் விட, இங்க பாருங்க, அவரை எந்தச் சிலுவையில் அறையனும்னு முடிவுச் செஞ்சிருக்காங்களோ, அதே சிலுவையை அவர் தோள்ல வச்சி தூக்கிக்கிட்டு வரச் சொல்றாங்க. அவங்ககிட்ட என்ன, சிலுவையை தூக்கிக்கிட்டு வர்ற அளவுக்கு வலிமையான வீரர்கள் இல்லையா அல்லது அதற்குரிய வசதிகள் இல்லையா? எல்லாம் இருக்கு. கூடவே ஆணவம் இருக்கு, அடக்கி ஆளக்கூடிய கர்வம் இருக்கு. அதனாலதான் “மெசியா மெசியான்னு கூட்டத்தைச் சேர்த்துக்கிட்டு ஊர் ஊரா சுத்தினியே, இப்போ இந்த சிலுவையை சுமந்துக்கிட்டு வா” ன்னு கட்டாயப்படுத்துறாங்க காவலர் கூட்டம். பாவம்! கசையடியிலும், முள்முடியிலும் துவண்டுபோன சாமிக்கு கூடவே இந்த பாரமான சிலுவை வேற. ஒருவேளை, இயேசுவை இந்த நிலைமையில நீங்க பார்த்தா என்ன செய்வீங்க? ஓடிப்போய், அவரை கட்டிப்பிடிச்சி அவரரோட தோள்மேல இருக்குற பாரமான சிலுவையை உங்க தோள்ல வாங்கிக்கிட்டு, “நீங்க போங்கசாமி, சிலுவையை நான் தூக்கிக்கிட்டு வாரேன்” ? ன்னு கண்கலங்க சொல்லிருப்பீங்கதானே! சே! எவ்வளவு நல்லவங்க நீங்க!

ஆனால் மனிதர்களே, உங்க பக்கத்து வீட்டுக்காரர், மனச்சுமை, கடன் சுமை?ன்னு பல சுமைகள்ல கஷ்டப்பட்டுகிட்டு இருக்கிறாரே, அவரைப் பார்த்தீங்களா? “போதும், போதும் இதுக்குமேல என்னால தாங்க முடியாது, உங்களோட கழிவுகளால, குப்கைகளால என் வெப்பச் சுமையை ஏத்துறீங்களே” ?ன்னு பூமி நான் கதறுகிற அந்தக் குரலைக் கேட்டீங்களா? நீங்கப்போய், இயேசு சாமிக்கு உதவ வேண்டாம். உங்களைச் சுற்றி மனப்பாரத்தோடு திரியுற நாலு பேருக்கு உதவி செய்யுங்க, என் உயிருக்கு உலையாய் இருக்கிற வெப்பச்சுமையை குறைக்க முயற்சி எடுங்க, அதுபோதும் வாங்க செபிப்போம்.

**செபம் :**

இயேசு சாமி, எங்களைச் சுற்றி வாழ்றவங்களுக்கு நாங்கள் பாரமா இல்லாமல், அவங்க பாரத்தில் ஆறுதலாய் இருக்கவும், பூமியின் வெப்பநிலை மாறுபாட்டையும் அதன் விளைவுகளையும் உணர்ந்து, இயற்கையோடு ஒன்றித்து வாழவும் நல்ல மனசை கொடுங்க சாமி.

## 3. சாமிக்கு முதல் சறுக்கல்.

இதுதாங்க அடுத்த இடம். சாமி வாங்குன அடிக்கும், இவரோட உடம்பு இருக்கிற நிலைமைக்கும் கையில ஒரு குச்சியை கொடுத்தாலே

தூக்கிக்கிட்டு கல்வாரி மலைக்கு வரைக்கும் வந்து சேருவாரான்னு தெரியல, அப்படிப்பட்ட நிலையில, இவ்வளவு பாரமான சிலுவையை இவர் தோள்ல ஏத்திவிட்டிருக்காங்களே, இவங்கெல்லாம் மனுசங்கதானா? இவங்களையும் நம்மஇயேசு சாமிதான் படைச்சாரா? பாவம்! இயேசு சாமி கீழே விழுந்திட்டாரு. சிலுவை? அதைமட்டும் என்ன, இந்த படைவீரர்கள் ஓடிப்போய் பிடிக்கவா போறாங்க! அதுவும் இயேசு சாமி மேலேயே விழுந்திடுச்சி, இரக்கமில்லாதவங்க. இப்போவாவது சாமிக்கு உதவி செய்யலாம்ல, செய்யலையே. விழுந்து கிடக்குற சாமிக்கு உங்க ஆறுதல் வார்த்தை என்ன? ? "அய்யோசாமி, ஏன்யா உங்களுக்கு இந்த கஷ்டமெல்லாம், பேசாமஉங்க வேலையை பார்த்துகிட்டு உங்க அம்மா கூடவே இருந்திருந்தா இப்படி ஒரு நிலைமை வந்திருக்குமா?" இப்படித்தான் ஆறுதல் சொல்லுவோம்.

ஏன்னா, இன்னைக்கு சூழ்நிலைக்கு இதுதான நல்லது ? என்ன நடந்தா நமக்கென்ன, நமக்கெதுக்குங்க வம்பு? நியாயம் பேசுறேன்னு நம்மதலையை கொடுத்துட்டு, யாரு விழுந்து எழுந்திருக்கிறது! பேசாம, நாமஉண்டு, நம்மவேலை உண்டுன்னு இருப்போம். எந்தக் குட்டை தூர்ந்துப்போனா என்ன? எந்தக் காடு அழிஞ்சிபோனா நமக்கென்ன? நம்மவீட்டுல தண்ணீர் இருக்கு, நமக்கு சாப்பாடு இருக்கு, அப்புறம் என்ன கவலை ? எப்படி மாறிட்டிங்க மனிதர்களே! இதேமாதிரி அன்னைக்கு இயேசு சாமியும் நினைச்சிருந்தா அந்த சாமி இந்த பூமியில உங்களைத் தேடி வந்திருப்பாரா? நமக்கு இவ்வளவு பெரிய வாழ்வும், நன்மைகளும் கிடைச்சிருக்குமா? மாறுங்க மக்களே, உங்க மனசை மாத்துங்க, இயேசு சாமியைப்போல பிறருக்காக உயிரைக் கொடுக்கலைனாலும், நீதி மறுக்கப்படுற இடத்துல அதுவும் குறிப்பாக அநீதியாக, பூமியாகிய என்னோட வளங்கள் அழிக்கப்படுற, சூறையாடப்படுற இடத்துல தைரிய குரல் கொடுக்க முன்வாங்க, இயேசு சாமிக்கு நடந்ததுபோல எதிரிகள் உங்களை வீழ்த்திவிடலாம். அவங்களால விழ்த்தத்தான் முடியுமே தவிர, உங்க எழுச்சியை ஒருகாலும் தடுக்க முடியாது. வாங்க செபிப்போம்.

<u>செபம்:</u>

இயேசு சாமி, எங்ககிட்ட இருக்கிற கண்டுகொள்ளாத் தன்மை-ங்கிற பெரிய நோயை எதிர்கொண்டு, அநீதி இழைக்கப்படுற இடங்கள்ல முழுமனத்தோடு நீதிக்காக போராடவும், அதன் பாதையில் சறுக்கல் ஏற்படுகிறபோது உம்மைப்போல எழுந்து நடக்கவும் தேவையான சக்தியை கொடுங்க சாமி.

## 4. சாமியும் தாயும் சந்திக்கிறார்கள்.

இதோ இந்த இடம்தாங்க இரத்தமும் கண்ணீரும் ஒருத்தருக்கு ஒருத்தர் ஆறுதல் தேடிக்கொள்ற இடம். இயேசு சாமியோட உடம்பெல்லாம் இரத்தம், பத்து மாசம் சுமந்து பெற்ற மகனை இந்த நிலைமையில பார்க்குற தாயோட கண் முழுவதும் கண்ணீர். "மகனே" ?ன்னு கண்ணீரால் மாதா பேச, "கலங்காதே அம்மா" ?ன்னு வார்த்தையில்லாமலே பதில்மொழி கொடுக்குறாரு இயேசு சாமி. இந்தக் காட்சியை நேர்ல பார்த்திருந்தா நீங்க என்ன செய்வீங்க? தாரைதாரையாய் கண்ணீர் வடிச்சிருப்பீங்க வேறன்ன செய்ய முடியும்?

இதோ இந்த வீரத்தாயைப்போல, நீதிக்காக குரல்கொடுக்க உங்க பிள்ளைங்களை, இந்த சமுதாயத்திற்காக அனுப்ப முடியுமா? என் மகன், என் மகள் எல்லாத்துலையும் பெஸ்ட்டா இருக்கனும். நல்லா இருக்கனும், வளமா வாழனும், அதுபோதும், ஊருக்காக உழைச்சி நமக்கு என்ன லாபம்? நல்லது செய்யப்போறேன்னு போய் நாம ஏன் நாலுப்பேரை பகைச்சிக்கனும் அதனால, சமுதாயத்துல இருக்குற இடம் தெரியாம இருந்துட்டு போமா ?ன்னு உங்க சுயநலத்தை உங்க பிள்ளைங்களுக்கும் ஊட்டி, அவங்களையும் பிறருக்கு உதவுர குணத்துல வளரவிடாம கட்டிப்போடுற மக்கள்தான் நீங்கள்! பூமியாகிய நான் படுற பாட்டைப் பார்த்துட்டு எனக்குப் பணி செய்ய, விவசாயத்தை வளர்க்க, அதற்கான கல்விகளை படிக்க, பணியாற்ற உங்க பிள்ளைகளை அனுப்பி வைப்பிங்களா, அவங்களை ஊக்குவிப்பிங்களா? தடைகள் வரத்தான் செய்யும், இந்த வீரத்தாய், அன்னை மரியா தன்னோட மகனை சந்தித்த இந்த அலங்கோல நிலையை விடவா உங்க பிள்ளைகள் கீழ்த்தர நிலைக்கு மாறிடப் போறாங்க. உலகத்தை மாத்த வேற யாரும் தேவையில்ல, மாற்றம் உங்ககிட்ட இருந்தே ஆரம்பிக்கட்டும். வாங்க செபிப்போம்.

**செபம் :**

அன்பு இயேசு சாமி!, வீட்டுக்குள்ளே எங்கள் பிள்ளைகளை பூட்டி வைத்து அவர்கள் வளர்ந்துவிட்டார்கள் என்று பெருமை மட்டும் அடையாமல், சமூக நீதிக்காக குரல் கொடுக்கும் பூமியின் வளங்களை மேம்படுத்த உழைக்கும், நல்ல மக்களாக வளர்த்தெடுக்க நல்ல மனசை தாங்க சாமி.

## 5. சாமிக்கு தோள்கொடுக்கும் சீமோன்.

இதுதாங்க, நீங்களும் நானும் இயேசு சாமிக்கு என்ன செய்யனும்னு நெனைச்சோமோ அது நடந்த இடம். இவ்வளவு கஷ்டப்படுற இயேசு சாமிக்கு யாராவது ஒருத்தராவது உதவி செய்யக்கூடாதா?ங்கிற நம்ம ஆதங்கம் அவர்கூடவே வந்த மக்களுக்கு புரிஞ்சிதோ இல்லையோ, இந்த படைவீரர்களுக்காவது புரிஞ்சிருக்கு. சிரேன் ஊர் சீமோனை கட்டாயப்படுத்தி இயேசு சாமிக்கு சிலுவையை சுமக்க உதவிச் செய்யச் சொல்றாங்க, வேற வழியில்லாம கட்டாயத்தினால இந்தப் புனிதமான பணியை சீமோனும் ஏற்கிறாரு.

யாருக்கும் கிடைக்காத பாக்கியம். ஆனா இந்த மனுசனோ வேண்டா வெறுப்புக்கு, கட்டாயத்தினால செய்றாரே, சே! நீங்க மட்டும் அந்த மனுசன சந்திக்க வாய்ப்பு சிடைச்சிருந்தா, அவர்கிட்ட “நீ பன்றது எவ்வளவு பெரிய காரியம் தெரியுமாப்பா! இதுக்கெல்லாம் கொடுத்து வைச்சிருக்கனும். நம்மள படைச்ச சாமிக்கே நீ உதவுற. கொஞ்சம் பொறு ஒரு போட்டோ எடுக்குறேன் செல்பியும் எடுத்துக்கிறேன். இதுலாம் எவ்வளவு பெரிய கெத்து தெரியுமா!-ன்னு சொல்லியிருக்கலாம் இல்லையா! போட்டோ, செல்பி பத்தி பேசுறதேல்லாம் கொஞ்சம் ஓவர்தான் ஆனால். இதுதானங்க இப்போ டிரண்ட். நாலுபேருக்கு புடைவை கொடுக்குற மாதிரி போஸ் கொடுக்கனும், அதை குறைஞ்சது ஒரு நாலாயிரம் பேராவது பாராட்டனும். ஒவ்வொரு நல்ல நிகழ்ச்சிக்கும் உங்க முகத்தோட வீதிக்கு வீதி பேனர் வைக்கனும். அப்போதான பேமஸ் ஆவோம். இதுல்லாம் பத்தாதுன்னு, பூமியையே சுத்தமாக்கப் போறேன்னு துடைப்பத்தை வைச்சிக்கிட்டு ஒரு போட்டோ, நதிகளை இணைக்கப்போறேன்னு பின்னாலே ஒரு கூட்டத்தையும் கூட்டிக்கிட்டு, செய்ய வேண்டியதைச் செய்யாம, வெறும் பேரையும், புகழையும் மட்டும் ஏமாத்தி வாங்கிட்டுப் போகுறீங்களே இது நியாயமா? இதுக்குப்பேரு உண்மையான உதவியா? நீங்க யாரு, என்ன உதவி செய்யப்போறீங்கன்னு நாலு பேருட்ட சொல்லிட்டு பிறருக்கு உதவி செய்ய வேண்டாம்ங்க, நீங்க உண்மையிலே முழுமனசோடு உதவி செஞ்சிங்கன்னா நாலுபேரு மட்டுமில்ல பூமி, நானே உங்க புகழைப் பரப்புவேன். அதெல்லாம் தன்னாலே நடக்கும். திருந்துவிங்களா? வாங்க செபிப்போம்.

### செபம்:

அன்பு இயேசு சாமி!, நாங்க செய்ற உதவியை தம்பட்டம் அடிச்சி பேரும் புகழும் வாங்கனும்ங்கிற முனைப்போட செயல்படாமல்,

முழுமனசோடு வலக்கை செய்றது இடக்கைக்கு தெரியாம பிறருக்கு உதவிடும் நல்ல மனசை தாங்க.

## 6. சாமியின் முகம் துடைக்கிறார் வெரோணிக்காள்.

இந்த இடம்தான் மனித இனத்துக்கே கொஞ்சம் ஆறுதலான இடம். அங்க இருந்த அவ்வளவு பெரிய கூட்டத்துல, ஒரே ஒரு பொண்ணு, வெரோணிக்காள் மட்டும் தைரியமா, படைவீரர்களையெல்லாம் தாண்டிப்போயி இயேசு சாமியோட அகோர முகத்தை துடைக்கிறார். என்ன ஒரு காட்சி! சே! நமக்கு இந்த மாதிரி ஒரு வாய்ப்பு கிடைக்காம போச்சேன்னு ஆதங்கமா இருக்கா? காட்சி இன்னும் முடியலை. இதோ நம்மஇயேசு சாமி, அந்த துணியிலே தன்னோட முகத்தை அப்படியே பதிய வச்சுத் தர்றாரு. என்ன ஒரு பெரும் பாக்கியம். வெரோணிக்கா, இயேசு சாமியோட முகம் வேணும்னா இவ்வளவு கஷ்டப்பட்டு அவர்கிட்ட ஓடுனாங்க? இல்லையே, அவங்களோட நோக்கமெல்லாம் இயசே சாமிக்கு ஆறுதல் ? ங்கிறது தானே தவிர, தனக்கு அவர் என்ன தருவார் அப்படின்னுலாம் எதிர்பார்க்கலை.

ஆனால், இன்னைக்கு உங்க நிலைமை என்ன? ஒரு ஏழைக்கு உதவி செய்யனும்னாலும், முதல் கேள்வி, இதைச் செஞ்சா, நீ எனக்கு என்ன தருவ? எனக்கு என்ன லாபம் கிடைக்கும்? ? இதுதான உங்க மனநிலை. நான் மரம் நட்டு, தண்ணீர் ஊத்துனா எனக்கு என்ன பயன்? வரப்போற சந்ததிக்காக நான் ஏன் தண்ணீரை சேமித்து வைக்கனும்? மனித சமுதாயமே, இதே கேள்விகளை உங்களுக்கு முன்னால் வாழ்ந்துபோன சந்ததி கேட்டிருந்தா, உங்களை போல சுயநலமா வாழ்ந்திருந்தா நீங்களும், நானும் இன்னைக்கு இங்க வாழ்ந்துகிட்டு இருக்க முடியுமா? அடுத்தவங்களுக்காக வாழ முயற்சி செய்து பாருங்க, உங்க வாழ்க்கைக்கு தேவையானது, சாமியோட கொடையா தானா உங்களைத் தேடிவரும். செய்வீங்களா? வாங்க செபிப்போம்.

**செபம் :**

இயேசு சாமியே, ஆறுதல் கொடுக்க ஓடிவந்த வெரோணிக்காளுக்கு உங்க முகத்தை கொடுத்து ஆறுதல் அளிச்சீங்களே, நாங்களும் பலனை எதிர்பார்க்காமல், பிறருக்காக உழைத்து, இயற்கை வளங்களை சேமித்து உங்க கொடைகளை பெற்றுக்கொள்ள நல்ல மனசை தாங்கப்பா.

## 7. இரண்டாம் முறை இடறுகிறார் இயேசு சாமி.

இதோ இந்த இடத்துலதாங்க இயேசு சாமிக்கு இரண்டாவது சறுக்கல் ஏற்பட்டிடுச்சி, “பரவாயில்லப்பா, இவன் கல்லூரி மலை வரைக்கு ஏறிக்கிட மாட்டான்னு நினைச்சோம், இதோ இவ்வளவு தூரம் வந்திட்டானே, நல்ல திடமான மனசுதான்ம்பா இவனுக்கு” ?என படைவீரர்கள் சொல்லி முடிப்பதற்குள்ளே இயேசு சாமியின் பயணத்தில் அடுத்த சறுக்கல். பாரமான சிலுவையோடு பாதையில விழுந்திட்டாரு. சாமியை எப்படி எழுப்புறது? வீரர்கள் அடிக்கிறாங்க, அவரை எப்படி எழுப்பி திரும்பவும் நடக்க வைக்கிறது? நீங்களா இருந்தா, “அய்யோ சாமி, வேகமா எழுந்திரிங்க, இல்லைன்னா இந்த கொடூரங்க உங்களை அடிச்சே இங்கையே கொன்னாலும் கொன்னிடுவாங்க. வாங்க சாமி, எழுந்திருங்க” ? அப்படின்னு சொல்லி அவரை தூக்கி விட்டிருப்பீங்க, அப்படித்தான!

ஆனால் இன்னைக்கு உங்களுக்கு மத்தியில கீழே விழுந்து கிடக்குற எத்தனையோ பேரை உங்கள் வார்த்தைகளாலும், செயல்பாடுகளாலும், படைவீரர்களைப்போல திரும்ப திரும்ப அடிச்சி விழத்தாட்டுறிங்களே இது மட்டும் என்ன நியாயம்? ஏற்கனவே, பருவமழை பெய்யாமல், விதைச்ச நாத்து முளைக்காமல், கேட்ட உரிமைகிடைக்காமல் வாழ்க்கையில் அடிபட்டு வீழ்ந்துகிடக்குற விவசாயிகளையும், வேளாண்மைதொழிலையும் பற்றி நீங்க கொண்டிருக்கிற கீழ்த்தரமான மனநிலை ஒரு பேரடி இல்லையா? விவசாயம் ?ன்னா ஒரு மட்டமான தொழில், வேளாண்மைகல்வில்லாம் ஒன்றுக்கும் வழியில்லாதவங்களுக்கான படிப்பு ? இதுதான உங்களுக்குள்ள ஊறிப்போயிருக்குற எண்ணம்! உங்க எண்ணத்தை மாற்றுங்க. வீழ்ந்துகிடக்குற விவசாயத்தையும், விவசாயிகளையும் என்னைக்கு நல்ல மனசோடு தூக்கி விடுறீங்களோ அன்னைக்குத்தான் பூமி எனக்கும், சாமி இயேசுவுக்கும் ஆறுதல். வாங்க செபிப்போம்.

**செபம் :**

இயேசு சாமி, எங்கள் சமூகத்தில் வீழ்ந்து கிடக்கும் விவசாயத் தொழிலையும், விவசாயிகளையும், ஏளனமாய் பார்க்காமல், எம் முழு மனதோடு அவர்களின் முன்னேற்றத்திற்காய் உழைத்திடவும், இன்றைய தலைமுறையை இதற்கானப் பணியில் ஊக்கப்படுத்திடவும் தேவையான நல்ல மனசை தாங்க.

## 8. ஆறுதல் அளிக்க வந்தோருக்கு ஆறுதல் அளிக்கிறார் இயேசு.

கலப்பையில் கை வைத்தவன், திருப்பிப் பார்த்தல் ஆகாது ? ன்னு சொன்ன அதே நம்மஇயேசு சாமி, இதோ இந்த இடத்துல தன்னோட பாரமான சிலுவையோடு கல்வாரியை நோக்கிய பயணத்துல கொஞ்சம் திரும்பி பார்க்கிறார். காரணம், ஒரு கூட்டம் அவரை எப்படியாது மலைக்கு உயிரோடு கொண்டுபோய் சேர்ந்திரனும்னு ரொம்ப கவனமாய் அவரை கூட்டிவர இன்னொரு கூட்டம், இயேசு சாமிக்கு இப்படி ஆகிடுச்சேன்னு பின்னாலே அழுதுகிட்டு வருது. கூச்சல், குழப்பம், அடிகள், வலி தடுமாற்றம், சோர்வு இதையெல்லாம் தாண்டி பெண்கள் எழுப்புற அழுகைச் சத்தமும் அவரோட காதுல விழுது. அவர்களுக்கு ஆறுதல் சொல்லறதுக்காக பின்னால திரும்புகிறார். அவர்களை தனக்காக அல்ல அவர்களுக்காக அழ அறிவுறுத்துகிறார்.

இன்னைக்கு, மனித சமுதாயத்து கஷ்டப்படாதவங்க யாராவது இருக்கிங்களா? வாய்ப்பே இல்லை. எல்லாரும் துன்பத்தை கடந்து தான் வாழ்ந்துகிட்டு இருக்கீங்க. ஆனாலும், ஏன் நண்பர்களே, உங்களோட சக மனிதன் துன்பப்படும்போது அதன்வலி உங்களுக்கு தெரியுறது இல்லை. ஏன்னா அன்பைவிட, போட்டியும் பொறாமையும் உங்களுக்குள்ள நிரஞ்சு கிடக்குது. பூமியாகிய நான் எழுப்புற அவலக்குரல் ஏன் உங்கள் காதுகள்ல கேட்கிறது இல்லை? உங்க குப்பைக் கூளங்களாலும், கழிவுகள்னாலும் நான் படுற அவதியால நான் எழுப்புற அவலக்குரலை கொஞ்சம் காது கொடுத்து கேட்டுப்பாருங்க. மலடாகிப்போன நிலங்களோட, காய்ந்துபோன ஆறுகளோட காரணங்களை கொஞ்சம் ஆழமா சிந்திச்சுப் பாருங்க. நான் எதிர்பார்க்கிறது உங்களோட அனுதாபத்தையோ, ஆறுதல் வார்த்தைகளையோ இல்லை. உங்க ஆறுதலை இயற்கையை பாதுகாக்குறதுல, அதன் வளங்களை அளவோட பயன்படுத்துறதுல காட்டுங்க, வாங்க செபிப்போம்.

**செபம் :**

இயேசு சாமியே! உமக்கு ஆறுதல் சொல்ல வந்த பெண்களுக்கு, அத்தனை துன்பத்திலும், நீரே நல்வழி காட்டினீரே, நாங்களும் சகமனிதருக்கு அவர்களது துன்பத்தில் ஆறுதலாகவும், இயற்கைக்கு உற்ற தோழியாக, தோழனாகவும் வாழ நல்ல மனசை தாங்க.

## 9. இயேசு சாமியின் பாதையில் மூன்றாம் இடறல்.

இதோ இந்த இடத்துல தன்னோட நிலைத்தடுமாறி இயேசுசாமி திரும்பவும் கீழே விழுந்திட்டாரு. வழக்கமா, பலிகொடுக்கப்போற ஆட்டையும், கோழியையும்கூட நம்மஊர்கள்ல, நல்லா குளிப்பாட்டி, அலங்காரம் செஞ்சி, ‘வெற்றி ஊர்வலம்’ மாதிரிதான் கூட்டிக்கிட்டு வருவாங்க. ஆனா, ஏன்தான் நம்மசாமிய மட்டும் இந்தப்பாடு படுத்துறாங்கன்னு தெரியல, “என்ன பன்றது? கடவுளோட திட்டத்துக்கு ‘‘ஆமாம்’’ ?ன்னு சொல்லியாச்சு. துன்பக் கிண்ணத்தை குடிக்காமதிருப்பிக் கொடுக்கவும் வழிகிடையாது. இது உங்க நேரம், நடத்துங்க, நடத்துங்க’’ ? இப்படியெல்லாம் ஆதங்கங்கள் நம்மசிந்தனையில் வந்தாலும், கீழே விழுந்த இயேசு சாமி ஒரு வார்த்தையும் எதிர்த்துப் பேசுவதா, முணுமுணுப்பதா தெரியல. நாம் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள இதைவிட என்ன இருக்கு!

நீங்க ஒருமுறை உங்க படிப்புல அல்லது வேலையில அல்லது ஒரு சூழ்நிலையில கொஞ்சம் தடுமாறிட்டா அல்லது சரிவு ஏற்பட்டிருச்சின்னா, யாரையெல்லாம் கையை காட்ட முடியுமோ அவங்களையெல்லாம் கையை காட்டி, குற்றப்பழியை எல்லாம் அவர்கள்மேலே சுமத்திவிடுறீங்களே! நம் நாட்டுல இயற்கை வளம் அழியிறதுக்கு எம்.என்.சி. கம்பெனிகள்தான் காரணம், நானல்ல. நம்மஊரில் மழை பொய்த்து போறதுக்கு பெரிய பெரிய தொழிற்சாலைகள் தான் காரணம், நானல்ல ? என்று உங்களுடைய தவறுகளை மறைக்க மற்றவர்களை குற்றம் சாட்டி தப்பித்துக்கொள்வது நியாயமா? எம்.என்.சி பொருட்களை வாங்கிறது யார்? பெரிய பெரிய தொழிற்சாலைக்கு வேலைக்குப் போறது யார்? திருந்துங்கள் மக்களே திருந்துங்கள். குற்றத்தை யார்மேல் வேண்டுமானாலும் சாட்டலாம். கடைசியில உங்க கடமைக்கான கனக்குகளை சாமியிடம் நீங்க தான் கொடுக்கனும். மறந்துடாதீங்க. வாங்க செபிப்போம்.

**செபம் :**

இயேசு சாமி! எங்கள் வாழ்வில் சறுக்கல்கள் வரும்போது, அதற்காய் பிறரை குற்றம் சாட்டி நாங்கள் தப்பித்துக்கொள்ளலாமல், அதன் விளைவுகளை ஏற்றுக்கொண்டு, தவறுகளை திருத்திக்கொண்டு உண்மையாய் உழைக்க நல்ல மனசை தாங்க.

## 10. ஆடையை இழக்கிறார் இயேசு சாமி.

சிலுவைச் சாவு என்று தீர்ப்பளித்தப் பின்பு, இயேசு, மனிதன் என்ற நிலையையே இழந்துவிட்டதாக கருதியதாலோ என்னவோ, இங்கு அவருடைய ஆடையை வீரர்கள் களைகிறார்கள். தன்னைப் படைச்ச சாமியையே நிர்வாணமாக்கிவிட்டு அவருடைய ஆடை யாருக்கு கிடைக்கும்னு சீட்டுப்போட்டு பார்க்கிறாங்க. இதுக்குமேல ஒரு மனுசனை அவமானப்படுத்த முடியுமா? இதையெல்லாம் பொறுத்துக் கொண்டு பொறுமையாய் நிற்கிறார் இயேசு சாமி, “இயேசுவே, உங்க ஆடையை தொட்டாலே போதும் நான் குணமாகிடுவேன்னு நம்பி வந்து உங்க ஆடையை தொட்டு குணமான அந்தப் பெண்ணுக்கு முற்றிலும் எதிர்முறையில், உங்க ஆடையை வச்சு பெரிய விளையாட்டே விளையாடிக்கிட்டு இருக்கிற இவங்களை ஏதாவது செய்யக் கூடாதா? இவங்களுக்கு மனமாற்றத்தையும், நல்ல குணத்தையும் கொடுங்க சாமி” ?ன்னு இயேசுக்கிட்ட கேளுங்களேன்.

ஆனால் இப்படி கேட்கிறதுக்கு முன்னால, கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க, பூமியாகிய என்னை இந்த இயேசு சாமி எவ்வளவு அழகாக, மனித இனம், உங்ககிட்ட கொடுத்தாரு! இன்னைக்கு என்னோட வளத்தையெல்லாம் சுரண்டிட்டு நிர்வாணமாக நிற்க வச்சிருக்கிங்களே, உங்க விளையாட்டப்பத்தி நான் யாரிட்டப்போய் முறையிடுவது? உங்க நெஞ்சில கை வைச்சு சொல்லுங்க, இப்போ மனமாற்றம் தேவையாயிருக்கிறது அந்த வீரர்களுக்கா, உங்களுக்கா? முதல்ல உங்க மனமாற்றத்திற்காக செபியுங்கள். என் அழகு ஆடைகளைத்தான் களைந்து என்னை கலையிழந்தவளா ஆக்கிட்டிங்க, என் உடலையாவது உயிரோடு விட்டு வைப்பிங்களா? வாங்க செபிப்போம்.

**செபம் :**

இயேசு சாமியே! நாங்கள் அனைவரும் இயற்கைக்கு இழைத்து வரும் சீர்கேடுகளை உணர்ந்து, அதன் வளமைக்காய் உழைக்கும் இயற்கைச் சார்ந்த மனமாற்றத்தை தாங்கப்பா!

## 11. மூன்று ஆணிகளில் முடக்கப்படகிறார் இயேசு.

இந்த அகோரம் அரங்கேறுது பாருங்க! என்ன கொடுமைங்க இது! நம்மைபடைச்ச சாமியை, நம்மைதேடி வந்த சாமியை, தன்னோட ஆற்றல், புனிதத்தை ஒருடலில் அடக்கி உயிர்மூச்சாய் வந்த சாமியோட, சரீரத்தை அடக்கி, உயிர்மூச்சை நிறுத்த பயங்கரமான வேலை

நடக்குது. என்ன ஒரு அநியாயம்! மரத்தினாலான சிலுவைக்கும், இரும்பாலான ஆணிகளுக்கும் இடையில அவரோட உடல் ஒடுக்கப்படுது. நல்ல வேளைங்க நீங்க அங்க இல்லை. இருந்திருந்தா, இதைப்பார்த்திட்டு சும்மா இருந்திருப்பீகளா? பொங்கி எழுந்திருக்க மாட்டீங்க! உங்களமாதிரி நல்லவங்க இல்லாததுனாலதான், பாவம்! இயேசு சாமி இந்த மாதிரியான கொடூரமான துன்பங்களையெல்லாம் அனுபவிச்சாரு. ஆனால் இதுல்லாம் முடிஞ்சி ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷம் ஆகிப்போச்சு, ஆனால் இயேசுவைப்போல துன்பப்படுறவங்கள காப்பாற்ற வேண்டிய நீங்களே பூமியாக என்னை கொஞ்சம் கொஞ்சமா கொன்னுக்கிட்டு இருக்கிங்களே இது நியாயமா? நீங்க பயன்படுத்திட்டு தூக்கி எறியுற ஒவ்வொரு பிளாஸ்டிக் பைகளும், பொருட்களும் என் மூச்சை அடைக்கிறதே, அதற்கு என்னச் சொல்கிறீர்கள்? நீங்க தூக்கி எறியுற பிளாஸ்டிக் நிலத்துல மட்குறதும் இல்லை, தண்ணீரை மண்ணுக்குள்ள விடுறதும் இல்லை. ஒருவேளை சிதைந்துபோனால் மண்ணுல கலந்து நிலத்தை மலடாக்குறது. இது கொடுமைஇல்லையா? இது அநியாயம் இல்லையா? உங்களை கெஞ்சிக் கேட்குறேன். பிளாஸ்டிக் உபயோகிக்கிறதை நிறுத்துங்க, என்னையும் வாழவிடுங்கள். வாங்க செபிப்போம்.

**செபம் :**

இயேசுவே, நீங்க பட்ட பாட்டை தியானிக்கும்போது நாங்க பிளாஸ்டிக்கால இந்த பூமி படுற பாட்டை உணர்கிறோம். இனியாவது நாங்க திருந்தி, பிறரை திருத்தி, பிளாஸ்டிக் இல்லா ஊரை மாநிலத்தை, நாட்டை, உலகை உருவாக்க நல்ல மனசை தாங்க.

## 12. இயேசு சாமியின் உயிர் பிரிகிறது.

எல்லாம் நிறைவேறிப் போனதாய் உரக்க கத்தி இயேசு சாமியோட உயிர் பிரியுது. பல மணி நேரப் போராட்டம் கடைசியில முடிவுக்கு வந்திடுச்சி, தேடி வந்த தெய்வத்தை, மீட்க வந்த சாமியை மூச்சை நிறுத்தி முடிச்சி வைச்சாச்சு. இது மனித சமுதாயம் செய்த எவ்வளவு பெரிய தப்பு ? ன்னு நான் உங்களுக்கு சொல்லி தெரிய வேண்டியது இல்லை. இப்போ என்ன பன்றது? ‘சாமியை கொன்னுட்டமே, கொன்னுட்டோமே’?ன்னு மூலையில உட்கார்ந்து அழுறதா, இல்லை இதே சாமி நமக்கு கொடுத்துட்டுப் போயிருக்கிற செய்திகளை, வாழ்க்கை முன்மாதிரிகளை தொடர்ந்து முன்னெடுத்துப் போகுறதா?

என் அருமைமரங்களை கொண்டு என்னால இன்னும் பல நூறு சிலுவைகளை தரமுடியும், மனித இனம் உங்களால இன்னொரு இயேசுவைத் தர முடியுமா? இதேதாங்க "பூமி" என்னோட விஷயத்திலையும், இந்த நூற்றாண்டுல மிகப்பெரிய நோய்ன்னா அது உலக வெப்பமயமாதல் தான்னும், அதனால ஏற்பட்டிருக்கிற விளைவுகள் என்னென்னனும் பெரிய ஆராய்ச்சிகளை செஞ்சி, இயற்கை கெட்டுப்போச்சின்னு பெரிய பெரிய பட்டியல்களை மட்டும் வெளியிட்டு அழுது புலம்புறதுனால யாருக்கு என்னங்க லாபம்? புலம்பினது போதும், நமக்கு இப்போ தேவை ? மறுமலர்ச்சி. தோய்ந்து போய் கிடக்குற இயற்கையை எப்படி மீட்டு எடுக்கப்போறோம். இதப்பத்தி எப்படி விழிப்புணர்வு ஏற்படுத்தப்போறோம் ? ன்னு சிந்திங்க. இயேசு சாமிபோல உங்கள் வார்த்தையிலும், செயல்களிலும் இயற்கையின் நண்பர்களா, அமைதியின் தூதர்களா மாறுங்கள். அப்போது, இன்னொரு இயேசு இறக்க வேண்டிய நிலை வராது, இந்த பூமியும் அழியும் நிலை வராது. வாங்க செபிப்போம்.

**செபம் :**

இயேசு சாமி, நீங்க சிலுவையில் விட்ட உயிர், 'கிறித்தவம்' என்ற ஒரு பெரிய மாற்றத்தையே ஏற்படுத்தியது. அதுபோல நாங்களும் இயற்கையின் அழிவைப் பற்றி மட்டும் புலம்பிக்கொண்டு இல்லாமல், அதை மீட்டெடுக்கிற இயற்கையின் நண்பர்களாக, தூதுவர்களாக மாற, வாழ நல்ல மனசை தாங்க.

## 13. தாயின் மடியில் இயேசுவின் உடல்.

இதோ, இங்க உயிர் பிரிஞ்ச தன் மகனோட வெற்றுடலை தன்னோட மடியில் வைத்து வளர்த்துகிறார் அன்னை மரி. யார்தான் ஆறுதல் சொல்வது இப்போது? தான் பாலூட்டி வளர்த்த மகனை, தன் கையால் உணவூட்டி வளர்த்த மகனை உயிரில்லாத உடலாய் தன் மடியில் வைத்திருக்கையில் யாரால் ஆறுதல் சொல்ல முடியும் இந்த தாய்க்கு? நீங்களும் நானும்தாங்க ஆறுதல் சொல்லனும். இத்தனை மணி நேரமாய் இந்த சாமி சுமந்துட்டு வந்த கழுமரம், அவரை குத்திக் கிழிச்ச ஆணிகள் ? எல்லாம் நம்மபாவங்கள்தானே! இவரோட உயிரும் நமக்காகத்தானே இந்த உடலைவிட்டு பிரிந்து போகியிருக்கிறது. அப்படின்னா, நாமதான ஆறுதல் சொல்லனும்! என்னச் சொல்லி இந்தத் தாயை தேற்றுவீங்க? கலைப்படாதீங்கம்மா, இனிமேல் நான் பாவம் செய்யமாட்டேன்னு சொல்லப்போறீங்களலா?

அப்படிச்சொன்னா, பாவமே செய்யாம இருப்பீங்களா? தூய்மையான மரியை, கலங்காக பார்த்துக்குவிங்களா? அதற்கு தயார் ?ன்னா வாங்க வந்து அன்னை மரிக்கு ஆறுதல் சொல்லுங்க. “அம்மா மரியே! பல காரணங்களால உங்க மகனோட வீழ்ச்சிக்கு நாங்களும் உடந்தையாகிட்டோம். மன்னிச்சிடுங்கம்மா, இனிமேலும் அவரை விழக்கூட விடமாட்டோம். அவரை மட்டுமில்ல, அவரைப்போல கடைநிலையில் இருக்கிற மக்கள், அழிந்து வருகிற விலங்கினங்கள், தாவரங்கள், இயற்கை வளங்கள் எதையும் வீழ்ந்துபோக விடமாட்டோம். சமூக நிலை பாவங்கள் மட்டுமில்ல, இயற்கைக்கு எதிரான பாவத்தையும் செய்ய மாட்டோம்மா, செய்ய மாட்டோம் ? அப்படின்னு சொல்லுங்க. வாங்க செபிப்போம்.

**செபம் :**

இயேசு சாமி, உங்க அம்மாவுக்கு ஏற்பட்ட இந்த ஒரு அவநிலையைப்போல நாங்க இந்த சமூகத்தையும், இயற்கையையும் இழந்து புலம்புற நிலை ஏற்படாமலிருக்க, ஒவ்வொருத்தரையும் சமமாக மதித்து, பிறரோட முன்னேற்றத்திற்காக உழைக்க நல்ல மனசை கொடுங்க.

## 14. சாமியின் உடல் கல்லறையில்

இங்கதான் இயேசுசாமியோட உடல் ஒரு குகைக்குள்ள அடக்கம் செய்யப்படுது. பார்வைக்காவது தெரிஞ்சாரு சாமி. ஆனால் இப்போ அவரோட உடல்கூட நம்ம பார்வையிலிருந்து மறைக்கப்படுது. ஒரு முழுநீளப் பயணம் முடிந்து போகிறது. இந்தப் பயணத்தோட முழு குறிக்கோளும் முடிவுக்கு வருது. மனுச உரு எடுத்து மன்னைத் தேடிவந்த சாமி, தன்னோட வாழ்க்கைப் பயணத்தை முடிச்சி, எல்லாத்தையும் வாரி வழங்கியவர், கடைசியில் உடலையும் உலகுக்கு அர்ப்பணிக்கிறார். இதுக்குமேல் கொடுக்கிறதுக்கு என்ன இருக்கு அவர்கிட்ட? மானம், ஆற்றல், இரத்தம், ஆடை, உயிர், உடல் எல்லாம் கொடுத்திட்டார்.

தினம் தினம் திருப்பலியில அவரோட உடலை உட்கொள்றீங்களே உங்களால இந்த சாமிக்காக, இந்த சாமியோட பூமிக்காக, இந்த சாமியோட மக்களுக்காக என்ன கொடுக்க முடியும்? பக்கத்து வீட்டு மரம் உங்க வீட்டு காம்பவுண்ட்க்குள்ள கிளைவிட்டாலே உங்களுக்கு கோபம் வருதே! என் வீடு, என் நிலம், என் மக்கள் ?ன்னு உங்க உலகத்தையே சுருக்கிக்கிட்டா, நீங்களும் ஏறக்குறைய கல்லறைக்குள்ள

வாழ்றதுக்குதான சமம்! இப்படிப்பட்ட வாழ்க்கை போதுமா? இதுக்கா, இயேசு சாமி தன்கிட்ட இருந்ததை எல்லாம் நமக்காக கொடுத்தாரு. உலகம் ரொம்ப பெருசுங்க, உங்க சிந்தனையை பெருசாக்குங்க, உங்க பணி, உங்க நிலம், உங்க எல்லை தாண்டி எல்லோருக்கும் விரிவடையட்டும். வாங்க செபிப்போம்.

**செபம் :**

இயேசு சாமி, என் பிள்ளை, என் வீடு, என் சொந்தம் ? ன்னு எங்களை நாங்களே சுருக்கிக்கொண்டு அடைப்பட்டுவிடாமல் உம்மைப்போல, எங்களுடைய ஆற்றலை பிறருக்காய் பிறரது நலனுக்காய் செலவிட்டு வாழும் நல்ல மனசை தாங்க.

**முடிவுரை :**

எப்படி இருந்தது பயணம்? இயேசு சாமி வந்த பயணத்தோடு, நாமஇப்போ போய்க்கொண்டிருக்கிற வாழ்க்கைப் பயணத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வளவு வித்தியாசம் இருக்கு பார்த்தீங்களா? நாமபோக வேண்டிய பாதையே வேற, இன்னைக்கு நாமபோய்வந்த இந்த சிந்தனைப் பாதை நம்மவாழ்க்கைப் பாதையை மாற்றட்டும். நாமதேர்ந்தெடுக்கிற வாழ்க்கைப் பாதை நம்மோட செயல்பாடுகள்ல வெளிப்படட்டும். அப்போது தான் நம்மைத் தேடி வந்து நம்மிடமே வீழ்ந்த சாமி நம்மிலே உயிர்ப்பார், நாமும் மறுகிறிஸ்துவாக மாறுவோம்.



# தந்தையே! இவர்களை மன்னியும்!
## (மூத்த சகோதரின் மனநிலையில்)

அருட்சகோ. குழந்தை பா
சென்னை.

**முன்னுரை:**

**எனதருமை தந்தையே!**

உம்மைவணங்கி ஆராதிக்கிறேன், உமது திருவுளத்தை நிறைவேற்றி உம்மைமகிமைபடுத்துவது மட்டுமேஎனது அன்றாட உணவு.

தந்தையே! நீர் விரும்பி படைத்த இந்த மக்கள் மீது நீர் கொண்டுள்ள கொள்ளைப் பிரியத்தை என்னவென்று எடுத்துரைப்பேன். படைத்த அந்த நாளிலிருந்து, இந்நாள் வரை எவ்வளவு அன்பு... கீழ்ப்படியாமையால் அவர்கள் உமதன்பை விட்டு விலகினாலும் தேடித்தேடி உமது அளவற்ற வற்றாத இரக்கத்தின் நதியிலே அவர்களை நனைத்து உமது பேரன்பினால் தேற்றிக்கொண்டே இருக்கிறீர். இறைவாக்கினர்கள், நீதித்தலைவர்கள், அரசர்கள், என்று எத்தனையோபேரை அனுப்பி உமது மக்களை ஆண்டு நடத்தி வந்தீர். இருப்பினும் இம்மக்கள் உணரவில்லை. உம் அளவற்ற அன்பால், பலரையும் அனுப்பி முழுப்பலன் கிடைக்காததால்... உமது அன்புக்குரிய மகன் இயேசுவாம் என்னை, இந்த மக்களை மீட்கும் மெசியாவாக அனுப்ப திருவுளமானீர்.

தந்தையே, உம் இறைத்தன்மையில் ஊறிக்கிடந்த என்னை மனிதத்தன்மைநிறைந்த அவதாரம் எடுக்கவைத்து பாவிகளின் பங்காளியாய், மூத்த சகோதரனாய் தத்துக் கொடுத்தீர். மாசற்ற அன்னை மரி மடியில் பெறப்பட்டு, எளிய நீதிமானால் வளர்க்கப்பட்டு மனித்தன்மையில் உமது திருவுளத்தை நிறைவேற்ற என்னை உமது கருவியாக்கியதற்காக மிக்க நன்றி அப்பா...

நீர் அனுப்பிய பல இறைவாக்கினர்களைப்போல, நானும் பலவித இன்னல்களை ஏற்றுக்கொண்டேன். உமது வார்த்தைகளை உள்ளபடி எடுத்துரைத்தேன். அதை வாழ்ந்தும் காட்டினேன். கூட இருந்தவர்கள் முதல் கூடி இருந்தவர்கள் வரை எல்லாருக்கும் நான் எதிரியானேன்.

ஒருவன் காட்டிக் கொடுக்கிறான், ஒருவன் மறுதலிக்கிறான், பலர் பொய்க் குற்றச்சாட்டுகளால் உன்னை நான் நிந்திக்கிறேன் என்று கூறி

அநியாய தீர்ப்பளித்து அவமானத்தின் சின்னமாம் சிலுவையை என் தோள்மேல் ஏற்றி கொலைக்களமாம் கல்வாரி மலைக்கு என்னை ஏற்ற தயாராகிவிட்டார்கள். என்ன செய்வேன் நான்!

எது எப்படியானாலும் அது உமக்கு விருப்பம் என்றால் அது அப்படியே நிகழட்டும் தந்தையே! நான் தயாராகிவிட்டேன் இந்த பயணத்திற்கு எனது பயணத்தில் நீர் உடன் இரும். அதுபோதும் எனக்கு.

**எனதருமைஇளைய சகோதர! சகோதரியே!**

குடும்பச்சுமையை மூத்த சகோதரன்தான் சுமக்க வேண்டும் என்ற கூற்றினை என் வழியாய் நிறைவேற்றிவிட்டாய்! பரவாயில்லை, நான் தயார்... முன்னே செல்கிறேன்... ஒரு ஆறுதலுக்காவது என் பின்னே வருவாயா!!!.

## முதல் நிலை : நீதிக்கு ஓர் கண்ணீர் அஞ்சலி

**தந்தையே!**

ஞானத்தின் இருப்பிடமே! கருணைக்கடலே! நீதி வழங்குவதில் வல்லவரே! உம்மைவணங்கி தொழுகிறேன். ஞானத்தோடு நீதி வழங்க அன்று சாலமோன் அரசனுக்கு சிறந்த ஞானத்தை வழங்கி பல நிரபராதிகளை காத்தவரே! இன்று உன் பிள்ளையாகிய என் நிலைமையைப் பார்த்தாயா!!!

தங்களுக்கு போட்டியாக யாரும் இருக்கக்கூடாது, மக்கள் மனம் நேரிய வழியில் திசைதிருப்பப்படக்கூடாது என்று சூழ்ச்சிகள் பல செய்து, என்னோடு இருந்தவனையே என்னைக் காட்டிக்கொடுக்க வைத்து, கைது செய்து கொலைக் குற்றங்களை உண்மைக்குப் புறம்பாக சுமத்தி குற்றவாளிக் கூண்டில் என்னை நிறுத்தியிருக்கும் இந்த தலைமைக் குருக்களையும், என்னை எதிரியாக நினைத்துக் கொண்டிருக்கும் யூதர்களையும் நினைத்து நான் வெட்கித் தலைகுனிகிறேன்.

நியாயம் கண்முன் தெரிந்தாலும், பதவிக்கும் பட்டத்திற்கும் ஆசைப்பட்டு தற்காத்துக்கொள்ள, பயந்து கோழைத்தனமாய் தீர்ப்பு அளிக்கும் இந்த பிலாத்துவை நினைத்து வேதனைப்படுகிறேன்.

**என் அன்பு சகோதரமே!**

நீயும் அந்தக் கூட்டத்தில் ஒருவன்தானே! சொல் பார்ப்போம்! உண்மைபேசுபவர்களை, நல்லது செய்பவர்களை எப்படியாவது அழித்துவிட வேண்டும் என எத்தனைமுறை நீ எண்ணியிருக்கிறாய்?

எத்தனை முறை பொய்மைக்கு துணைபோய் நல்லவர்களை காட்டிக்கொடுத்து அநியாய தீர்ப்பிற்கு ஆளாக்கியிருக்கிறாய்?

பதவி, பட்டம் பெருமைக்கு மயங்கி அதை தக்க வைத்துக்கொள்ள பயந்து எத்தனைபேரை தவறாக தீர்ப்பிட்டிருக்கிறாய்?

அப்படியென்றால் நீயும் அவர்களில் ஒருவன்தான்! என்று மாறப்போகிறாய்???

**செபம் :**

தந்தையே, தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள்! இவர்களை மன்னியும்!.

## இரண்டாம் நிலை : குடும்ப பாரம் மூத்த சகோதரன்மேல் சுமத்தப்படுகிறது, பாரச்சிலுவையாய்...

**அன்பான அப்பாவே!**

சுமைகளை சுகமாக்கும் என் பாசத்தந்தையே! உம்மைஆராதித்து வணங்குகிறேன்.

அப்பா... உம்முடன் ஆனந்தமாய் சுற்றித்திரிந்த எனக்கு அவனமானத்தின் சின்னம் பாரச்சிலுவை சுமத்தப்படுவது வேதனையாய் உள்ளது. சிலுவைமரத்தின் கனம் எனக்கு பெரிய வலியாக தோன்றவில்லை. ஆனால் சிலுவை சுமத்தியவர்களின் தீயகுணம்தான் எனக்கு பெரும் வலியாக அமைந்தது.

அப்பா... சுமக்கத் தொடங்கிவிட்டேன்.... கொஞ்சம் துணையா வாங்கப்பா.. ஏனா... சுமையை கொடுத்தவங்க பாதிபேரு வேடிக்கை பார்க்கிறாங்க... கொஞ்சபேரு ஓடியே போயிட்டாங்க. இன்னும் கொஞ்சபேரு ஓட ரெடியா இருக்காங்க....கூட பழகுனவங்க இருக்கிற இடமேதெரியல... என்ன செய்யுறது. நீங்க எனக்கு போதும்பா...!

**அன்பு சகோதர!, அன்பு சகோதரி!**

என்னைப் பாருங்கப்பா... அண்ணன் என்னை பாரத்துடன் பயணிக்க செய்துவிட்டீங்களே! இது நியாயமா! நீங்கள் செய்த தவறுக்காக பிறரை தண்டிக்க நினைக்கலாமா! அண்ணனாக நான் அன்று ஏற்றுக்கொண்டேன்... சரி பராவயில்லை... இன்றும் அதே தொடர்ச்சி... ஒன்றும் அறியாத நல்ல மனிதர்கள்மேல் சுமத்த ஆரம்பித்து விட்டீர்களே! என்று மாறப்போகிறீர்கள்.

**செபம் :**

தந்தையே! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்!

**மூன்றாம் நிலை :**

**பாரச்சிலுவை படுக்க வைத்துவிட்டது முதல்முறையாய்!**

**என் அன்பு தந்தையே!**

வேதனையில் விழுந்த என்னை அன்பாய் தூக்கி அரவணைத்த அன்பு அப்பாவே! உம்மைஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகின்றேன்.

அப்பா... மனித பலவீனம் என்னையும் விட்டுவைக்கவில்லை. என் சகோதர சகோரிகளின் சுமையை சுமக்கும் போது திடீரென்று ஒரு நடுக்கம், பதற்றம். வலியினால் செல்லும் வழி கண்களுக்கு மறைக்கப்பட்டு முதல்முறை சாய்ந்து விட்டேன். முடியவில்லையப்பா! முடியவில்லை.

என்னைத் தூக்கிவிட சுமைகளின் உண்மையான சொந்தக்காரர்கள் யாருமேமுன்வரவில்லை. இது தருமம்தானா? பரவாயில்லயப்பா! நீங்க என்னோடு இருக்கும் போது இதெல்லாம் தூசுக்கு சமம், நான் உங்களை நம்புகிறேன். நீங்க போதுமப்பா..!

**என் அருமைசகோதரமே!**

நான் விழுந்து கிடக்கும் போதுதான் என்னை தூக்கிவிட நீ முன்வரவில்லை குறைந்தபட்சம் உன் அருகில் விழுந்து கிடப்பவர்களையாவது, வாழ்வில் துவண்டு கிடப்பவர்களையாவது தூக்கிவிட கரைசேர்த்துவிட முன்வருவாயா! முயற்சிசெய்வாயா!

**செபம் :**

தந்தையே! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்!

**நான்காம் நிலை : தாயின் பாச மழையில் அண்ணன் இயேசு!**

**தாயும் தந்தையுமானவரே!**

உம்மைபோற்றுகிறேன்!, புகழுகிறேன்!, ஆராதிக்கிறேன்!

**அப்பா...**

உமது திட்டத்தை நிறைவேற்ற ஒரு மாசற்ற பெண்ணை எனக்கு அன்னையாக கொடுத்தீரே... ரொம்ப நன்றியப்பா..... அவர் என்னை கருவில் சுமந்த விதம் பெற்றெடுத்த விதம், வளர்த்தவிதம், உம் பணிக்காய் அர்ப்பணித்த விதம் என்றும் ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்க்கும்போது, அவளோடு இருப்பதற்காகவாது உம்மிடம் உயிர்ப்பிச்சைக்கேட்கலாமோ என்று எனக்குள் தோன்றுகிறது.

அப்படியொரு வீரத்தாய் என் மரண வேதனையில் பங்கெடுக்க, பகிர்ந்துகொள்ள. என்னை சந்திக்க வந்திருக்கிறாள். நாங்கள் இருவரும் வாய்விட்டு பேசவில்லை. மாறாக மனம் விட்டு கண்களால் உறவாடிக் கொண்டிருந்தோம்.

நான் படும் வேதனை, தந்தை உம் திட்டம் நிறைவேறத்தான் என்று எனக்கு நினைவூட்டி, “கவலைப்படாதே! வீறுநடை போடு” என்று ஆறுதல் கூறி என்னை அனுப்பி வைக்கிறாள்.

**என் அன்புத் தம்பியே... சகோதரியே!**

உன்னை தவமாய் பெற்ற உன் தாயை என்றாவது இனிமைவார்த்தைகளால் அலங்கரித்திருக்கிறாயா?

உன்னை பெற்றது முதல் இந்நாள் வரை உனக்கு ஒன்று என்றால் துடிதுடித்து ஓடிவரும் உன் அன்னையை, அவளின் துன்பத்தில், அவளின் முதுமையில் அவளுக்காக என்றாவது துடிதுடித்து ஓடிச் சென்று பார்த்திருக்கிறாயா!

உன் வேதனையில் பங்கு போட்ட அவளுக்கு, என்றாவது அவளின் வேதனையில் பங்கு போட்டிருக்கிறாயா!

நீ கட்டுகிற வீட்டின் பெயர் அல்லது வாழ்ந்து கொண்டிருக்கிற வீட்டின் பெயர் மட்டும் அன்னை இல்லம்... ஆனால் உன் அன்னை இருக்கும் இடமோ அனாதை முதியோர் இல்லம்... என்ன கொடுமைஇது....! என்று மாறப்போகிறாய்...!

**செபம் :**

தந்தையே தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள்! இவர்களை மன்னியும்!.

**ஐந்தாம் நிலை :**

**சிக்கிக்கொண்டான் சிரேன் ஊர் சீமோன் எனக்கு உதவ...!**

இரக்கத்தின் திருமுகமே! என் தந்தையே! உம்மைஆராதித்து வணங்கி தொழுகிறேன்...

**தந்தையே!**

படைவீரர்களின் சாட்டையடிகளும், சிலுவையின் சுமையும் என்னைச் சின்னாப்பின்னமாய் ஆக்கிவிட்டது. கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கும் என்பதற்கு ஏற்ப, என் இயலாமையை உணர்ந்த படைவீரர்கள் எனக்கு உதவி செய்ய, என் சிலுவையின் பாரம் குறைக்க ஒருவரை பிடித்துக்கொண்டு வந்தார்கள்.

பாவம்... அந்த அப்பாவி இவ்வளவு கூட்டம் என்னை சூழ்ந்து நின்றாலும் எங்கோ வயலுக்கு போய்க் கொண்டிருந்தவனை வலுக்கட்டாயமாக என் சிலுவையின் பாரத்தை அவன்மேல் இறக்கினார்கள். முடியாது என்று அலறிய அவன், என் குருதி சிந்திய முகத்தைப் பார்த்ததும் அலறலைக் குறைத்துக்கொண்டு எனது பாரத்தில் பங்கு கொண்டார். அப்போது அவன் கண்களில் என் அப்பா உன்னை நான் கண்டுகொண்டேன்.

**என் சகோதரமே!**

ஆபத்துக்காலத்தில் உதவுபவனே உற்ற நண்பன் ? இது பழமொழி.

இது என்று நனவாகப்போகிறது உன்னால்? சொல்லமுடியுமா! பழமொழியை பழக்கப்பட்ட மொழியாக ஆக்கிக்காட்டமுடியுமா!

சிரேன் ஊர் சீமோன் கட்டாயப்படுத்தப்பட்டாலும் கடைசியில் கரிசனையோடு எனக்கு உதவினான். நீர் என்று உதவப்போகிறாய் உன்னிடம் உதவி வேண்டி நிற்பவர்களுக்கு...! மாடிமீது மாடிகட்டி கோடி மீது கோடி சேர்த்தால் போதுமா!!! மடியேந்துவோர்க்கு மனம் நிறைக்க கொடு! அல்லல் படுவோர்களை அண்டிச்சென்று அரவணை; அதுபோதும்.

**செபம் :**

தந்தையே தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள் இவர்களை மன்னியும்!.

## ஆறாம் நிலை : வெரோணிக்காவின் வெள்ளைத்துணியில் இயேசுவின் திருமுக ஓவியம்

**துயர்துடைக்கும் எம் தந்தையே!**

உம்மைஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

**தந்தையே!**

பகலவனின் பளிச்சிடும் வெப்பம், முள்முடியால் பீறிட்டு எழும் இரத்தம், கீழே விழுந்தபோது முகத்தில் தோன்றிய வடுக்கள்... ரணங்கள்... இவையெல்லாம் எனது முகத்தில் ஆறாய் ஓட, கண்களில் பட்டு எரிச்சலால் நான் துடிதுடிக்க, எனது முகத்தை துடைக்க என்னால் முடியவில்லையே! யாராவது வந்து துடைக்க உதவுவார்களா! என்ற ஏக்கத்தோடும், உதவமாட்டார்களோ! என்ற ஏமாற்றத்தோடு ஏங்கி நிற்கும் போது.... என் கண்கள் கண்டு கொண்டன. ஒரு சூறாவளி

சுழன்று கொண்டு தடைகளை தகர்த்தெறிந்து, வெள்ளைத்துணியை என் செந்நிற மேனியில் பதிக்கிறாள். என் துன்பத்தைத்துடைக்கிறாள்... அந்த சூறாவளி வெரோணிக்கா!

என்னே ஆறுதல் எனக்கு! என்னே மகிழ்ச்சி எனக்கு! என் முகம் துடைத்த துணியை நான் சற்று உற்றுப்பார்த்தேன் ஐயகோ! இதுவா என் முகம்...!!!

**என் சகோதரமே!**

பார்த்தீர்களா! இந்த சூறாவளியின் வீரச்செயலை! என்னோடு உண்டு குடித்த என்சீடர்கள் எங்கிருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. என்னால் பயனடைந்து, என் வார்த்தையைக்கேட்டு கூட்டம் கூட்டமாய் வந்த அந்த கூட்டம் எங்கே!! தெரியவில்லை! இல்லை... இல்லை.. அவர்கள் எல்லாரும் என்னைச் சுற்றித்தான் நின்று கொண்டிருந்தார்கள். என்னதான் நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு! – வீரமற்ற கோழைகளாய்.

நீங்களும் அப்படித்தானே! கண்ணீர் வடிக்கும் உன் சகோதரர்கள் சகோதரிகளுக்கு விபத்தில் அடிப்பட்டு கிடக்கும் நபர்களுக்கு கையறுந்த நிலையில் இருப்பவர்களுக்கு என்றாவது நீ எவ்வித பயமும் இன்றி, துணிவுடன் உதவ முன்வந்திருக்கிறாயா?

**செபம் :**

தந்தையே தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்!.

## ஏழாம் நிலை : சுமைஇயேசுவின் கால்களை வாரிவிட்டது இரண்டாம் முறையாய்...!

என் கால்கள் கல்லில் மோதாத படி என்னைத் தாங்கும் தந்தையே! உம்மைஆராதித்து வணங்கி உம்மைமகிமைப்படுத்துகிறேன்.

**அப்பா!**

ஒரு பக்கம் படைவீரர்களின் கசையடி

மறுபக்கம் சிலுவைப் பாரம்

இன்னொரு பக்கம் கீழே சூடான தரை கல்லும் முள்ளும் சேர்ந்து என் பாதங்களை கிழிக்கின்றன. முடியலப்பா! கீழே விழுந்துட்டேன் இரண்டாம் முறையாய்...

லேசா கண்மூடி திறப்பதற்குள் மீண்டும் அடிக்கிறார்கள் படைவீரர்கள் தரையை முத்தமிட்டுக்கொண்டே தலை

நிமிர்ந்துப்பார்த்தேன் எவ்வளவு தூரம் என்று! வெகுதூரம்தான், என்ன செய்வது... அழுதாலும் புரண்டாலும் நான்தானே சுமக்க வேண்டும். உங்கள நினைச்சுக்கிட்டே அப்படியே எழுந்து சுமக்க ஆரம்பிச்சுட்டேன் அப்பா...!

**என் தம்பி, தங்காய்!**

நான் விழுவதை பார்த்து தயவு செய்து பரிதாபப்பட்டுவிடாதே! உன் பரிதாபம் எனக்கு தேவையில்லை. விழவைப்பதும் நீதான்.. பரிதாப்படுவதும் நீதான்.. உலக மகா நடிப்பு... என்னிடம் வேண்டாம்! முடிந்தால் யாரையும் விழுத்தாட்ட நினைக்காதே! உன் பொறாமையால் அவர்களை விழுத்தாட்டிவிடாதே! உன் அதிகாரம், பண பலத்தால் கீழே தள்ளிவிடாதே! உன் உடல் மாயக்கவர்ச்சியால் மயங்கி விழச் செய்துவிடாதே புரியுதாப்பா! விழுந்து கிடக்கிறவங்கள பார்க்குறியா! பரிதாபப்பட்டு செல்லாமநல்ல சமாரியன் போல தூக்கிவிடப்பாருப்பா! செய்வீயா!

**செபம் :**

தந்தையே தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள்... இவர்களை மன்னியும்!.

**எட்டாம் நிலை : ஆறுதலுக்கே ஆறுதல்!**

ஆறுதலின் தெய்வமே! என் அப்பாவே! உம்மைஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

**அப்பா!**

சுமையோடு சிறிது தூரம் நடந்த எனக்கு எதிரே ஒரு நிழல் கூட்டம் நெருங்கியது. யாரென்று நிமிர்ந்து பார்த்தேன். ஐயோ பாவம்.. என்மீது அன்பு கொண்ட எருசலேம் நகரத்து பெண்கள். என்னால் பலன் அடைந்தவர்கள்... என் வார்த்தையை நம்பியவர்கள் அவர்கள் கண்ணீர் மல்க என் முன் நிற்பது எனக்கே ஒருகனம் வருத்தமாயிற்று. இருந்தாலும், வருத்தத்தை வெளிக்காட்டாமல் ஆறுதல் கூற வந்தவர்களுக்கே ஆறுதல் கூறி, பச்சை மரத்தையே பதம் பார்த்துவிட்டார்கள். எனக்காக அழுவதை விட்டுவிட்டு, உங்களுக்காக உங்கள் பிள்ளைகளுக்காக அழுங்கள் என்று அனுப்பிவிட்டேன். தந்தையே அவர்களை நிறைவாய் ஆசீர்வதியும் ஏனென்றால் அவர்கள் நன்றிமறவாத நல்ல மனங்கள்!

**தம்பி!**

எத்தனை ஆண்கள் என்னோடு பழகினார்கள், உண்டார்கள்.. குடித்தார்கள் என் வார்த்தையைக் கேட்டார்கள்.. கூடவே வந்தார்கள். ஆனால் என்ன புண்ணியம். பார்த்தாயா, சிறிதுகாலமேஅறிமுகமான, என் வார்த்தையைக் கேட்ட பெண்கள் எனக்கு ஆறுதல் கூற வந்திருக்கிறார்கள். உனக்கு வெட்கமாக இல்லையா! எங்கு ஓடினாய்?. அன்று மட்டுமா... இன்றும்தானே அதையே திரும்பவும் செய்கிறாய் நோயினாலும், துன்பத்தினாலும் அவதிப்படுவோர்களுக்கு, என்றாவது நேரில் சந்தித்து ஆறுதல் கூறி இருக்கிறாயா! சிறையில் இருப்போரை என்றாவது நீ நேரில் சந்தித்து ஆறுதல் கூறி இருப்பாயா! சிந்தித்துப்பார்.!

**தங்காய்!**

அன்றைய பெண்கள் நன்றி மறவாது எனக்கு ஆறுதல் கூறினார்கள். நீ என்றாவது அவர்களைப்போல் நன்றி மறவாது வாழ, பிறருக்கு ஆறுதல் கூற முன்வந்திருக்கிறாயா! புரணி என்ற பெயரில் உனக்கு உதவிசெய்தவரை பலவாறு பேசி அவர்களை எப்படி அவமானப் படுத்தியிருப்பாய்! செய்த உதவியை மறந்து அவர்களை எப்படி தவறாக பேசியிருப்பாய்? சிந்தித்துப்பார்..

**செபம் :**

தந்தையே! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள் இவர்களை மன்னியும்!.

**ஒன்பதாம் நிலை :**

**உச்சக்கட்ட தடுமாற்றம்.. இலக்கு நெருங்கியது!**

அன்பு அப்பாவே! வெற்றியின் தந்தையே! உம்மைஆராதித்து வணங்கி உம் பாதம் பணிகிறேன்.

**அப்பா!**

கல்வாரி மலையை நோக்கி நெருங்கி வந்துவிட்டேன்... கொஞ்சம் தூரம்தான், ஆனால் அதற்குள்ளதாக ஒரு படைவீரனுக்கு பொறுக்கவில்லை. என்னால் அவனும் வெயிலில் வாடுகிறான் என்பதற்காக, கோபத்தோடு அந்த சவுக்கினால் ஓங்கி அடித்தான். ஐயகோ! அப்பா.... என் சதை அவன் சவுக்கோடு முள் தைத்தாற்போல் தைத்துக்கொண்டது. என்னுடைய வேர்வைத்துளிகள் அந்த இடத்தில் பட, ஒரு நிமிடம் மரணத்தின் உச்சத்திற்கு சென்று வந்தேன். அப்போது

வேதனை பொறுக்காமல் என் கால்கள் தளர்ந்து போய்விட்டன. விழுந்தேன் மூன்றாம் முறையாய். மணி 12 ஆகவிருப்பதால் அந்த கயவர்கள் கதிரவனின் உச்சி வெயிலில் என்னை சிலுவையில் நிறுத்த திட்டம் தீட்டி வீழ்த்த, என்னை எழ வைக்க முயற்சிக்கின்றனர்.

மனித நிலையில் இவற்றையெல்லாம் பொறுக்க முடியாவிட்டாலும், உமது திருமகனாய், உன் திருவுளத்தை நிறைவேற்ற, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு என்னை அமுக்கிய சிலுவையை தாங்கியவாறே மீண்டும் எழுந்து நடக்கின்றேன்.

**எனதருமை சகோதரமே!**

என்ன பார்க்கிறாய்! மறுபடியும் பரிதாபமா? தேவையே இல்லை. நான் விழுந்து எழுந்து விட்டேன். ஆனால் நீ இன்னும் விழுந்த நிலையிலேயே கிடக்கிறாயே! என்று எழப் போகிறாய்!

பாவம் என்ற சேற்றிலிருந்து... பொறாமைஎனும் தீயிலிருந்து... ஆணவம் எனும் சாக்கடையிலிருந்து... எழுந்து வா...! முயற்சி செய்.. விழுந்து விடுதல், விழுந்தே கிடப்பதற்கு அல்ல! புது நம்பிக்கையோடு எழுவதற்குதான்!.

**செபம் :**

தந்தையே! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்!.

## பத்தாம் நிலை :

## கொஞ்ச நெஞ்ச மானமும் பறக்கவிடப்பட்டது காற்றில்!

அனைத்தையும் படைத்து, அழகுற அணி செய்து, மாண்புடன் நடத்திவரும் என் அன்பு அப்பாவே! உம்மைபோற்றுகிறேன் வணங்கித்தொழுகிறேன்!.

**அப்பா!**

சுமைபயணம் முடிந்துவிட்டது, இப்போது சிலுவை மரணத்திற்கு தயாராகிவிட்டேன். இந்த கயவர்கள் என்னை அப்படியே சிலுவையில் அறைந்திருந்தால் நான் மிகவும் மகிழ்ந்திருப்பேன். ஆனால் இந்த கொடூரப்பாவிகள் என்னிடம் இருந்த கொஞ்ச நெஞ்ச மானத்தையும் உரிந்துவிட்டார்கள். பிறந்த மேனியாய் என்னை ஆக்கி விட்டார்கள். ஆணும் பெண்ணும் சூழ்ந்த கூட்டத்தில் அவமானத்தின் உச்சத்தில் நிர்வாணமாய் நிர்கதியின்றி நிற்கிறேன் நான். எனக்கிருந்த அந்த ஆடையை அவர்களே சீட்டுப்போட்டு எடுத்துக் கொண்டார்கள். என்ன

செய்வது, எல்லாம் உமது திட்டத்திற்காக அப்பா! இந்த மனித குல மீட்புக்காக ஏற்றுக்கொள்கிறேன்!

**அன்பு சகோதர... சகோதரி...**

என் அவமானம் உனக்கு வெட்கமாகவும் வேதனையாகவும் இருக்கிறதா!

நீ இந்நிலைக்கு வந்துவிடக்கூடாதே என்பதற்காகத்தான் நான் இந்நிலைக்கு வந்திருக்கிறேன்!.

உடல் என்பது தூய ஆவியின் ஆலயம் என்பதை மறந்து எத்தனைமுறை அதனை காமஇச்சைகளுக்கும், சிற்றின்ப நாட்டங்களுக்கும் பயன்படுத்தியிருக்கிறாய் எங்கே போயிற்று உன் வெட்கமும், மானமும்???

எத்தனை முறை எளியவர்களை உனது பணத்தால் விலைக்கு வாங்கி அவர்களை விலைமாந்தர்களாய் மாற்றியிருப்பாய்?

எத்தனை முறை பல குடும்பங்களின் மானம், மரியாதை என்ற ஆடையை உரிந்து அவர்களை நடுத்தெருவில் நிறுத்தியிருப்பாய்?

அவமானம் என்பது உன்கண்களுக்குத் தெரியவில்லையா!

வேதனை என்பது உனக்கு புரியாத வார்த்தையா!

என் அவமானத்தைப் பார்த்து நீ வெட்கப்பட்டு வேதனைப் படுவதைவிட நான் கூறியவற்றை சிந்திக்க ஆரம்பி! உன்னில் மனமாற்றம் உதிக்கும்!

**செபம் :**

தந்தையே, தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்! ஆமென்.

## பதினொன்றாம் நிலை : அள்ளிக் கொடுத்த கரங்கள்! துள்ளிக் குதித்த கால்கள்! துளைக்கப்படுகின்றன ஆணிகளால்...!

இருகரம் விரித்து இதயத்தை திறந்த என் அப்பாவே! உம்மைப்போற்றுகிறேன், ஆராதித்து வணங்குகிறேன்!

**தந்தையே!**

உடையற்ற உடம்பில் யாராவது கை வைத்து லேசாக அடித்தாலே சுளீரென வலி எடுக்கும். அப்படியிருக்க முழுநிர்வாணமாய் இருக்கும் என் உடல் கசையடிகளையெல்லாம் தாண்டி, நான் சுமந்து வந்த சிலுவை மரத்தோடு என்னை கூரிய ஆணிகளால் சேர்த்து வைத்து

அறைகிறார்கள். அப்போது என் கைகளும், கால்களும் அடைந்த சொல்லொண்ணா துயரத்தை என்னவென்று சொல்வேன்!

இந்தக் கைகளால் தானே பலருக்கும் அப்பம் பகிர்ந்தளித்தேன்!

இந்தக் கைகளால் தானே பலரைத்தொட்டு குணமாக்கினேன்!

இந்தக் கைகளால் தானே சிறுபிள்ளைகளுக்கு ஆசீர் வழங்கினேன்!

இந்தக் கால்களால்தானே உம்மைவணங்க எருசலேம் ஆலயத்திற்கு வந்தேன்!

இந்தக் கால்களால்தானே பல ஊர்களுக்கு நடந்து சென்று உமது வார்த்தையைப் போதித்தேன்.

இந்தக் கால்களால்தானே பலருக்கும் ஓடிச்சென்று உதவி செய்தேன்!

இப்போது பார்த்தீர்களா அப்பா...! இதுதான் உலகம்... தேவைப்படும்போது பயன்படுத்திக்கொண்டு தேவை முடிந்தவுடன் தூக்கி எறிந்து விடுவது உமக்காக நான் தாங்கிக்கொண்டேன் அப்பா!

**<u>சகோதரமே! என் நிலை பார்த்தாயா!</u>**

உன் மூதாதையர்கள் செய்த கோலத்தைப்பார்த்தாயா... என் கைகளாலும், கால்களாலும் உதவி பெற்றவர்கள் முடிந்ததும் என்னைத் தூக்கி எறிந்துவிட்டார்கள். பெரிய ஆணிகளைக் கொண்டு என் கை, கால்களுக்குச் சீல் வைத்துவிட்டார்கள்.

நீங்கள் மட்டும் என்ன உத்தமர்களா? இப்படி பார்க்கிறீர்கள்!

எத்தனை முறை பலரை உங்கள் காரியத்திற்காக, தேவைக்காகப் பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிந்திருக்கிறீர்கள்! சிந்தித்துப்பாருங்கள்!

அம்மா?அப்பா, அண்ணன்?தம்பி, நண்பன்?உறவுகள், காதலன்?காதலி என்று ஆசை வார்த்தைகளால் பிறரிடம் உங்கள் தேவையை எத்தனைமுறை பூர்த்தி செய்ய முயற்சித்து தூக்கி எறிந்திருப்பீர்கள்!

பத்துமாதம் சுமந்து பெற்ற உன் அன்னையை, தோளில் தூக்கி வளர்த்த தந்தையை, நீங்கள் நல்லதொரு நிலைக்கு வந்ததும் எத்தனை பேர் அவர்களை உதறித்தள்ளி, ரோட்டோரங்களிலும், முதியோர் இல்லங்களிலும். தள்ளி அவர்கள் கைகள் மற்றும் கால்களில் ஆணியை அறைந்திருப்பீர்கள்! சிந்தித்துப்பாருங்கள்! என்று மாறப்போகிறீர்கள்?

**செபம் :**

தந்தையே, தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்!.

**பன்னிரெண்டாம் நிலை :**

**தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்!**

தந்தையே! உயிரனைத்திற்கும் ஊற்றே! உம்மைஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

**அப்பா!**

இறுதிக்கட்டத்திற்கு வந்துவிட்டேன்.

என் உயிர், உடலைவிட்டு பிரிவதற்கு,

உம்மிடம் வந்து சேர்வதற்கு வெகுதூரம் இல்லை.

அலகை கரிய மேகமாய், இடிமின்னலுடன்

ஆட்டம் போட ஆரம்பித்துவிட்டான்.

வளிமண்டலம் வலிமைபெற்று சூறாவளியாய்

வீச ஆரம்பித்துவிட்டது.

எதிர்பாராத இயற்கையின் திருவிளையாடல்கள்

அரங்கேறிக்கொண்டு இருந்தது.

**அப்பா!**

இந்த மனிதர்களுக்காக மனிதனாக என்னை பிறக்கச் செய்தீங்க... பிறந்துவிட்டேன்.

இவர்களுக்காக உம்மைபற்றி சொல்லச் சொன்னீங்க ? சொல்லிவிட்டேன்

இவர்களுக்காக பாரச்சிலுவையை சுமக்க சொன்னீங்க ? சுமந்துவிட்டேன்.

இவர்களுக்காக இப்ப உயிரைவிடவும் சொன்னீங்க ? அதையும் விட்டுவிடுகிறேன் அப்பா..

ஆனால் எனக்கு நீங்க ஒன்று செய்யுங்கப்பா! என் சாவுக்கு காரணமானவர்கள் எல்லாரும் ஒரு வகையில் தெரிந்தோ தெரியாமலோ உங்க திட்டத்துல பங்கு போட்டிருக்காங்க... பாவம் அவங்க... நான் யாருனு அவங்க உண்மையா உணர்ந்திருந்தாங்கனா, கண்டிப்பா இப்படி நடந்திருக்காது... ஆனால்..

தந்தையே!

இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்!.

ரொம்ப நன்றிங்கப்பா… எல்லாம் நிறைவேறிவிட்டது.

இதோ! உங்க கையில என் ஆவியை ஒப்படைக்கிறேன் அப்பா…

என் அன்பு சகோதரமே!

பார்த்தீர்களா! உங்கள் பாவத்திற்கு, எனக்கு சம்பளம்!, உங்கள் அநியாயத்திற்கு நான் குற்றவாளி!, உங்கள் வாழ்வுக்கு நான் பலி ஆடு…! இப்போதாவது மனம் வருந்துவீர்களா! இப்போதாவது உன் உள்ளத்தை உடைப்பாயா! என் மரணத்தைப் பார்த்தும் நீ திருந்தவில்லையென்றால் நீ வெறும் ஜடம்தான்! உன்னிடம் அப்படி என்ன நான் கேட்டுவிட்டேன்! உன் சொத்தில் பாதியா! இல்லையே! பாவத்தை விடுத்து புண்ணியத்தை வளர்த்துக்க… மன்னிக்க கத்துக்க… எல்லாவற்றையும் அன்பு செய்.. இதைத்தான் கேட்டேன்! என்று செய்யப்போகிறாய்?

**செபம் :**

தந்தையே! தாங்கள் இன்னதென்று அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்!.

**பதிமூன்றாம் நிலை :**

**உயிர் கொடுத்தவள் மடியில் உயிரற்றவனாய்…!**

அம்மையப்பனே! உம்மைஆராதித்து வணங்கி தொழுகிறேன்.

**அப்பா!**

நீர் எனக்காகத் தேர்ந்தெடுத்த இந்த மாசற்ற மரியின் கண்ணீரைப் பார்த்தீரா! உம் தூதன் என் பிறப்பினை அவளுக்கு அறிவித்த நாள்முதல் இந்நாள் வரை எத்தனையோ வியாகுலங்கள்! எத்தனை இழிப்பேச்சுக்கள். எவ்வளவு கண்ணீர்த்துளிகள்! எல்லாம் உமக்காக அவள் தாங்கிக் கொண்டாள்! எந்தத் தாயாவது தான் பத்துமாதம் வயிற்றில் சுமந்து, வளர்த்து, இப்படி அவமானச் சிலுவைக்கு சம்மதித்திருப்பாளா! உயிரோடு ஈன்ற மகனை இப்படி உருகுலைந்த நிலையில், உயிரற்ற நிலையில் தன் மடியில் சுமப்பாளா! இதோ! என் தாய் சுமக்கிறாள். இப்படியொரு தாயை நான் எங்கும் பார்த்ததில்லை. அவள் என்னை வளர்த்த விதம், அரவணைத்து அன்புகாட்டிய விதம், இவற்றையெல்லாம் பார்க்கும் போது, மறுபடியும் அவள் வயிற்றில்

பிறக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டாதா என்ற ஏக்கம்தான் மிஞ்சுகிறது. இப்படிப்பட்ட அன்னை கண்டிப்பாக எனக்கு மட்டும் தாய் அல்ல... இந்த உலகிற்கே தாய் இதைத்தான் நான் சிலுவையில் தொங்கியபோது உரக்கக் கூறினேன். என் தம்பி தங்கைகளுக்கு இதோ உன்தாய்! என்று.

**<u>என் தம்பி! தங்காய்!</u>**

தாயின் மடிதான் உலகம், என்பது தாயின் மடியில் தவழ்ந்து விளையாடும் ஒவ்வொரு குழந்தைக்கும் தெரியும். அதே மடிதான் சொர்க்கம் என்பது எப்போது உனக்கு தெரியும்? என்னைப்போல் உயிரற்ற நிலையில் அவள் மடியில் இருக்கும்போதுதான் தெரியும்!

அம்மணமாய் பிறந்த உன்னை அடுத்தவர் பார்த்து விடக்கூடாது என்று ஆடை அணிவித்து, உயிரோட்டம் பெற அன்புப்பாலை ஊட்டி, மழலை, உன்னை பேசவைக்க, நடக்க வைக்க, நடைவண்டியாக உருவெடுத்து, சீவி சிங்காரித்து உன் அறிவை அதிகமாக்க, பள்ளி கல்லூரி என அனுப்பி, வியர்வை பலசிந்தி உன்னை ஆளாக்கி, உன் விருப்பத்திற்கு உன்னை சுதந்திரமாக செயல்பட வைத்த, உன் அன்னையின் கண்ணீர் கதையை என்றாவது கேட்டிருக்கிறாயா! அவளோடு என்றாவது சற்று நேரம் அமர்ந்து "அம்மா" என்று ஆசையோடு பேசி, அவள் மடியில் தலை சாய்ந்து (படுத்திருக்கிறாயா!!) தாயின் மடிதான் உலகம் என்று எப்போது உய்த்துணரப்போகிறாய். சிந்தித்துப்பார்...

நீ ஆளாகி நல்ல நிலைக்கு அல்லது திருமணம் முடிந்துவிட்டால் அவள் உனக்கு ஒரு செலவு, அவள் உனக்கு ஒரு சுமை!.

உன் வீட்டுக்கார் வெயிலில் கிடக்கக்கூடாது. மழையில் நனைந்துவிடக்கூடாது என்பதற்காக நல்ல உறைபோட்டு மூடி தனியாக செட் கட்டி உள்ளே நிறுத்துகிறாய்!.

உன் வீட்டிற்கு வெளியே காலணியை கழற்றிபோட்டால் யாராவது தூக்கிவிடுவார்கள் என்று அதை வீட்டிற்குள் ஒரு ஓரத்தில் பத்திரமாக வைக்கிறாய்!.

வீட்டில் உள்ள பழைய சாமான்களை கூட ஒரு குடோன் அறையில் பத்திரமாக ஒதுக்கி வைக்கிறாய்!.

ஆனால், உன்னை பெற்றவளை, பெற்றவனை, உன் வீட்டிற்குள் ஒரு நல்ல இடத்தில் தங்க வைக்க மறுக்கிறாய்! யோசிக்கிறாய்!!

காரணம்... இவர்களால் வரவு இல்லை... செலவு மட்டும்தான் என்று நினைக்கும் உன் மனம்தான் காரணம்...! மேற்சொன்ன

பொருள்கள் எல்லாம் எப்படியாவது வரவு தந்துவிடும். அதனால் அதற்கு பாதுகாப்பு... பெற்றோர்களுக்கு???

புதியதாக கட்டிய மனைவிக்கு ஆயிரம்கணக்கில் செலவு செய்து பலரக பட்டுப்புடவை...

பெற்ற அன்னைக்கு தந்தைக்கு ரேசன் கடை இலவச சேலை, வேஷ்டி இல்லாதபட்சத்தில் நூறு இருநூறுக்கு துணிமணிகள்.

இதுவா உங்கள் அன்னையர்க்கும் தந்தையர்க்கும் காட்டும் நன்றிக்கடன்..!!!

**தம்பி - தங்கையே!**

மறந்துவிடாதீர்கள்... உங்கள் அன்னை வலிகள் பலதாங்கி உன்னை பெறவில்லையென்றால்... உன்னை வளர்க்கச் செலவுகள் அதிகம் வரும் என்று நினைத்திருந்தால், உன்னை பள்ளிக்கு அனுப்புவதற்கு பதிலாக ஊதாரியாய் அலைய விட்டிருந்தால்... உன்னை பார்த்து பார்த்து நல்லது சொல்லிக் கொடுத்து வளர்க்காமல் விட்டிருந்தால் இன்று நீ இந்த நிலைக்கு வந்திருக்க முடியுமா? சிந்தித்துப்பார்....

அன்னையர்களின் கண்ணீருக்கும்

தந்தையர்களின் கண்ணீருக்கும் நீ பதில் சொல்லியே ஆக வேண்டும்! மறந்து விடாதே!

**செபம் :**

தந்தையே! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்!.

**பதினான்காம் நிலை :**

**பிறரின் சொந்தம்... எனக்குச் சொந்தமாக்கப்பட்டது.**

மரணத்தைக் கடந்த மாபரனே என் அப்பாவே! உம்மைநெஞ்சார வாழ்த்தி போற்றுகிறேன்.

**அப்பா!**

என் நிலையைப் பார்த்தீர்களா!

எல்லாவற்றையும் படைத்த உங்களோட அன்பு பிள்ளைக்கே பிறரிடம் இரவல் வாங்க வேண்டிய நிலை. தானமாக கொடுத்த எனக்கே தானமாக பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை.

நான் பிறந்த இடமும், இரவல் தான், இப்போது அடக்கம்

செய்யப்படும் இடமும் இரவல்தான்! எனக்கென்று ஒன்றும் இல்லை... உம்மைத்தவிர.. அப்பா... இந்த சமயத்தில்... எனக்கு பிறக்குறதுக்கும், அடக்கம் பண்ணுறதுக்கும் இடம் கொடுத்தாங்களே... அந்த நல்லவங்களுக்காக உமக்கு நன்றிப்பா... அவங்கள நன்றியோடு நினைச்சு பார்க்கிறேன்.

ஏனென்றால்... அந்த அவசர சமயத்தில், கேள்விகள் கேட்காமல் உதவ முன்வந்தார்களே.... அவர்கள் செய்த உதவி சாதாரணமாக தெரிஞ்சாலும், அந்த உதவி இன்னைக்கு பலபேருக்கு என் மூலம் மீட்பு கொடுத்துக்கிட்டு இருக்கு! நான் உயிர்ப்பதற்கு சரியான கல்லறை இதுதான் அப்பா! உங்க திட்டத்தில் ஒவ்வொரு விஷயத்துலேயும், அணு அணுவாக பார்த்து செஞ்சிருக்கீங்க... நன்றிப்பா... எல்லோரையும் ஆசீர்வதிங்கப்பா!.

**சகோதரமே!**

உன் மனதிற்குள் என்ன நினைக்கிறாய்! நமக்கு இந்த உதவும் வாய்ப்பு கிட்டாமல் போயிருச்சே... கிடைச்சிருந்தா நமக்காகவும் இயேசு, தந்தைக் கடவுளிடம் வேண்டியிருப்பாரே என்றுதானே நினைக்கிறாய்! கவலைப்படாதே, உனக்காகவும் வேண்டுகிறேன். ஆனால் அதற்கு நீ உதவிகள் பல செய்யவேண்டுமே! எனக்கல்ல... உன்னிடம் உதவி வேண்டி வருபவர்களுக்கு!

நினைத்துப்பார்...

எத்தனை முறை ஒரு முதியவர் அல்லது மூதாட்டி உன் உதவி வேண்டி உன் வீட்டு வாசலில் நின்றிருப்பார். அப்போது உதவினாயா!

பணம், பதவி என்று வாழ்ந்து வரும் நீ, என்றாவது ஒரு ஏழை மாணவனுக்கு இலவசக்கல்வி வழங்கியிருக்கிறாயா!

அநாதையாய் குப்பையில் தூக்கியெறியப்படுகின்ற குழந்தைகளை என்றாவது தத்தெடுக்க முயற்சித்திருக்கிறாயா!

பேருந்துப் பயணத்தில், நோயுற்றோர்க்கு, மாற்றுத் திறனாளிகளுக்கு, முதியோர்களுக்கு உன் இருக்கையை விட்டுக் கொடுத்திருக்கிறாயா!

வீட்டில் பெற்றோர்க்கு ? மாமியார் மாமனாருக்கு, மருமகளுக்கு மனைவிக்கு என்றாவது உதவிகள் செய்திருப்பாயா!

இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்... நன்கு சிந்தித்துப்பார்!!! செய்திருந்தால் மகிழ்ச்சி! என் செபம் உனக்கு எப்போதும் உண்டு!

இல்லையென்றால் இறப்பதற்குள் உதவி செய்துவிடு.... மறுத்துவிட்டால்...

உன் சாவு கூட உனக்கு உதவி செய்ய முன்வராது...!

**செபம் :**

தந்தையே! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும்!. ஆமென்

**இறுதி செபம் :**

அன்புதந்தையே இறைவா! உமது திருமகனும் எங்களின் மூத்த சகோதரருமான இயேசு கிறிஸ்துவின் பாடுகளை அவருடைய செபங்களோடு தியானித்த நாங்கள், அவர் எங்களுக்கு விட்டுச்சென்ற செய்திகளை, எச்சரிக்கைகளை, கட்டளைகளை, மாதிரிகளை நன்கு உணர்ந்து, எங்களின் புனித வாழ்விற்கு அவற்றினைப் பயன்படுத்தி, நல்ல கிறிஸ்தவர்களாக தொடர்ந்து வாழ அருள்புரியும். ஆமென்.



# இயேசுவின் பாதையும் நமது பயணமும்
## (மனசாட்சியோடு பேசும் சிலுவைப்பாதை)

அருட்தந்தை. **விசுவாசம்,** SdC
கடலூர்

**<u>முன்னுரை :</u>**

"சிலுவை பற்றியச் செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால், மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை" (1கொரி 1:18)

சிலுவையா? அது துன்பம்
சிலுவையா? அது சாவு
சிலுவையா? அது தோல்வி
சிலுவையா? அது பலவீனம்
இது மூடர்களின் வாக்குவாதம்

சிலுவைதான் வெற்றி
சிலுவைதான் மகிமை
சிலுவைதான் மீட்பு
சிலுவைதான் பலம்
இது ஞானிகளின் வாக்குமூலம்

இயேசுவின் பாதை, சிலுவையின் பாதை. இயேசுவின் பாதை சிகரம் தொடும் பாதை. இயேசுவின் பாதை, குறைநீக்கும் பாதை. இயேசுவின் பாதை குணமாக்கும் பாதை. இந்த சிலுவைப் பாதையில் நமது வாழ்வின் பயணத்தைத் தொடங்குவோம். பக்தியோடு பங்கெடுப்போம்.

**<u>முதல்நிலை : இயேசு தீர்ப்பிடப்படுகிறார்</u>**

**(கருவில் அழிக்கப்படுகிற குழந்தைகளுக்காக)**

"அவர் ஒடுக்கப்பட்டார். சிறுமைப்படுத்தப்பட்டார். ஆயினும் அவர் தம் வாயைத் திறக்கவில்லை. அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார்" (எசா 53 : 7)

❖ இயேசுவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு தர்மத்திற்கு எதிரான தீர்ப்பு. நீதிக்கு எதிரான தீர்ப்பு. உண்மைக்கு எதிரான தீர்ப்பு.

நன்மைக்கு எதிரான தீர்ப்பு. விடுதலைக்கு எதிரான தீர்ப்பு. வாழ்வுக்கு எதிரான தீர்ப்பு.

❖ குற்றமற்றவர் கூண்டில் ஏற்றப்படுகிறார். தவறு செய்யாதவர் தண்டிக்கப்படுகிறார்.

❖ இன்றைய சூழலில் குற்றமற்ற பல இயேசுக்கள் கூண்டோடு கொல்லப்படுகிறார்கள்.

❖ தவறு செய்யாத இயேசுக்கள் தாய்மார்களின் வயிற்றிலேயே தண்டிக்கப்படுகிறார்கள்.

❖ அன்று இயேசுவின் சாவு பதவி இச்சையால் அரங்கேறியது. இன்று இயேசுக்களின் (சிசுக்களின்) சாவு உடல் இச்சையால் அரங்கேறுகிறது.

❖ அன்று இயேசு தடைக்கல்லாக பார்க்கப்பட்டார். இன்று இயேசுக்கள் தலைகுனிவாக பார்க்கப்படுகிறார்கள்.

❖ இயேசுவின் சாவு அநீதி என்றால், இன்று கருவில் சிதையும் இயேசுக்களின் சாவும் அநீதியே

❖ நீதியை நிலைநாட்டும் தம்பதிகளாக வாழ்வோம்!

**செபம் :**

இறைவா! வாழ்வு ஒரு வரம். வாழ வழிவிடவும், வாழ்ந்து வாழ்விக்கவும் வரம் தாரும்.

## இரண்டாம் நிலை : இயேசு சிலுவை சுமக்கிறார்.

(பாரங்களைத் தாங்கும் பாமர மக்களுக்காக)

“மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்”. (எசா 53:4)

❖ இயேசுவின் சிலுவை பாரமான சிலுவை. இயேசுவின் சிலுவை பாவத்தின் சிலுவை. இயேசுவின் சிலுவை பரிகார சிலுவை. இயேசுவின் சிலுவை பாமரனின் சிலுவை.

❖ யாரோ சுமக்கவேண்டியதை இயேசு சுமக்கிறார். யாரோ வாழ்வுபெற, இயேசு வதைபடுகிறார்.

❖ மூட்டை தூக்கி, வீட்டைக் கட்டி, தெருவில் சாய்ந்து, கடலில் மாய்ந்து, கரையில் காய்ந்து, கண்ணியமாய் வாழும் ஒவ்வொரு பாமரனும் இன்னொரு இயேசுவே.

❖ இவர்களின் சுமைகள் யாருக்காக? அவர்களுக்காகத்தான் என்று சொன்னால் நாம் அயோக்கியர்கள்!

- ❖ ஆசைப்பட்டதால் அல்ல, அளிக்கப்பட்டதால் இச்சுமைகள் சுமக்கப்படுகின்றன. குழந்தைகளுக்காக, குடும்பத்துக்காக, சமுதாயத்துக்காக, எதிர்கால சந்ததிக்காக, என எதுவுமேஇவர்களுக்கில்லை... இயேசுவைப் போல!
- ❖ இயேசுவின் சுமையைப் போல இவர்களின் சுமைகளையும் மதிப்போம்!

**செபம் :**

இறைவா! சுமையும் சுகமானதே விரும்பி ஏற்றுக்கொண்டால், விடியலுக்காய் தாங்கிக்கொண்டால், சுகமாக சுமக்க வரம் தாரும், ஆமென்.

## மூன்றாம் நிலை : இயேசு முதல் முறை கீழே விழுகிறார்.

**(தீயப்பழக்கங்களில் தொலைந்தவர்களுக்காக)**

''பரத்தைமை, அனைத்து ஒழுக்கக்கேடுகள், பேராசை ஆகியவற்றின் பெயர்கூட உங்களிடையே சொல்லப்படலாகாது. இதுவே இறைமக்களுக்கு ஏற்ற நடத்தை, அவ்வாறே வெட்கங்கெட்ட செயல், மடத்தனமான பேச்சு, பகடி பண்ணுதல் ஆகியவை தகாதவை", (எபே 5:3-4)

- ❖ இயேசு விழுந்தார், அது அவருடைய உடல் பலவீனம். மீண்டும் எழுந்தார். அதுதான் அவருடைய மனபலம்.
- ❖ உள்ளம் வலுவுடையதுதான். ஊனுடலோ வலுவற்றது. தடுமாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை, இதை ஏற்றுக்கொள்பவர் மீண்டும் எழுந்து நடப்பர்.
- ❖ இயேசுவின் தடுமாற்றத்துக்கு காரணங்கள் பலப்பல, உடல் சோர்வு, உணவின்மை சிலுவை பாரம், சீரழிந்த சீடர் கூட்டம் இவைகள் சில.
- ❖ தடுமாற்றத்தை தகர்த்தெறிய மனமாற்றம் வேண்டும். மனமாற்றத்தை செயலாக்க பிடிவாதம் வேண்டும். இரண்டும் இருந்தது இயேசுவிடம்.
- ❖ இன்றும் தடுமாற்றங்கள் தொடர்கின்றன. உடனடியாகக் கிடைக்கும் உயிர்க்கொல்லி போதைகள், மலிவாகக் கிடைக்கும் மதிமயக்கும் மதுபானங்கள், நாசுக்காய் பேசி நம்மைநாசமாக்கும் நட்பு வளையங்கள். இதில் எந்தத் தடுமாற்றம் நம்மைத் திட்டம் மாற்றுகிறது?

❖ வீழ்ந்தோம் எனத் தெரிந்தால்தான் எழ முடியும், எழுந்து நடத்தால்தான் வாழ முடியும்.

❖ மனமாற்றம் பெறுவோம், பிடிவாதம் கொள்வோம், தடுமாற்றமும் இடமாற்றம் அடையும்.

**செபம் :**

இறைவா! தடுமாற்ற பயணத்தில் தொலைந்துபோன எம் ஒழுக்கம், உளமாற்றம் அடைந்து உத்வேகம் காண அருள்தாரும். ஆமென்.

## நான்காம் நிலை : தம் தாயைச்சந்திக்கின்றார்.

**(பற்றி எரியும் பெற்ற வயிறுகளுக்காக)**

சகோதரர் எழுவரின் தாய் சொன்னது : "மகனே, என்மீது இரக்கங்கொள். ஒன்பது மாதம் உன்னை என் வயிற்றில் சுமந்தேன். மூன்று ஆண்டு உனக்குப் பாலூட்டி வளர்த்தேன். இந்த வயதுவரை உன்னைப் பேணிக்காத்து வந்துள்ளேன். குழந்தாய், உன்னை நான் வேண்டுவது ; விண்ணையும் மண்ணையும் பார். அவற்றில் உள்ள அனைத்தையும் உற்று நோக்கு.... இக்கொலைஞனுக்கு அஞ்சாதே, ஆனால் நீ உன் சகோதரர்களுக்கு ஏற்றவன் என மெய்ப்பித்துக் காட்டு. இறைவனின் இரக்கத்தால் உன் சகோதரர்களோடு உன்னையும் நான் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி இப்போது சாவை ஏற்றுக்கொள்" என்று சொல்லி ஊக்கமூட்டினார். (2 மக் 7:27-29)

❖ "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" இது வள்ளுவப் பெருந்தகையின் திருவாக்கு!

❖ "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" இது சிமியோன் தீர்க்கதரிசியின் அருள்வாக்கு!

❖ பாவம், நம் பத்தினித் தாய் அவளும் பெண்தானே. சொந்தமென நெஞ்சம் நெகிழ்ந்த சந்தனத் திருமகவும் இங்கு சூறையாடப்படுகிறதே!

❖ துடிதுடித்த தாயின் கண்களில் கண்ணீர் அல்ல, கண்டிப்பாக செந்நீர் வடிந்திருக்க வேண்டும்.

❖ போருக்குச் சென்ற தன் அன்புமகன் வீரப்புண் எய்தி மடிவதே ஒவ்வொரு தாய்க்கும் மகிழ்ச்சி! புகழ்ச்சி! எழுவரைப் பெற்றெடுத்த அந்த மக்கபேய மகராசியும் அதைத்தான் விரும்பினாள். வேள்வியை முடித்தாள். வெற்றியோடு மறைந்தாள்.

- ❖ போராட்டக் களத்தில் புன்னகைக்கு இடமில்லை. சென்றுவா, மகனே வென்றுவா, விடைகொடுத்தாள் வீரத்தாய், திடம்கொடுத்தாள் தியாகத்தாய்.
- ❖ இன்று, பெற்றெடுத்த பிள்ளை மாக்கள் போன்று பேதலித்துத் திரிவதை எந்தத் தாயும் தாங்கமாட்டாள்.
- ❖ சாதிக்க வேண்டும் என்பதாலோ என்னவோ, சரித்திரப் பெயர்கள் நமக்கு. குழந்தைகளாக நம்மைக் கரங்களில் சுமந்தே, கனவு கண்டாள் நம் ஒவ்வொருவரின் தாயும். கனவுகள் நனவாக 'கண்ணே! மணியே!' கொஞ்சிக் குழைந்தாள் தன் கெஞ்சல் மொழியாலே! அந்த அன்னையர்களின் ஆசைக் கோட்டைகளுக்கு நம் பதில்தான் என்ன?

அருளிழந்த முகத்தினராய், களையிழந்த கயவர்களாய், முயற்சியில்லா மூடர்களாய், வளர்ச்சியில்லா வாலிபர்களாய், தரிகெட்டுத் திரியும் ஒவ்வொரு மகவும் பதில்சொல்ல வேண்டும் தன் தாய்க்கு, பத்துமாதம் படுத்துறங்கிய அந்த பாங்கான கருவறைக்கு.

**செபம்:**

இறைவா! பற்றி எரியும் எம் பெற்ற வயிற்றுக்காக, வாலிபத்தை வளர்ச்சியாக்க, இளமையை நல் இயக்கமாக்க அருள்தாரும். ஆமென்.

## ஐந்தாம் நிலை: சீமோன் இயேசுவுக்கு உதவிசெய்கிறார்.

**(இரக்கத்தை எதிர்பார்க்கும் இயலாதவருக்காக)**

"இறைவாக்கினர் ஒருவரை அவர் இறைவாக்கினர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் இறைவாக்கினருக்குரிய கைம்மாறு பெறுவார். நேர்மையாளர் ஒருவரை அவர் நேர்மையாளர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் நேர்மையாளருக்குரிய கைம்மாறு பெறுவார். இச்சிறியோருள் ஒருவருக்கு அவர் என் சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (மத் 1:41-42)

- ❖ 'இயேசு என்ன மகானா? மாமேதையா? நான் போய் உதவுவதற்கு, சிலுவை மரத்தை தூக்கிச் செல்லும் தேசத்துரோகி! கொலைக் குற்றவாளி!' இவைகள்தான் சாமானிய சீரேன் ஊர் சிமோனின் எண்ண அலைகள்.
- ❖ மறுத்த வாலிபன் கனிவுகொள்கிறான். விதைத்த

விமர்சனங்களை களையெடுக்கிறான். ‘சொன்னவர் பேச்சில் உண்மையில்லை. பார்க்கும் நிகழ்வில் நீதியில்லை.’ தாமதமாகத்தான் புரிகிறது இந்தத் தனியொருவனுக்கு. எனவே இசைவு தருகிறான். இயேசுவுக்கு உதவுகிறான்.

❖ தோள்கள் சேர்ந்ததால் துயரம் குறைந்தது. அநீதியின் கோரத் தாண்டவம் தணிந்தது, பார்வைகள் கலந்ததில் பரிவு பிறந்தது, பரமனின் அன்பில் பகிர்வு மலர்ந்தது.

❖ இன்று, உணவின்றி, உடையின்றி, நலமின்றி, பலமின்றி, உறவின்றி, உதவியின்றி, ஊசலாடும் உத்தமர்கள் நம் அருகில் எத்தனை எத்தனை பேர்!

❖ சந்தேகப்படும் தோற்றம், அருவருப்பான தேகம், பொலிவிழந்த முகம், பொருள்தேடும் கரம், பார்த்ததும் உள்ளம் பதைபதைத்தாலும், பகுத்தறியும் நம் மனம் பாடாய்ப்படுத்துகிறது, ஏமாறாதே! இவனுக்கு உதவாதே! என எச்சரிக்கிறது.

❖ இறக்கும்வரை இரக்கத்தோடு வாழ, வாய்ப்புக்களோ ஏராளம் முன்சார்பு எண்ணங்களின்றி, எதிர்மறை ஏய்ப்புக்களின்றி, உடை, நடை, ஒப்பனையின்றி, வாசல்வரும் இயேசுவுக்கு, உளமாற உதவிசெய்வோம், தோள்கொடுத்து துயரம் குறைப்போம்.

**செபம் :**

இறைவா! இரக்கத்தை எதிர்பார்க்கும் இயலாதவருக்கு எம்மால் இயன்ற உதவிகளைச் செய்யும் நல்லுள்ளம் தாரும். ஆமென்.

## ஆறாம் நிலை :

## வெரோணிக்காள் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள்.

**(வியாபாரமாகும் வீர மங்கைகளுக்காக)**

“பாவியான பெண் ஒருவர் இருந்தார், இயேசு பரிசேயருடைய வீட்டில் உணவு அருந்தப் போகிறார் என்பது அவருக்குத் தெரியவந்தது. உடனே அவர் நறுமணத் தைலம் கொண்ட படிகச் சிமிழைக் கொண்டுவந்தார். இயேசுவுக்குப் பின்னால் கால்மாட்டில் வந்து அவர் அழுதுகொண்டே நின்றார். அவருடைய காலடிகளைத் தம் கண்ணீரால் நனைத்து, தம் கூந்தலால் துடைத்து, தொடர்ந்து முத்தமிட்டு அக்காலடிகளில் நறுமணத் தைலம் பூசினார்’’. (லூக் 7:37-38)

❖ பெண்ணுக்கு வீரம் பொருந்தாத துருவம், அச்சமும் நாணமும் அவள்பெற்ற இரட்டைக் குழந்தைகள். சாதுவானவள் மாது, சமையலைப் பார்ப்பவள் மனையாள், இவைதான் பெண்ணுக்கு நாம் வடிக்கும் வர்ணனைகள்.

❖ பெண்ணுக்கும் பிள்ளைக்கும் மவுசில்லா சமூகத்தில், வெடித்து வெளிவருகிறாள், வீரமங்கை வெரோணிக்கா, எடைபலமும் படைபலமும், வீரர்கள் வசமிருக்க, எதையோ தடுக்க எண்ணி, சீறிப் பாய்கிறாள் சிங்கார சீடத்தி.

❖ உடலெல்லாம் குருதி, முகமெல்லாம் தூசி, மங்கையர் பலருக்கு மறுவாழ்வு தந்த அன்பர், முகவரிதான் தரவிரும்பி, முகம் தந்து செல்கின்றார், துணியில் அகம் பதிந்து போகின்றார்.

❖ 'வேலைக்குச் செல்லும் பெண், வாகனம் ஓட்டும் பெண், பாடசாலை போகும் பெண், பட்டதாரியாகும் பெண், குழந்தைகளைக் காணும் பெண், குடும்பத்தைப் பேணும் பெண்' இப்படி எதுவுமேஇவளுக்கு இயலாத துறையில்லை இமாலய தூரமுமில்லை.

❖ எல்லாமும் இருந்தாலும் நாணமொன்று இருப்பதாலோ, வியாபாரப் பொருளாக வீதியோரம் காய்கின்றாள்.

❖ படித்தாலும், நடித்தாலும், உழைத்தாலும், உயர்ந்தாலும், மனுஷி என்பதாலே மதிப்பிழந்து போகின்றாள். மனித மாண்பிழந்து வாழ்கின்றாள்.

தாயாக, தாரமாக, சகோதரியாக, தோழியாக, எல்லார்க்கும் எல்லாமாகும் மங்கையர்கள் அனைவரையும் மதிப்பளித்து நேசிப்போம். மனிதர்களாய் நடத்திடுவோம்.

**செபம் :**

இறைவா! வியாபாரமாகும் வீர மங்கையின் விடியலும், விடுதலையும், விரைவாக நிஜமாக வரம்தாரும்! அருள்தாரும்!. ஆமென்.

## ஏழாம் நிலை : இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

**(இறைநம்பிக்கை இழப்போருக்காக)**

''கடவுள் நம்பிக்கைக்குரியவர், அவர் உங்களுடைய வலிமைக்குமேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார். சோதனை வரும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் வலிமையை

உங்களுக்கு அருள்வார். அதிலிருந்து விடுபட வழி செய்வார்.” (1கொரி 1:13)

- ❖ சிலுவையின் பாரம் ஒருபுறம், உடலின் காயம் இன்னொரு புறம், கால்கள் பிண்ணிக்கொண்டு, கண்கள் இருண்டுபோய், மரத்தில் சாய்வதற்குள், இரண்டாம் முறையாக மரத்தோடு மண்ணில் சாய்கிறார் இயேசு.
- ❖ இயேசு ஏன் இரண்டாம் முறையாக சறுக்கலைச் சந்தித்தார்? கல்வாரிப் பாதையில் அடுத்ததாக என்ன வரும்? கற்களா? முட்களா? புரியாத புதிராக தடுமாறிய பாதையில்தான் தடுக்கி விழுகிறார். இயேசு இரண்டாம் முறையாக.
- ❖ இப்படித்தான் வாழ்க்கை, இதுதான் நம்பிக்கை ? என புரிந்துகொண்ட இயேசுவுக்கு எழுவதற்கு தயக்கமில்லை. நடப்பதற்கும் கலக்கமில்லை, விழுந்து எழுகிறார் எழுந்து முயல்கிறார்.
- ❖ சிலுவைப் பயணத்தைப் போலவே வாழ்க்கைப் பயணமும் ஒரு விசுவாசப் பயணம் அனுபவம் கூடக்கூட வயதோ தேய்கிறது. பாதை நீளநீள பயணம் சலிக்கிறது. தோல்விகள் பெருகப்பெருக முயற்சியும் குறைகிறது.
- ❖ சோதனைகள் வரும்போது சாதனைகள் தூரமில்லை, வலிமைக்குமேல் வலியும், பலத்திற்குமேல் பாரமும் கட்டாயம் வாய்க்காது.
- ❖ சிறுமைகளைக் கண்டு சிணுங்கிக்கொள்ளாமல், கடவுள் கருணையில் நம்பிக்கை இழக்காது, தொடர்ந்து பயணிப்போம், துணிந்து பயணிப்போம்.

**<u>செபம் :</u>**

இறைவா! கேட்டது கிடைக்காமல் இறைநம்பிக்கை இழப்போர், காக்கின்ற உம்மைநாள்தோறும் காண அருள்தாரும். ஆமென்.

## <u>எட்டாம் நிலை :</u>

## <u>இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.</u>

(பதற்றத்தோடும் கவலைகளோடும் வாழ்வோருக்காக)

“எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம், ஆனால் நன்றியோடு கூடிய இறைவேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள்.

அப்பொழுது, அறிவெல்லாம் கடந்த இறைஅமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும்" (பிலி 4:6-7)

- ❖ இயேசுவுக்கும் கூட கவலையிருந்தது, பதற்றமிருந்தது. சிலுவைச் சாவு நெருங்கிவிட்டது என்பதால் அல்ல, எருசலேம் மகளிர் அழுகிறார்கள் என்பதற்காக.
- ❖ 'எனக்காக அழவேண்டாம், உங்களுக்காக அழுங்கள். உங்கள் தலைமுறைக்காக அழுங்கள்' என்று ஆறுதல் கூறுகிறார். அறிவுரை கொடுக்கிறார்.
- ❖ இயேசுவுக்காக அழுதால்கூட கவலை நேர்மையானது, கண்ணீர் நியாயமானது, ஆனால் அப்பெண்கள் ஏன் அவர்களுக்காகவே அழவேண்டும்? இயேசுவின் அறிவுரை கொஞ்சம் குழப்பியே விடுகிறது.
- ❖ குறையாத கவலைகளில் குறைகளைக் காணாமல், மகிழ்வோடு ஏற்றுக்கொண்டால், குறையும் சிறிதாகும், மாமலையும் கடுகாகும், இயேசுதரும் அறிவுரையின் ஆழமும் இதுதான், அகலமும் இதுதான்.
- ❖ பிடித்தது கிடைக்காவிட்டால் கிடைத்ததைப் பிடித்துக்கொள்வோம், யாருக்கு இல்லை கவலைகள்? யாருக்கு இல்லை கஷ்டங்கள்? வீட்டுக்கு வீடு வாசற்படி, கவலைகள் நிதர்சனம் நியாயப்படி, நன்மையும் தீமையும், உண்மையும் பொய்மையும் இன்பமும் துன்பமும், பூவும் தலையும் போல, வேலியும் பயிரும் போல இரண்டும் தேவை வாழ்வதற்கு இவைகள்தான் வரப்பிரசாதம் வளர்வதற்கு.
- ❖ பதற்றமும் படபடப்பும் வாழ்க்கையானால், சோர்வு நம்மில் தட்டிப்போகும், சுவாரசியமோ நீங்கிப்போகும், எதிர்காலக் கலக்கம் தேவைதான். எதிர்மறைக் கலக்கம் தேவையில்லை.
- ❖ கவலைகளை ஏற்றுக்கொள்வோம்! கஷ்டங்களைத் தாங்கிக்கொள்வோம்!

கவலைப்படுவதால் யார் ஒரு முழம் கூட்டமுடியும்? குறைக்க முடியும்? ஊரோடு ஒத்துவாழ ஒப்பாரிகளை விட்டொழிப்போம்! புது சித்தாந்தம் நாம் படைக்க, படைத்தவனில் மனம் பதிப்போம்!

**<u>செபம் :</u>**

இறைவா! பதற்றத்தோடும் கவலையோடும் வாழ்வோர், உளப்பாங்கோடு உயிரோட்டம் காண அருள்தாரும், ஆமென்.

## ஒன்பதாம் நிலை : இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

**(தோல்விகளால் தொடர்முயற்சி இழந்தவர்களுக்காக)**

"யோபு தம் நண்பர்களுக்காக மன்றாடின பிறகு, ஆண்டவர் செல்வங்களையெல்லாம் மீண்டும் நல்கினார். மேலும் அவர் யோபுக்கு இருந்தனவற்றை எல்லாம் இரண்டு மடங்கு ஆக்கினார். பிறகு அவருடைய எல்லாச் சகோதரர்களும், சகோதரிகளும், அவரை முன்பு தெரிந்திருந்த அனைவரும் அவரிடம் வந்தனர். அவரது இல்லத்தில் அவரோடு விருந்துண்டனர்.... யோபின் முன்னைய நாள்களில் இருந்ததைவிட, பின்னைய நாள்களில் ஆண்டவர் அதிகமாக ஆசி வழங்கினார்" (யோபு 42:11-12)

- ❖ இயேசுவின் இம்மூன்றாம் தடுமாற்றம், வசைபாடி வந்தவர்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றம், கல்வாரி செல்ல வேண்டுமே! கழுமரத்தில் கொல்ல வேண்டுமே! அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் இவைகள் இரண்டு மட்டும்தான்.
- ❖ இயேசுவின் தாகமோ இவைகளையும் தாண்டியது, கல்வாரி செல்ல வேண்டுமே! காரிருளை வெல்ல வேண்டுமே! பாருங்கள் அன்பர்களே, பார்வைகளில் வித்தியாசம், எப்படி நாம் பார்க்கிறோமோ, அப்படித்தான் வாழ்க்கையும்.
- ❖ 'எழுந்து நடந்தால் இயேசுவுக்கு சாவு நிச்சயம்!' கல்நெஞ்சக் கள்வர்களின் கணிப்பு இது. 'எழுந்து நடந்தால் நிலைவாழ்வு நிச்சயம்!' கருணை மூர்த்தியின் கடைசி முயற்சி இது.
- ❖ வெற்றிக்கும் தோல்விக்கும் இடைவெளிகள் அதிகமில்லை, போதும் போதும் என்று சொன்னால் போராட்டம் தோல்விகாணும். போவோம் போவோம் என்று சொன்னால் போர்க்களமும் தோற்றுப்போகும்.
- ❖ முயற்சிகளை முடக்கிக்கொண்டால் தோற்றுப்போனது உண்மையாகும். முயற்சிகள் முடியாவிட்டால் வெற்றிக் கனிகள் வீடுவரும்.
- ❖ ஆயிரம் முயற்சியும் அநியாயத் தோல்வியா? ஆசையோடு தொடருங்கள், அங்கேதான் வளர்ச்சி, ஆறுநாள் போராட்டம் அரைகுறையாய் முடித்திருந்தால், அத்தோடு போயிருப்போம், அவர்கள்தான் வென்றிருப்பர். ஏழாம் நாள் களம் கண்டோம் இணங்காமல் கூடி நின்றோம், வரலாற்றில் தடம் பதித்தோம் வாடிவாசல் விலங்குடைத்தோம்.

தொடர்முயற்சி ஒவ்வொன்றும் தொய்வுறாத பயிற்சி, தொடர்முயற்சி செய்வோம்! தோல்விகளை முறியடிப்போம்!

**செபம் :**

இறைவா! தோல்விகளால் வாழ்விழந்து, துயரடைந்து போனவர்கள், தொடர்முயற்சி வேள்விகளால் சிகரம் தொட அருள்தாரும். ஆமென்

## பத்தாம் நிலை : இயேசுவின் ஆடைகள் களையப்படுகிறது.

**(ஆபாசங்களில் அவதியுறுவோருக்காக)**

“என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வோருடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது, ஐயோ! பாவத்தில் விழச்செய்யும் உலகுக்குக் கேடு! பாவத்தில் விழுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஐயோ! அதற்குக் காரணமாய் இருப்போருக்குக் கேடு!” (மத் 18:6-7)

- ❖ இயேசு ஆடைகள் களையப்படுகிறார். அரைநிர்வாணம் ஆக்கப்படுகிறார். உலகத்தின் இச்சைகளுக்காக உத்தமர் இயேசு கொச்சைப்படுத்தப்படுகிறார்.
- ❖ உடலின் காயத்தோடு ஒட்டியிருந்த ஆடையும் ஒன்றாக உரிக்கப்படுகிறது. ஆழமான பாடம் ஒன்றை ஆண்டவர் இயேசு கற்றுத்தருகிறார். உடலை மறைக்கவே ஒட்டுத்துணியும்கூட, உடைகள் களையப்படுவதால் உடலும் களையப்படுகிறது. ஓய்ந்திருந்த வடுவெல்லால் ஒய்யாரமாய் படை எடுக்கிறது.
- ❖ வானத்துப் பறவைகளை அழகு பார்த்தவர், வயல்வெளி மலர்களுக்கு அணி செய்தவர், ஆடையின்றி நிற்கிறார். அவலமுகம் ஏற்கிறார்.
- ❖ ஊனியல்பின் இச்சையெல்லாம் உலகத்தின் இச்சைகளே, ஆவியின் நாட்டமெல்லாம் அகிலத்தின் மாட்சிமையே!
- ❖ இன்று எல்லாமேகவர்ச்சிதான், தொட்டால் கவர்ச்சி, பட்டால் கவர்ச்சி, பார்த்தால் கவர்ச்சி, பழகினால் கவர்ச்சி, ஆபாசத் தீயினிலே மடிந்துபோகிறோம் மனிதர்களாகிய நாம்.
- ❖ தாகம் தணிக்க தண்ணீரை மறுக்கிறோம், காமம்தீர கடல்நீர் குடிக்கிறோம். சிற்றின்பம் எப்போதும் கடல்நீர் போன்றதே, தாகமும் தீராது, பாவமும் போகாது.

❖ ஆபாசப் பட்டறையில் அடுக்கடுக்காய் விளம்பரங்கள், இடறலாய் இருப்போரே! எச்சரிக்கை உங்களுக்கு! உடலைப் பேணுங்கள், உயர்வானதை நாடுங்கள்!

**செபம் :**

இறைவா! உடல் ஆசை பாசங்களுக்காய் ஆபாசங்களில் அவதியுறுவோர், உடலை மதிக்கவும் உன்னதராய் வாழவும் வரம் தாரும். ஆமென்.

## பதினொன்றாம் நிலை : இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்

**(இயேசுவுக்காக காயப்பட்டோருக்காக)**

“நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது, என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்” (மத் 5:10-12)

(அல்லது)

“நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புற்றாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்குச் சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம்.” (2 கொரி 4:8-10)

❖ ஆதியும் அந்தமுமானவர் ஆணிகளால் அறையப்படுகிறார். அகிலத்தைக் காக்கின்றவர் ஆயுதத்தால் தாக்கப்படுகிறார். இதுவரை தாங்கியவரை இதுமுதல் தாங்குகிறது சிலுவை.

❖ எசாயாவின் கணிப்பு கச்சிதமாய்ப் பொருந்தும் : “அவர் இகழப்பட்டார், மனிதரால் புறக்கணிக்கப்பட்டார், வேதனையுற்ற மனிதராய் இருந்தார், நோயுற்று நலிந்தார். காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார். அவர் இழிவு படுத்தப்பட்டார். அவரை நாம் மதிக்கவில்லை.” (எசா 53 :3)

❖ சிலுவை மரணம் ஒன்றும் சீர்மிகு சிம்மாசனம் இல்லை. அது அதிகாரத்தின் அடையாளம், துரோகத்தின் துலாம், அடக்குமுறையின் அரியணை, பாவத்தின் பரிசு.

❖ சீடர்களாக ஆசைப்படும் நீங்களும் நானும் இன்று சிலுவைகளை ஏற்க வேண்டும். சிம்மாசனம் ஏற வேண்டும். இயேசுவின் சீடருக்கு சிலுவைகள்தான் அடையாளங்கள், அவர் பொருட்டு அவமானம் தாங்குவோர், அவலமாய் சாவதில்லை. அருளிழந்து சாய்வதில்லை.

❖ இயேசுவுக்காய் சான்றுபகவர்வோர் வீழ்ந்தாலும் மடிவதில்லை, விறகாக உடைவதில்லை, சாட்சியம் என்பதே சவால்தானே, உருகவும், கருகவும், மறையவும், கரையவும் ஒத்துக்கொண்டவர் மட்டுமேநித்தமும் பிறக்கமுடியும்.

❖ 'நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன' 'நற்செய்தி அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு' இப்படிப் பவுலும் சான்றுபகர்கின்றார் பரகதியில் இடம் கோருகின்றார்.

<u>செபம் :</u>

இறைவா! இயேசுவின் பெயருக்காக நிந்தையுறும் அனைவருமே, நித்தம் உம் அருள்மழையில் ஜெயம் காண வரம் தாரும். ஆமென்.

## பன்னிரெண்டாம் நிலை : இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்

**(பாவத்தின் கோரத்தில் பாதை மறந்தோருக்காக)**

"அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும், சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்தாக வேண்டும்.... சாவு முற்றிலும் ஒழிந்தது. வெற்றி கிடைத்தது. சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? பாவமேசாவின் கொடுக்கு. பாவத்துக்கு வலிமைதருவதும் திருச்சட்டமே. ஆகவே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி!" (1கொரி 15:53-57)

(அல்லது)

"நீங்கள் ஆண்டவரோடு இணைந்து, அவர் தரும் வலிமையாலும் ஆற்றலாலும் வலுவூட்டப்பெறுங்கள். அலகையின் ஏமாற்று வழிகளை எதிர்த்து நிற்கும் வலிமைபெறும்படி கடவுள் அருளும் எல்லாப் படைக்கலன்களையும் அணிந்துகொள்ளுங்கள். ஏனென்றால், நாம்

மனிதர்களோடு மட்டும் போராடுவதில்லை. ஆட்சிபுரிவோர், அதிகாரம் செலுத்துவோர், இருள் நிறைந்த இவ்வுலகின்மீது ஆற்றல் உடையோர், வான்வெளியிலுள்ள தீய ஆவிகள் ஆகியவற்றோடும் போராடுகிறோம்" (எபே 6:10-12)

- ❖ உலகை ஒளிர்விக்கும் ஆதவன் இயேசு, சற்றுநேரம் ஒளியை மறைத்துக்கொண்டார் இருளுக்கு வழிகொடுக்க, சூரியனைப் பார்த்து சேவல் கொக்கரித்தால், ஓடி ஒளிந்துகொள்வானா என்ன பளபளக்கும் பகலவன்? தற்காலிக வெற்றிக்கெல்லாம் தாரை தப்பட்டை தேவையில்லை. தலை சாய்த்த மறுகணமே தரையும் மலையும் தவிடுபொடியானது. தெரிந்துகொள்ள வேண்டாமா தலைசாய்ந்தவன் தலைவனென்று!
- ❖ இயேசுவின் இறப்பு என்பது சாவுக்குக் கிடைத்த சவுக்கடி! சரித்திரம் அமைக்க புதுவழி! வீழ்ந்தார் இயேசு நமக்காக! விருட்சமாய் நம் மீட்புக்காக!
- ❖ பாவங்கள்தான் நம் பின்புலமா? பரிகாரம் தேடாத பிடிவாதமா? முடித்துக்கொள்ள தகுந்த நேரம் இதுதான். இயேசுவைப் பிடித்துக்கொள்ள தக்க காலமும் இதுதான்!
- ❖ விடியும்வரை காத்திருப்போம்! விடியாத இரவுகளை விரட்டியடிப்போம்!

**பாடல் :**

சிலுவை நாதர் இயேசுவின்
பேரொளி வீசிடும் தூய கண்கள்
நம்மைநோக்கிப் பார்க்கின்றன
தம் காயங்களையும் பார்க்கின்றன

தீட்டுள்ள எண்ணம் என் இதயம் கொண்டால்
ஈட்டி பாய்ந்த நெஞ்சை நோக்குகின்றார்
வீண்பெருமைஎன்னில் இடம் பெற்றால்
முள்முடி பார்த்திட ஏங்குகின்றார்

என் கையால் பாவங்கள் செய்திட்டால்
தம் கையில் காயங்கள் பார்க்கின்றாரே
தீய வழியில் என் கால்கள் சென்றால்
தம் காலின் காயங்கள் பார்க்கின்றாரே

அவர் இரத்தம் என் பாவம் கழுவிடும்
அவர் கண்ணீர் என்னை மெருகேற்றிடும்
கலங்கரை விளக்காக ஒளிவீசுவேன்
கலங்குவோரை அவர் மந்தை சேர்ப்பேன்

**செபம் :**

இறைவா! பாவத்தின் கோரத்தில் பாதை மறந்தோர்கூட உம் பரிதாப சாவைக் கண்டு, திரும்பி வர திருந்தி வர அருள்தாரும். ஆமென்.

## பதிமூன்றாம் நிலை :

## இயேசுவின் உடல் தாயின் மடியில் கிடத்தப்படுகிறது.

**(பக்தியின்றி வாடும் கைம்பெண்களுக்காக)**

"இயேசு நயீன் என்னும் ஊருக்குச் சென்றார், அவருடைய சீடரும் பெருந்திரளான மக்களும் அவருடன் சென்றனர். அவர் அவ்வூர் வாயிலை நெருங்கி வந்தபோது, இறந்த ஒருவரைச் சிலர் தூக்க வந்தனர். தாய்க்கு அவர் ஒரே மகன், அத்தாயோ கைம்பெண்... இயேசு அருகில் சென்ற பாடையைத் தொட்டார். அதைத் தூக்கிச் சென்றவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர், 'இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன் எழுந்திரு' என்றார். இறந்தவர் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினார். இயேசு அவரை அவர் தாயிடம் ஒப்படைத்தார்." (லூக் 7:11-15)

- ❖ இயேசுவின் இறப்பில் மீளாச்சோகம் வாட்டி வதைத்தாலும், நம் விதவைத் தாய் மரியா மனம் குளிர மகிழ்ந்திருப்பாள்.
- ❖ இறைவனின் தாயாக இசைவு தந்த காரணத்தால், இன்று சாமானியனின் தாயாக, சாதனைத் தாயாக பதவி உயர்வு பெற்றுவிட்டாள்.
- ❖ பெண்பிள்ளை ஒவ்வொன்றும் போராடுவது இதற்காகவே, பிறந்தவுடன் மகளாக, வளரும்போது சகோதரியாக, மணந்ததும் மனைவியாக, கனிந்ததும் தாயாக நிறைவாக நிம்மதியாக வாழவே ஒவ்வொரு பெண்ணும் போராடுகிறாள்.
- ❖ அன்னை மரியாளுக்கும் எல்லாம் கிடைத்தது. மகளானாள், மங்கையானாள், மனைவியானாள், தாயானாள், எல்லாம் சிலகாலமே, மலர்ந்த வேகத்தில் எல்லாம் தொலைந்தது. ஒற்றை மரமானாள், உடைந்த சிறகானாள், நடந்ததை

ஒருபுறம் வைத்துவிட்டு, நிகழ்வதை மறுபுறம் கையிலெடுத்தாள்.

❖ இயேசுவின், சீடராய், சீடரின் தோழியாய், புறப்பட்டாள் இத்தாய் புயலாக!

❖ ஏழைக் கைம்பெண்களே, இயேசுவின் கண்மணிகளே! கலங்காதிருங்கள், கலங்கரை விளக்கங்கள் நீங்கள். பெற்றவர்கள் சாதித்ததால் உங்களுக்கே பெருமை! பேடிகள் ஏமாற்றிதனால் அவர்களுக்கே சிறுமை!

❖ கொடுத்த உழைப்புக்காய் தொடுத்த தியாகத்துக்காய், கொண்டாடுங்கள் உங்கள் தாய்மையை! தாங்குங்கள் உங்கள் தனிமையை!

❖ பிள்ளைகளும் பார்க்கவில்லை, தொல்லைகளும் ஓயவில்லை, இதுதான் உங்கள் சோகமென்றால், கவலையை விடுங்கள்! தொடர்ந்து கொடுங்கள்! நாங்களும் பிழைத்துக்கொள்வோம்! இந்த நானிலமும் விழித்துக்கொள்ளும்!

**செபம் :**

இறைவா! கதியின்றி வாடும் கைம்பெண்கள் எல்லாரும், பிள்ளைகளின் அரவணைப்பில், பிறர்சிநேக ஆதரவில் பத்திரமாய் வாழ வரம்தாரும். ஆமென்.

## பதினான்காம் நிலை :

## இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்.

**(நன்மரணம் வேண்டி எதிர்பார்ப்போருக்காக)**

“விண்ணகத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டேன். இதுமுதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர் என எழுது” என்று அது ஒலித்தது, அதற்குத் தூய ஆவியார், ‘ஆம், அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள். ஏனெனில் அவர்களின் செயல்கள் அவர்களைப் பின் தொடரும் என்று கூறினார்” (திவெ 14:13)

❖ மரணம்! இது வாழ்க்கையின் இன்னொரு முகம், வாழ்பவர் கண்டதில்லை, கண்டவர் வாழ்வதில்லை, சாவு என்றாலே சோகத்தின் கோரம் சொந்தம் கொண்டாடும். பிரிவு, துயரம், தனிமை, பதற்றம், வெறுமை, வேதனை இவற்றின் மொத்த உருவம் தான் மரணம்!.

❖ கசக்கிறது என்பதற்காக சுவைக்காமல்தான் இருக்க முடியுமா? கடினமானது என்பதற்காக சுமக்காமல்தான் மறுக்க முடியுமா? பிறந்தவர் எல்லாரும் இறந்தே ஆக வேண்டும். இதுதான் வாழ்க்கையின் விதி, இறைவன் வகுத்த நியதி.

❖ இறந்து உயிர்க்க, இறைவனைக் காண, இயேசுவும் இறக்கிறார். கல்லறைக்குள் படுக்கிறார். படைத்தவன் இயேசுவுக்கு பார்தந்த பரிசெல்லாம், படுத்துறங்க பஞ்சணையோ, பளபளக்கும் அரியணையோ அல்ல. மாட்டுக் கொட்டிலும், மாற்றானின் கல்லறையும்தான்.

❖ இயேசுவில் இறப்போருக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை. இல்வாழ்வைக் கடந்து மறுவாழ்வைக் காண இயேசுவுக்கும் தேவைப்பட்டது சாவின் சிபாரிசு. இயேசுவில் இறக்கும் நமக்கும், கல்லறைக்குள் அடங்கினாலும் நிலைவாழ்வின் கருவறை திறந்தே இருக்கிறது.

❖ வாழ்வுக்குப் பின் வெகுமதியா? தண்டனையா? புதிருக்கு பதில் நம் கையிலே உள்ளது. இறக்கும்வரை வாழ்ந்தால்தான் இறந்த பின்னும் வாழ முடியும். வாய்ப்புகளை வீணடித்து, கண்டபடி வாழ்வோர்க்கு, வெகுமதியா? தண்டனையா? விடை ஒன்றும் புதிதல்ல. தண்டனைத்தான் எஞ்சி நிற்கும்.

❖ திருடனைப் போல வரும் திடீர் விஜயமேமரணம், வரும்வரை எச்சரிக்காது. வந்தபின் காத்திருக்காது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வோம்! வாழ்க்கை இருக்கும்போதே போற்றிப் புகழ்வோம்!

**செபம் :**

இறைவா! நன்மரணம் வேண்டி காத்திருப்போர் எல்லாரும், வாழ்க்கை முழுவதையும், வேதனை வருத்தத்தையும் பொருளுணர்ந்து வாழ வரம்தாரும். ஆமென்.



# இயேசுவின் கல்வாரிப்பயணம்
## (பாவபரிகாரத்திற்கான சிலுவைப்பாதை)

அருட்சகோ. சிறிய புஷ்பம், FIHM
கடலூர்

**முன்னுரை:**

“என் வழியாயன்றி எவனும் பரமதந்தையிடம் வருவதில்லை” (அரு 14:6)

பாவிகளை மீட்க பரமன் தேர்ந்தெடுத்தப்பாதை சிலுவைப்பாதை, சிலுவை மரத்தில் செந்நீர் சிந்திக்கொண்டு நம்மையெல்லாம் சிந்திக்க வைக்க இதோ! இருகரங்கள் விரித்து காத்திருக்கிறார் இயேசு. நித்திய பிதாவின் நேசமகன் நம்மையும் தந்தையிடம் கூட்டிச் சேர்த்திட நிலையாய் நிற்கிறார் சிலுவையில். நமக்காக தன்னுயிரை ஈந்தார் என்ற உள்ளுணர்வு நமக்கு இருக்குமானால் இயேசுவின் பாடுகள் நமக்குள் தாக்கத்தை ஏற்படுத்தும். அவரின் பாடுகளோடு ஒன்றிக்கவும் அவருடைய கல்வாரிப்பயணத்தில் நம் காலடிகளை மனவருத்தத்துடன் வைத்து, பயணித்து பாவப்பரிகாரம் தேடுவோம். நாமும் இயேசுவோடு இறப்போம். கண்டிப்பாக உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையுடன் புறப்படுவோம்.

## 01. இயேசுவை சாவுக்கு தீர்ப்பிடுகிறார்கள்.

யூதர்களின் அரசர், அரசர்க்கெல்லாம் அரசர், பிதாவின் ஒப்பற்ற திருமகன், மனுவுரு எடுத்த இறைமகன் இயேசு, ஒரு சாதாரண மனிதன் பிலாத்துவின் தீர்ப்புக்காக காத்திருக்கிறார். தவறாக தீர்ப்பிடுகிறார்கள் என்று தெரிந்தும் மௌனமாக நிற்கிறார். இயேசுவுக்காக வாதாட அவர்சார்பாக பேசயாருமில்லை உண்மைஎன்று தெரிந்தும் பிலாத்து சொல்ல பயப்படுகிறான். மேய்ப்பனைக் கொல்வதற்கு ஆடுகளிடம் சம்மதம் கேட்கிறான்.

அநியாயமாக பிறரைப்பற்றி பேசும் போதும், அக்கிரமங்களுக்கு துணைநிற்கும் போதும், குற்றமற்றவர்கள் தண்டிக்கப்படும்போதும் வேடிக்கைப் பார்க்கும்போதும், தற்பெருமை, சந்தேகம், பொறாமையால் அடுத்தவர்களைப் புண்படுத்தும் போதும் தீர்ப்பிடுகிறோம். பிறரை விமர்சனம் செய்யும்போதும், தவறு செய்கிறோம் என்ற உணர்வு வரவேண்டும்.

**செபம் :**

"தீர்ப்பிடாதீர்கள், தீர்ப்பிடப்படமாட்டீர்கள்", என்ற இயேசுவே! அவசரப்பட்டோ, அநியாயமாகவோ, யாரையும், எவ்வேளையும் மனதிலும், வெளிப்படையாகவும் தீர்ப்பிடாதபடி எங்களைக் காத்தருளும். மற்றவர்களால் நாங்கள் அடையும் சிறுசிறு துன்பங்கள் நீர் சுமந்த சிலுவையின் பாகங்கள் என அவற்றை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள வரமருளும். ஆமென்.

## 02. இயேசுவின் மீது சிலுவை சுமத்துகிறார்கள்.

"இந்தத்துன்பக்கலம் என்னைவிட்டு நீங்கட்டும் என பிதாவிடம் செபித்தவர், அது தந்தையின் திருவுளம் என்று அறிந்ததும் எத்துனை உற்சாகத்துடன் சிலுவையை ஏற்றுக்கொள்கிறார். இயேசுவுக்கு மரணத்தண்டனை வழங்கப்பட்டு பல சித்திரவதைகளுக்கு உள்ளாக்குகிறார்கள். அவரைக் கல்தூணில் கட்டிவைத்து, சாட்டையால் அடித்து, முள்கிரீடம் தலையில் வைத்தனர். எச்சிலால் துப்பினர். கள்வர்களும். கயவர்களும் சுமக்க வேண்டிய சிலுவை இயேசுவின் தோள்மீது சுமத்தி, கல்வாரி மலைக்கு கால்கள் கடுக்க நடக்க வைத்தனர். அவர் நடந்த பாதையோ, கல்லும் முள்ளும், பள்ளமும் ? மேடும், புற்களும் ? பூண்டுகளும் நிறைந்த பாதை. ஏறக்குறைய ஏழு கிலோமீட்டர் சிலுவையை சுமந்து கொண்டே நடந்தார். சோர்ந்து போகவில்லை.

"எனக்கு ஏன் இந்த துன்பம்?" என்று எத்தனையோ முறை முறையிடும் நாம் ''இயேசுவுக்கு ஏன் சிலுவை'' என்று கேட்பதில்லையே! அடுத்தவர் மீது அன்றாடம் நாம் சுமத்துகின்ற வீண்பழி குற்றங்கள் எத்தனை? எத்தனை? ஆடிப்பாடி ஆனந்தமாக துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்தில், புத்தகச் சுமைகளுக்குப் பதிலாக குழந்தைகள்மீது குடும்பச்சுமைசுமத்தி மூட்டைகள் சுமக்கிறார்கள்.

உண்மைக்காக, நீதிக்காக, அன்பிற்காக துன்பங்களை, சிலுவைகளை ஏற்க தயாராக இருந்தால் தான் நாம் இயேசுவின் சீடர்களாக முடியும்.

**செபம் :**

சிலுவையை அரவணைத்து ஏற்றுக்கொண்ட இயேசுவே! பிறர்மீது சுமைகளைச் சுமத்தாமல், சுமைதாங்கியாக இருக்கவும், நீதிக்காக நான் வாழும்போது வரும் சிலுவைகளை ஏற்று, உறுதியான உள்ளத்துடன் சுமக்க அருள்தாரும். ஆமென்.

## 03. இயேசு முதன்முறை கீழே விழுகிறார்.

உலகையேத்தாங்கும் உன்னதக்கடவுள், சிலுவையின் பாரம் தாங்க முடியாமல் தத்தளிக்கிறார். கற்றூணில் கட்டி அடிக்கப்பட்டதால் உடலெங்கும் காயம். சிலுவை தோள்களை அழுத்தி புண்ணாக்கியதால் வேதனை, கால்கள் வலிமைஇழக்க உடல் சோர்வுற தட்டுத்தடுமாறி தரையில் விழுகிறார். கடவுள் மனிதனாகி அனைத்திலும் நம்மைப்போல் வாழ்ந்தார். பாவம் தவிர, மற்ற பலவீனங்களைக் கொண்டிருந்த நிலையில் கீழே விழுகிறார்.

மனிதன் பணம், பதவி, பந்தம், பாசங்கள், ஆசைகளுக்கு அடிமையாகி எழமுடியாமல் விழுந்து கிடக்கின்றான். அடுத்தவர்களைக் கீழே தள்ளுவதில் ஆனந்தம் கொள்கிறான். 'நான் விழுந்துவிட்டேன் தோற்றுப்போனேன். என்னால் எழ முடியாது' என்று மூலையில் முடங்கிகிடப்போர் பலர். இவர்களுக்கு நம்பிக்கையும், உறுதியும் அளிக்கின்ற கடமைநமக்கு உண்டு.

**செபம் :**

அன்பு இயேசுவே! வாழ்க்கையில் பல்வேறு இயலாமைகளால் விழுந்து கிடக்காமல், நம்பிக்கையற்ற நிலையிலிருந்து விடுதலை பெற்று, உம்மில் ஆழமான பற்றுதலுடன் முழுமுயற்சியுடன் எழுந்து நடக்க அருள்புரியும். ஆமென்.

## 04. இயேசு தன் தாயைச்சந்திக்கிறார்.

இறைத்திட்டத்திற்கு தன்னை முழுவதும் கையளித்து, அனைத்தையும் உள்ளத்திலிருந்து சிந்தித்து வந்த அன்னை மரியா, தன் மகன் குற்றவாளியாக தெருவில் சிலுவை மரத்தைச் சுமந்துகொண்டு செல்வதை பார்க்கிறார். அத்தாயின் உள்ளம் வேதனையால் சுக்குநூறாக வெடிக்கிறது. நோயுற்றோருக்கு குணமும், தேவைப்பட்டவர்களுக்கு நன்மையைச்செய்த நல்லவர் முகத்தில் இரத்தம் சொட்ட சொட்ட வருகிறார். அன்று "ஆகட்டும் என்னில் ஆண்டவர் சித்தம்". என்ற அன்னை, இன்று வேதனைத் தீயில் வெந்தாலும், மனவேதனையுடன் வழியனுப்புகிறார். நேரம் நெருங்கி விட்டதம்மா! நெடுந்தொலைவு செல்ல வேண்டும் என்று கண்களால் பேசிடும் தன் ஒரே மகன் இயேசுவைப்பாசமுடன் மௌனத்தால் விழிகளாலே புதுத்தெம்பையும், ஊக்கத்தையும் அளிக்கிறார். இயேசுவின் மீட்புப்பணியில் 'மரியாள்' பாடுகளின் பாதையில் அவருடன் பயணிக்கிறார்.

பெற்றோர் பிள்ளைகளைக் கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவர்களாக உருவாக்க வேண்டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை மதித்து, கீழ்ப்படியவேண்டும் முதியோர்களை பேணி பாதுகாக்க வேண்டும். அவர்கள் பெருமைசேர்க்கும்படி வாழ்ந்து, ''என்னுடைய மகன் சான்றோன்'' எனக் கேட்டு மகிழ்ச்சி அடைபவர்களாய் வாழ வேண்டும்.

**செபம் :**

அன்பு அம்மா! பெற்ற தாய்க்கு அவமானம் உண்டாக்கும் பிள்ளைகளுக்காகச்செபிக்கிறோம்! பெற்றோரை மதித்து முதுமையில் ஆறுதல் அளித்து அவர்களை மகிழ்ச்சியுடன் வாழ மனமருளும்! எங்கள் வாழ்க்கைப்பயணத்தில் எம்முடன் பயணித்து இறைச் சித்தத்தை உம்மைப்போல ஏற்றுக்கொள்ளும் வரம் தாரும். ஆமென்.

## 05. சிலுவை சுமப்பதில் இயேசுவுக்கு உதவ சீமோன் நிர்ப்பந்திக்கப்படுகிறார்.

இயேசுவின் கருணையினால் குருடர் பார்த்தனர். செவிடர் கேட்டனர், ஊமையர் பேசினர், முடவர் நடந்தனர், பேய்களை ஓட்டவும், பிணிகளை நீக்கவும். இறந்தோர் உயிர்பெறவும் செய்தாரே! தடுமாறும் வேளையில் தாங்கிக் கொள்ள ஆளில்லை. கல்வாரி சேர்வதற்குள் உயிர்போய் விடுமோ என்ற எண்ணத்தில் சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோனை சிலுவை சுமக்க வைத்தனர். கைம்மாறு எதிர்நோக்காமல் இயேசுவுக்கு உதவிட முன்வந்த சீமோன், இயேசுவின் வரலாற்றில் இடம் பிடித்தான்.

கண்களை இழந்து குருடர்களாக, காது கேளாது செவிடர்களாக, கை கால்கள் இழந்த முடவர்களாக எத்தனையோ குழந்தைகள் கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவிட நமது கரங்கள் நீண்டதுண்டா? அடுத்தவர்களின் பாரங்களைப்பகிர்ந்து கொள்ளும் போதும், இரக்கச் செயல்கள் செய்யும் போதும் இறைவனுக்கே செய்கிறோம் என்பதை நினைவில் கொள்வோம்.

**செபம் :**

இரக்கத்தின் இறைவா! எனது உதவியாருக்கெல்லாம் தேவையோ, அவர்களைத்தேடிச்சென்று உதவவும், பிறருக்கு கொடுப்பதில் தான் இன்பம் என்ற உயர்ந்த உள்ளத்தை தாரும். என்னால் ஆன உதவியைச் செய்யும் நல்மனதை அருளும், துயரம் வேதனைகளால் நிறைந்து அவதிப்படுபவர்களைக் காணும்போது

அவர்களை மகிழ்ச்சியாக வாழச்செய்ய எங்களுக்கு மனப்பக்குவத்தைத தாரும். ஆமென்.

## 06. இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்காள் துடைக்கிறாள்.

புதுமைகளைப்புரிந்த புனித முகம் காயங்களால் கலை இழந்து, இரத்தக் கறை, வியர்வையினால் நிறம்மாறி நிலை குலைந்துவிட்டது. பாதையின் இருபுறமும் மக்கள் வெள்ளம், வேடிக்கைப் பார்க்கின்றனர். சிலபெண்கள் அழுகிறார்கள், வீரர்கள் அனைவரும் விலகி ஒதுங்க வெரோணிக்கா என்ற வீரமங்கை மட்டும் கொலையாளிகளின் கூட்டத்தில் துணிந்து புகுந்து வேகமாக வருகின்றார். அனைவரும் வியப்பாய் நோக்குகின்றனர். விரல்கள் நடுங்கியவளாய் இயேசுவின் திருமுகத்தை அன்புடன் வெள்ளைத் துணியில் ஒற்றியெடுக்கிறார். ஒற்றியெடுத்த துணியில் இயேசுவின் முகத்தை பதிய வைக்கிறார் இயேசு. பேறுபெற்றவளாகிறாள்.

உண்மையான அன்பிருக்கும் உள்ளத்தில் துணிவும், தைரியமும் எளிதாய் வருகின்றன. சமூகத்தில் நடக்கும் அவலங்களை எதிர்த்து போராட துணிச்சல் இருக்கிறதா? அச்சத்தினால் ஒதுங்கிக்கொள்கிறோம். நாம் பல வேளைகளில் "இதைச்செய்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ?" என்று நினைத்து ஓரத்தில் நின்று வேடிக்கைப் பார்க்கிறோம். அச்சத்தை விட்டுவிட்டு துணிவுடன் சமூகத்தின் அவலங்களை நீக்குவோம். பல வழிகளில் நன்மைகள் செய்ய வாய்ப்பிருந்தும் செய்யாமலிருக்கிறோம். வீதியில் செல்லும் போது ஆலயமணியின் சத்தம் கேட்கிறது சிலுவை போட வெட்கம்.

**செபம் :**

உம் திருமுகத்தை துணியில் பதித்து வெரோணிக்காளுக்கு பரிசளித்த இயேசுவே! தீமைகளைத்தட்டிக்கேட்கும் நிறைய வெரோணிக்காள்களை நாங்கள் வாழும் சமுதாயத்திற்குத்தந்தருளும். அன்பும், துணிவும் கொண்ட பெண்கள் இரக்கத்தைக் காட்டி, அடிமைப்பட்ட பிள்ளைகளின் துயர்துடைக்க கருணையான இதயம் தாரும். ஆமென்.

## 07. இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

தடுமாறும் கால்களுக்குத் தாங்கிக்கொள்ள சக்தியில்லை. அடிப்பட்ட வேதனையில் அங்கமெல்லாம் வலிக்க, பாரமான சிலுவை உடலை அழுத்த, பூமியைப் படைத்தவர் களைத்துச்சோர்ந்து பூமியில்

இரண்டாம் முறை விழுகிறார். உடல் விழுகிறது, மனம் விழுந்துவிட வில்லை, கருணை மழையைப் பொழிந்து காத்த கரங்கள் செயலிழந்து கீழே கிடக்கின்றன. உடலின் பலவீனம் சிலுவைப்பாதையைத் தொடர முடியாவிட்டாலும், வீரத்தோடு எழுந்து நடக்கிறார். தன் இலட்சிய பாதையைத்தொடர்ந்து முன்னேறுகிறார்.

நம் சொல்லால், செயலால், சுயநலத்திற்காகப் பிறரைத் துன்புறுத்தும் போதெல்லாம் வீழ்வது அவர்களல்ல, நாம்தான், நமது ஆங்காரம், சிறு சிறுபொய்கள், கெட்ட வார்த்தைகள், ஆசாபாசங்கள் போன்ற எதிர்மறையான குணங்கள் தான் இயேசுவை மேலும் மேலும் அவரை விழத்தாட்ட செய்கின்றன. நமக்கு துன்பமும், துயரமும், தனிமையும் கவ்விக் கொள்ளும்போது தடுமாறாமல் எழுந்து இயேசுவின் உதவியைக் கேட்போம்.

**செபம் :**

எழுந்து மீண்டும் நடந்த இயேசுவே! சறுக்கி விழுந்தவர்களைச் சிறுமைபடுத்தாமல் அவர்களுக்கு வழி காட்டியாயிருக்கவும், வாழ்வின் இக்கட்டுகளில் உள்ளம் சோர்ந்து போகாமல் எழுந்து இலட்சியங்களை நோக்கி நடைபோடவும், அருள்தாரும். எங்கள் ஆற்றலின்மீது நம்பிக்கை இழந்தாலும் உமது அருளின் மீது நம்பிக்கை இழக்காமல் தொடர்ந்து செல்ல அருள்புரியும்.

## 08. எருசலேம் நகரத்துப்பெண்கள் இயேசுவுக்காக அழுகிறார்கள்.

இயேசு சிலுவை சுமந்து சென்று கொண்டிருந்தபோது வழியில் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர். அதில் பெண்களும் உண்டு, இளகியமனமும், மென்மையான உணர்வும் கொண்ட இந்தப் பெண்கள் இயேசுவிற்கு ஆறுதல் சொல்ல நினைக்கிறார்கள். ஆனால் அவர்களால் அழமட்டுமேமுடிந்தது. ஆறுதல்பெறவேண்டிய இயேசு. ஆறுதல் கூறுகிறார். “எருசலேம் மகளிரே! எனக்காக அழாதீர்கள். உங்களுக்காக, உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றுரைக்கிறார். இயேசு பெண்கள் சமஉரிமையுடனும் மரியாதையுடனும் நடத்தப்படவேண்டும் என்பதை செயலில் காட்டினார்.

பல்வேறு நிலைகளில் பெண்ணடிமைத்தனம், குடும்ப வறுமை, கணவன்மார்களின் அன்பின்மை, குடிப்பழக்கத்தினால் கொடுமைப்படுத்தப்படும் நிலைகளுக்காக அழுவோம். தங்கள்

கீழ்படிதலின்மையாலும், கடினமான சொல், செயல்களால் தாய்மார்களைத் துன்புறுத்தும் பிள்ளைகளின் நிலைக்காக அழுவோம். நமக்கு கஷ்டங்களிலிருந்தாலும், பிறருடைய கஷ்டங்களில் பங்குகொண்டு, ஏழை எளிய மக்களுக்கு ஆறுதல் கொடுக்க முன் வருவோம்.

**செபம் :**

அன்பு இயேசுவே! ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் அளித்து, பிள்ளைகள், தாய்மார்களின் துயர்கொண்டு, அதன் காரணங்களை அறிந்து, ஆறுதலாகவும், தேறுதலாகவும் இருந்து அவர்களின் வேதனையில் பங்குகொண்டு வீரப் பெண்களாக மாற்ற முயற்சிகள் எடுக்க அருள்தாரும்!. ஆமென்.

## 09. இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகிறார்.

மனுவுரு எடுத்த இறைமகன் இயேசு, சிலுவையின் பாரத்தால் மீண்டும் குப்புற விழுகிறார். தன்னுடைய பாடுக்ள், மரணம், உயிர்ப்பு பற்றி இயேசு அறிந்திருந்தார் உடல் பலவீனங்கள் குறுக்கே வந்து தனது பயணத்தில் தடுமாறி விழுந்தாலும், மீண்டும் மீண்டும் எழுந்து புத்துணர்ச்சியுடன் தொடர்கிறார். தடுமாறி விழுந்தாலும் அவரை யாரும் தூக்கிவிடவில்லை. அதனால் அவர் தளர்ந்து போகவில்லை. இயேசுவின் இலட்சியம், தந்தை கொடுத்த பணியை முடிக்க வேண்டும் என்பது தான். தந்தையின் திருவுளம் மீது கொண்ட நம்பிக்கை, நமது வாழ்விலும் துணிவுமிக்க இலட்சியம் தேவை.

ஏழை, எளியவர்களை சார்ந்து வாழவும், எங்கள் பலவீனங்களில் உம்பொருட்டு எம் உயிரை இழக்கவும் நாங்கள் தயாராக இருக்க வேண்டும். கொள்கை பிடிப்புள்ள சீடத்துவ வாழ்க்கை வாழ்ந்து, சான்று பகரவும் நல்வாழ்வில் ஒவ்வொரு செயல்பாடுகளும் இருக்க வேண்டும்.

**செபம் :**

அன்புள்ள இயேசுவே!

கொள்கை பிடிப்புள்ள சீடத்துவ வாழ்க்கை வாழ்ந்து சான்று பகரவும், பல இன்னல்களில் விழுந்து விழுந்து அவதிப்படுபவர்களைத் தாங்கிப்பிடிக்கவும் வரமருளும். தீயசிந்தனை, சொல், செயல்களில் மூர்க்கமாயில்லாமல், இவற்றிலிருந்து விடுபட்டு, எழுந்து உம்வழி நடக்க அருள்தாரும். ஆமென்.

## 10. இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்.

"அவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்த பின் குலுக்கல் முறையில் அவருடைய ஆடைகளைப்பங்கிட்டுக் கொண்டார்கள்" (லூக் 23:28)

இயேசுவை சாட்டையால் அடித்ததால் ஏற்பட்ட புண்கள் ஆடையோடு ஒட்டி இருந்த நிலையில் எப்படி வலித்திருக்கும்? ஆடையைக் களையும்போது காயங்கள் திறக்கப்பட்டு ஒட்டிய சதைகள் கிழிக்கப்பட்டு இரத்தம் பீறிட்டு எழ ஆடைமுழுவதும் இரத்தம் மயமாயிற்று, ஆடையை உரிந்ததால் இயேசு அவமான நிலையில் காட்சியளிக்கிறார். ஆடைகள் மேல் சீட்டுப்போட்டு அவர்களுக்குள் பங்கிட்டனர் அவருடைய உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

நம்முடைய சுயநலம், சூழ்ச்சி, அக்கிரமசெயல்கள், புறணி பேசுதல், பிறர் நலம் கெடுத்தல், பெயரைக் கெடுத்தல், போன்ற தீயபண்புகள் நம்மிடமிருந்து உரியப்படவேண்டும். பாவமென்னும் ஆடையைக் களைந்து, புண்ணியத்தை புத்தாடையாக அணிவோம், அன்பு, மகிழ்ச்சி, நம்பிக்கை என்ற பண்புகளை பிறருக்கு ஆடையாக அணிவிப்போம். அடிமைகளாக நடத்தப்படும் குழந்தைகளுக்கு சுயமரியாதை என்னும் ஆடையைப் போர்த்துவோம். மனிதமாண்பின் மதிப்பு உயர, ஆடை அணிவதில் அலங்கோலத்தை நீக்குவோம்.

**செபம் :**

எங்களுக்காக அவமானப்பட்ட இயேசுவே! "ஆடையின்றி இருந்தேன், எனக்கு ஆடை கொடுத்தீர்கள்" என்று எங்களைப்பார்த்து சொல்லும்படி, எங்கள் வாழ்வின் செயல்கள் மற்றவர்களை மரியாதைப் படுத்துபவையாக இருக்கும்படி, நாங்கள் நடக்க அருள் தாரும். ஆமென்.

## 11. இயேசுவைச்சிலுவையில் அறைகிறார்கள்.

இயேசு சிலுவையை சுமந்து கொண்டு "கொல்கொத்தா" என்னும் இடத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார். உருக்குலைந்த இயேசுவின் உடலிலிருந்து ஆடைகளைக் களைந்தபின், அவர் சுமந்து வந்த சிலுவை மரத்தில் கிடத்தி, கை, கால்களை கண்ட படி இழுத்து பிடித்து கூரான ஆணிகளால் அறைகிறார்கள். யூதர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் எள்ளி நகைக்க, இயேசு சொல்லொண்ணா துயரத்தை நீடிய பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார். கல்வாரியின் உச்சக்கட்டத்தில் ஒருவன் இயேசுவை பழித்துரைக்கின்றான். மற்றொருவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு பேரின்ப வாழ்வைப்

பெற்றுக்கொண்டான். தன்னை சிலுவையில் அறைந்தவர்களை அளவில்லா இரக்கத்துடன் மன்னிக்கிறார்.

ஒவ்வொரு முறையும் பாவம் செய்யும் போது, இயேசுவை ஆணிகளால் துளைக்க சுத்தியலையும், ஆணிகளையும் கையில் எடுக்கின்றோம் என உணர்வோம், காயங்களை உருவாக்கும் மனிதர்கள் மத்தியில் காயங்களுக்கு மருந்து போடுபவர்களாக இருப்போம்.

**செபம் :**

சிலுவையில் அறையுண்ட இயேசுவே! உம்மைப்போன்று எம் வாழ்வை மற்றவர்களுக்காக அர்ப்பணித்து, உண்மையின் சாட்சிகளாக உமக்கு சான்று பகர வரம் தாரும். தியாகங்கள் செய்ய, சிலுவைகளை அரவணைக்க மனவலிமைத் தாரும். ஆமென்.

## 12. இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்.

கதிரவன் மறைய, கார்மேகம் சூழ காரிருள் உண்டாக, பூமி பிளக்க, புள்ளினங்கள் ஓடி ஒளிய, இடி முழக்கம் கேட்க, மின்னல்கள் மின்ன "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறி தாங்கொண்ணா துக்கத்தோடு தலை சாய்த்து உயிர்விடுகிறார். உயிர்விடும் தருவாயில் கூட தம்மைதுன்புறுத்தியோர்களுக்காக, மன்னிப்பு கேட்டு தந்தையிடம் செபிக்கிறார். சிலுவையில் இருக்கும்போது "தாகமாயிருக்கிறேன், தந்தையே! இவர்களை மன்னியும், இதோ! உன் தாய், இதோ! உன் மகன்" என்ற வார்த்தைகளைப் பேசினார்.

இயேசுவே! நாங்கள் வாழவேண்டும் என்று சிலுவையில் நீர் இறந்தீர், உம் சிலுவைச்சாவின் பலனை நான் எந்த அளவுக்கு பெற்றுக்கொண்டிருக்கிறேன்? பத்துமாதம் சுமந்த அன்னை மரியாவுக்கு தன்மகனின் நிலை எப்படிப்பட்ட சோகத்தை ஏற்படுத்தியருக்கும்? பாலூட்டி, சீராட்டி, வளர்த்தத்தாயை தன்னந்தனியாக இயேசு விட்டுவிட்டு செல்லத்தயாராயில்லை. அன்புச் சீடர் யோவானிடம் "இதோ உன் தாய்" என்று கூறி உலகத்தாயாக நமக்கு அளித்து செல்கிறார். அனைத்து வேதனைகளுக்கும், கொடுமைகளுக்கும் உள்ளான இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்.

**செபம் :**

எனக்காக இறந்த இயேசுவே! சிலுவையில் தொங்கும் செம்மறியே! சிலுவையை எப்போதும் கண்முன் நிறுத்தி, எனக்காக நீ தந்த வாழ்வை, உனக்காக நான் வாழ வரம் தாரும். ஆமென்.

**13. இயேசுவின் திருவுடலை அன்னைமரியின் மடியில் கிடத்துகிறார்கள்.**

இயேசுவின் சடலத்தைச் சீடர்கள் இறக்கி அன்னை மரியாவின் மடியில் வைத்தனர். உடல் முழுவதும் காயத்தாலும், இரத்தத்தாலும் நிறைந்திருப்பதைப் பார்த்த அன்னையின் கண்களிலிருந்து கண்ணீர் மழையாகப் பொழிந்தது. அன்று வார்த்தையானவரைத் தம் உதரத்தில் தாங்கிய மரியா, இன்று அவரைத் தன்மடியில் உயிரற்ற உடலாய் தாங்கி, சொல்லொண்ணா வேதனை அடைகிறார். தன் மகன், யாருக்கும் தீங்கு செய்யாதவன், நன்மையே செய்த தேவமகன், சென்ற இடமெல்லாம், பார்க்கும் மனிதருக்கெல்லாம் நோய்களிலிருந்து குணமாக்கி நல்வாழ்வு அளித்தவர், கை, கால் அசைவின்றி தன் மடியில் இருக்கும் இயேசுவுக்கு சோகத்தாலாட்டுபாடுகிறார். வியாகுலத் தாயாக அன்னை மரியா இந்த நேரத்திலும் இறைதிருவுளத்தை ஏற்பவர்களாகத் திகழ்கிறார்.

''விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும் ஆவார்" என்ற வார்த்தைக்கேற்ப, நம் வாழ்வில் இறைத்திட்டத்திற்குப் பணிந்தவர்களாக வாழ முயல்வோம். இறைவார்த்தையைக்கேட்டு அதன்படி வாழ்கிறோமா? பிள்ளைகளை நன்னெறியில், பண்புள்ளவர்களாக வளர்க்கிறோமா? தேவ அன்னையை குடும்பங்களில் முன்மாதிரிகையாய் கொண்டுள்ளோமா? சிந்திப்போம், அந்த அன்னைக்கு ஆறுதல் அளிக்க நம் செயல்கள் பிறரின் நல்வாழ்வுக்கும், நிறைவான மகிழ்ச்சியை கொடுப்பவையாக இருக்க உறுதி எடுப்போம்.

**செபம் :**

வியாகுலத்தாயே! உமது வேதனைகளைக் குறைத்து, இயேசுவுக்கு ஆறுதல் அளிப்பவர்களாகவும், எங்கள் துன்பங்களில் பொறுமையுடனிருந்து, அன்றாடம் உமது மகிமையை மட்டுமேகண்முன் கொண்டு வாழ வரமருளும். ஆமென்.

**14. இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.**

"வானத்துப்பறவைகளுக்கு கூடு உண்டு, நரிகளுக்கு பதுங்குக் குழிகள் உண்டு, மனமகனுக்கு தலை சாய்க்ககூட இடம் இல்லை" என்ற இயேசுவுக்கு அவருக்கென்று சொந்தமான கல்லறையும்

இல்லை. பூமியிலும் நிம்மதியாக தலைசாய்த்து உயிர் போகவில்லை. மாறாக விண்ணுக்கும் மண்ணுக்குமிடையில் தொங்கிக் கொண்டே மரணமடைகிறார். அன்று அன்னையின் கருவறையில் உதித்தவர், இன்று கல்லறை என்ற கருவறையில் புதைக்கப்படுகிறார். “எல்லாம் நிறைவேறிற்று” என்று கூறி இறந்த இயேசுவின் உடலை அன்னை மரியா, இயேசுவின் சீடர்கள், நிக்கோதேமு, சூசை இவர்களின் உதவிகளோடு அடக்கம் செய்கிறார்கள். இவ்வுலகம் முழுவதையும் படைத்த இறைவனுக்கே இடமில்லை. அரிமத்தியா சூசை இடமளித்து பெரும்புண்ணியத்தைச் சம்பாதித்துக்கொள்கிறார்.

‘‘இன்னும் துன்பம் வேண்டும்’’ என்று புனித குழந்தை தெரசாளைப்போன்று மன்றாடத்துணிவில்லாம் போனாலும், அன்றாடம் வரும் துன்பங்களை பொறுமையுடன் ஏற்றுக்கொள்வோம். கோபம், பொறாமை,தீய நாட்டங்கள், சுயலநம், பேராசை, நாவடக்கமின்னை போன்றவற்றை அடக்கம் செய்வோம். உண்மையான உறவுடனும், அமைதியான வாழ்வு வாழ்வோம். “என்னை யார் என்ன செய்துவிட முடியும்” என்று ஆணவத்துடன் கொக்கரிப்பவன், சாவுக்கு முன்னால் அவன் வீறாப்பு ஒன்றுமேஇல்லை என்பதை உணர்ந்து இறைவனிடம் சரணாகதி அடைவோம்.

**செபம் :**

அன்பு இயேசுவே! இறப்பு உண்டு என்ற எண்ணத்தில், என்னையே வெறுமையாக்கி, தியாகங்கள் புரிந்து வாழவும், உமது திருக்காயங்களை மனதில் பதித்து, பிறரைக் காயப்படுத்தாத மனதை தாரும். என்னிலிருக்கும் ஆறாத மனக்காயங்களை ஆற்றியருளும். ஆமென்.

## 15. இயேசு சாவை வென்று உயிர்க்கிறார்

“சாவு வீழ்ந்தது, வெற்றி கிடைத்தது, சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? என்று வீர முழக்கம் செய்து வெற்றிவீரராய் உயிர்த்து விட்டார். இயேசுவே உண்மை, அன்பு, வாழ்வு. “சத்தியம் வெல்லும்” சாவு அவரிடம் தோற்றுப்போனது. சொன்னபடி மூன்றாம் நாள் உயிர்த்து நமது விசுவாச வாழ்விற்கு உறுதியளித்துவிட்டார். அவரில் அவருக்காக அவர் சென்ற பாதையைப் பின்பற்றினால் நாமும் நித்திய வாழ்விற்காக உயிர்த்தெழுவோம். இயேசுவைப்போல உயிர்த்து எந்நாளும் இறையோடு வாழ்ந்திருப்போம். நம்பிக்கையோடு அவரை வணங்கி, மனபலம் பெற்று அன்பு, சகோதரத்துவம், நீதி நிறைந்த இறையரைசக்கட்டி யெழுப்புவோம். ஆமென்.

# இயேசுவோடு கல்வாரி பயணம்
## (சிந்தையைச் சீரமைப்பதற்கான சிலுவைப்பாதை)

திருமதி. சான்ரா
மெல்ரோசாபுரம்.

**முன்னுரை :**

சிலுவைப்பாதை ஓர் சிறப்பான பாதை; சிந்தனைக்குரிய பாதை; சிறந்த மனிதர்களை உருவாக்கும் பாதை; நல்ல பல சிந்தனைகள் மேலோங்கி எழுப்பும் பாதை; மனிதர்களைப் புனிதர்களாக மாற்றும் பாதை!!

என் துன்பத்தைப் பார்த்துச் சிந்துகின்ற கண்ணீரெல்லாம் பயன் அளிப்பதில்லை. என் சிலுவையை ஏற்று சிந்துகின்ற வியர்வையே விளைச்சலை உருவாக்கும். உன் சோகம் எனக்கு வேண்டாம், நீதிக்கான உன் தாகம் வேண்டும். அதைச்செயல்படுத்துவதற்கான உத்வேகம் வேண்டும்.

அன்பு சகோதர சகோதரிகளே! வருந்துவதற்காக வராதே; திருந்துவதற்காக வா. அழுவதற்காக வராதே; ஆரத்தெழுவதற்காக வா! அன்றாட சிலுவையைச் சந்திப்பது உனக்கு சவாலாக இருக்கும். பாரமென்று விலகாதே! தூரமென்று தயங்காதே! துன்பங்களைத் தைரியமுடன் நேர்க்கொண்டு, துவண்டுவிடாமல் துணிந்து முன் செல்லுதல் வேண்டும். நம்பிக்கை வேண்டும். இறைவன், நாம் சோதனை, வேதனைகளுக்கு உட்படும் போதெல்லாம், நமக்காக நம்மோடு இருந்து சுமையைச் சுகமாக ஏற்றுக்கொள்ளும் சக்தியைத் தந்து நம்மை பாதுகாப்பார், என்ற நம்பிக்கையுடன் இச்சிலுவைப்பாதையைப் பின்தொடர்ந்து செல்வோம்.

**முதல்நிலை : இயேசுநாதர் மரணத் தீர்வையிடப்படுகிறார்.**

தீர்ப்பிடாத தீர்ப்புக்குள்ளாவாய், பிலாத்து தீர்ப்பு வழங்குகிறான். யார், யாருக்கு தீர்ப்பு வழங்குவது. இந்த உலகத்தைப் படைத்தப் பரமனுடைய மகனுக்கு, படைத்தவனுக்கே தீர்ப்பு வழங்குகிறான் பிலாத்து. அதிகார பயம், ஆசனம் போய் விடுமே என்ற அச்சம், மனசாட்சி குற்றம் என்று சொன்னாலும் மகுடம் பறிபோய் விடுமேஎன்று, உண்மையைக் குழி தோண்டிப் புதைக்கிறான்.

**என் மகனே, என் மகளே,**

பிலாத்து ஒருமுறை தீர்ப்பிட்டான்!

நீயோ என்னை தினமும் தீர்ப்பிடுகின்றாய். அடுத்தவரை தீர்ப்பிடுவதை விட்டுவிட்டு உன் சகோதர சகோதரிகள், அயலான், பகைவர்கள், இவர்களோடு சமாதானம் செய்து கொள். இதை உணர்த்தவே, எனக்கு இந்தப்பாடுகள்.

**சிந்தனைக்கு :**

என் பாவங்களால் நான் உன்னை சிலுவையில் தினம் தினம் அறைகின்றேனா!

ஐயோ! இல்லை, இல்லை இனி ஒருகாலமும் இதுபோல் நடந்து கொள்ள மாட்டேன்.

என்னைப் பொறுத்தருளும் இறைவா, என்னைப் பொறுத்தருளும்.

## இரண்டாம் நிலை :

## இயேசுவின் தோள்மீது சிலுவையைச் சுமத்துகின்றார்கள்.

என்னைப் பின் செல்ல விரும்புகின்றவன். தன் சிலுவையைச் சுமந்துக் கொண்டு என்னைப் பின் தொடரட்டும் என்று சொன்ன இயேசு, இங்கே சிலுவையைச் சுமக்க ஆயத்தமாகின்றார். இயேசுவுக்கு ஏன் இந்த நிலை? இவர் செய்ததவறுதான் என்ன?

ஏழை எளியவர்களுக்காய் வாழ்ந்ததா?

தவறு செய்தவனைத் தட்டிக்கேட்டதா?

பாவிகளுக்கு வாழ்வு கொடுத்ததா?

எல்லோருக்கும் அன்பும், அரணுமாக விளங்கியதா?

இதற்கெல்லாம் அவர்கள் தந்த பரிசு..., நாம் நம் பாவங்களால் இயேசுவுக்கு தரும் பரிசு இந்த சிலுவை தானா?

போதும், போதும், நாம் நமக்காக சுயநலமாக வாழ்ந்தது போதும், பிறர்க்காக பிறர் நலமுடன் வாழ்வோம்.

**சிந்தனைக்கு :**

சகோதர, சகோதரிகளே!

ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள் மீண்டும் கூறுகிறேன். மகிழுங்கள். கனிந்த உங்கள் உள்ளம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும். ஆண்டவர் அண்மையில் உள்ளார். நாம் அவரை பின் தொடர்ந்து செல்வோம். அவர் மூலம் நாம் கற்றுக் கொண்டதை, பெற்றுக்கொண்டதை, கேட்டறிந்தவை, அவர் வாழ்வின் மூலம் நாம் கண்டுணர்ந்தவை அனைத்தையும் நம் வழிகாட்டிகளாய் வைத்து. நிலையான வாழ்வினை நோக்கிச் செல்வோம்.

## மூன்றாம் நிலை : இயேசு முதன்முறை கீழே விழுகிறார்.

வீழ்வதும் மறுபடி எழுவதும் வாழ்க்கை. தென்னை இலை வீழ்வதற்காக தென்னை மரம் வருந்துவது கிடையாது. அப்படி வருந்தினால் அதற்கு வளர்ச்சிக் கிடையாது. இயேசுவின் உடல் பலவீனம், அவரை கீழே விழச் செய்தாலும், உள்ள நம்பிக்கை மீண்டும் எழச்செய்கிறது.

### என் மகனே! என் மகளே!

வீழ்வது மனித இயல்பு. ஆனால் எழ வேண்டும் என்று முயல்வது தான் விசுவாச வாழ்வு. நீ வீழ்ந்திருக்கும் நிலையைப் பார். நான் வீழ்ந்திருப்பதைப் பார்த்து வருத்தப்படாதே. நீ வீழ்ந்திருப்பதை, உன் குடும்பம் வீழ்ந்திருப்பதை நினைத்து வருத்தப்படு. உன்னால் எழ முடியும். என் வார்த்தைகளில் விசுவாசம் கொள். விசுவாசம் உன்னை தூக்கி விடும்.

### சிந்தனைக்கு:

சகோதர, சகோதரிகளே, உயிர்ப்பும் உயிரும் நானே என்று கூறிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை விசுவசித்து, அவர் காட்டும் பாதையில் சென்றிட எழுவோமா? நம் சிந்தனைகளைச் சிறை வைத்து நம்மைதரையில் வீழ்த்திய பாவங்களை வென்றிடுவோமா? வெற்றியுடன் வாழ ஆண்டவர் தம் கரம் பிடிப்போமா? ஆண்டவர் துணையுடன் இப்பங்கின் அருள் வாழ்வு, சமூக வாழ்வு வளர்ச்சிக்காகத் தியாக உள்ளத்துடன் பணிபுரிவோமா? ஆம் இறைவனை வழிபடுவோம்.

அன்பு தந்தையே, அற்புத செல்வமே, நீங்காத நினைவு பெட்டகமே, இனி கவலை வேண்டாம். இயேசுசுவே எழுந்திடு. என்னுள் எழுந்தருளி வாரும். ஐயா, இதோ ஏழை அழைக்கின்றேன். வாரும், என்னுள் வாரும்.

## நான்காம் நிலை : இயேசு தன் தாயைச் சந்தித்தல்.

சிலருடைய சந்திப்பில் சங்கடம் எழுகிறது.
சிலருடைய சந்திப்பில் சந்தேகங்கள் எழுகின்றன.
இவர்களுடைய சந்திப்பில் சந்தோஷம் ஏற்படுகின்றது.
ஆம் இங்கே அன்பும், அன்பும் சந்திக்கின்றது.

ஆம் பாடுகளின் பாதையில் தன் அன்பு மகனைக் கண்டு உறைந்து போய் நின்றாலும் உறுதியாய் உடனிருக்கின்றாள். யேசுவை மடிதாங்கிய அன்னைக்கு இன்று இடிதாங்கியநிலை. அதற்கு காரணம் ?

நம் பாவங்கள், நம் குற்றங்கள், நம் துன்பங்கள், நம் காயங்கள், நமது பிணிகள், எல்லாவற்றையும் தானே சுமந்து சென்றார். அன்னையே, எம்மைபொருத்தருளும் அன்னை துயருற்றாள். அதே சமயம் இறைவனின் வாக்கு நிறைவேற்றும் தன் மகனை, தன் தந்தையின் வழியில் செல்லும் மகனின் கடமை உணர்வினை நினைத்து மகிழ்ந்திருந்தாள்.

எதிர்க்கப்படும் அடையாளமாக இயேசு இருப்பார் என்ற சீமோன் வாக்கு, இவர் என் மகன் அல்ல, உன்னத கடவுளின் மகன், என்ற வானவரின் வார்த்தையும் தாய் மறந்து போகவில்லை. கண்ணீர் மல்க கதறியது அவள் உள்ளம்! ஆனால் நின்றாள் நிலைக்கொண்டு நின்றாள், ஒரு வீரத்தாயாய், உலகின் தாயாய், இறைவனைப் பணிந்தவளாய், விசுவாசம் நிறைவந்தவளாய், கடமையைச் செயலாற்றும் தெய்வமகளின் தாயாய் நின்றாள் உண்மைமுற்றிலும் உண்மை.

**சிந்தனைக்கு :**

என் சகோதர சகோதரிகளே, அதே வீரம், அதே விசுவாசம், நமக்கும் வேண்டும். அன்னையின் பாதம் வணங்கி, நமக்குள் பாவங்களை ஏவிவிடும் பசாசினை வென்றிடுவோம். விசுவாசமுடன் நற்பண்புகளை வளர்த்திடுவேம். ஒறுத்தல் முயற்சிகளுடன் பிறர்க்குறைகளைப் பொறுத்துக்கொள்வோம். அன்பினை வளர்ப்போம். அருளினைப்பெறுவோம்.

## ஐந்தாம் நிலை :

## சீமோன், இயேசு சிலுவையை சுமக்க உதவி செய்கிறார்.

யாரேனும் ஒருவர் என்னிடம் உதவி கேட்கிறார் என்று சொன்னால், இன்றும் நான் இந்த உலகிற்கு பயன்படுகிறவனாக இருக்கிறேன் என்று தானே பொருள்.

சீமோன் உண்மையில் அதிர்ஷ்டமானவர் இயேசுவுக்கு நேரில் உதவி செய்யும் பாக்கியம் கிடைத்தது.

சீமோன், இயேசுவுக்கு செய்த உதவி பாலைவனத்தில் கிடைத்த ஒரு முடக்கு தண்ணீருக்கு சமம். எல்லாம் வல்ல இறைவா! பாலைநிலத்தில் தண்ணீரின்றித் தவித்த மக்களுக்காகக் கற்பாறையிலிருந்து தண்ணீர் பெருகிவரச் செய்தீரே. உமக்கா இந்த நிலை! இன்று நீரோ குடிக்க நீரின்றி தவிக்கின்றாயே! எல்லாம் எங்களால் தானே! இந்த கற்பாறைகளினால் தானே! ஐயா! பாலைவனத்தில் கற்பாறையிலிருந்து தண்ணீர் பெருகிவரச் செய்த நீர் எங்களுக்குள்ளும் இரக்கம் என்ற நீரினை ஊற்றெடுத்து பெருகவிடு.

நாங்களும் பிறர்க்கு உதவும் நல் உள்ளம் கொண்டவர்களாய், ஆதரவு தரும் நெஞ்சங்களாய், பிறர் பிழையை மன்னித்து அவர்களுக்கு உதவும் பலம் பெற்றவர்களாய், துன்பப்படுவோரிடம் அணுகி சென்று அவர்களின் துன்பம் துடைக்க உதவும் கரங்களாய் வாழ்ந்திட உம் அருள் தாரும்.

**சிந்தனைக்கு :**

என் சகோதர சகோதரிகளே,

அறிவில் உயர்ந்தவர்களாய், நெஞ்சத்தில் தூய்மை உடையவர்களாய் உள்ளத்தால் பெரும் செல்வம் பெற்றவர்களாய், எளிய மனதுடையவராய் வாழ்ந்திட அந்த அன்பின் ஊற்றிடம் நாம்கேட்டு மகிழ்வோமா?

**ஆறாம் நிலை :**

**இயேசுவின் முகத்தை வெரோணிக்காள் துடைக்கிறாள்**

உடுக்கை இழந்தவன் கைபோல் அங்கே இடுக்கண் களைவதாம் நட்பு, வெரோணிக்காள் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள். இங்கே வெரோணிக்காள் என்னும் பெண்ணொருத்தி வீரத்தோடும், கனிவோடும் தடைகள் தாண்டி இயேசுவின் முகத்தை துடைக்கிறாள். கூட்டத்தில் நின்றவர்கள் எல்லாம் துக்கத்தால் கண்ணீர் சிந்தினார்களே ஒழிய பேராட்டத்தில் பங்கெடுத்தவள் இந்த வெரோணிக்கா மட்டுமே. இவளின் துணிச்சலுக்கு கிடைத்த பரிசு இயேசுவின் கனிவான முகம்!

கஷ்டமேஇல்லாத ஒரு வாழ்க்கை நமக்கு அமைய வேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறோம். ஆனால் நம்மைச் சுற்றி பல்வேறு அடிமைத்தனங்கள் இருக்கின்றன. பலவிதமான பிரச்சனைகள் நம்மை நெருக்குகின்றன. என்ன செய்வது? எப்படி வாழ்வது? என்று திணறிப் போயிருக்கலாம். இங்கு தான் நமக்கு தேவை வெரோணிக்காவிடம் இருந்த வீரமும் துணிவும். துன்பத்தில் உதவி கிடைக்குமா என்று எதிர்பார்த்து தவிக்கும் எளியவர்களுக்கு, நமது உதவி உண்மையிலே தேவைப்படுகிறவர்களுக்கு நாம் அனைவரும் கொடுத்து உதவுவோமா?

**சிந்தனைக்கு :**

சின்னஞ்சிறு சகோதரர்களுக்குச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று இயேசு மக்களுக்கு சொன்னார்.

பிறர்க்கு உதவும் மனம்பெறுவோமா? அவர்களின் துன்பத்தைத் துடைக்கும் போது இயேசுவின் முகத்தை அங்கு காண்போமா?

இறைவா, உமது அன்பில் மென்மேலும் பங்குபெற எங்களுக்கு அருள்வீராக, இவ்வுலகின் உம் தூய ஆவியின் அமைதியையும் மகிழ்ச்சியையும் விண்ணுலகத்தில் முடிவில்லா பேரின்பத்தையும் உமது பரிசாக இந்த பங்கு மக்களுக்கும், இவர்களுடைய குடும்பத்தினர் அனைவருக்கு தருவீராக பிறருக்காக வாழ்வதில் ..... தகுதி ஆக்குவாய்.

## ஏழாம் நிலை : இரண்டாம் முறை இயேசு விழுகிறார்.

பாடுகளின் பாதையில் இயேசு இரண்டாம் முறை மண்மாதாவை அரவணைக்கின்றார். நாம் அடிமைத்தனத்தில் கிடக்கிறபோதெல்லாம் ஆண்டவர் வீழ்ந்து கிடக்கிறார். எத்தனை எத்தனை அடிமைத்தனங்கள். பழகிவிட்டது பாரம்பரியம், மரபு என்ற பெயரில் எத்தனை எத்தனை வீழ்ச்சிகள் வீழ்ந்தாரைக் கண்டால் வாய்விட்டு சிரிக்கும் உலகம் இது. என் மகனே, என் மகளே!

வீழ்ந்தவனை எழவிடுங்கள். நமது சுடும் வார்த்தைகளால் நமது நடவடிக்கைகளால் பிறரை எழுந்திருக்க விடாமல் தள்ளியிருந்தால், அதற்காக வருந்துங்கள், பிறரது வளர்ச்சிக்கு நாம் முட்டுக்கட்டையாக இருந்துள்ளோம் என்றால் மனம் வருந்துவோம் மனம் திருந்துவோம்.

என் சகோதர, சகோதரிகளே, பிறரை வளரவிடுங்கள், வாழவிடுங்கள் பிறரைத் தட்டிக் கொடுங்கள், தட்டிக் கழிக்காதீர்கள்.

உற்சாகப்படுத்துங்கள், காயப்படுத்தாதீர்கள், ஆவேசப்படாதீர்கள் அமைதியாக அறிவுறுத்துங்கள்.

**சிந்தனைக்கு :**

என் மனமே, வீழ்ந்திருக்கும் இயேசு மீண்டும் எழுவார். வீழ்ந்திருக்கும் நாம் எழவேண்டும். அதற்கு நமக்கு இறைவன் கரம் வேண்டும். ஆம் இறைவா! என் வாழ்வில் நான் காணும், நான் சுமக்கும் துன்பங்களைச்சுமந்துக் செல்ல உன் சிறகுகள் எனக்கு வேண்டும். ஐயா! உன் பாதம் பணிகின்றேன். என்னை ஏற்றுக்கொள்ளும்.

## எட்டாம் நிலை : எருசலேம் மகளிர் இயேசுவுக்காய் அழுகிறார்கள்.

அழுகை வெற்றியின் அறிகுறி அல்ல. அழுகை சோகத்தின் அடையாளம். இயலாமையின் வெளிப்பாடு. இலட்சியத்தைப்படைக்க வேண்டும் என்று விரும்புகிற எவரும் கண்ணீர் சிந்திக்காலத்தை வீணாக்குவதில்லை.

இயேசுவின் பரிதாப கோலத்தைப்பார்த்து கண்ணீர் விடும் எருசலேம் பெண்களிடம், அழவேண்டாம் என்று இயேசு கூறுகிறார். இயேசுவின் கல்வாரி பயணம் தோல்வியின் பயணம் அல்ல. அது வெற்றியின் பயணம்.

நமக்கு துன்பம் வரும்போது நாம் துவண்டுவிடக்கூடாது. நாம் கண்கலங்கக்கூடாது. ஏனெனில் துன்பத்தைக்கடந்து வர நல்ல பாதையைத்தேட கண்களில் தெளிவு வேண்டும்.

**சிந்தனைக்கு:**

என் சகோதர சகோதரிகளே,

இன்னல்கள், துன்பங்கள் வரும்போது நாம் அஞ்சவேண்டாம். காரணம் அவைகள் நம்மைமென்மேலும் பதப்படுத்தும் கருவிகளே. துன்பம் வருவதும் பின் அதனை வென்று இன்பத்தைக்காண்பதும் இயற்கையென்றாலும், அவையே நம்மை மேலும் மேலும் பக்குவப்படுத்துகிறது. தைரியம் கிடைக்கின்றது. பொறுமை, சகிப்புத்தன்மைஇவை இரண்டும் ஏமாற்றம், இம்சை, துன்பம் அனுபவித்தவருக்கு கிடைக்கும் பரிசுகளாகும்.

கருணைக் கடலாகிய கடவுளே, என்னுடைய துன்பத்தை பெரிதாக எண்ணி துவண்டு விடாமல் அதை ஏற்றுக்கொள்ளும் சக்தியைத் தாரும். இன்பத்திலும் துன்பத்திலும் நீ என்னுடன் இருந்து என்னை வழிநடத்து. நீயே என்வெற்றி, நீயே எனக்கு எல்லாம் !.

## ஒன்பதாம் நிலை : இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

விழ விழ எழுவோம். ஒன்று விழ, ஒன்பதாய் எழுவோம். என்று ஒரு கவிஞர் கூறினார். இயேசு சிலுவையின் பாரத்தால் கீழே விழுகின்றார். வீழ்ந்தவர் வீழ்ந்தே கிடக்காமல் எழுந்து நடக்கிறார். தன் குறிக்கோளான கல்வாரியை எப்படியேனும் அடைந்துவிடுவதில் குறியாயிருக்கிறார்.

**சிந்தனைக்கு:**

என் சகோதர, சகோதரிகளே,

தவறு செய்பவன் மனிதன். தவறிலே வீழ்ந்து கிடக்காமல் அதிலிருந்து எழுந்து நடப்பவன் தான் உண்மையான மனிதன். நம் வாழ்வின் இலட்சியம் என்ன? நம் குறிக்கோள் தான் என்ன? இதை உணர்ந்தவர்களாய் வாழ்வோம். வாழ கடமைப்பட்டிருக்கிறோம். நம் கடமையை ஒழுங்காக செய்து முடிப்பதே நாம் கடவுளுக்குச் செய்யும் முதல் தொண்டு. கடமைஉணர்வு உள்ள எந்த மனிதனுக்கும்

நேர்மை, உண்மைஇரண்டும் கை சேர்ந்து செல்லும். உண்மைஉள்ள இடத்தில் அன்பும், அருளும் இருக்கும். இந்த அன்பும் அருளும் அமைதியைத் தரும். அமைதி, சமாதானம் இந்த இரண்டும் நம் குற்றங்குறைகளைக் கடந்து நம் இறைவன் நம்முள் வாழ்கின்றான் என்று சொல்லி இன்னிசைப்போம் . இறைவா! எங்கள் தவறுகளிலேயே நாங்கள் வீழ்ந்து கிடக்காமல் எழுந்து நின்று, உழைத்து முன்னேற இதனால் இறையரசைக் கட்டி எழுப்ப வரம் தாரும்.

## பத்தாம் நிலை : இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன.

ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமாக்கப்படுகிறார். இங்கே இயேசுவின் ஆடை பலவந்தமாய் களையப்படுகிறது. இரத்தம் கசிகிறது. உடலின் அவமானத்தின் உச்சக்கட்டம் இது. நிர்வாணமாய் செய்வதறியாது நிற்கிறார். இயேசு ஆடைகள் வெறும் உடலை மூட அல்ல. ஒருவரின் முழுமையை, மானத்தை தனித்தன்மையை குறிக்கின்றது. நிர்வாணம் ஒருவருக்கு மட்டுமேஉரிய ஒன்று. இயேசு பலபேர் முன்னிலையில் அவமானத்துடன் நிற்கிறார். தன் வாழ்வின் அனைத்தையும் நமக்காய் அளிக்கிறார்.

இன்றைய மனிதனுக்கு பலமுகங்கள், பலநிறங்கள். யாரும் பிறரை முழுமையாக உணர முடியாத. ஒவ்வொருவருக்கென்றும் ஒரு இருட்டறை. அது அவர்களுக்கு மட்டுமேவெளிச்சம் ஆயினும், நம்மைநாமாக ஏற்றுக் கொள்வோம். பிறரை அவர்கள் போல ஏற்றுக்கொள்வோம். ஆண்டவனை அணிந்து கொள்வோம். ஆன்மாவின் நிர்வாணத்தோடு ஆண்டவன் முன் நிற்போம். ஆண்டவன் தன்னையே நமக்கு ஆடையாக அளிப்பார்.

### சிந்தனைக்கு :

எங்களது பகட்டான வாழ்க்கைக்கு உடுத்தியிருக்கும் ஆடைகளை அகற்றி விட்டு அன்பின் ஆடைகளை அணிய வரம் தாரும்.

## பதினொன்றாம் நிலை : இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்.

இங்கே இயேசு சிலுவையில் அறையப்படுகிறார். அடுத்தவரை நேசிக்க வேண்டும் என்பதற்காக, அடுத்தவருக்காக வாழ வேண்டும் என்று கூறியதற்காக, சுயநலவாதிகளாக இருந்தவர்களை சாடியதற்காக இங்கே இயேசு ஆணிகளால் அறையப்படுகிறார்.

**சிந்தனைக்கு:**

என்அன்பு சகோதர, சகோதரிகளே!

இயேசு ஆணிகளால், அறையப்படுவது நம்மைஅன்பு செய்ததற்காகவே. அடுத்தவரை அன்பு செய்வது, தியாகம் புரிவது எளிதான விஷயம் அல்ல. அதனால் பலவற்றை இழக்க வேண்டியிருக்கும். ஆனால் வாழ்வதற்கான அர்த்தம் பிறக்கும். சுயநலவாதியாகவே வாழ்ந்து சாகப்போகின்றோமா? அல்லது நம்மோடு இருக்கும் சகமனிதர்களை நேசித்து, உறவாடி, உரையாடி, மகிழ்ந்து வாழப்போகிறோமா? அடுத்தவர்களை நேசிக்க முயற்சி எடுப்போம். அதனால் வரும் நஷ்டங்களையும் இடர்களையும் தாங்கிக் கொள்ள வரம் வேண்டுவோம்.

## பனிரெண்டாம் நிலை : இயேசு உயிர் விடுகிறார்.

எல்லாம் நிறைவேறியது என்ற ஆத்மதிருப்தியுடன் ஆண்டவர் இயேசு ஆவி துறக்கிறார். மரண வேதனை அவரை உச்சி முகர்ந்து ஆரத்தழுவிக் கொள்கிறது. துன்பங்கள் எல்லாம் மறைந்து போயின.

சகோதர சகோதரிகளே,

இறைமகன் இயேசு தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றிய திருப்தியில் இவ்வுலகில் வாழ்ந்து நீதியினிமித்தம் உண்மையாக உழைத்தேன் என்ற திருப்தியில் உயிர் விடுகிறார். நம்மால் எல்லாம் நிறைவேறிற்று என்று கூறமுடியுமா? இந்த நிலையிலும் இயேசு தன்னை துன்புறுத்திய தீயவர்களை மன்னிக்கும்படி தந்தையிடம் வேண்டுகிறார். இயேசு இறை அனுபத்தால், தன் தந்தையுடன் கொண்ட உறவினால் நமது மீட்பிற்காக அக்கொடிய விலங்கினரிடம் தன்னையே கையளித்தார்.

**சிந்தனைக்கு :**

நாமும் நம் அன்றாட வாழ்வில் நல்ல உள்ளங்களை பெருக்குவோம். நல்ல மனிதனான வாழ்வோம். தீய எண்ணம் உள்ளவர்களுக்காக வேண்டுவோம். நம் பகைவர்களுக்காகவும் வேண்டுவோம். இறைவன் நம்மை மன்னித்தது போல நாமும் பிறர் குறைகளை மன்னிப்போம்.

எங்களுக்காக தமது உயிரையும் தந்த அன்பு இயேசுவே, எங்களையே உமது அன்புப் பணியில் அர்ப்பணித்து வாழ அருள் தாரும்.

**பதிமூன்றாம் நிலை : இயேசுவை தாயின் மடியில் கிடத்துகிறார்கள்.**

தாயின் மடியில் தலைவைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை. 33?வயது குழந்தை, செத்த பிணமாக தாயின் மடியிலே நிம்மதியாக உறங்குகிறது. இயேசுவுக்கு அன்றும் இன்றும் அதே அன்பு அன்னையின் மடி.

தன் கடமையை அன்போடு செய்து முடிப்பதால் கிடைக்கும் மகிழ்ச்சிக்கு முன்னால் வலியும், வேதனையும் ஒன்றுமில்லை, உண்மைதான்.

**சிந்தனைக்கு :**

அன்பு சகோதர, சகோதரிகளே,

நல்ல கருத்துக்களுக்காக உழைக்கும் மனிதனுக்கு இடையில் வரும் கஷ்டம், துன்பங்கள் சுகமான சுமைகளாகும். சிதைந்து போயிருந்த இயேசுவின் உடலை சுமந்த மடியின் வேதனை நோக்கம் அதே, தாய் உயர்ந்த கருத்துக்களுக்காக அந்த வேதனையை ஏற்றுக் கொள்கிறாள். என் மகனின் சாவில் தான் உலகம் வாழும் என்றால் ஏற்றுக்கொள்கிறேன். என் மகனின் குருதியில் தான் இந்த பூமியே சுத்தமடைகிறது என்றால் அதையும் ஏற்றுக் கொள்கிறேன். என் மகனின் நிர்வாணத்தில் தான் இந்த பூமியின் மேலிருந்து பாவக்கறைகள் மறையுமென்றால் அதையும் ஏற்றுக்கொள்கிறேன். யாரோ ஒருவர் இழந்தால் தான் மற்றவர் வாழ்வார் என்றால் இழந்து விடுகிறேன்.

இறைவா, இவ்வுலகில் அன்புத்தாயாகவும் தகுதி நிறைந்த தந்தையாகவும் வாழ்ந்து, குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளிலிருந்து அவர்களை காப்பாற்றும் அரணாக விளங்கி உமது சாயலாக அவர்களை வளர்த்திட வரம் தாரும்.

**பதினான்காம் நிலை :**

**கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார் இயேசு.**

மக்களைத் தேடியலைந்து அன்பு செய்த இறைவன், தன் வாழ்க்கை முழுவதும், தியாகம் செய்த இறைவன், மரணத்திற்கு பின்கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார். மரணம் எல்லோருக்கும் கண்டிப்பாக உண்டு. ஆடி அடங்கும் நமது வாழ்க்கையில் ஆறடி நிலம் தான் சொந்தமாகும். கடவுளின் அருளால் அனைவருடைய நன்மைக்காக இயேசு சாவுக்குட்பட வேண்டியிருந்தது. நமது பாவங்களின் வாயிலாக நமது மீட்புக்கு விலையாக மரித்த இயேசுவின் உடல் கல்லறையில் புதைக்கப்படுகிறது.

அன்பு சகோதர, சகோதரிகளே

கல்லறையில் புதைக்கப்பட்டிருப்பது நமது இயேசுவின் உடல் மட்டுமா? நம்முடைய பாவங்கள் நிறைந்த பொதிகள் அத்தனையும் புதைக்கப்படுகின்றன. நமக்கு விடுதலை விலைமதிக்க முடியாத ஒன்று. அதை நாம் மீண்டும் இழக்கமுடியுமா? வேண்டாம். எழுவோம், பாவங்களிலிருந்து விடுவிக்கப்படுவோம். பறவைகள்போல லேசாக குற்ற உணர்வின்றி உண்மையுடன் வாழ்வோம்.

**<u>சிந்தனைக்கு:</u>**

இறைவா, எங்களது சுயநலத்திற்கு கல்லறை கட்டிவிட்டு பிறர் நலத்தில் வாழ்ந்திட வரம் தாரும். இறைவன் உயிர்த்துவ நலனில் நாம் அவரை அழைத்து நம் உள்ளங்களில் அமர செய்வோமா? விழித்திருப்போம், காத்திருப்போம்.

**<u>முடிவுரை:</u>**

இறைவன் தான் படைத்த எல்லாவற்றையும் நல்லதெனக்கண்டார். அதுவும் ஆதாம் ஏவாளை படைத்துவிட்டு மிகவும் நல்லதெனக்கண்டார். இன்ப வனம் முதல் கண்ணில் கண்ட எல்லாவற்றையும் மிகவும் நல்லதெனக்கண்ட மனிதக்கண்கள் தந்தையிட்ட கட்டளையை மட்டும் கெட்டதெனக்கண்டுகொண்டது. தாங்கள் வீழ்கிறோமா? வீழ்த்தப்படுகிறோமா? என அறியாமலேயே முதல் மனிதன் வீழ்ச்சி அரங்கேறியது. மனிதன் இறைவனிடமிருந்து பிரிந்து தவறு செய்தாலும், அவர்களை மீண்டும் மீண்டும் நல்பாதை நோக்கி வழிநடத்த இறைவனின் தூய ஆவி விரைந்தோடி வந்தது. பிறப்பிலிருந்து நாம் நம் துன்பங்களை கணக்கெடுத்துப்பார்த்தால் அவை யாவும் சுகமாகத்தான் தெரிகின்றன. துன்பங்களைத் தகர்தெரிந்த மகிழ்ச்சியுடன் பெருமை அடைகின்றோம். துன்பங்கள் என்றும் சுமையாகி விடக்கூடாது. வீழ்தல் என்பது தெளிவு. வீழ்தல் என்பது வளர்ச்சிக்கான முதல் படி. விழும் சூழலிலும் ‘ஆகட்டும் ’ என்று துன்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் மிக மிக அவசியம்.

அன்பு இறைவா, உன் திருமகன் இயேசுவைப் போல நாங்களும் துன்பத்தில் விழுந்தாலும், வீழ்ந்தாலும் “ஆகட்டும் தந்தையே” என்று சொல்லி உம்மை நம்பி வாழ்க்கை என்னும் பயணத்தில் தொடர்ந்து பயணிக்க சக்தியைத்தாரும்.

# புனித குவனெல்லாவின் சிந்தனைகளின் வழியில் சிலுவைப்பாதை

போனிஜோ

## 01. பிலாத்து இயேசுவைத் தீர்ப்பிடுகிறான்.

"உங்கள் நோக்கம் தூய்மையானதாகவும், உங்கள் நடத்தை சரியாகவும் இருந்த போதும் நீங்கள் தவறாக புரிந்துக்கொள்ளப்படலாம் தவறான தீர்ப்புக்கும் உள்ளாகலாம்"

**செபம் :**

பிலாத்துவின் அநீதத் தீர்ப்பை ஏற்ற இயேசுவே, மற்றவர்களைப் புரிந்துக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் எங்களுக்கு உதவியருளும். ஆமென்.

## 02. சிலுவையை ஏற்கிறார் இயேசு.

''மனமுவந்து துன்பத்தை ஏற்றுக்கொள்பவரின் இதயம் இயேசுவின் இதயத்தை ஒத்திருக்கும்".

**செபம் :**

இயேசுவே, எங்கள் வாழ்வில் வரும் துன்பங்களை நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் சந்திக்க அருள்தாரும். ஆமென்.

## 03. இயேசு முதல் முறை கீழே விழுகிறார்.

"நாம் பலவீனமானவர்கள் என்று நம் இறைவன் அறிவார். எனவே நாம், பலவீனமானவர்கள் என்று உணரும்போது தாழ்ச்சியுடன் அதனை ஏற்றுக்கொள்வோம்".

**செபம் :**

இயேசுவே, எங்களுடைய பலவினத்தால் உம்மைவிட்டு கீழே விழுந்த நேரங்களுக்காக மனவருந்துகிறோம். இப்பலவீன நேரங்களைப்புரிந்து வாழ துணைசெய்யும். ஆமென்.

## 04. மரியன்னை இயேசுவை சந்திக்கிறார்.

''கடினமான சூழ்நிலைகளைச் சந்திக்கும்போது அன்னை மரியாளின் மாதிரியினைப் பின்பற்றி அச்சூழல்களை

வெற்றிக்கொள்வோம்".

**செபம்:**

இயேசுவே உம் அன்னையை எங்களுக்கு முன்மாதிரியாக அளித்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். அவர்களிடம் விளங்கிய துணிவும் நம்பிக்கையும் எங்களிடம் விளங்கத் துணை செய்யும். ஆமென்.

## 05. சிமியோன் இயேசுவுக்கு உதவி செய்கிறார்

"இறைவன் மேல் கொண்ட நம்பிக்கையினால் இறைவனுக்கே என்றும், எப்போதும் அன்புடன் பணிபுரிந்திட, துன்பம் மற்றும் மகிழ்ச்சி இரண்டையுமேஏற்றுக்கொள்கிறோம்".

**செபம்:**

சீமோனின் உதவியைப் பெற்ற இயேசுவே, நாங்கள், இல்லாதவர்களிடம் அன்பு காட்டவும் உதவிக்கரம் நீட்டவும் அருள்தாரும். ஆமென்.

## 06. வெரோணிக்காள் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள்.

"எச்சமயத்திலும் எவ்விடத்திலும் நம்மால் முடிந்த புனிதமான பணிகளைச் செய்ய நாம் விழிப்புடன் தயாராக இருக்க வேண்டும்".

**செபம்:**

வெரோணிக்காவின் பரிவினையை ஏற்றுக்கொண்ட இயேசுவே, நாங்கள் எவ்வேளையிலும் துணிவுடன் நன்மைகளைச் செய்ய அருள்தாரும். ஆமென்.

## 07. இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

"இறைவன் நமக்குப் பாரமான சோதனைகளைத் தரும்போது, அவற்றைத் தாங்குவதற்கு அவர் இன்னும் மிகுதியான அருளையும் நமக்கு தருவார்".

**செபம்:**

சாந்தமும் தாழ்ச்சியும் உள்ள இயேசுவே, வலுவற்ற எங்களில் உமது வல்லமைவெளிப்பட செய்தருளும். ஆமென்.

## 08. இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.

"உங்கள் மனத்தை நல்ல எண்ணங்களாலும் உங்கள் இதயம் தூய அன்பாலும் நிரம்பட்டும்".

**செபம் :**

இயேசுவே, உம்மைபோன்று நாங்களும், மற்வர்கள் தங்கள் வாழ்கையில் துன்புறும்போது ஆறுதல் கூறும் நல்ல மனத்தை எங்களுக்குத்தாரும். ஆமென்.

## 09. இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

"இறைவனின் வழிநடத்துதலில் கரடுமுரடான சோதனைகளும் அவற்றின் சுவடுகளைப் பாதிக்காமல் மறைந்து விடும். மேலும் அவை குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை ஏற்படுத்துகின்றன".

**செபம் :**

இயேசுவே, எங்கள் பாவங்களினால் நாங்கள் தவறிவிழுந்தாலும் மீண்டும் எழுந்து புதுவாழ்வு பெற எங்களுக்கு உதவியருளும். ஆமென்.

## 10. இயேசுவின் ஆடைகளை களைகிறார்கள்.

"உடல் மற்றும் உலகிற்கு எதிரான போராட்டதினை உறுதியுடன் எதிர்கொள்ள எத்துனைச் சிறப்பாய் நம்மையே நாம் அப்போருக்குத் தயார் செய்ய வேண்டும்".

**செபம் :**

இயேசுவே, தன்னலம் துறத்தல் வழியாக எங்கள் வாழ்வில் ஏற்படும் சோதனைகளை எதிர்த்துப் போரிட வரம் தாரும். ஆமென்.

## 11. இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்.

"நன்மைசெய்ய ஒருவர் கல்வாரி ஏற வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு நற்செயலும் துன்பத்தின் மீதே கட்டியெழுப்பப்படும்".

**செபம் :**

இயேசுவே, சிலுவையின் பின்னால் உமது வல்லமைநிற்கிறது என்று உணர்ந்தவர்களாக சிலுவைகளை பொறுமையுடனும் தாழ்ச்சியுடனும் சந்திக்க எங்களுக்குத் துணை செய்தருளும். ஆமென்.

## 12. இயேசு சிலுவையில் மரிக்கிறார்.

‘‘தீயவர்கள் மத்தியில் பலர் உங்களை வெறுப்பதையும் துன்புறுத்துவதையும் நீங்கள் காண்பீர்கள். அவை உங்களை எரிச்சலூட்ட அனுமதிக்காமல் அவர்களுக்காக செபிக்க உறுதிகொள்ள வேண்டும்”.

**செபம்:**

இயேசுவே எங்களை துன்புறுத்துவோருக்காக செபிக்க, உம்மைநோக்கி நாள்தோறும் மன்றாட வரம் தாரும். ஆமென்.

## 13. இயேசுவின் உடலை அவர் தாயின் மடியில் கிடத்துகிறார்கள்.

“பெரும் துன்ப நேரங்களில் உறுதியாக இருந்து மரியாள் தம் தகுதியினை உயர்த்திக் கொண்டார்”.

**செபம்:**


இயேசுவே, உம் தாயை எங்களுக்கு தாயாகக் கொடுத்தீர். நாங்கள் விண்ணகத்தாயை பின்பற்றவும் எங்கள் மண்ணகத்தாய்மார்களை மனதார அன்பு செய்யவும் அருள்தாரும். ஆமென்.

## 14. இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்படுகிறது.

“நமது வாழ்க்கை முழுவதிலுமேநமது மீட்பரின் துன்பங்கள் என்ற ஒரே ஒரு சிந்தனை நம்மில் குடிக்கொண்டிருக்க வேண்டும்”.

**செபம்:**

இயேசுவே, உமது கல்வாரிப்பயணத்தை நாங்கள் நாள்தோறும் தியானிக்க எங்களுக்கு உதவிபுரிந்தருளும். ஆமென்.



# இயேசுவின் பாதையோடு நம் பாதையும்

அருட்சகோ. ராஜன்
பூந்தமல்லி

## முன்னுரை

சிலுவைப் பயணம் ஒரு சிந்தனைப் பயணம். வரலாற்றில் நடந்த சிலுவையின் பயணம் அப்படியே அரங்கேறும் அதிசயத் தருணமல்ல இது. வரலாற்றுப் பயணத்தைச் சிந்தையில் இருந்தி, தியானித்து நம் வாழ்க்கைப் பயணத்தைத் திருத்தி அமைத்துக்கொள்ள அழைப்பு விடுக்கும் ஒரு சிந்தனைப் பயணம். தவக்கால சடங்குமுறையாய் வெறுமனே பங்குகொண்டுச் செல்ல இது ஒரு சம்பிரதாயம் அல்ல. வாழ்வில் நாம் தடுக்கி விழுந்து கிடக்கும் இடங்களில் தட்டி எழுப்பி மனம்மாற அழைக்கும் மகத்துவப் பயணம் இது. என் வாழ்வில் மாற்றம் வேண்டும் என்ற உள்மன ஆசையுள்ளோர் மட்டும் இப்பயணத்தை தொடங்கி தொடர்ந்து வாருங்கள். இயேசுவின் பாதையோடு உங்கள் வாழ்க்கைப் பாதையையும் ஒப்பிட்டு, உங்கள் பாதையை திருத்தி அமைத்துக் கொள்ளுங்கள். வாருங்கள் போவோம் அந்தப் புனிதனின் பாதையில் புண்ணிய பூமிக்கு.

## 01. இயேசு தீர்ப்பிடப்படுகிறார்.

நீதியின் அரசர், குற்றவாளிக் கூண்டில். உலகுக்கே தீர்ப்பெழுத அதிகாரம் கொண்ட ஆண்டவனை குற்றவாளி என்று தீர்ப்பெழுதிவிட்டது ஒரு கூட்டம். ஆண்டவனும், ஆடுகத்தரிப்போர் முன் கத்தாத செம்மறியைப் போல அமைதியோடு இந்த அநியாயத் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறார்.

மனிதா! நீயும் இப்படி அநியாயத் தீர்ப்பை எத்தனை பேருக்கு நம் ஆழ்மனதிலே எழுதிவைத்திருக்கிறோம்! பெயரை நிலைநாட்டுவதற்காய் எத்தனைப் பேருக்கு எதிராய் வார்த்தைவழி அநியாயத் தீர்ப்பு வழங்கியிருக்கிறாய். சிந்தித்துப்பார்

**செபம் :**

அன்பு இயேசுவே!

என் மனதாலும் பிறரை அநியாயமாகத் தீர்ப்பிடாமல், மற்றவரில் நற்குணங்களைக் கண்டு வாழ ஆற்றல் தாரும்.

**02. இயேசுவின் மீது சிலுவை சுமத்தப்படுகிறது.**

பழம் ஒன்று கனிந்ததற்காய் கல்லெறி வெகுமதியாகிறது. உலகத்தையே படைத்த உன்னத இறைவன், கழுமரம் சுமக்க கட்டாயப்படுத்தப்படுகிறார். இறைவனும் முழுமனதாய் ஆரத்தழுவிக்கொள்கிறார் சிலுவையை.

நீயும், நானும் பிறருக்குச் சுமத்திய சுமைகள் எத்தனை! எத்தனை! உனக்கு வெற்றி எளிதாக, சந்தோஷம் கிடைக்க லாபம் கிடைக்க இன்னொருவரா சுமைசுமக்க வேண்டும். சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே,

என் சுயநலத்திற்காய், பிறரில் சுமையேற்றி நான் இலாபம் அடைய நினைக்கும் மனநிலையைக்களைந்து, பிறரின் சுமைகளைத்தாங்கும் சுமைதாங்கியாய் வாழ ஆற்றல் தாரும்.

**03. இயேசு முதன்முறை கீழே விழுகிறார்.**

பாலைவனக் கப்பலுக்கும் தாகம் எடுக்கிறது. உலக விடுதலைக்கான வீரப்பயணத்தில் உடல் சறுக்குகிறது, உன்னத இறைவனுக்கு. விழுந்தவர் விடாமுயற்சியுடன் எழுகிறார், பயணம் தொடர்கிறார்.

மனித சமூகமே! உடல் தளர்ச்சியால், உலக ஆசைகளால் நீ தடுக்கி விழுந்தது எத்தனை முறை! விழுந்த நீ எழுந்துவிட்டாயா, அல்லது வீழ்ந்தேதான் கிடக்கப்போகிறாயா? எழுந்து வந்தால் உனக்கென வாழ்க்கைப் பயணம் இன்னும் தூரம், வீழ்ந்தே கிடந்தால் நீ வாழ்க்கையில் ஓரம். சிந்தித்துப்பார்.

**செபம்:**

அன்பு இயேசுவே

உடல் தளர்ச்சியால், உலக ஆசையால் நாங்கள் விழுந்துவிடும் நேரங்களில் வீழ்ந்து விடாமல், வாழ்வில் எழுந்து நடக்க ஆற்றல் தாரும்.

**04. இயேசு தம் தாயைச்சந்திக்கிறார்.**

அடிப்பட்ட மானொன்று ஆற்றங்கரையில் ஆறுதல் பெறுகிறது. வாழ்ந்து காட்டினால் வழிக்கு வந்துவிடுவார்கள் என்று நம்பிகளம் இறங்கிய கடவுளையே முதுகில் குத்திவிட்டது இந்த உலகம். இந்த

நம்பிக்கைத் துரோகத்தால் காயமாகிப்போன இயேசுவின் இதயத்திற்கு ஆறுதல் மருந்திடுகிறாா் அன்னை மரி.

மனித சமூகமே!

சோகத்தில் இருப்போர் எத்தனை பேரை தேடிச் சென்று ஆறுதல்மொழி கூறியிருக்கிறாய்! ஆறுதல் அளிக்காவிட்டாலும் பரவாயில்லை அவர்களின் சோகத்தை அம்பலமாக்கி, கேலி கிண்டல் செய்யாமல் இரு, அதுபோதும் சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே!

அடுத்தவரின் உணர்வுகளை விளையாட்டாக்காமல் அவர்களுக்கு உற்ற நேரத்தில் ஆறுதல் மருந்தளிக்க ஆற்றல் தாரும்.

## 05. இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்.

கப்பலைக் கரையேற்ற வல்லம் ஒன்று உதவிக்கு வருகிறது. இயேசுவுக்கு உதவி செய்ய சிரேன் ஊர் சீமோன் கட்டாயப்படுத்தப்படுகிறார். கட்டாயத்தின் விளைவு கடவுளுக்கே உதவ வாய்ப்பு பெறுகிறார். களைப்புமிகு பயணத்தில் இயேசுவும் சிறிய இளைப்பாறுதல் அடைகிறார்.

இளைய சமூகமே!

எனக்கென சுதந்திரம் உண்டு, நீங்கள் யார் என்னை கட்டுப்படுத்த என பெரியோரை நோக்கி நீ எத்தனைமுறை ஆணவமாய் கேட்டிருக்கிறாய்! பெரியோரின் கட்டாயத்தால் நீ செய்யும் பணிகூட உன் அறிவுக்கண்ணைத் திறக்கலாம். சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே,

பெரியோரின் கண்டிப்பான வார்த்தைவழியாய் எம் வாழ்விற்கு நீர் தரும் வாய்ப்புக்களை நாங்கள் சரியாய் பயன்படுத்திக்கொள்ள ஆற்றல் தாரும்.

## 06. இயேசுவின் முகத்தை வெரோணிக்காள் துடைக்கிறார்.

விண்மீனை சுத்தம் செய்து விட்டில் பூச்சி ஒன்று சன்மானம் பெறுகிறது. தண்டனைப் பவனியில் காட்சியாளர்களாய் மட்டும் வந்தக் கூட்டத்தில், ஒரே ஒரு வீரமங்கை மட்டும் இயேசுவின் உளம் குளிர்விக்க தன் உயிரைப் பணயம் வைக்கிறார். கடைசியில் தானும் உளம்

குளிர்ந்து திரும்புகிறார்.

மனித சமூகமே, பல துன்பத்தளங்களில், நீ எடுத்த வீடியோக்கள், நீ பார்த்த வேடிக்கைகள் எத்தனை! எத்தனை! நடந்த நிகழ்வைப் பற்றி விமர்ச்சிக்க, ஆராய தெரிந்த உனக்கு அப்போதைய தேவையில் உதவத் தெரியவில்லையா? உன் கண்கள் என்ன வேடிக்கை மட்டும்தான் பார்க்குமா? உன் கரங்கள் என்ன கட்டப்பட்டா கிடக்கிறது? சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே,

அடுத்தவரின் துன்பத்தை வேடிக்கையாய் பார்க்காமல், உடுக்கை இழந்தவன் கைபோல உடனே சென்று உதவிட ஆற்றல் தாரும்.

## 07. இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

இமய மலையே இங்கு இடறி விழுகிறது. பாரமான சிலுவையாலும், படைவீரர்கள் கொடுத்த அழுத்தத்தாலும் பரமனின் உடல் ஒத்துழைக்க மறுக்கிறது, ஒடுங்கி விழுகிறது மண்ணில்.

மனித சமூகமே, பிறரின் வாழ்விற்கு நீ கொடுத்த அழுத்தங்கள் எத்தனை! எத்தனை! வாழ்வில் முன்னேற படிக்கல்லாய் இருக்க வேண்டிய நீயே, எத்தனைபேரின் வாழ்விற்கு தடைக்கல்லாய் இருந்திருக்கிறாய். பிறரின் முயற்சியை ஏளனப்படுத்தும் போதும், குறைசொல்லும்போதும், அவர்களைக் கீழே தள்ளி விட த்தான் முயற்சி செய்கிறீர்கள். சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே, எம் வார்த்தைகளும் செயல்பாடுகளும் பிறரது வளர்ச்சியைத் தடுக்கும் தடைக்கல்லாய் இல்லாமல், முன்னேற்றிவிடும் படிக்கல்லாய் அமைய ஆற்றல் தாரும்.

## 08. இயேசு எருசலேம் மகளிருக்கு ஆறுதல் கூறுகிறார்.

மரத்திற்கு ஆறுதல் சொல்ல சிறுபுல்லொன்று முயல்கிறது. பாடுபடும் மாபரனுக்காய் கண்ணீர்த் துளிகள் மண்ணில் விழுகின்றன மகளிரிடமிருந்து. மகளிரின் மனம் கண்டு உருகிவிடாமல் உள்ள நிலைமையை எடுத்துச் சொல்லி கண்ணீரைக் காரணமாய் சிந்த அறிவுறுத்துகிறார் இயேசு.

மனித சமூகமே, நீ கண்ணீரால் அனுதாபம் தேடி, வேண்டியதை

சாதித்துக்கொண்ட தருணங்கள் எத்தனை! எத்தனை! உன் குறையை பிறரிடம் சொல்ல உன் கண்ணீர் வீணாக வேண்டாம். உளம் நொந்து மனம் திரும்ப கண்ணீரைப் பயன்படுத்து அப்போது உன் உள்ளத்துக்கு ஆறுதல் கிடைக்கும்.

**செபம் :**

அன்பு இயேசுவே, அனுதாபம் காட்ட அல்லது அனுதாபம் பெற எம் கண்ணீர்துளிகளை செலவழிக்காமல், உண்மையான மனம் மாற்றத்திற்காய் செலவிட்டு உமது உண்மையான ஆறுதலைப்பெற ஆற்றல் தாரும்.

## 09. இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

ஆனைக்கு மீண்டும் அடி சறுக்குகிறது. துன்பம் கலந்த இலட்சியப் பயணத்தில், உள்ளம் விரும்பினாலும் உடல் ஒத்துழைக்க மறுக்கிறது. ஆனாலும் இலட்சிய உந்துதலால் முன்னேறிச் செல்கிறார் மாபரன்.

மனித சமூகமே, இயேசுவைப்போல், இலட்சியப் பயணத்தில் வீழ்ந்து கிடப்போர் எத்தனை! எத்தனை! கரம் கொடுத்து தூக்கிவிட்டால் அவள்/அவன் குறிக்கோளை அடைந்துவிடுவார்கள் என பொறாமையா? பின் ஏன் தாமதிக்கிறாய்? சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே, பல காரணங்களால் ஊக்கம் குறைந்து தளர்ச்சியடைந்து விழுந்து கிடப்போரை மறு சிந்தனையின்றி முழு மனதோடு தூக்கிவிட அருள்தாரும்.

## 10. இயேசுவின் ஆடை களையப்படுகிறது.

பலியாக முன்வந்ததால், தோலுரிக்கப்படுகிறது செம்மறி. ஊரெல்லாம் வேடிக்கைப் பார்க்க ஊர்வலமாய் அழைத்து வந்தது போதாதென வலுக்கட்டாயமாய் உடலோடு ஒட்டியிருக்கும் உடையையும் உரித்து அவமானப் படுத்துகிறார்கள். “தந்தையே உம் விருப்பப்படி ஆகட்டும்” ? என்று எல்லாவற்றையும் பொறுமையோடு இயேசு ஏற்றுக்கொள்கிறார்.

மனித சமூகமே, மாடர்ன் ? டெக்னாலஜி என்ற பெயரில் எத்தனை மானத்தை நீ இழிவுபடுத்தியிருக்கிறாய்! உன் பொருளை விற்க ஒரு பெண்ணின் மானம்தான் விலையா? இன்று பெண்ணில்லா விளம்பரம் ஏதேனும் உண்டா? அவள் என்ன போதைப்பொருளா? சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே, தொழில்நுட்ப உலகம் என்ற பெயரில் எம் மனித மாண்பை இழந்துவிடாமல் எம்மையும் பிறரையும் மதித்து வாழ ஆற்றல் தாரும்.

## 11. இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்.

"அன்பு செய்கிறேன்" என்று சொன்னதால் இதயம் ஒன்று கிழிக்கப்படுகிறது. தீட்டிய திட்டம் நிறைவேறுகிறது. மாசில்லா செம்மறி மரண தண்டனையை அனுபவிக்கிறது. இப்போதும் உரோமம் கத்தரிப்போர் முன் கத்தாத செம்மறியாய் அமைதியோடு அனைத்தையும் அனுபவிக்கிறார் இயேசு.

மனித சமூகமே, பகைமைஎன்ற உணர்வால் நீ சிலுவையில் அறைந்த உறவுகள் எத்தனை! எத்தனை! உன் வார்த்தையைவிட கூரான ஆணி எதுவும் இருக்க முடியுமோ! பகைமையை காட்டியதால் மட்டுமல்ல நீ அன்பை காட்டாததாலும் மடிந்துபோன உறவுகள் பல உண்டு. சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே, பகைமைமறந்து, உண்மையான அன்பால் எம் உறவுகளை கட்டியெழுப்ப ஆற்றல் தாரும்.

## 12. இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்.

அதர்மம் வெற்றியில் கொக்கரிக்க, தர்மம் தலைகவிழ்ந்து கிடக்கிறது. எல்லாம் நிறைவேறிற்று, தேடிவந்த தேவனின் பயணம், பாடுபட்ட பயங்கரப்பயணம், வஞ்சகர்கள் தீட்டிய திட்டம் ? எல்லாம் நிறைவேறிற்று. தனது ஆவியை தந்தையிடம் ஒப்படைக்கிறார் இயேசு.

மனித சமூகமே, எத்தனைமுறை நீ தர்மத்தை தலைகவிழ்ந்திருக்கிறாய்! உன் சுயநலத்திற்காய் இலஞ்சம் கொடுத்து அல்லது இலஞ்சம் பெற்று உண்மையை விலை பேசினாயே இது அதர்மத்தின் கொக்கரிப்பு இல்லையா! எப்போது திருந்தப்போகிறாய் நீ? இன்னும் எத்தனை இயேசுக்கள்தான் சாக வேண்டும், உனக்காக? சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே, உண்மைக்காய், உலகிற்காய் நீர் கொடுத்த உயிர்மூச்சின் மதிப்பறிந்து, உண்மைநெறியில், நேர்மையாய் தலைநிமிர்த்தி வாழ ஆற்றல் தாரும்.

## 13. தாயின் மடியில் இயேசுவின் உடல்.

சிதைக்கப்பட்ட சிலை ஒன்று சிற்பியின் மடியில். இலட்சியப் பயணம் முடித்து, ஆவியையும் உலகிற்கு அளித்துவிட்ட அன்பு மகனின் வெற்றுடலை மட்டும் வெறித்துப் பார்க்கிறார் அன்னை மரி. இலட்சியம் எட்டியதால் சந்தோஷப்படுவதா? தனது இரட்சணியமேதொலைந்ததால் துக்கப்படுவதா? குளிருக்கும் வெயிலுக்கும் நடுவில் அன்னை மரி.

மனித சமூகமே, இன்று உனது இலட்சியப் பயணம் எது? தலைவன் எனச் சொல்லி நடிகனுக்கும், அரசியல்வாதிக்கும் உயிரைக் கொடுப்பதா? உன் உயிர் ஒரு சுயநலவாதிக்காய் பறிபோவதைப் பார்த்தா உன் பெற்றோர் மெச்சிக் கொள்ள வேண்டும்? சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே, உம்மைப்போலவே எம் மரணமும் அர்த்தமுள்ளதாய் அமைய, எம் வாழ்வை ஒரு எடுத்துக்காட்டான வாழ்வாக அமைத்துக்கொள்ள ஆற்றல் தாரும்.

## 14. இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்படுகிறது.

வண்ணத்துப் பூச்சிகள்கூடி வானத்தை வீழ்த்த முயல்கின்றன. முளைப்பதற்காய் விதை ஒன்று மண்ணில் புதைக்கப்படுகிறது. விதையை புதைத்ததால் வீரியம் இழந்துவிட்டது என தப்புக்கணக்கு போடுகிறார்கள் தலைவர்கள்.

மனித சமூகமே, வாழ்க்கைப் பயணத்தில் சோதனைப் புயல் வீசியதால் வாழ்வே வீண் என்று நீ புலம்பிக் கொண்ட தருணங்கள் எத்தனை! எத்தனை! இயேசுவின்மீது கொண்ட நம்பிக்கை அப்போது எங்குபோயிற்று? மீண்டும் சோதனைகள் உன் நம்பிக்கையைத் திருடிச் செல்ல அனுமதிப்பாயா? சிந்தித்துப்பார்.

**செபம் :**

அன்பு இயேசுவே, உம் மறைவு மறுமலர்ச்சியின் தொடக்கமானது அதைப்போலவே, எம் சோதனைகளும் புதுவாழ்வை நோக்கிய அடுத்த அடி என உம்மில் முழு நம்பிக்கை கொண்டு வாழ ஆற்றல் தாரும்.

<u>**முடிவுரை :**</u>

இயேசுவின் சிலுவைப் பயணம் நமக்கு கற்றுத்தந்துள்ள பாடங்கள் ஏராளம். பாடங்களெல்லாம், கற்றுவிட்டு கடந்து செல்ல அல்ல. மாறாக கற்றுக்கொண்டு கடைபிடிக்க. எனவே இந்த சிந்தனைப் பயணத்தில் நாம் கற்றுக்கொண்ட வாழ்க்கைப் பாடங்களை அன்போடு ஏற்றுக் கொள்வோம், அசைபோடுவோம், வாழ்வில் வாழ்ந்து காட்டுவோம். அப்போதுதான் இயேசுவின் சிலுவைப் பயணம் நம் வாழ்விற்கும், நாம் மேற்கொண்ட சிந்தனைப் பயணம் நம் பக்திமுயற்சிகளுக்கும் அர்த்தமுள்ளதாக அமையும்.



# சிலுவை அன்றும்... இன்றும்...

அருட்சகோ. குழந்தை பா
பூந்தமல்லி

**<u>முன்னுரை:</u>**

சிலுவை மனிதனோடு பயணிக்கலாமா! வேண்டாமா! என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் அன்பு உள்ளங்களே!

சுயநலத்தாலும், பலவித அச்சத்தாலும் 'பயணிக்க வேண்டாம்' என்ற எதிர்மறைச் சிந்தனையைத் தூண்டும் சிந்தனைக்கு இடம் கொடாமல் பொதுநலம், துணிச்சல் மற்றும் விடாமுயற்சி என்ற நேரிய சிந்தனைகளோடு 'பயணிப்பேன்' என்று வீரநடைபோட இப்போது உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

நான் உங்களைக் கட்டாயப்படுத்துகிறேன் என்று தயவுசெய்து நினைக்கவேண்டாம்.

கிறிஸ்தவர்களாகிய உங்களுக்கு உரிய கடமையைத்தான் சற்று நினைவூட்டினேன்.

பெற்ற நன்மைகளுக்கு நன்றிக்கடன் செலுத்த மீண்டும் ஒருமுறை வாய்விட்டு அழைக்கிறேன்.... வாருங்கள்...

அன்று.... இயேசுவுக்கு சிலுவை ? நாம் நன்றி மறந்ததால்!

இன்று.... இயேசு போன்ற நல்ல மனிதர்களுக்கு மற்றும் நல்ல படைப்புகளுக்குச் சிலுவை ? நாம் மீண்டும் நன்றி மறந்ததால்!

**அன்பிற்குரியவர்களே!**

இதுவே நல்ல தருணம்... இவ்வளவு நாட்கள் நன்றி மறந்த நமக்கு இந்தப்பயணம் ஒரு நல்ல வாய்ப்பு!

வாருங்கள் புறப்படுவோம்... நன்றி மலர்களை சிலுவை நாயகனின் கல்வாரிப் பாதையில் தூவிட...

**முதல்நிலை: மறைக்கப்பட்ட அநீதி.**

மறுக்கப்பட்ட நீதி
மறைக்கப்பட்ட அநீதி
நடந்தேறியது
பொறாமைஎனும் தீயினால்....
சுயநலம் எனும் பேயினால்....
அன்றும்...
இன்றும்...

**செபம்:**

அன்பு இயேசுவே! எங்களுடைய சுயநலத்தாலும், பொறாமையாலும் எம் அயலாருக்கு அநீதி இழைத்த தருணங்களுக்காக மன்னிப்பு வேண்டுகிறோம். மனம் மாற அருள் வேண்டுகிறோம். ஆமென்.

**இரண்டாம் நிலை: பாரச்சிலுவை பாவமற்றவன் மேல்....**

பணம் பலம்
பதவி பலம்
விலைபேசியது தண்டனையை
பாவமற்றவனிடம்...
வலுக்கட்டாயமாக்கிய தண்டனையை
பாவமற்றவன் மேல்...
சுமக்க வேண்டியவன் தப்பிவிட்டான்..
சும்மா இருந்தவன் மாட்டிக்கொண்டான்!
அன்றும்...
இன்றும்...

**செபம்:**

அன்பு இயேசுவே!

எங்களுடைய பண பலத்தாலும், பதவி பலத்தாலும் நாங்கள் சுமக்க வேண்டிய தண்டனையை ஒன்றும் அறியாத மக்கள்மேல் சுமத்தி தப்பிக்க நினைத்த தருணங்களுக்காக மனம் வருந்துகிறோம். மனம்மாற உம் அருள் வேண்டுகிறோம். ஆமென்.

**மூன்றாம் நிலை : சுமைசுருண்டுவிழச் செய்தது.... முதன் முறையாய்**

வேதனைகள் பல தாங்கி
முன்செல்ல நினைப்பவனை
எடுத்த எடுப்பிலேயே
காலைவாரி விட்டது சுமை!
வலி அவனுக்கு...
சந்தோசம் உனக்கு...
அன்றும்.... இன்றும்....

**செபம் :**

அன்பு இயேசுவே! எங்களுடைய வீண் சுய மகிழ்ச்சிக்காக கஷ்டப்படுபவர்களை மீண்டுமாய் கஷ்டப்படுத்தி கீழே விழ வைத்ததற்காக மன்னிப்பு வேண்டுகிறேன். மனம்மாற அருள் வேண்டுகிறேன்.

**நான்காம் நிலை : தாய்பாலும், இரத்தமும், சந்திக்கிறது.**

ஆபத்தில் அருகில் இருப்பவன் நண்பன்...
இது நிர்மூலமாகிவிட்டது.
ஆறடி நிலம் வரை அருகில் இருப்பவள் அன்னை...
இது நிறைவேறியது
அன்றும்.... இன்றும்...

**செபம் :**

அன்பு இயேசுவே! உன்னோடு பழகியவர்கள் உன் ஆபத்து நேரத்தில் ஓடிவிட்டார்கள். ஆனால் பெற்ற அன்னை இறுதிவரை உனக்கு ஆறுதலாக இருந்து தைரியம் அளிக்கிறார். தாயின் அன்பு இதுதான் என்பதை நாங்களும் உணர்ந்து வாழ அருள்புரியும். ஆமென்.

**ஐந்தாம் நிலை : அறியாமல் அறிந்து செய்த உதவி**

உடன் உண்டு குடித்தவன்
உதவக் காணோம்...
பலன் பெற்றவன்
பயந்து ஒதுங்கி நிற்கிறான்...
அடையாளம் தெரியாதவன்
உதவி செய்கிறான்!
அன்றும்... இன்றும்...

**செபம் :**

அன்பு இயேசுவே! எங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் பலன்கள் பல பெற்று அவர்கள் துன்பப்படும்போது ஓடி ஒளிந்து கொள்கிறோம். பிரச்சினை வருமேஎன்று பயந்து ஒதுங்குகிறோம், மன்னித்தருளும் இயேசுவே! மனம் மாற அருள்புரியும். ஆமென்.

**ஆறாம் நிலை : தென்றல் புயலானது.**

பின் விளைவுகள் பற்றிய
பயம்... சுயநலம்... இவை
கண்டு கொள்ளா தன்மையை வளர்க்கும்
காரணிகள்....
காரணிகளை தகர்த்தெறிந்தார்கள்...
வரலாற்றில் வெற்றி பெற்றார்கள்...
வெரோணிக்காவாய்!
அன்றும்.... இன்றும்....

**செபம் :**

அன்பு இயேசுவே! பின் விளைவுகளுக்குப் பயந்து, சுயநல எண்ணத்தோடு, அருகில் அவதிப்படுவோர்க்கு உடல் நலமற்றோர்க்கு குறைந்தபட்ச முதல் உதவியாவது செய்யாமல் கண்டுகொள்ளாமல் இருந்த தருணத்திற்காக மனம் வருந்துகிறேன். மனம்மாற அருள் வேண்டுகிறேன். ஆமென்.

**ஏழாம் நிலை : மீண்டும் ஒரு முடக்கம்!**

வலிகள் தாங்கி... வலிகள் தாங்கி
இதயம் வலு பெற்றாலும்...
தேகம் நலிவுற்றுவிட்டது...
இரண்டாம் முறையாய்...
கால்கள் முடங்கி விட்டது...
கல்லறையோ நெருங்கிவிட்டது...
நன்மைக்காக நடந்து சென்றால்
சகஜம்தான்!
அன்றும்.... இன்றும்....

**செபம் :**

அன்பு இயேசுவே!, நன்மைக்காகப் போராடிய உனக்கு விழுதல்களும், வலிகளும்தான் மிச்சம். இன்றும் நன்மைக்காக போராடிக்கொண்டிருக்கும் நல்லவர்களுக்கும் அதேநிலைதான்! நல்லவர்களை நன்மையான பாதையில் நடக்கவிடாமல் தடுத்த தருணங்களுக்காக மனம் வருந்துகிறோம்! மனம்மாற அருள் வேண்டுகிறோம். ஆமென்.

## எட்டாம் நிலை : பெண்களுக்கே உரிய நற்பண்பு ஆறுதல்!

ஆறுதலுக்கு பெயர்போனவர்கள்....
கண்ணீரைப் பகிர்ந்து கொள்பவர்கள்....
துன்பத்தில் துணை நிற்பவர்கள்...
தாயாக... மனைவியாக...
மாமியாராக.... சகோதரியாக....
தோழியாக....
எந்நிலையினரானாலும்... பெண்களாய்!
அன்றும்.... இன்றும்....

**செபம் :**

அன்பு இயேசுவே!, எருசலேம் பெண்கள் உமக்கு ஆறுதல் வார்த்தைகள் கூற, உன் கண்ணீரைப் பகிர வந்ததை நினைத்து மெச்சுகிறோம். இக்காலப் பெண்களும் அவர்களைப் போன்றுதான் என்று நாங்கள் ஒவ்வொரு நாளும் நினைக்க அவர்களும் அதன்படி நடக்க வரம்தாரும். வாழக் கற்றுத்தாரும். ஆமென்.

## ஒன்பதாம் நிலை : உச்சக்கட்ட தடுமாற்றம்... மூன்றாம் முறையாய்!

இலக்கு நெருங்கிவிட்டது... உடல்
இயக்கமோ இயங்க மறுக்கிறது...
இருப்பினும்...
விடாமுயற்சி வெற்றிக்கு
அறிகுறி...
முடங்க நினைத்தால்
வெற்றி கேள்விக்குறிதான்...
தொடர்ந்து சென்றால்
அந்த வானமும் வசப்படும்!
அன்றும்.... இன்றும்....

**செபம் :**

அன்பு இயேசுவே!, உம் விடாமுயற்சி உன்னை வெற்றிநடைபோட வைத்தது. நாங்களும் உம்மைப் போல் விடாமுயற்சியோடு தடைகற்களை வெற்றிப்படியாக்கி இலக்கினை நோக்கி முன் செல்ல வரம் தாரும். ஆமென்.

**பத்தாம் நிலை : பிறந்த மேனியாய்...!**

உரிய நினைத்தவர்களுக்கு
உணரத் தெரியாது...
நாம் அந்நிலைக்கு தள்ளப்பட்டால்
எப்படி இருக்கும் என்று!
ஏழைகள் உழைப்பை உறிவது...
இயற்கை வளத்தை உறிவது...
எல்லாம் நிர்வாணம்தான்...
அன்றும்....
இன்றும்....

**செபம் :**

அன்பு இயேசுவே!, மானம் காத்த ஆடையை உறிந்த கயநெஞ்சம் படைத்தச் செயலுக்காக மனம் வருந்துகிறோம். மனம்மாற அருள் வேண்டுகிறோம். ஆமென்.

**பதினொன்றாம் நிலை : பச்சை மரம் பட்டமரத்தில் அறையப்படுகிறது!**

உண்மைக்கு உழைத்தக் கரங்களுக்குப் பரிசு...
ஆணிகள்...
உண்மையை நோக்கி நடந்தக் கால்களுக்குப் பரிசு...
ஆணிகள்...
அன்றும்....
இன்றும்....

**செபம் :**

அன்பு இயேசுவே!, உண்மைக்காக உழைத்த உம் கை, கால்களுக்கு ஆணிகளைப் பரிசாக அளித்த எங்களின் இழிநிலைக்காய் மனம் வருந்துகிறோம். மனம்மாற அருள் வேண்டுகிறோம். ஆமென்.

**பன்னிரெண்டாம் நிலை : சுடரொளி மறைந்தது**

அவல மரணம்...
அன்பு காட்டியதற்கு...!
சிலுவை மரணம்...
சிந்திக்க வைத்ததற்கு...!
மரணிக்க வேண்டியவன் ஒருவன்...
மரணிப்பவன் இன்னொருவன்!
எல்லாம் நிறைவேறிற்று...!
கல் நெஞ்சர்களாய் நாம்
அன்றும்.... இன்றும்....

**செபம் :**

அன்பு இயேசுவே!, அன்பு செய்து, ஆண்டவனை 'அப்பா' என்று அழைக்கவைத்து, நல்லச் சிந்தனைகளை எங்களிடம் வளர்த்து விட நினைத்த உமக்கு, நாங்கள் செய்த துரோகத்திற்காக மனம் வருந்துகிறோம். மனம் மாற அருள் வேண்டுகிறோம். ஆமென்.

**பதிமூன்றாம் நிலை : அன்னை மடியில் கொஞ்சம் ஓய்வு!**

அன்னையின் அன்பை
உணர்ந்ததால்....
அவள் மடியில் கொஞ்சம் ஓய்வு...
பாதுகாத்து விடுவாய் என்று!
அன்னையின் அன்பை
உணராததால்...
முதியோர் இல்ல வாசற்படியில்
நீண்ட வரிசையில்...
உறக்கமின்றி...!
நமக்கு செலவாகிவிடுவாள் என்று
நன்றி கெட்ட பிள்ளைகளாய்
நாம்...
நன்றியை எதிர்பாராதவர்களாய்
நம் அன்னையர்...
அன்றும்... இன்றும்...

**செபம் :**

அன்பு இயேசுவே! அன்னையின் அன்பினை உணர மறுத்த தருணங்களுக்காக மனம் வருந்துகிறோம். அவள் மடிதான் சொர்க்கம் என உணர வரம்தாரும். ஆமென்.

**பதிநான்காம் நிலை : இரவல் கல்லறையில் இறைமகன்!**

நூற்றில் ஒருவன்
இருக்கிறான்
அடைக்கலம் தந்திட...
அரிமத்தியா யோசேப்பை போல
அன்றும்... இன்றும்...

**செபம் :**

அன்பு இயேசுவே! உமது பிறப்புக்கும் சரி, இறப்புக்கும் சரி, ஒருசில நல்லவர்களால் அடைக்கலம் தரப்பட்டது. அந்த ஒரு சில நல்லவர்களாய் நாங்களும், எம் அயலாருக்கு உதவிட வரம் தாரும். ஆமென்.

**இறுதி செபம் :**

அம்மையப்பனே இறைவா! உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான இயேசுவின் கல்வாரி பாடுகளில் பயணித்து, தியானித்த நாங்கள், ஏதோ வெறுமனே தியானித்துவிட்டு மட்டும் செல்லாமல், அவரின் பாடுகள் மூலம் நாங்கள் கற்றுக்கொண்டதை, அன்றாட வாழ்வில் செயலாற்ற வாழ்ந்து காட்ட வரம் தாரும். ஆமென்.



# JESUS- MY GREAT SAVIOUR
## The Way of the Cross

- Miss. Olga
Italy

**Introduction**

Taking care of the neighbor, even loving him, is the heart of the evangelic message. If we remove this, Christianity risks to be reduced to rituals and words. Obviously, we need to face indifference, selfishness and fear. It's really hard! But if it was not so hard, it would have not been needed God, who become flesh and died on the Cross. It's a huge challenge for every Christian, for every man and woman of good will who wants to fight for justice. Especially, today we have to face an increasing wave of egoism, inhumanity, insincere justifications. Is it possible to answer to the several close mindsets and prevalent today? How to find again the capacity of opening our hearts and our minds to the world's sufferings? The answer is always in our loving Jesus, who came down to the earth, son and brother, human being like us, who died for Love of us and who is alive now and here among us.

We are celebrating 25 years of grace, 25 years of Guanellian presence in India under the blessing of our Holy Founder and thanks to his precious example that has always shown us the virtues we need to imitate.

"Charity comes from God and is expressed toward us as a merciful love, moving us to seek out our impoverished neighbor, compassionately extending ourselves to cover him in his need, even at great personal sacrifice. Overcoming barriers of distance and differences, it leads persons to a common bond of friendship." - St. Louis Guanella.

This way of the Cross is a spiritual path to come back to our loving Master, to ask Him the courage and the strength to take the Cross of our neighbors, who we meet in our daily lives, to follow our Father Guanella in his mission of charity.

## Opening Prayer

You're my life,
I haven't got anything else.
You're my road, my truth.
I will walk according to your words
As long as I will be able to breathe,
till you'll want me to.
I won't be afraid you know, if you're with me.
I beg you, stay with me!

I believe in you, Lord, born by Virgin Mary,
Eternal and holy son, a man like us,
Dead for love, alive among us,
One entity with our Father and with your people.
Till, I know it, you will return
To open God's kingdom for us.

You're my strength,
I haven't got anything else.
You're my peace, my freedom.
Nothing in this life will separate us.
I know that your strong hand
won't let me fall.
I know You'll free me from all the bad
And I will live of your forgiveness.
Father of life, we believe in You.
Saving Son, we put our hopes in You.
Spirit of Love, come among us.
You bring us together
from a thousand different places
and then, in a thousand places,
wherever You wish,
we'll be the seed of God.

### Station 1: Jesus is condemned to death

**Leader:** We adore you O Christ and we praise you
**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

“Here is the man!” “Crucify him! Crucify him!” (Jn 19:5-6)

Our eyes have seen what we have never wanted to see.
Our ears have heard what we have never wanted to hear.
The Man who has never judge, He is now condemned!
The Man who we would have never left, now is left alone!
The Man who we have so much looked for, we have not loved Him!
The Man who we have not created, now we have killed Him!
He is born among us, He has lived among us. One among us betrayed him.
He was crucified by the men He loved.
And after forgiving them, He died.
?In the memory of this Passion, we ask you forgiveness, oh Lord, for every time we have left our brother dying alone.
In the memory of your death, we ask you courage, oh Lord, for every time the gift of Love will ask us to suffer alone.
In the memory of your last Supper, we will break again your bread and your donated body will be always the new hope of life.
We pray You, Man of the Cross, Son and Brother, we hope in You!
**Leader :** Have mercy on us O Lord!!
**All :** Have mercy on us O Lord! May the souls of faithful departed through the Mercy of God, rest in peace

## Station 2: Jesus carries his Cross

**Leader:** We adore you O Christ and we praise you
**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

So they took Jesus, ad carrying the cross by himself, he went out to the place what is called The Place of the Skull, which in Hebrew is called Golgotha. (Jn 19:17)

This is the great sign of Love of our lovely Jesus: “carrying the Cross by Himself”. This is the example we have to imitate to be really sons and daughters of our Father, who has sent his only Son to save us. We have to carry our cross and follow him, as our Saint Louis Guanella did by taking in charge of his mission of charity.

Looking at you carrying your Cross, we cannot be quiet standing doing nothing. Grant us to remember always your words:”My command is this: Love each other as I have loved you. Greater love has no one than this: to lay down one's life for one's friends”. We pray You, help us to take our Cross and go, facing all the difficulties that it entails.

## Station 3: Jesus Falls the First Time

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Surely he has born our infirmities and carried our sorrows; yet we accounted him stricken, smitten by God, and afflicted. But he was wounded for our transgressions, he was bruised for our iniquities; upon him was the chastisement that made us whole, and with his stripes we are healed. All we like sheep have gone astray; we have turned everyone to his own way; and the Lord has laid on him the iniquity of us all. (Is 53:4-6)

When we think that we are so great, helping our neighbors, doing so many things, we might forget that Jesus is helping us to carry our Cross. For our self-glorification and self-sufficiency we let the Cross fall on our loving Jesus. As our Founder said: "Alone, we are incapable of good. We need God!"

Oh Jesus, the weight of our sins made You fall under the cross, remove from us the destructive pride and arrogance of doing good for others, let us always remember that is only by your grace that we can carry out our mission, let us learn from your humility and lift us up again.

## Station 4: Jesus meets his afflicted Mother

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Jesus meets his afflicted Mother. How much did she suffer seeing him in that way? And how much is she suffering seeing again her Son, in all those who are dying under their crosses, crucified by others, every day, in every part of the world? Before giving up His spirit Jesus delivered his Mother to his disciple saying: "Woman, this is your son" and to him He said: "This is your mother". He delivered his Mother to all of us..

Oh Mother, I wish..
I wish so much to talk to You about that Son you have loved,
I wish so much to listen to You about what you had thought,
When you heard that You would have not been for yourself
And that this Son, whom You didn't expect, was not for You.

I wish so much to know from You if, when He was child,
You have explained Him what was about to happen to Him,
And how many times even You, hiding yourself, were crying, oh Mother,
when you had heard that soon they would have killed Him for us..
I thank You for this silence that remains between us,
I bless the courage You had to live with Him,
Now I understand that since those days You were thinking of us,
For every Son of Man who dies I pray to you: Hail Mary..

## Station 5:

## Simon of Cyrene helps Jesus to carry his Cross

**Leader:** We adore you O Christ and we praise you
**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

As the soldiers led him away, they seized Simon of Cyrene, who was on his way in from the country, and put the cross on him and made him carry it behind Jesus. (Lk 23:26)

We want to be like Simon of Cyrene, we want to shoulder the cross of all brothers who cannot bear the weight of their crosses. “No one must be left behind in life, alone and abandoned. Every human life, especially the weakest, needs to be accepted and surrounded with respect and love” Says our Father Guanella, so let us think, pray and work for our “Good Children” who are our precious “treasures”.

I know, oh Lord, that you are with me,
Light of my mind and guide of my way,
Hand that sustains, gaze that forgives
And I cannot believe that You exist like this.
Where Love grows, You are the spring,
Where there is a Cross, You are the Hope,
Where the time ends, You are eternal Life:
And I just know that I can count on You!
And I will welcome the life as a gift,
And I will have the courage to die too,
And to You I will come with my brother
Who doesn't receive love from anyone.

## Station 6: Veronica wipes the face of Jesus

**Leader:** We adore you O Christ and we praise you
**All:** Because of your Holy Cross you have redeemed the whole World

"Come," my heart says, "seek his face!" Your face, Lord, do I seek. Do not hide your face from me. Do not turn your servant in anger, You who have been my help. Do not cast me off, do not forsake me. Oh God, my salvation! (Psalm 27:8-9)

Veronica did not let herself be deterred by the brutality of the soldiers, she shows the courage born of goodness and does not allow her heart to be bewildered. She finds the face of God in the bloodied and bruised human face of Jesus.

You are the beginning of the immense tenderness,
of a Love that no one has ever seen.
We were given the good news of you arrival,
and we saw a man like us.
You are truth that doesn't fade,
Life that doesn't die.
You are the Way of a new world.

Grant us restless hearts to seek always your face and to find you in the suffering face of our elderly, who are feeling lonely and now that they cannot really continue alone, they have no one to take care of them. Allow us to recognize your presence in them and let us come to them with a handkerchief to wipe their faces, as Veronica did to you, and impress your face in our hearts, so that we can bring to everyone your light and your love.

## Station 7: Jesus Falls for the Second Time

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Lord, I wait for you; you will answer, Lord my God. For I said, "Do not let them gloat or exalt themselves over me when my feet slip."

For I am about to fall, and my pain is ever with me. I confess my iniquity; I am troubled by my sin. Many have become my enemies without cause; those who hate me without reason are numerous. Those who repay my good with evil lodge accusations against me, though I seek only to do what is good.

Lord, do not forsake me; do not be far from me, my God.

Come quickly to help me, my Lord and my Savior. (Psalm 38:15-22)

Again, because of our ego we make Jesus to fall. When we think we are alone, that no one is helping us, even our friends at times leave us. We should never forget that Jesus is always with us. Jesus is always carrying the Cross with us, never forsaking us. Let us ask Jesus to take us always to him, with the words of our Holy Founder:

“O my Jesus, draw me entirely to you. Draw me with all the love of my heart. If I knew that one fiber of my heart did not palpitate for you, I would tear it out at any cost. But I know that I could not speak without your help. Draw me, O my Jesus, draw me completely. I know it well, my heart cannot rest until it rests in your heart”.

## Station 8: Jesus Meets the Women of Jerusalem

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Jesus turning to them said, "Daughters of Jerusalem, do not weep for me, but weep for yourselves and for your children. For behold, the days are coming when they will say, 'Blessed are the barren, and the wombs that never bore, and the breasts that never gave suck!' Then they will begin to say to the mountains, 'Fall on us'; and to the hills, 'Cover us'. For if they do this when the wood is green, what will happen when it is dry?" (Lk 23:28-31)

Jesus shows us the seriousness of our responsibility, the danger of our being found guilty and without excuse on the day of judgment, the danger of simply walking at his side, with nothing to offer other than compassionate words. May He convert us and give us new life, so that we will not be dry wood but living branches in Him. Let us pray with the words of our Father Guanella:

“O adorable heart of my Savior! How it displeases me to have offended you by my man sins. How it saddens me to have outraged you with foolish talk! I deserve to be abandoned. But you did not abandon me, and for this, I give you glory. My lips will always resound your praise since I have been saved by your most precious blood”.

## Station 9: Jesus Falls the Third Time

**Leader:** We adore you O Christ and we praise you
**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Our steps are made firm by the Lord, when he delights in our way; though we stumble, we shall not fall headlong, for the Lord holds us by the hand.

(Psalm 37:23-24)

We are humans, we will always fall, we will always stumble because of our insecurities, our too little faith, our not being able to entrust us to God. The fear of being unable to carry our Cross, makes us stuck unable to move, unable to go on. Let us leave all our hesitations and our worries, let us take again this Cross and carry out our mission!

Then we saw you kneeling down among us
Praying us to love as You
With the humility of who wants to serve,
In the memory of your deeds.
Now I humbly ask you, my God,
To forgive my insecure heart:
Give me again the strength to receive again
Your Word, your deed of Love.

## Station 10: Jesus is Stripped of His Garments

**Leader:** We adore you O Christ and we praise you
**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

They divided his clothes among themselves by casting lots; then they sat down there and kept watch over him. (Mt 27:35-36)

How many come to us being stripped of their clothes, their lives, and how many are simply sitting and looking at them? Jesus Himself told us "Truly I tell you, just as you did it to one of the least of these who are members of my family, you did it to me". Let us always follow our Father Guanella, let us be a family for those who are abandoned, those who don't have nothing and anyone, as he said: "Take in the most abandoned of all, have him sit at the table with you and make him one of your own, because this is Jesus Christ".

You, Lord, know more than anything else that I love you
And if it is your will, they will be my home.
If it is your will, we will be sign of hope, till the day You will be our

home.
“Blessed the wise man who will find his home in the right place,
But much more blessed he will be
when he will open his house for his brothers in My name”.

## Station 11: Jesus Nailed to the Cross

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Over his head they put the charge against him, which read, “This is Jesus, the King of the Jews”. Then two bandits were crucified with him, one on his right and one on his left. Those who passed by derided him shaking their heads. (Mt 27:37-39)

Jesus is unjustly nailed to the Cross, crucified for those that are not His sins, innocent but lined up with the criminals. Like him, today, thousands of people are unjustly condemned to an undeserved life because of their social status, poor economic condition, difficult family situations and much more. Let us think especially of our children and boys, those who are abandoned, those whose family cannot afford to take care of them, those who are exposed to wrong ways.

Oh Jesus, as You took the children up in your arms, grant us to be able to take them with us and to be for them family, safety, support and comfort, grant us to give them “bread and Lord”, as our Holy Founder used to say,
And we will learn to look at the whole world
With the transparent eyes of a child
And we will teach to call You “Our Father”
To every son who becomes man.

## Station 12: Jesus Dies on the Cross

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Now from the sixth hour there was darkness over all the land until the ninth hour. And about the ninth hour Jesus cried with a loud voice, "Eli, Eli, lama sabachthani?" That is, "My God, my God, why

have you forsaken me?" And some of the bystanders hearing it said, "This man is calling Elijah". And one of them at once ran and took a sponge, filled it with vinegar, and put it on a reed, and gave it to him to drink. But the others said, "Wait, let us see whether Elijah will come to save him". And Jesus cried again with a loud voice and yielded up his spirit". When the centurion and those who were with him, keeping watch over Jesus, saw the earthquake and what took place, they were filled with awe, and said, "Truly this was the Son of God!"(Mt 27:45-50,54)

"My God, my God, why have you forsaken me?" This cry resounds from every corner of the world. People not forsaken by God, but by the entire humanity. So many are dying now, in this very moment. So many killed in misery and abandonment, in wars, so many try to escape from their countries in search for a new life. So many start the travel of Hope and they find death on their way because of those who lost their humanity.

Oh Jesus, we pray for all the refugees who come to us looking for new hopes, we pray for this world destroyed by the shots of the wars, we pray for this humanity that still is not able to receive and give your Love. Grant us the strength to welcome these suffering people, grant us to give them comfort and to be for them light in the darkness of their path.

And we will take care of our brothers,
we promise You, oh God:
we will be happy to give what you have given us!
But You, Lord, remember always to not leave me alone,
Even if at times I will forget You.

## Station 13:
## The Body of Jesus is taken down from the Cross

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

When it was evening, there came a rich man from Arimathea, named Joseph, who was also a disciple of Jesus. He went to Pilate and asked for the body of Jesus; then Pilate ordered it to be given to him. (Mt 27:57-58)

"He went to Pilate and asked for the body of Jesus". In our mission of charity, among our deeds, in our running here and there in order to serve and help our neighbors, let us always "ask" for the body of Jesus like Joseph of Arimathea. Our father Guanella reminds us that "The fountain of holy love is in Jesus Christ and we have Jesus with us in the Most Holy Sacrament of the Alter. From that throne of love, how often He enlightens the minds of His children, and how many again find their peace of heart".

Your people on the way Search in You the guide;
On the way to Your kingdom, You are sustain with Your body.
Remain always with us, oh Lord.
It is Your bread that gives us strength and makes our step firm;
If the energy to walk goes down, Your hand gives new Hope.
It is your blood Jesus that quenches our thirst and awakes in us the passion to follow You;
If Joy leave place for tiredness, Your voice makes spring freshness.
It is your bread Jesus that makes us Church, brothers on the way of Life;
If resentment take light from friendship, from Your heart arises forgiveness.
It is your blood, Jesus, the eternal sign of the only language of Love;
If giving ourselves like You needs faith, in Your Spirit we challenge our uncertainty.

## Station 14: Jesus is laid in the Tomb

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Joseph took the body, and wrapped it in a clean linen shroud, and laid it in his own new tomb, which he had hewn in the rock; and he rolled a great stone to the door of the tomb, and departed. Mary Magdalene and the other Mary were there, sitting opposite the sepulcher. (Mt 27:59-61)

After all this suffering, after carrying the heavy weight of the Cross, in our humanity, we feel dead and we just want to lie down and be there forever. Our weaknesses, our faults pull us down. Our Saint Louis Guanella said: "If you are weak, God is strong". Let us entrust

ourselves to our beloved Jesus, so that we may receive from him the strength to rise again, revived for His resurrection.

Dear loving Jesus, we are nothing without you. When we feel we cannot go on, when we feel that everything is just over, give us your hand and take us back with you.

Now we know who you are,
we hear your voice,
we see your light,
we know you are here.
And by your Word
we believe in Love,
we believe in Peace,
we know you will come back.

## Concluding Prayer

"Is the cross with us? Treat it as a friend because all spiritual graces come from the cross of Christ" Our Founder reminds us the preciousness of carrying the Cross like Jesus. Carrying the cross not on the chain but in our lives. Let us thank the Lord for these moments of meditation, prayer, for all we have got till now and let us ask Him to guide us with His light in the way of our mission.

?God, how many times we bow our gaze,
fade our smile, hide our hand:
how many words have fallen, how many silences,
we ask forgiveness.
Now that this day ends, Lord,
we want to sing for You words of Love;
we want to sing about the people we have met,
The time we have lived, the things we have got,
Smiles of Joy, Words shared,
Hands joined in sign of peace and in every moment
Your tenderness, Your only smile.
You God, who knows our names,
Make that, listening to your voice,
We might remember where is our path,
In our life, to the place where we will meet You.
Father of men, we thank You,

Son and Brother, we bless You;,
Holy Spirit, seed of Life,
we know that You are beyond the death.
And this song like your bread, simple and good,
Now unites us, in the memory and in the hope
to be together when you will come.

**Note:**

Prayers marked with this symbol ? are the translation of some beautiful songs written by Rev. Msgr. Pierangelo Sequeri, President of the Pontifical John Paul II Institute for Studies on Marriage and Family at the Lateran University in Rome; he is also a Consulter of the Pontifical Council for Promoting the New Evangelization and Member of the International Theological Commission.



# THE WAY TO CALVARY

- Mrs. Zandra Mary
Melrosapuram

## Opening Prayer

Oh Jesus, our adorable Savior, we now contemplate your sacred passion. Help us to understand that the sufferings of your life are the continuation of your passion. We ask for strength of our souls to go through our passion, in the spirit with which you went through yours. Amen

## Station 1: Jesus is condemned to death

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Leaving the house of Caiaphas and the house of Herod, where He had been mocked, Jesus is dragged before Pilate, His back torn, His head crowned with thorns and He, who on the last day will judge the living and the dead, is Himself condemned to a disgraceful death.

It was for us that you did suffer, oh Blessed Jesus, oh grant that we may detest our sins from the bottom of our hearts and obtain your mercy and pardon by repentance.

Our Father…
Hail Mary...
Glory be…

**Leader:** Have mercy on us O Lord!

**All:** Have mercy on us O Lord! May the souls of the faithful departed through the mercy of God, rest in peace.

## Station 2: Jesus carries his Cross

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

A heavy Cross is laid upon the bruised shoulders of Jesus. He receives it with meekness and with a sense of commitment, for it is the instrument with which He is to redeem the world and to accomplish the mission for which His heavenly Father has sent Him.

Oh Jesus, grant us by virtue of your Cross, to embrace with meekness and cheerful submission the difficulties of our lives and to be ever ready to take up our cross and follow you.

Our Father…
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 3: Jesus falls the first time

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Bowed down under the weight of the cross, Jesus slowly sets forth on the way to Calvary, amidst the mockeries and insults of the crowd. His agony has exhausted His body. He has lost His strength with all the blows and wounds. He falls to the ground under his cross.

Oh Jesus, who for our sins did bear the heavy burden of the cross and did fall under its weight, may the thoughts of your suffering make us be watchful over ourselves and save us from falling into sin.

Our Father…
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 4: Jesus meets his afflicted mother

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Still burdened with His cross and wounded yet more by His fall, Jesus proceeds on His way. He is met by His loving mother. What a sword of anguish must have pierced the mother's heart!

Oh Jesus, what compassion you had for your Mother! O Lord, have the same compassion for us.

Oh, Mother Mary! the most afflicted mother, intercede for us that, through the sufferings of your Son, we may be delivered from eternal

death.
Our Father..
Hail Mary..
Glory be..
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 5:
## Simon of Cyrene helps Jesus to carry his Cross

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

As Jesus becomes weak, He is unable to proceed. So, the executioners seize and compel Simon to carry His cross. Later Simon considered carrying the cross as His privilege and joy.

Oh Lord Jesus may it be our privilege to bear our cross. May we find glory in nothing else other than the cross. May we never shrink from suffering but rather rejoice if we should be counted worthy to suffer for your name's sake.
Our Father...
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 6: Veronica wipes the face of Jesus

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

As Jesus proceeds along the way covered with the sweat of blood, a woman, moved with compassion, makes her way through the crowd and wipes His face with a her veil. As a reward for her piety, the impression of His sacred countenance is miraculously imprinted upon the veil.

Oh Jesus, may the contemplation of your sufferings move us with deep compassion. Make us hate our sins and kindle in us more fervent love for you. May your image be engraved on our minds until

we are transformed into your likeness
Our Father…
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 7: Jesus falls for the second time

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

The pain of his wounds and the loss of blood increasing at every step of his way weakens Him and Jesus falls the second time.

Oh Jesus, how many times you have forgiven me and how many times I have fallen again and offended you. Oh Lord, give us the grace to persevere in your love until death. Grant that, in all temptations, I may call upon you in prayer. I repent and now I love you Jesus, grant that I may love you always.
Our Father...
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 8: Jesus meets the women of Jerusalem

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

The women of Jerusalem openly bewailed and lamented for Him. It was unbearable to see him in blood. Jesus, knowing very well the things, the curse that would befall Jerusalem because of its reflection on Him, turned to them and said: "Daughters of Jerusalem, weep for yourselves and for your children".

Oh, Jesus, we mourn and will always mourn for you and for ourselves, for your sufferings and for our sins which caused them. Teach us, oh Lord, to mourn so that we may repent and be saved from the dreadful end to those who reject or neglect you.

Our Father...
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 9: Jesus falls the third time

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Jesus has almost arrived at the summit of Calvary, but before He reaches the spot where He is to be crucified. He loses all his strength and falls the third time.

Oh, Jesus, we entreat you by the merit of this most painful fall, to pardon our frequent relapses and our sins. May the thought of your sufferings reform us and make us live an unadulterated life.
Our Father...
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 10: Jesus is stripped of His garments

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Jesus, at last, arrives at Golgotha and they prepare to crucify Him. They strip Him of His garments and mock Him.

Oh, Jesus strip us of all false esteem, conceit and pride and make us humble like you. Oh Lord, Let us share your glory in the life to come.
Our Father...
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 11: Jesus nailed to the Cross

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

Jesus, the beloved Son of the Father, is unjustly condemned. He has accepted death in order to fulfil His Father's desire. The cross is laid upon the ground and Jesus is stretched upon his bed of death. With divine dignity and forgiveness, He let himself be nailed to the cross.

Oh Jesus, fasten our hearts to the cross, so that we may be united with you until we yield up our souls to you. Never allow me to offend you again. Grant that I may love you always and then do with me as you will.

Our Father...
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 12: Jesus dies on the Cross

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

For three hours Jesus was hanging on the cross. His blood was rolling down His body. Jesus committed His blessed Mother to His beloved disciple's care. His mission of love has been accomplished.

It was now about noon, and darkness came over the whole land until three in the afternoon, 45 for the sun stopped shining. And the curtain of the temple was torn in two. 46 Jesus called out with a loud voice, “Father, into your hands I commit my spirit.” When he had said this, he breathed his last. (Luke 23:44-46)

We shall kneel and make a deep bow of love and gratitude to Jesus, who dies for us. Few moments of silence for personal reflection.

Oh, Jesus, there are times when you invite us to suffer just as you suffered for us, leaving us an example that we might follow. Let us entrust ourselves to you and to the Father, our Creator, knowing that you will never forsake us.

Our Father…
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 13:
## The body of Jesus is taken down from the Cross

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole world

A good and upright man named Joseph came from Arimathaea seeking the kingdom of God. He asks Pilate for the body of Jesus and together with Nicodemus took Him down from the Cross and placed Him in the arms of His afflicted Mother.

Oh Jesus, while alive we die many times. We die for fear of disease, debts and destruction. It may be with ourselves, with our family members or the society. Sufferings and failures help us to grow stronger and become successful in the future. Let us learn to accept disappointments and depressions. The moment we fall or become depressed, help us to think about your loving Mother who has felt the most painful suffering having the body of her beloved Son in her arms.

Oh Mary, Mother of Mercy, we just need to be in your arms to come back again to life.
Our Father...
Hail Mary…
Glory be…
**Leader:** Have mercy on us O Lord!
**All:** Have mercy on us

## Station 14: Jesus is laid in the tomb

**Leader:** We adore you O Christ and we praise you

**All:** Because of your Holy Cross you have redeemed the whole World

A new tomb is ready for the holy body of Jesus. Joseph and Nicodemus took the body and wrapped it in linen cloth with spices,

following with the Jewish burial costume. They rolled a stone across the entrance of the tomb and closed it.

Oh Jesus, Grant us the strength to look at you and to think of your resurrection that should occur in ourselves first. Remove from us all the sins that block us in the tomb, so that we may rise renewed and purified by the glory of your resurrection.

Our Father…

Hail Mary…

Glory be…


**Leader:** Have mercy on us O Lord!

**All:** Have mercy on us

## Concluding Prayer

The resurrection of Jesus is the key point of our faith. We believe that one day we too shall rise with him.

Jesus, through your Passion, Death and Resurrection, you not only give us hope but make our suffering meaningful and meritorious. We thank you for all the sufferings that we undergo in our life. Lord, enable us to bear them with the courage and willingness You had. We are ready to destroy our negatives and rebuild a new temple. We allow God our Father inside us to grow spiritually.



# தவக்கால சிந்தனைகள்

## விபூதி புதன்

யோவேல் 2:12-18 2கொரி 5: 20-6:2 மத் 6:1-6, 16-18

அருட்பணி. ஞானராஜ், SdC
பெங்களூர்

**மண்ணாய் இருக்கிறாய்! மண்ணுக்கே திரும்புவாய்!**

இறையேசுவில் பிரியமானவர்களே! இன்று சாம்பல் புதன், நம் ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் மகிமையை கொண்டாட இன்று முதல் நம்மையே நாம் தயாரிக்க அழைக்கும் நாள், மேலும் “மனிதனே நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்” என்பதை நினைவுபடுத்தும் நாள். இவ்வுலகில் நாம் வாழும் பகட்டு வாழ்க்கை, செய்யும் ஆர்ப்பாட்டங்கள் ஏராளம், ஏராளம். ஒரு நிமிடம் அமைதியாக அமர்ந்து சிந்தித்துப்பார்த்தால் நாம் செய்யும் ஆர்ப்பாட்டங்கள் எல்லாமே வீண், தேவையற்றது என்று சிந்திக்க தோன்றும். ஆகவே இந்த தவக்காலம் இப்படிப்பட்ட சிந்தனைகளை நாம் சிந்தித்து மனமாற அழைப்புவிடுக்கிறது. தவக்காலம் அருளின் காலம். இந்த நாற்பது நாட்களும் நம்மையே நாம் சீர்த்தூக்கி பார்க்கவும் நம் வாழ்வின் தேடல்களின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு தீயவைகளை புறம் தள்ளவும், நல்லவைகளை நாடிச்செல்லவும் அழைக்கும் காலம். இந்த தவக்காலத்தில் நம்மையே நாம் சரி செய்ய, தர்மம், இறைவேண்டல், நோன்பு இருக்க அழைக்கப்படுகிறோம்.

“வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்” ஆம் நாம் செய்யும் தர்மமும் நற்செயல்களும் விளம்பரத்திற்காகவே அல்லது பிறர் போற்ற வேண்டும் என்பதற்காகவோ புகழுக்காகவோ செய்வது ஏற்புடையதல்ல என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

நாம் செய்யும் இறைவேண்டல்களும் பக்தி முயற்சிகளும் நடிப்பதற்காக அல்ல, பிறர் பார்க்க வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக பக்தி செயல்கள் இறைவனுக்கு மட்டும்தான் காட்சி தர வேண்டும். மனிதர் முன் மறைவாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றது இன்றைய நற்செய்தி.

நாம் செய்யும் நோன்பு நம்மையே நாம் பரிசோதித்து உள்நோக்கி பயணம்செய்து நம்மைச் சரி செய்ய உதவுகிறது. நாம் நோன்பு இருந்து கொண்டு பிறரை ஏளனப்படுத்துவது, எரிந்து விழுவது, கோபப்பட்டு கடுமையாக திட்டுவது போன்ற செயல்களில் ஈடுபடும் போது நாம்

உண்மையான நோன்பின் அர்த்தத்தை மறந்து செயல்படுகிறோம் என்றுதான் அர்த்தம். குறிப்பாக நோன்புஇருக்கும் போது அன்பாகவும், அமைதியாகவும், எளிமையாகவும், தாழ்ச்சியாகவும், கனிவாகவும் இருக்க அழைக்கப்படுகின்றோம்.

இதனால் நம்மில் இருக்கும் "நான்" என்ற அகந்தையையும் மமதையையும் நீக்கி தாழ்ச்சி என்ற புண்ணியத்தை பெறுவோம். இந்த தாழ்ச்சியைப் பெறத்தான் நாம் நோன்பு, தர்மம் மற்றும் செபம் செய்வதின் நோக்கமாக இருக்க வேண்டும். இறைவேண்டல் என்பது நம்மைப் படைத்து அன்பு செய்யும் இறைவனை நோக்கிப் பார்க்க உதவுகிறது. தர்மம் செய்யும்போது நாம் நம்மைஅயலாரை ஏறெடுத்துப்பார்க்க உதவுகிறது. நோன்பு என்பது நம்மையே நாம் உள்நோக்கி பயணம் செய்து நம்மைச் சரி செய்ய உதவுகிறது.

மேலும் தவக்காலம் என்பது ஏதோ செபமுறை, ஒறுத்தல் சார்ந்தது மட்டுமன்று, மாறாக தனிமனித உறவு, இறை உறவு, சமூக உறவு ஆகியவற்றை சார்ந்தது. முழு மனிதனின் சுயநிலை, வாழ்க்கை நெறி, வாழ்வு முறை அனைத்தையும் சீர்தூக்கி பார்த்து சீரமைப்பதாக வேண்டும். ஆகவே தீயனவற்றை வேரோடு அகற்றி, நல்லனவற்றைத் தேடிக்கண்டுபிடித்து வளர்ப்பதற்கே இறைவன் அழைக்கிறார். மனம்மாறி வாழ முயற்சிப்போம். நமது ஜெபத்தாலும், தவமுயற்சிகளாலும், அருள்வாழ்வாலும் நம்மைஇறைவனோடும் பிறரோடும் ஒப்புரவாக்கிக்கொள்ளுவோம்.

"அறம் செய்வோம், நற்செயல்கள் புரிவோம்
நற்பெயருக்காக அல்ல, புகழுக்காக அல்ல
கடவுளின் மாட்சிக்காக, இறையரசு மண்ணில் மலர...."

## திருநீற்றுப் புதனுக்குப் பின்வரும் வியாழன்

இச 30:15-20 லூக் 9:22-25

### இழப்பே இயேசுவை பின்பற்ற முதல் தகுதி

"என்னைப்பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்"

பொதுவாக நம் வாழ்வில் நாம் எதையுமேஇழப்பதற்கு முன்வருவதில்லை. ஆனால் ஒருசில நேரங்களில் சிலவற்றை இழந்தால்தான் நாம் சாதிக்க முடியும்; குறிக்கோளை அடைய முடியும். மாமனிதர்கள் இந்த இரகசியத்தை அறிந்திருக்கின்றனர். எடுத்துக்காட்டாக, ராணுவ வீரர்கள் தங்கள் குடும்பத்தையும், சொந்த

பந்தங்களையும் இழப்பதால் தான் நாம் பாதுகாப்பாக இருக்கிறோம்; நம் நாடு எதிரிகளிடமிருந்து பாதுகாக்கப்படுகிறது.

இதே அர்ப்பணிப்போடும், ஈடுபாட்டோடும் கடந்த 21 நூற்றாண்டுகளில் ஆயிரக்கணக்கானவர்கள் தம் உயிரை இழக்க முன்வந்துள்ளனர். நிலைவாழ்வைப் பெற்றுக்கொண்டுள்ளனர். நாம் உயிரை இழக்க வேண்டாம். சிறிய இன்பங்களை, சிறிய ஆதாயங்களை, நேரத்தை, ஓய்வை, பொழுதுபோக்கை இழக்க முன்வருவோம்.

பிறர் வாழ வேண்டும் என்பதற்காகத் தம் உயிரைப் பொருட்படுத்தாமல் விட்டுக்கொடுக்க முன்வருவோர் பலருண்டு. இயேசு நாம் வாழ்வு பெற வேண்டும் என்பதற்காக இறந்தார். அதற்காக சிலுவையைச் சுமந்து, பாடுகள் பட்டு, இரத்தம் சிந்த, பல அவமானங்களைச் சந்தித்தார்.

இயேசுவைப் போல பிறர் வாழ்வு பெற நாம் சிலுவை சுமக்க வேண்டாம். நாம் வாழ்வு பெற நம் சிலுவைகளைச் சுமந்து செல்வோம்.

“தான், தனது” என்ற உணர்வைக் கைவிட வேண்டும்.

தன்னைப்பற்றி எண்ணாமல் இயேசுவிடத்தில் தன் எண்ணத்தைத் திருப்ப வேண்டும்.

நிலையான வாழ்வுக்கு முன்னால் இவ்வுலக வாழ்வு சிறியதே என்று எண்ணவேண்டும்.

நாம் நமது சிலுவைகளைக் குறிப்பாக “தன்னலம் துறத்தலை” சுமப்போம்.

இயேசுவின் சீடர்களாக வாழ முழுமனதோடு அவரைப் பின்பற்ற வேண்டும்.

## திருநீற்றுப் புதனுக்குப் பின்வரும் வெள்ளி

எசாயா 58:1-9 மத் 9:14-15

### நோன்பின் உண்மையான ஆன்மீகம்

நோன்பிருத்தல் என்பது தன்னை மறப்பதற்காக, தன்னை மறுப்பதற்காக, தன்னை முழுமையாக கடவுளுக்கு அர்ப்பணிக்க, தன்னையே கடவுளுக்குப் பலியிடுவதாகும்.

**விவிலியம் கூறும் மூன்று விதமான நோன்புகள் :**

சாதாரண உண்ணா நோன்பு, இங்கு உணவு மட்டும் தவிர்க்கப்படுகிறது. தண்ணீர் குடிக்கலாம் (லூக் 4:2)

முழுமையான உண்ணா நோன்பு, இங்கே தண்ணீரும் தவிர்க்கப்படுகிறது (திப 9:9)

பகுதி உண்ணா நோன்பு (தானியேல் 10:3), இதை பத்திய உண்ணா நோன்பு அல்லது திட்டமிட்ட உண்ணா நோன்பு என்றும் கூறுவார்கள். சிறப்பாக உடல் நலனுக்காக இதை செய்வார்கள். ஆனால் தானியேல் இறைவெளிப்பாட்டிற்காக இதை செய்தார். ஆகவே, கடவுளை அறிய, கடவுள் அனுபவம் பெற, மற்றும் கடவுள் சித்தத்தை தெரிந்து கொள்ள நாம் மேற்கொள்ளும் உன்னதமான முயற்சிதான் நோன்பு.

உணவு என்பது ஊனுடலைச் சார்ந்தது. இவ்வுலக உயிரைச் சார்ந்தது. நம்மில் நிறைவை ஏற்படுத்தும். இவைகளை தவிர்க்கும் பொழுது நாம் கடவுளை நோக்குகிறோம். மறு உலகை பற்றி நினைக்கிறோம்.

நமது உடல், உள்ளம், மனது சிந்தனை எல்லாம் ஒன்றிணைக்கப்பட்டு இறைவனையும், இறைவன் சார்ந்ததையும் சிந்திக்க நினைக்க பேச அனுபவிக்க நோன்பு உதவியாகிறது. இதுதான் நோன்பின் ஆன்மீகம் என்றும் சொல்லலாம்.

ஆகவே இந்த தவக்காலத்தில் நாம் மேற்கொள்ளும் நோன்புகளை (வெள்ளிக்கிழமைகள், திருநீற்றுப்புதன், பெரியவெள்ளி) கடமைக்காக செய்கிறோமா? இறையனுபவத்தை பெறவும் இறைவனிடம் அழைத்துச்செல்லவும் உதவியாயிருக்கிறதா?

## திருநீற்றுப் புதனுக்குப் பின்வரும் சனி

எசாயா 58:9-14 லூக் 5:27-32

**என்னைப் பின்பற்றி வா-**

ஓர் ஊரில் ஞானமடைந்த ஜென் துறவி ஒருவர் இருந்தார். அவரிடத்தில் இளைஞன் ஒருவன் சென்று, தானும் ஞானம் அடைய வேண்டும் என்ற தன்னுடைய ஆசையை வெளிப்படுத்தினான். அதற்கு அந்த ஜென் துறவி, “உன்னிடத்தில் ஞானம் அடைவதற்கான ஆர்வம் அதிகமாக இருக்கிறது. அதே நேரத்தில் நிறைய எதிர்பார்ப்புகளும் இருக்கின்றன. எனவே நீ போய் உன்னுடைய

எதிர்பார்ப்புகளை எல்லாம் விட்டு விட்டு வா, அதன் பிறகு நீ ஞானம் அடையலாம்” என்றார்.

அந்த இளைஞனும் துறவியிடமிருந்து விடைப்பெற்று சென்று, பல ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து, எதிர்பார்ப்புகளை எல்லாம் விட்டுவிட்டு, மீண்டுமாக ஜென் துறவியிடம் வந்தான். அவன் அவரிடம், “குருவே! நான் பல ஆண்டுகள் கடுந்தவம் செய்து, எதிர்பார்ப்புகளை எல்லாம் விட்டுவிட்டு, இப்போது உங்கள் முன்பாக வெறுமையாக நிற்கிறேன்.” என்றான். முதலில் போய் அந்த வெறுமையையும் விட்டெறிந்துவிட்டு வா” என்றார்.

ஆகவே இறைவனை முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றால், “துறந்துவிட்டோம் என்ற எண்ணத்தையும் துறப்பதுதான் உண்மையான துறவு”

இன்றைய நற்செய்தியில் லேவியின் அழைத்தலைப் பற்றி வாசிக்கிறோம். இயேசு அழைத்த உடனே எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்தொடர்ந்தார். ஆகவே, ஒரு சீடன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக திகழ்கின்றார் புனித மத்தேயு.

உலகம் திறமைஉள்ளவர்களில் தகுதி உள்ளவரையே தேர்ந்தெடுக்கிறது. ஆனால் கடவுளின் அழைப்பு தகுதியற்றவரைத் தகுதியாக்கும் அழைப்பு, கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த, மடமைஎன உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார். அவ்வாறே வலியோரை வெட்கப்படுத்த, வலுவற்றவை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்துகொண்டார். (1கொரி 1:27-28) மத்தேயுவின் அழைப்பு ஒரு சிறப்பு வாய்ந்ததாகும். “நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்” என்ற ஆண்டவரின் வார்த்தை புனித மத்தேயுவின் அழைப்பின் மூலமாக உண்மையாகின்றது.

ஆக, “என்னைப் பின்பற்றி வா” என்ற அழைப்பு நமக்கும் இன்று கொடுக்கப்படுகின்றன. புனித மத்தேயுவை போல அனைத்தையும் (என்னுடைய தீய எண்ணங்கள், தீய பழக்க வழக்கங்கள், கோபம், ஆணவம்) விட்டுவிட்டு இயேசுவை பின்தொடர தயாரா?

# தவக்காலம் முதல் ஞாயிறு

தொ.நூ. 9:8-15 1பேதுரு 3:18-12 மாற்கு 1:12-15

அருட்பணி. அமல்ராஜ்,SdC
கடலூர்

## இயேசு சோதிக்கப்பட்டார் - ஆனால் சாதனைப்படைத்தார்.

அன்புக்குரிய சகோதர, சகோதரிகளே இன்று தவக்காலத்தின் முதல் வாரம். நம் ஆண்டவர் சோதிக்கப்பட்டார் ஆனால் சாதனைப்படைத்தார் என்று அறிந்து, மனிதர்களாகிய நமக்கும் சோதனைகள் வரும், அதன்வழி நாம் சாதனை படைக்க வேண்டும் என்று இவ்வாரம் நம்மைஅழைக்கிறது. சோதனை என்பது வேறு; வீழ்த்தப்படுவது என்பது வேறு. சோதனை என்பது இயல்பு எல்லோருக்கும் வரக்கூடியது. எபி : 14/15?ல் “இயேசு பாவமற்றவராக இருந்தாலும், மனிதரைப்போல சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்” என்று வாசிக்கின்றோம். அவருடைய ஒவ்வொரு வாழ்வு, படிநிலையிலும் அவருக்கு வந்த சோதனைகளில். கடவுளுடன் முழுமையாக இணைந்திருந்து வெற்றிக்கண்டார். ஆக இந்த வார திருவழிபாடும், திருவாசகங்களும் நமக்களிக்கும் செய்திகளாக:

## 1. நீரும் ஞானஸ்தானமும் :

இன்றைய முதல் வாசகத்தில், வெள்ளப் பெருக்கின்போது நோவாவின் குடும்பத்தினர் எட்டுபேரும் தண்ணீர் வழியாக காப்பாற்றப்பட்டனர். இந்த தண்ணீரானது திருமுழுக்கின் முன் அடையாளமாக தூய பேதுரு அவர்கள் அடுத்த வாசகத்தில் தெளிவாக கூறுகிறார். தண்ணீருக்கு ஆக்க சக்தியும், அழிக்கும் சக்தியும் உண்டு. வெள்ளப்பெருக்கு பாவ உலகை அழித்தது, ஆனால் பேழையில் இருந்த நோவாவின் குடும்பத்தைக் காப்பாற்றியது. செங்கடல் எகிப்தியரை அழித்தது. ஆனால் இஸ்ரயேல் மக்களுக்கு வழிகாட்டியது. அதுபோல திருமுழுக்கு தண்ணீரும் ஆக்க சக்தியோடும், அழிவு சக்தியோடும் இருக்கிறது. அது பழைய மனிதருக்குரிய பாவ இயல்பை அழிக்கிறது. கிறிஸ்துவுக்குள், திருச்சபையில் புதுவாழ்வு அளிக்கிறது. இதில் நாம் தந்த வாக்குறுதிகளான, கடவுளை முழுமனதார வழிபடுவது, கிறிஸ்துவின் வாழ்வையும், பணியையும் பின்பற்றுவது போன்றவற்றில் சாதனைப்படைக்க ஜெபத்திலும், இறைவனின் உடனிருப்பிலும் நிலைத்திருக்க வேண்டும்.

**2.நாற்பது நாட்களும் மனமாற்றமும் :**

நாற்பது நாள் என்பது விவிலியத்தில் ஓர் அடையாளக்குறியாக நமக்கு புலப்படும். நோவா காலத்தில் நாற்பதுநாள் இறைவன் மழையை கொடுத்தார்; காரணம் மக்கள் கடவுளை மறந்து இந்த உலகமேகதி, அதுவே வாழ்க்கை, நிறைவு என்று வீணாய்ப் போனார்கள். அவர்களை விடுத்து நம்பிக்கைக்குரிய நோவாவின் குடும்பத்தை காப்பாற்றுகிறார் (தொ.நூ.7/12)

இஸ்ரயேல் மக்கள் நாற்பது ஆண்டுகள் பாலைவன நடைப்பயணம் மேற்கொண்டார்கள். கானாவூர் தேசத்தை நோக்கி இறைவன் 40 ஆண்டுகள் வழிநடத்தி சென்றார். (இணை :8/2-10) மோசே சீனாய் மலையிலே 40 நாட்கள் ஆண்டவரோடு இணைந்திருந்தார், (வி.ப. 24/12-18) எலியா நாற்பது நாள்கள் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்து ஆண்டவரோடு உரையாடியது (1அர :19/8-18) நினிவே மக்கள் பாவம் செய்ததால், யோனா அவர்களுக்கு 40 நாளில் இறைவாக்கு தந்து மனமாற்றியது (யோனா 3/1-10) இயேசு நாற்பது நாள்கள் உண்ணா நோன்பு இருந்து ஆண்டவரோடு இணைந்திருந்தது. இதன்வழி இறையரசை மக்கள் மத்தியில் கட்டிட தம்மையே தயார் செய்தது, என்று பல வெளிப்பாடுகள் உள்ளது. இவை தரும் செய்தி யாதெனில், "நாம் கடவுளை அடைய, அவர்வழி வாழ நமக்கு ஓர் முழுமையான ஆன்மீக தயாரிப்பு வேண்டும். அதன் உதாரணமேஇந்த "நாற்பது நாள்கள்". நமது தாய்த்திருச்சபையானது அதே 40 நாள்களை நமக்கும் கொடுத்திருக்கிறது. இதன்வழி நம்மைஆண்டவரிடம் 'மனமாறி திரும்பிட' அழைக்கிறது. இந்த நாற்பது நாள்களில் தவம் செய்யவும், செபம் செய்யவும் ஒறுத்தல் செய்யவும் அதன்வழி நமது உலக வாழ்வின் சோதனைகளான மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய தீயவனின் வலைகளை அறுத்தெறிந்து விடுதலையாகிட அழைப்பு விடுக்கிறார் நமதாண்டவர்.

**3. காட்டு விலங்குகளும் வானதூதர்களும் :**

நற்செய்தியில் நாம் காணும் காட்டுவிலங்கள், ஆண்டவரை சோதிக்க வந்த சாத்தானின் மாய வலைகளாகவும், வானதூதர்கள் ஆண்டவருக்கு அவர்தம் தந்தையின் உடனிருப்பை வெளிப்படுத்திய தூய ஆவியின் சேவகர்கள் என்பதையும் வெளிப்படுத்துகின்றது. ஆண்டவருக்கு சோதனைகளாக வந்த மிருகங்கள் யாதெனில்

“கடவுளை மறந்து, நம்பிக்கையிழந்து, பொருளாசையில் பாவிப்பது; கடவுளை இரண்டாம் தரமாக்கி பணத்தையும் புகழையும் தேடி அடைவது; கடவுளை நமது சுயவிருப்பத்திற்கும், துன்பங்களே இல்லாமல் சுகவாசியாய் இருந்திட ஒரு கருவியாக பயன்படுத்துவது” போன்றவையாகும். இவையனைத்தையும் இயேசு தம்முடைய உறுதியான தன்மையாலும் கடவுளின் உடனிருப்பாலும் வென்று சாத்தானை முறியடித்தார். இதே காட்டுவிலங்குதான் ஆதாமைஏதேன் தோட்டத்தில் சோதித்து பாவத்தின் துவக்ககாரராக மாற்றியது; மீண்டும் அதே விலங்குதான் மக்களை பாவத்தின் சங்கிலியால் அடிமையாக்கியது; அவர்களை மீட்டு நிறைவாழ்வளிக்க வந்த இயேசுவையும் சோதித்து அவரது மீட்புத் திட்டத்தை முறியடிக்க முயற்சித்தது. முதல் ஆதாம் ஆண்டவரின் உடனிருப்பினில் இல்லாததால் வீழ்ச்சியுற்றார். இரண்டாம் ஆதாம் ஆண்டவரின் உடனிருப்பால் அனைத்தையும் வென்றார். நாம் நமது சோதனைக் காலங்களில் ஆண்டவரை அறிந்து, அவரருகிலிருந்து பயணிப்போமானால் சாதிக்கலாம்.

## 4. காலமும் இறையாட்சியும் :

இறைவனின் தீர்ப்பு என்ற ஒரு நாள் நாம் நினைவிழந்த நிலையிலே, கடைசி மூச்சைப் பிடித்துக் கொண்டிருக்கும் தருணத்திலே வருவதென்று. மாறாக, வாழ்வின் ஒவ்வொரு மணித்துளிகளே. எனவேதான், ‘இறையரசு நெருங்கிவிட்டது’ என்று கூறும் இயேசு உடனே தொடர்ந்து “மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்” என்று அழைக்கிறார். ‘மனம் திரும்புதல்’ என்றால் அதன் உண்மையான நிலைக்கு திரும்புவது. கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்ட அது, நான், எனது என்ற சுயவெறியில் சிக்கித்தவிக்கிறது. அதில் இருந்து விடுபட்டு, அதற்குரிய பாவத்திலிருந்து விடுபட்டு, அன்பு, சமாதானம், நீதி நமது வாழ்வில் வேரடித்து வளர முயலவேண்டும். அப்போது இறையரசு நம்மில் நிஜமாகும். காலம் கைகூடும்போது நாமும் கடவுள் பாதம் சேர்வோம், அதற்கான வழி நாம் நற்செய்தியின் படி வாழ்வதாகும்.

## 5. இறுதியாக

இந்த தவக்காலம் நமக்கு கொடுக்கப்பட்ட ஓர் அருளின் காலம். இந்த காலத்தை சரிவர பயன்படுத்தி நாம் நமது ஆன்மீக முதிர்ச்சியை வளர்க்க வேண்டும். அதற்கான யுக்திகள் :

நமது பாவ, பலவீனமான வாழ்வை பரிசோதனை செய்ய வேண்டும்.

சாத்தானின் சூழ்ச்சிகளுக்கும், சோதனைகளுக்கும் எதிராக கடவுளின் உறுதுணையோடும், உடனிருப்பிலும் தொடர்ந்து போராட வேண்டும்.

நமது ஜெப,தப ஒறுத்தல் வழியாக நமக்குள் இருக்கிற பாவ வேர்களை அறுத்தெறிந்து, நம் அயலாரோடும், கடவுளோடும் உள்ள உறவை மேம்படுத்துவோம்.

கடவுளுக்காக வாழ அவரதரசில் இணைய தொடர்ந்து சோதனைகளை போராடி வெல்வோம்.

## தவக்காலம் முதல் வாரம் (திங்கள்)

லேவி 19:1-2, 11-18 மத் 24:31-46

**<u>மனித நேயத்தில் இறையாட்சி</u>**

வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் தீர்ப்பிடும் கடவுளின் முன் நிற்கிறோம். எனினும், நம் ஒவ்வொரு நினைவு, சொல், செயல், அனைத்தும் நமக்கு தீர்ப்பு அளிக்கின்றன. எனினும், இறுதித் தீர்ப்பு ஒன்று உள்ளது. அதில் அனைவரும் பங்குபெறுவோம் என்பது உண்மை. இந்த இறுதித் தீர்ப்பு பற்றி தவக்காலத்தில் தியானிப்பது, நமது வாழ்வு வளம்பெற, செயல்கள் செம்மையடைய உதவும். இந்த இறுதித் தீர்ப்பின் வழியாக இறையாட்சிக்கு உரிமையான குடிமக்களாகிய நமக்கு இருக்கும் மிகப் பெரிய வழி யாதெனில், "இறைநேயத்தில் ஊரிய மனிதநேய வாழ்வாகும்." இதை அறிந்து கொள்ள, நாம் கடவுளால் ஏன் படைக்கப்பட்டோம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அது என்னவென்றால், "கடவுளை அறிந்து, அன்பு செய்து, அவருக்கு சேவை செய்து, இறுதியாக மோட்ச பாக்கியம் அடைவதே" என்பதாகும்.

**<u>கடவுளை அறிவது :</u>**

கடவுளை நாம் முழுமையாக அறிந்திருக்க வேண்டுமென்றால் அவருடைய வார்த்தைகள் நிரம்பி வழியும் விவிலியம் அறிய வேண்டும். இதைத்தான் "இறைவார்த்தையை அறியாதவன் இறைவனை (இயேசுவை) அறியான்" என்பார் புனித ஜெரோம். இறைவார்த்தையில் மையம் கொண்ட வாழ்வை நாம் மேற்கொள்ள வேண்டும். அதனோடு சேர்த்து திருச்சபையின் படிப்பினைகளையும்,

திருவருட்சாதனங்களையும் அறிந்து, அனுபவித்து இறைவனில் சங்கமம் ஆக வேண்டும். இறைவார்த்தையை நமது வாழ்வின் பாதையாகவும், அப்பாதைக்கு ஒளியாகவும் பாவிக்க வேண்டும். விவிலியத்தில் வரும் அருள்நிறை கதாபாத்திரங்களோடு ஒப்புமைக் கொண்டு வாழ்வை சீரமைக்க வேண்டும். அப்படி செய்து வாழ்வை புனிதமாக்கிய புண்ணியர்கள், புனித அகுஸ்தினார், புனித இக்னேஷியஸ் லயோலா, புனித வனத்து அந்தோணியார், புனித சவேரியார், இன்னும் பலர் இவர்களைப்போல கடவுளுக்கு நெருக்கமானவர்களாக வாழ வேண்டும்...

**<u>கடவுளை அன்பு செய்வது :</u>**

இறைவனுக்கு எப்படி அன்பு செய்வது? அவருக்கே நாம் ஆளாவோம் என்பதை எப்படி எண்பிப்பது? அவரை நாம் எப்படி அடைவது? இவற்றிற்குரிய விடைகளே ஆண்டவன் நமக்களித்த பல்வேறு கட்டளைகள். இறைவனை அடைய நாம் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை இன்றைய முதல் வாசகம் நமக்கு தெளிவாய் எடுத்துரைக்கிறது. அவருடைய கட்டளைகளை வாழ்ந்து, நமது சாட்சியத்தின்படி அயலாரை வாழவைப்பது, அவர் நமது வாழ்க்கையின்வழி அல்லது நமது பிறப்பின்வழி வைத்திருக்கின்ற திட்டத்தை அவருடைய திருவுளப்படி நிறைவேற்றுவது அவருடைய அன்புத் திருமகன் இயேசுக் கிறிஸ்துவின்வழி வாழ்வை வாழ்ந்து இன்னொரு கிறிஸ்துவாக மாறுவது; போன்றவைகள் கடவுளுக்கு நமது ஆழமான அன்பை காட்டுவதற்கான வழிகோல்களாகும்.

**<u>கடவுளுக்கு சேவை செய்வது :</u>**

“அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்

இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே” என்று தாயுமானவர் அவர்களின் வார்த்தைக்கிணங்க, நமது வாழ்வில் அயலார் அன்புப் பணி செய்து அதில் நிறைவு காணும் பொழுது, நாம் அவரில் இருக்கும் இறைமைக்கு பணிசெய்கிறோம்; நம்முள் இருக்கும் தெய்வீகம் இன்னும் ஓங்கும் என்பதை புரிந்து கொள்ளலாம். ‘‘தம் கண்முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்கு புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. (1யோவா :4/20); மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளின் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என

உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன் (மத் 25/40) ; நீரும் போய் அவ்வாறே செய்யும் (லூக் 10/37) போன்ற வேதவசனங்கள் பிறரன்புக்கு மாதிரிகையாக, முடிவில்லா வாழ்வுபெற இன்றியமையாததாக அமையும். ஏழைகளுக்கு நாம் செய்யும் எந்தவொரு காரியமும் இறைவனுக்கு அளிக்கும் சேவையாகும். அச்சேவையை நேயமாக செய்து புனிதம் காண்போம்.

**<u>கடவுளுடைய மோட்ச பாக்கியம் அடைவது:</u>**

இறுதித் தீர்ப்பில், ஆண்டவர் நாம் செய்த பலிகள், ஜெபங்கள், வழிபாடு,தவம், ஒறுத்தல் முதலியவற்றிற்கு இரண்டாம் இடம் கொடுத்து அன்புப்பணி வாழ்வுக்கு முதன்மையான இடம் அளிக்கிறார். இந்த அன்புப்பணி வாழ்வானது "பசியாற்றி, தாகம்தீர்த்து, இடம் கொடுத்து, நிர்வாணம் நீக்கி, நோயில் சந்தித்து, சிறையில் உள்ளோரை உறவாடி அவருள் வாடும் (எசா :58/7) கல்வாரி இயேசுவை சேவிக்கும் போது மோட்சம் நமது வசப்படும். நாமும் மோட்சத்தின் அனுபவங்களாவோம். மனிதரோடு இருப்பதில் (இறை உருவாக, சாயலாக) பெருமகிழ்ச்சி அடைகிறேன் (நீமோ : 8/31) என்று கூறிய இறைவன், நாம் நமது மனித நேயம் காத்து அவருடைய படைப்பின் நோக்கிற்கு ஏற்ற வழ்வு வாழும்போது நம்மைஅவருடைய இறையாட்சியின் குடிமக்களாக உரிமைகொண்டாடுவார்.

"இறையன்பு இல்லா பிறரன்பு இல்லை
பிறரன்பு இல்லா இறையன்பு இல்லை"

## தவக்காலம் முதல் வாரம் (செவ்வாய்)

எசாயா 55:10-11 மத் 6:7-15

**<u>இறைவார்த்தையும் + ஆழமான ஜெப வாழ்வும் நிறைவாழ்வின் நங்கூரம்...</u>**

இன்றைய இறைவார்த்தைகளும், திருவழிபாடும் நமக்குணர்த்தும் செய்தி இறைவார்த்தையின் முக்கியத்துவம் செபவாழ்வு ஆகும்.

**<u>இறைவார்த்தை :</u>**

மனிதர்களாகிய நாம் அன்புச் சொற்கள், அதிகாரச்சொற்கள், கடுஞ்சொற்கள், கசப்பான சொற்கள், இனிய சொற்கள், இழிவான

சொற்கள் என்று பல ரகமான வார்த்தைகளை நமது வாழ்வினில் பயன்படுத்துகிறோம். இவையனைத்தையும் விட வாழ்வுதரும் வார்த்தையாக, இந்த பிரபஞ்சமேஉருவாக காரணியாக, அளவற்ற ஆற்றல் நிறைந்ததாக இருக்கும் வார்த்தை தேவ வார்த்தை. கடவுளின் வார்த்தைக்குக்கரை கட்டமுடியாது. ஒரு வார்த்தையானது முதலில் எண்ணங்களில் பிறப்பெடுத்து சொற்களால் வெளியிடப்பட்டு, செயலாக முழுமையடைகிறது. அப்படித்தான் இறைவார்த்தையும், பனியைப்போல, மழையைப்போல, கடவுளின் மனதில் எண்ணமாகிய வார்த்தையாகி, உருவாகி, அதனுடைய நோக்கை பூர்த்தி செய்கிறது. அதுபோல நாமும் கடவுளின் எண்ணங்களில் உதித்து, வார்த்தையில் உரவாகி, உடல் ? உள்ள ? ஆன்மாவோடு இவ்வுலகிற்கு வாழ வந்திருக்கிறோம். ஆக, நமது ஜீவியத்தின் நோக்கம் என்ன? அதற்காக நாம் வாழும் வாழ்வு முறை என்ன? அதற்காக நாம் எடுக்கும் யுக்திகள் யாது? இதை அர்த்தமுள்ளதாக்கும் வழியாக இந்த தவக்காலம் நமக்கு தரும் காரியங்கள் மூன்று 1. செபம், 2. தவம் 3. தருமம். இதில் செபத்தின் ஆழத்தையும் + முறைதனைப் பற்றியும் சிந்திக்க நற்செய்தி அழைக்கிறது.

**செப வாழ்வு :**

அதிகம் பேசுவதிலன்று, ஆழப் பேசுவதில்தான் செபம் பயனுள்ளதாக அமையும். எவ்வாறு மானுட தந்தைக்கும் தாய்க்கும் தம் பிள்ளைகளுடைய தேவைகள் தெரியுமோ, அது போன்று அல்லது அதைவிட மேலாக நம் விண்ணகத்தந்தைக்கு அனைத்தும் தெரியும். எனவே நாம் எப்படி ஆழமாக ஜெபிக்க வேண்டும் என்று நம் பெருமான் இயேசு அழகாக கற்பித்து எண்பிக்கிறார். அதன் வார்த்தையையும் விளக்கங்களையும் சற்று பார்ப்போம்.

எங்கள் தந்தையே : பல்வேறு பிரிவினைகளால் உடைந்துபோயிருக்கும் நமது மானுடம், மீண்டும் ஒரே குடும்பமாக, ஒரு தந்தையின் பிள்ளைகளாக, ஒற்றுமையின், சகோதரத்துவத்தின், சமத்துவத்தின் பிள்ளைகளாக அழைக்கிறார், நமதாண்டவர்.

**உமது பெயர் தூயதென போற்ற பெறுக:**

நமது வாழ்வும், வழியும் அவரது நாமத்தில் மையம் கொண்டிருக்க வேண்டும். அவருடைய அன்பில் மகிழ்ந்து அருளில் கனிந்து அவரை எல்லா வேளையும் புகழவும் வாயார வாழ்த்தவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

**உமது ஆட்சி வருக:**

ஊழலும், இலஞ்சமும் நிறைந்து, பிறர்நலமும், பொதுவுடைமையும் சிதைந்து நல்லதெனப் பார்க்கப்பட்ட இவ்வுலகமும், நாடும் கொஞ்சம் கொஞ்சமாக நரகமாக மாறி நாசமாகும் நிலைமாறி, இறையாட்சியின் மதிப்பீடுகளான அன்பு, சமாதானம், நீதி, சமத்துவம் கொண்டு ஆட்சியுற வேண்டும்.

**உமது திருவுளம் நிறைவேறுக:**

கடவுள் நம்மைஏன் இவ்வுலகில் படைத்தார், நமது வழியாக இப்புவியில் நிறைவேற்றப்படவேண்டிய இறைநோக்கு என்ன என்பதை, விவிலியம் மூலம் அறிந்து நமக்கு கொடுக்கப்பட்டுள்ள திறமையின்வழி தெரிந்து அதனை அறவழியில் அதிகரித்து, அன்புப்பணியின் வழியில் வாழ்வது ஆகும். அதற்காக ஆண்டவரிடம் நம்மையே முழுமையாக அர்ப்பணிப்பது.

**எங்கள் அன்றாட உணவைத் தாரும்:**

நம்முடைய எல்லாத் தேவைகளுக்கும் எவ்வித கவலையும் இன்றி, முழுமையான கடின உழைப்பைக் கொடுத்துவிட்டு, பலனிற்கும் நிறைவிற்கும் இறைவனின் தேவப்பராமரிப்பை முழுமையாக நம்பி இருப்பது நமது அன்றாட வாழ்விலே, நமக்கு உடற்பசி, உள்ளப்பசி, ஆத்துமப்பசி என்று மூன்று உணவிற்கென தவிக்கிறோம். இவை மூன்றையும் கடவுளின் பெருமிதத்தில் இருந்து பெற்று மகிழ வேண்டும். அதாவது உடற்பயிற்சி ? அவருடைய படைப்பில் இருந்தும், உள்ளப்பசிக்கு அவருடைய இறைவார்த்தையிலிருந்தும், ஆன்மப்பசிக்கு தேவநற்கருணை மற்றும் திருவருட்சாதனங்கள் செபங்களில் இருந்தும் புசிக்க வேண்டும்.

**நாங்கள் மன்னிப்பது போல, எங்களை மன்னியும்:**

மன்னிப்பு வேண்டுவது மனிதம், மன்னிப்பது புனிதம், நாம் கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டவர்கள் எனில் நம்மில் புனிதமாகிய மற்றவரை மன்னிக்கும் தன்மைவிளங்கி பலவீனமான மானுடமுறையில் நமது தவற்றிற்காக மன்னிப்பு கேட்கும் மனித நிலையில் சிறக்க வேண்டும்.

**<u>சோதனையில் விழவிடாதேயும் + தீயோனிடமிருந்து விடுவியும்</u>**

தவறுவது மனித இயல்பு. தவறி அதிலே உழல்வது கிறிஸ்தவ இயல்பு அல்ல. நமது பலவீனம் அறிந்து, அதற்கான விடுதலையை நமது ஆன்மீக ஆழத்தின் வழியால் பெற்றிடவேண்டும். அன்பு கருணை, பிறரன்பு, புண்ணியம், புனிதம் போன்றவற்றை இழக்காமல் தீயோனிடமிருந்து நம்மைகாத்துக்கொள்ள வேண்டும்.

## தவக்காலம் முதல் வாரம் (புதன்)

யோனா 3:1-10 லூக் 11 : 29-32

**<u>இயேசுவே மீட்பின் அறிகுறி</u>**

அழைத்த இறைவனின் குரலுக்கு செவிமடுக்காமல், தமக்கு எந்தவித தீங்கும் நேரிட கூடாது, எந்த பிரச்சனையும் வந்திடக்கூடாது என்ற சுயநலத்தின்பேரில் தப்பி ஓடிவிடுகிறார் யோனா. பிறகு அவருக்கு நடந்த அந்த 'கடல்' அனுபவத்தினால் தன் தவற்றிற்காக மனம் வருந்தி மனமாறி நினிவே நகரம் செல்கிறார். இவருடைய அடையாளம் என்னவென்று பார்க்கையில் " அடுத்தவரை மனமாற்றுவதற்கு முன்பதாக நாம் மனமாற வேண்டும்" என்பது ஆகும். கடவுள் நமக்கு அளித்த அழைத்தலை ஏற்று, அவரில் தஞ்சம் கொண்டு "உலகம் முடியும்வரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கிறேன்" (மத் :28/20) என்றுரைத்த அவருடைய உடனிருப்பில் எல்லா தடைகளையும் தாண்டி அதாவது சாதி, இனம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து இறையாட்சிக்கு சான்று பகர்வோம்.

யோனா மொழிந்த, 'நாற்பது நாளில் அழிவு' என்ற வார்த்தையை கேட்ட மக்கள் உடனடியாக தங்களுடைய பாவ வாழ்க்கையிலிருந்து வழிதிரும்பி மனமாறி கடவுளை பற்றிக்கொண்டனர். கடவுளும் மனமிறங்கி மன்னித்தார். நாம் கற்றுக்கொள்ளவேண்டி விஷயம் என்னவெனில் "நாம் மனமாறினால் தேவன் மனமிறங்குவார்" இதற்காக நமக்கு கொடுக்கப்பட்ட தூய்மையாக்கும் இந்த 40 நாள் தவக்காலம் தவம் இருந்து தூய்மைடைய இறைவன் நம்மைஅழைக்கிறார்.

இத்தவக்காலத்திலே, நம் கண்முன்னும், நம் கருத்திலும் என்றும் இருக்க வேண்டியவர் இயேசு கிறிஸ்து ஒருவரே, என்பதையும் அவருடைய இணையில்லாத தியாகப் பேரன்பே என்பதையும் இன்றைய நற்செய்தி நமக்கு விளக்குகிறது. அவரது உயிர்தரும் வார்த்தைகளே நமக்கு வழியும் வாழ்வுமாய் இருக்க வேண்டும்.

அதைவிடுத்து வெளிப்புற அறிகுறி, அடையாளம், புதுமைகள், சாட்சியங்களைத் தேடக்கூடாது, இயேசுவில் மையம் கொண்ட மனிதர்களாக, அவர்மீது இருக்கும் விசுவாசத்தில் ஜொலிக்கும் கிறிஸ்தவர்களாக நாம் வாழ வேண்டும். அவரே நமது மீட்பின் அறிங்குறி, நாமேஅதன் அடையாள சாட்சியங்கள் என்று வாழ வேண்டும்.

## நாம் அவரது அடையாளங்களாகும் முறைகள் :

நினிவே மக்கள் மனம் திரும்பியது போல,நாமும் இயேசுவின் படிப்பினைகளை கேட்டு அவருடைய மதிப்பீடுகளை ஏற்று மனம்திரும்பி விசுவசிக்க வேண்டும்.

அவருடைய படிப்பினைகள் மட்டுமன்று, அவருடைய வாழ்வு, தியாகம், கல்வாரி துயரம், மரணம், உயிர்ப்பு, போன்றவைகளை ஓர் உயர்ந்த அடையாளமாக விசுவசித்து இன்னொரு இயேசுவாக வாழ முயல்வோம்.

யோனாவை போன்று, தென்னாட்டு அரசிக்கு ஞானமகன் சாலமோனை போன்று, மோசேவை போன்று இறைவாக்கினர்களை போன்று, அப்போஸ்தலர்களை போன்று, முதலில் தான் மனமாறி,பிறகு நமது வாழ்வினால் மனமாற்றிட அடையாளங்களாக வேண்டும்.

இதனால் நாம் படும் துன்பங்கள், சவால்கள், வேதனைகள் அனைத்தாலும் இயேசுவின் பாடுகளில் பங்கு கொள்கிறோம் என்ற ஆன்மீகத்தை வளர்த்து கொள்ள வேண்டும்.

நாம் பிற மக்களுக்கு அடையாளமாக நான், எனது எனக்கு என்ற சுயவெறியை அகற்றி பிறருக்காக, ஏசுவையை போன்று வாழ முயற்சி செய்ய வேண்டும்.

இந்த மனமாற்றம் இரண்டு வகையில் வெளிப்படலாம்.

மெதுவாக (Gradual Conversion) இடைவிடாத செபத்தாலும், தவத்தாலும், ஒறுத்தலாலும் இருக்கலாம்.

திடீரென இது இறைவனின் வெளிப்பாட்டினால், எடுத்துக்காட்டாக யோனாவின் கடல் அனுபவம், பவுலின் தமஸ்கு அனுபவம், இன்னும் பல.

நமது வாழ்வில் இரண்டும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அதை தெளிவுற அறிந்து அதனை வாழ்வாக்க முயல்வோம், கிறிஸ்துவின் சாட்சி அடையாளங்களாகுவோம்.

## தவக்காலம் முதல் வாரம் (வியாழன்)

1 பேதுரு 5:1-4 லூக் 16 : 13-19

**அழைப்பு உழைப்பதற்கே, பிழைப்பதற்கல்ல!**

இன்று நமது வாழ்க்கையிலே, ஒவ்வொருவரும் ஓர் அழைப்பு பெற்றிருக்கின்றோம். அவை ஒவ்வொன்றும் உழைத்து உன்னத தேவனை மகிமைப்படுத்துவதற்கும், நமது ஆத்துமத்தை புனிதப்படுத்துவதற்கே. ஆனால் பலவேளையில் நாம், நமது புகழையும், செல்வத்தையும், பேரையும் அதிகரித்துவிட்டு, இறைவனை நமது பிழைப்புக் காரணியாக பயன்படுத்திக்கொள்கிறோம். ஆனால் இதற்கெல்லாம் விதிவிலக்காக வந்தவரே புனித பேதுரு. சாதாரண ஒரு ஏழ்மைப் பகுதியான கலிலேயாவிலே, மீனவ குடும்பத்தில் பிறந்து, படிப்பறிவில்லாமல், மீன்பிடித் தொழிலை செய்தவர். ஆனால், ஆண்டவரின் அழைத்தலால் அன்று முதல் "மனிதரை பிடிப்பவர் ஆனார்" (லூக் 5/10) அதுமட்டுமல்ல மிகப்பெரிய மந்தையாம் திருச்சபையை கட்டிக்காக்கின்ற நல்ல ஆயனாக மாறினார். திருச்சபையின் தூணாகவும், வித்தாகவும் வாழ்ந்தார். எல்லாம் ஆண்டவரின் அழைப்புச் செயலாலே. அந்த அழைப்புச் செயல் என்னவெனில், "தகுதியுள்ளோரை அழைப்பது அன்று; மாறாக அழைத்தோரை தகுதிப்படுத்துவதாகும். உயர்ந்தோரை அழைப்பதல்ல, மாறாக அழைத்தோரை உயர்த்துவது. இது எங்கன மாகும் என்றால் தாழ்ச்சியும் உழைக்கும் உள்ளமும் அவரை ஜெபத்தினாலும், அறநெறியிலும் அறியும் போதுதான். புனித பேதுரு ஆண்டவரின் அழைப்பை ஏற்றார், உழைத்தார், அவரை அறிந்தார், அனுபவித்தார், அறிவித்தார். சில நேரங்களில் தவறினார், மீண்டும் எழுந்தார், இன்று ஆண்டவரால் மேலோங்கி உயர்த்தப்பட்டுள்ளார்.

**லூக் : 22/54-62**

பேதுரு மூன்றுமுறை இயேசுவை மறுதலித்தார் ? அதன்பின் மனம்நொந்து அழுகிறார். தவறுவது மனித இயல்பு, மனமாற்றம் அடைவது இறை இயல்பு. ஒவ்வொரு புனிதருக்கும் இறந்த காலம் என்று உண்டு, ஒவ்வொரு பாவிக்கும் ஒரு எதிர்காலம் உண்டு. இதனை அறிந்து பேதுருவை போல மனம்மாறி புனிதமான எதிர்காலம் உருவாக்குவோம்.

**2. மத் : 16/18**

“நீ பாறை, இந்த பாறையின்மீது என் திருச்சபையை கட்டுவேன்” விசுவாசத்தை நமது வேராக்குவோம். ஆசீரை பெறுவோம்.

**3. மத் : 16/19**

“விண்ணரசின் திறவுகோல்களை நான் உம்மிடம் தருவேன்” அதாவது இது ஓர் உயர்ந்த அதிகாரத்தின் அடையாளம். நாமும் ஆண்டவரை முழுமையாக அறிந்து, மனமாறி அழைப்பிற்கு ஏற்ற வாழ்வு வாழும் போது இந்த பாக்கியம் நமக்கு கிடைக்கும்.

**4. மத் 16/19 :**

‘‘மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும். இது இயேசு பிரதிபலித்து, இன்னொரு இயேசுவாக வாழ பணிபுரிய வாழ்வுகொடுக்க கொடுக்கப்பட்டது ஆகும்.

**5. யோவா : 21/15-19 :**

“என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்” இயேசுவைப்போல பேணிக்காக்க வேண்டும். சுயநலம் மறந்து, தியாகம் நிறைந்து, சொந்தத் தேவைக்காக, புகழுக்காக, பணத்திற்காக அழைப்பை உதாசினப்படுத்தாமல், ஆண்டவருக்காகவும் அவருடைய மந்தையின் புனிதத்திற்காகவும் வாழ்வது. எனவே, பேதுருவை பின்பற்றி நமது அழைப்பை ஆண்டவருக்கான உழைப்பாக்குவோம்; நமக்காக உள்ள பிழைப்பு நிலையை உடைத்தெரிப்போம்.

இவரைப்போன்று

சிதறிப்போன மந்தையை ஒன்று சேர்ப்பவராக (ஏசே. 34/11)

காயமுற்றவர்க்குக் கட்டுப்போடுவராக (எசா 34/16)

இருப்பதை பகிர்பவராக (திபா : 2/42)

அன்பில் நிலைத்திருப்பவராக (1கொரி : 13/13)

உயிரையே கொடுப்பவராக (யோவ : 10/11)

நமது அழைப்பு வாழ்விலே உழைப்போம், இருப்பதைக் கொடுப்போம், பிறருக்காக நம்மைஇழப்போம். இயேசுவில் நிறைவாழ்வு காண்போம்.

## தவக்காலம் முதல் வாரம் (வெள்ளி)

எசே 18:21-28 லூக் 5 : 20-26

**ஆண்டவரிடமிருந்து அயலாரிடமிருந்தும் நம்மை அன்னியப்படுத்தும் சினம்**

ஒரு ஊரில் செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவர் இருந்தார். அவர் செருப்பை தைக்கும் தொழிலைச் செய்து வந்தாலும் நாட்டு நடப்புகளை மிகத் துல்லியமாக அறிந்திருந்தார்.

அப்படிப்பட்டவர் ஒரு நாள் பக்கத்து ஊரில் நடைபெற்ற விவாதமேடை அரங்கிற்குச் சென்றார். அதுவோ ஆங்கிலத்தில் விவாதம் நடக்கும் அரங்கம் அவரைத் தவிர அங்கு வந்த மற்ற அனைவரும் மெத்தப் படித்த மேதாவிகள் போன்றும் பணக்காரர்கள் போன்று இருந்தார்கள். இவர் மட்டும் மிகவும் சாதாரண உடையில் இருந்தார். இவருடைய தோற்றத்தைப் பார்த்த ஒருவர். "உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா? என்றார் அதற்கு இவர். "எனக்கு ஆங்கிலம் எல்லாம் தெரியாது" ஆனால் யார் தவறு செய்கிறார் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்" என்றார் செருப்புத் தைக்கும் தொழிலாளி

"அது எப்படி"? என்று வினவி நின்ற மனிதரிடம், "யார் கோபப்பட்டு பேசுகிறாரோ, அவரே தவறு செய்கிறார் எனக் கண்டுகொள்வேன்" என்றார்

கோபப்பட்டு பேசுவோர் அல்லது சினம் கொண்டு பேசுவோர் சரியாகப் பேசுவதில்லை என்கிற உண்மையை இந்த நிகழ்வானது நமக்கு எடுத்துரைக்கின்றது.

கொலை செய்வதோ அல்லது பிறரை அடித்துக் கொடுமைப்படுத்துவதோ இரண்டாம் பட்சம் தான். ஆனால் அதற்கு அடிநாதமாய் இருப்பது இந்த சினம்தான் ஒருவர்மீது கொள்ளும் சினம். அவரைக் கொலைசெய்யும் அளவுக்கு இட்டுச் சென்றுவிடுகிறது என்பதை ஆண்டவர் இயேசு மிக அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார். ஆகவே, சினத்தை நம்முடைய உள்ளத்திலிருந்து அப்புறப்படுத்தும்போது கொலை செய்வதற்கான தூண்டுகை இருக்காது என்பது உண்மை.

மனிதர்கள் தங்களுடைய வாழ்வில் கொள்கிற சினத்தை மூன்றுவிதங்களில் பகுத்துப் பார்க்கலாம்.

முதலாவது வகையான சினம் இயலாமையின் வெளிப்பாடாக வருகின்ற சினம். எடுத்துக்காட்டாக வீட்டில் இருக்கும் குழந்தைகள்

தாங்கள் கேட்டது கிடைக்காதபோது சினம் கொள்கிறார்களே அது. இதனால் பாதிப்பு பெரிதாக எதுவும் நிகழ்ந்துவிடப் போவது கிடையாது.

இரண்டாவது வகையான சினம் அறச் சினம் சமூகத்தில் நடக்கும் அநீதிகளைக் கண்டு எழுகின்ற கோபம். ஆண்டவர் இயேசு எருசலேம் திருக்கோவிலில் வாணிபம் நடத்திவந்தவர்கள்மீது சினம் கொண்டாரே அந்த வகையைச் சேர்ந்தது. இன்றைக்கும் நம் கண்முன்னே நடக்கும் அநீதிகளைக் கண்டும் காணாமலும் அறச் சினம் கொள்ளாது இருப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது.

மூன்றாவது வகையாக சினம் பகைமையின், வன்மத்தின் வெளிப்பாடாக வருகின்ற சினம். இது மிகவும் அழிவைத் தரக்கூடியது. இயேசுவும் அவருடைய சீடர்களும் எருசேலம் நோக்கிப் போகும்போது இடையே அவர்களை சமாரியர் சிலர் தங்களுடைய ஊர்கள் வழியாக போக அனுமதிக்காதபோது இடியின் மக்களாகிய யாக்கோபு யோவானும். “ஆண்டவரே! இவர்களை வானத்திலிருந்து மின்னல் வந்து அழிக்கச் செய்யட்டுமா”? என்று கேட்கிறார்களே அதுதான் பகைமையின் வெளிப்பாடாக வரக்கூடிய சினம். இதனால் எல்லாருக்கும் அழவுதான். அதனால்தான் இயேசு தம்மிடம் இப்படிக் கேள்வி கேட்ட யாக்கோபையும் யோவானையும் கடிந்து கொள்கிறார். ஆகவே, இத்தகைய சினம் நம்மிடம் இருக்கும்போது அது மிகவும் அழிவைத் தரும் என்பதால் தான் ஆண்டவர் இயேசு அப்படிச் சொல்கிறார்.

ஆகவே, நம்முடைய அன்றாட வாழ்வில் அடுத்தவர் மீது சினம் கொள்ளாதிருக்க முயற்சி செய்வோம், ஒருவர் மற்றவரோடு நல்லுறவோடும் தூய அன்போடும் வாஞ்சையோடும் இருக்கக் கற்றுக்கொள்வோம். அதன்வழியாக இறையருளை நிறைவாய் பெறுவோம்.

## தவக்காலம் முதல் வாரம் (சனி)

இச 26:16-19 மத் 5 : 43-48

**பகைவருக்கு அன்பு**

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண

நன்னயம் செய்து விடல்”

என்பது திருக்குறளின் உயரிய சிந்தனை. இயேசு பெருமான் இதைவிட ஒருபடி மேலாக, “உங்கள் பகைவரிடமும் அன்பு செய்யுங்கள். உங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்” என்கிறார்.

இன்றைய நற்செய்தியில் வரும் ஒவ்வொரு வாசகமும், ஆழமானது நம்மைநாமேநெறிபடுத்திக்கொள்ள அருளப்பட்டது. ஆழ்ந்து நுண்ணறிவோடு படிக்கின்றபொழுது, நம்மிடமுள்ள கடினத்தன்மை, மெல்ல மெல்லக் குறையத் தொடங்கும். "நீங்கள் உங்கள் பகைவர்களிடம் அன்பாய் இருங்கள்" அடுத்தடுத்து அவர் கூறும் கருத்துகளுக்கு. இக்கருத்து முத்தாய்ப்பாய இருப்பதை நம்மால் உணர முடிகிறது. பகைவர்களிடம் அன்பாய் இருப்பது, அவ்வளவு எளிதல்ல பக்குவப்பட்ட மனம் இருந்தால்தான் இதைச் செய்ய இயலும்.

கடந்த நூற்றாண்டில் லெபனானில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான கலவரம் வெடித்தபோது இஸ்லாமியர்கள் ஏராளமான கிறிஸ்தவ தேவாலயங்களை தீக்கிரையாக்கினார்கள். நிறைய கிறிஸ்தவர்களை கொன்றுபோட்டார்கள். எங்கும் போர்க்களம் போன்று காட்சியளித்தது.

அந்த நேரத்தில் ஒரு குருமாணவர் கலவரக் கும்பலிடம் சிக்கிக்கொண்டார். அவரை அவர்கள் பொது இடத்தில் வைத்து சுட்டுத் தள்ளுவது நல்லதல்ல, மலைப்பாங்கான ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று, அங்கே அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லும்படி ஒருவரிடம் அந்த பொறுப்பை ஒப்படைத்தார்கள். எனவே இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஒருவன் குருமாணவரைக் கொல்வதற்காக மலைப்பாங்கான ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றான்.

குருமாணவர் சில ஆண்டுகள் இராணுவத்தில் பணிபுரிந்திருந்ததால், அவருக்கு அந்த இஸ்லாமியனிடமிருந்து எப்படி தப்பிப்பது என்ற வழி தெரிந்திருந்தது. ஆள் வேறு வாட்டச்சாட்டமாக இருந்தார். இஸ்லாமியனுக்குப் பின்னால் அமைதியாகப் போய்க்கொண்டிருந்தவர் திடிரென்று அவன்மீது பாய்ந்து, அவன் வைத்திருந்த துப்பாக்கியைக் கைப்பற்றி, அவனை மிரட்டத் தொடங்கினார். அவன் பயந்து நடுக்கினான். தெரியாமல் இப்படிச் செய்துவிட்டேன் என்னை மன்னித்தருள்க என்று கெஞ்சிக் கேட்டான்.

அப்போது குருமானவர் ஆண்டவர் இயேசு சொன்ன, "உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்" என்ற வார்த்தையை நினைத்துப் பார்த்தார். உடனே தன்னுடைய கையிருந்த துப்பாக்கியைத் தூர எறிந்துவிட்டு அந்த இஸ்லாமியனிடம், ''நான் உன்னை மன்னித்துவிட்டேன், நீ இங்கிருந்து போய்விடு" என்றார். உடனே அவன் உயிர் பிழைத்ததே போதும் என்று தலைதெறிக்க ஓடினான்.

ஆனாலும் அவனுக்குள் ஒரு பயம், எங்கே குருமாணவர் தூர எறிந்த துப்பாக்கியை எடுத்து, தன்னைச் சுட்டுவிடுவாரோ என்ற சந்தேகத்தில் திரும்பிப் பார்த்தான். ஆனால் குருமாணவரோ மிகவும்

சாந்தமாக மலையிலிருந்து கீழே இறங்கிக்கொண்டிருந்தார். உடனே அவன் குருமாணவரிடம் ஓடிச்சென்று, அவருடைய காலில் விழுந்து, “என்னுடைய குற்றத்தை மன்னித்ததோடு மட்டுமல்லாமல், என்னைக் கொல்லாமல் விட்டீர்களே, அதற்காக நன்றி” என்று சொல்லி கண்ணீர் மல்க நின்றான். குருமாணவர் அவனை முழுமையாக மன்னித்துவிட்டதாகச் சொல்லி அவனை அங்கிருந்து அனுப்பி வைத்தார்.

தன்னைக் கொல்ல நினைத்தவனையும் மன்னித்து அன்பு செய்த குருமாணவர் பகைவனை எப்படி அன்புசெய்யவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

இப்படி நாம் பகைவர்களை அன்பு செய்கிறபோது விண்ணகத் தந்தையின் மக்களாகின்றோம் என்று இயேசு சொல்கிறார். நமது விண்ணகத் தந்தை தீமைசெய்பவர்களுக்கும், தவறான வழியில் நடப்போருக்கும் தன்னுடைய அருள்மழையைப் பொழிகின்றார். அவர்கள்மீது கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நாமும் அவரைப் போன்று பகைவர்களை, வெறுப்பவர்களை, தீங்கு செய்பவர்களை மன்னித்து, அன்பு செய்யும்போது அவரது மக்களாகின்றோம் என்பது உண்மை.



## தவக்காலம் இரண்டாம் ஞாயிறு

தொ.நூ 22:1?29 ; உரோ 8 : 31?34 ; மாற்கு 9 : 2?10

அருட்பணி. பிரான்சிஸ் அசிசி, SdC
கடலூர்

**மறையுரை :**

இயேசுவில் பிரியமானவர்களே! அப்போஸ்தலர்கள், இறைவாக்கினர்கள், மூவொரு இறைவன் சந்திக்கும் நிகழ்வை இன்று நாம் இயேசு உருமாற்றத்தின்போது நாம் காண்கின்றோம். இயேசு பணித்தளத்தில் இறங்கிய போது, கடவுளின் குரல் அவரைத் தயாரித்தது. தற்போது அதே குரல் அவரின் பாடுகளுக்கு தயாரிக்கிறது. இன்பமயமாக, ஒளிமயமாக உருமாற்றம் பெற்ற இயேசு ஒலிவ மலைக்குக் கடந்து சென்றார். ஆம்! இந்த தாபோர் மலை அனுபவம்தான் ஒலிவ மலைக்குச் சென்று இரத்த வியர்வை அடையவும், கல்வாரியில் உயிர் கொடுக்கவும் துணிவைத் தந்தது இயேசுவுக்கு. இயேசுவின் இந்த மலையனுபவம்தான் நம்மைஇரச்சிப்புக்குள்ளாக்க காரணமாக இருக்கின்றது. மலையனுபவம் என்பது ஆனந்தமான அனுபவம். ஆகவேதான் மனிதர்கள் மலைவாச தலங்களுக்கு பயணம் செய்கிறார்கள். மலைகள் சப்தமிடுவதில்லை. மலைகளில் வாழும் மக்களும் இயற்கையோடு அமைதியாகவே வாழ்கிறார்கள்.

**மேலும் விவிலியத்தில் மலையனுபவத்தின் முக்கியத்துவம்:**

- ஆபிரகாம் மொரியா மலைக்கு ஏறிச்சென்று கடவுளிடம் வேண்டினார். ஆபிரகாமின் பலியால் ஈசாக்கின் வழியாக ஒரு பெரும் சக்தி உருவானது.
- மோசே சீனாய் மலையில் கடவுளிடம் வேண்டினர். கட்டளைகள் இஸ்ரயேல் மக்களுக்கு கிடைத்தது.
- எலியா கார்மேல் மலைக்கு ஏறிச்சென்று கடவுளிடம் வேண்டினார். உண்மைதெய்வம் யாரென்று தெரிந்தது.
- இயேசு தாபோர் மலைக்கு சென்றார். கடவுளின் மீட்பு நிகழ்ந்தது.

தாபோர் மலையில் ஆபிரகாம் தன் மகனை பலி செய்ய கூடாது என கூறிய இறைவன் தன் மகனை பலியிட துணிகிறார். இங்கே இருந்து விடலாம் என கூறிய சீடர்களிடம் ஒரு புதிய கட்டளையாக மக்களிடம் பணி செய்ய வேண்டும் என கூறுகிறார். மூன்று சீடர்களுக்கும் உண்மையான தெய்வ நிலையை உணர செய்கிறார்.

திருச்சபை மூன்று வழிபாட்டு ஆண்டுகளிலும் தவக்காலத்தின் 2?ம் ஞாயிற்றை இயேசுவின் உருமாற்ற நிகழ்வை தியானிக்க நம்மைஅழைப்பதன் மூலம் அதன் முக்கியத்துவம் நன்கு உணர்த்தப்படுகிறது. துன்பம் இன்றி இன்பம் இல்லை என்ற வாழ்க்கைபாடத்தை இந்த நிகழ்வு நம்மைதியானிக்க அழைக்கிறது.

மலை உச்சியை நோக்கிய இரு பயணங்களுமேஇறைவனோடு ஆழமான உறவு கொள்வதற்காக, இரண்டுமேசெப அனுபவ திருப்பயணங்கள். தன் ஒரே மகனை பலியிடத் தயாராகும் ஆபிரகாமின் விசுவாசம் மலைக்குன்றின் மேலிட்ட தீபமாக எரிந்து ஒளிர்கிறது. விசுவாசத்தின் தந்தையாக அவரை உயர்த்தியது. தன் தந்தையின் விருப்பத்திற்காக தன்னையே பலியாக்க தயாராகும் இயேசுவின் பயணம்.

மாற்றம் : இயற்கையில் எந்த பொருளும் தனது பழைய உருவத்தை இழந்த பின்னர்தான் புதிய உருவைப் பெற இயலும். கோதுமைமணி முளைப்பதற்கு முன் அது மண்ணில் விழுந்து மடிய வேண்டும். சந்தனக்கட்டை மணம் கொடுப்பற்கு முன் அது அரைக்கப்பட வேண்டும். கரும்பு வெல்லமாக மாறுவதற்கு முன் அது தம்மையே மாற்ற வேண்டும். கையில்இழுத்து மாவு அரைக்கும் அம்மி குழவியை, மிக்சி கிரைண்டராக மாற்றி வைத்திருக்கின்றோம். விளக்கை மாற்றி பல்பை வைத்து வெளிச்சத்தை மாற்றி வைத்திருக்கிறோம். ஆகவே மாற்றத்தை நம் உள்ளத்திலும் கொண்டு வந்து புத்தொளி பெற்றிட தொடர்ந்து முயல்வோம்.

உரோமையில் ஒரு நாணயம் இருந்ததாம். அதன் ஒரு பக்கத்தில் காளைமாட்டின் உருவமும், மறுபக்கம் ஏர்கலப்பையும், பலிபீடமும் பொரிக்கப்பட்டிருக்குமாம். காளைமாடு வாழ்வு முழுவதும் உழுகின்ற தொழில் செய்ய வேண்டும் அல்லது பலிக்காக கொல்லப்பட வேண்டும் என்பதே அதன் பொருள். அது போலவே கிறிஸ்தவனுக்கு வாழ்வு என்பதே ஒன்றே. வாழும் போது கிறஸ்துவுக்காகவே வாழ்தல். இறக்கும் போதும் கிறிஸ்துவுக்காகவே மடிதல். கிறிஸ்துவைப்போல் பிறருக்காக வாழ்தல். பிறருக்காக பலியாதல். பலி ஒப்புக்கொடுப்பதை நிறைவுள்ளதாக்க வேண்டுமாயின் நாம் பலிபொருளாக மாறிப் பலியாக வேண்டும்.

## தவக்காலம் இரண்டாவது வாரம் (திங்கள்)

**இரக்கத்தோடு இருப்போம் :**

? இறக்கதான் பிறந்தோம் இருக்கும் வரை இரக்கத்தோடு இருப்போம்? ? அன்னை தெரசா. திருச்சபையானது இரக்கத்தின்

கூடாரமாகவும் அனைவரையும் வரவேற்று, அன்புசெய்து மன்னிக்கும் ஸ்தலமாக மாறவேண்டும் என்கிறார் நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அது ஒரு வெயில் காலம், சுட்டெரிக்கும் வெயிலில் நடந்துச் சென்றால் வெப்பம் காலைசுடும், பசிமயக்கம், கால்களில் செருப்பு அணிய கூட கஷ்டப்படும் மனிதர் ஒருவர் வெயிலின் கொடுமையை தாங்க முடியாமல் water bottle- லே கயிறு கட்டி அதனை நசுக்கி தனது பாதங்களுக்கு செருப்பாகினார். இதனைக் கண்ட ஒரு பணக்கார சிறுவன் இரக்கம் கொண்டு தான் சேமித்து வைத்த பணத்தில் அவருக்கு காலணிகளை வாங்கி கொடுத்தான். இதனை கண்ட ஏழை மனிதனின் கண்களில் கண்ணீர். அந்த சிறுவனின் தந்தையின் மனதில் ஆனந்தம். மனிதர்களின் நிலைகளைக் கண்டு தீர்ப்பிடுவதை விடுத்து அவர்களின் நிலைக்கண்டு மனமிரங்குவதே மனிதநேயத்தின் உச்சம். அவர்கள் நமக்கு செய்யும் தீங்கிலிருந்து மன்னிப்பது தேவநேயத்தின் உச்சம். இவை இரண்டும் கொண்டிருந்தால் நாம் இந்த உலகில் வாழும் தெய்வங்களாவோம். பிறருடைய குறைகளை விடுத்து விட்டுக்கொடுத்து, மறந்து மன்னித்து, மனித நேயத்தை வளர்த்து, மனித மாண்புக்காக உழைத்திடுவோம்.

?ஆமென்.

## தவக்காலம் இரண்டாவது வாரம் (செவ்வாய்)

**தாழ்ச்சி இருந்தால் வீழ்ச்சி இல்லை :**

அகந்தை, அகம்பாவம், அதிகாரம், பணபலம், படைபலம், உயர்நிலை எண்ணங்கள் எல்லாம் ஒரு மனிதனை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்வதில்லை. ஒரு மனிதனின் கனிவான பேச்சும் அவனது அன்பு பணிகளும் அதனால் விளையும் தாழ்ச்சியும் பொறுமையுமோ ஒரு மனிதனை உயர்நிலைக்கு இட்டுச்செல்லும் மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து முளை அரும்பி வளரச் செய்து விதைப்பவனுக்கு விதையையும் உண்பவக்கு உணவையும் கொடுக்காமல் அங்கு திரும்பிச்செல்வதில்லை. அதுபோல என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும் அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை எசாய (55:10?11) அதுபோல அன்னை தெரசாள் அந்த கடைக்காரரிடம் எச்சில் எனக்கு போதும் என்னை நம்பி இருக்கும் ஏழை குழந்தைகளுக்கு ஏதேனும் கொடும் என்றபோது இருந்த தாழ்ச்சி நாம்

குடும்ப உறவுகளில் ஏன் இல்லை. நமது சொல்லும் செயலும் வாழ்வின் எல்லா நிலைகளின் பிரச்சனைகள், துன்பத்திற்கு காரணமாய் இருக்கின்றது. அவர்கள் சொல்வதை கேளுங்கள் ஆனால் செய்வதை கடைபிடிக்க வேண்டாம் என்கிறார் நம் ஆண்டவர். ஒரு வார்த்தை காயப்படுத்தும் அதுவே குணப்படுத்தும், ஒரு வார்த்தை அன்புறவை உண்டாகும் அதேவார்த்தை பிரிவினையை ஏற்படுத்தும். ஆகவே நம் சொல்லும் செயலும் ஒன்றானால் வாழ்க்கை நன்றாகும். தாழ்ச்சி இருந்தால் அங்கே வீழ்ச்சி இல்லை எழுச்சி மட்டுமேஇருக்கும்.

?ஆமென்.

## தவக்காலம் இரண்டாவது வாரம் (புதன்)

**உண்மையான பணியாளனே சிறந்த தலைவன் :**

உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் பெரியவராக இருக்கவிரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர். உங்களுக்கு பணியாளராக இருக்கட்டும். ஒருவருடைய வாழ்வில் உடலுழைப்பை கொண்டு பொருளை ஈட்டுகிறான். பிறகு பொருளை இழந்து உடலை பெறுகிறான். நாம் அனைவரும் பதவிக்கும், பட்டத்திற்கும், பணத்திற்கும் ஆட்சிக்கும், அதிகாரத்திற்கு சண்டையிடுகிறோம். ஒருமுறை பணக்காரன் ஒருவன் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தான். தன் பணப்பலத்தையும், ஆடம்பரத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தினான். அவன் மகன் தூரதேசத்தில் படித்து முடித்துவிட்டு வீடு திரும்பினான் அவனிடத்தில் தங்கள்குடும்பத்தின் ஆஸ்தியையும், பணப்பலத்தையும் காட்ட விரும்பினான். ஆகவே ஏழை மக்களின் ஏழ்மையை மகனுக்கு உணர்த்த விரும்பினான். அவன் நகர்வலம் முடிந்து வீடு திரும்பியபோது தந்தையிடத்தில் நாம் சுயநலமாக வாழ்கிறோம் நம்மிடத்தில் உள்ளதை ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும். எல்லாருக்கு எல்லாமாக இருக்க வேண்டும் என்று தந்தையிடத்தில் கூறினான். அதுபோல நம்மிடத்தில் உள்ள அனைத்து ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டவர்கள், சமுதாயத்தால் புறந்தள்ளப் பட்டவர்களுக்கு உதவிச் செய்ய வேண்டும். தலைவனாக இருக்க விரும்புகிறவர்கள் தொண்டனாக இருக்க வேண்டும் போட்டி, பொறாமை, சண்டை, பூசல் இருக்கக்கூடாது என்று நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தம் சீடர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

## தவக்காலம் இரண்டாவது வாரம் (வியாழன்)

**இறையன்பும் பிறரன்பும்:**

ஏழையின் சிரிப்பினில் இறைவனைக் காண்கிறோம். கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக்கொண்டு தம் சகோதரர், சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது (யோ 4 : 20) ஒருவர் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டு இருந்தார். அப்பொழுது வெளியில் தன் இரு குழந்தைகளோடு தாயானவள் பசியோடு அமர்ந்திருப்பதைக் கண்டு மனமிரங்கி அவர்களை உண்பதற்காக உள்ளே அழைத்தார். அவர்கள் வயிறார உண்ணுவதற்கு தேவையான உணவினை வாங்கிக்கொடுத்தார். இதனை கண்ட ஹோட்டல் உரிமையாளர் பில் தொகையை அச்சிடும்போது மனித நேயத்திற்கு கட்டணம் இல்லை என்ற வாசகத்தோடு பில் கொடுக்கப்பட்டது. ஆகவே உணவு, உடை, உறைவிடம் மனிதனின் அத்தியாவசிய தேவை. இதனை கண்டுக்கொள்ளாதோர் மனித இனத்திற்கு எதிரானவர்கள். நமது இந்திய மக்கள் தொகையில் 190.7% சதவீதபேர் ஒருவேளை உணவு கூட இல்லாமல் படுக்கைக்கு செல்கிறார்கள். இதில் 38.4% குழந்தைகள் ஒரு வேளை உணவிற்கு கஷ்டப்படுகிறார்கள். 24% சதவீத குழந்தைகள் உணவுப்பற்றாக்குறையால் இறந்து பேகிறார்கள். பாரதியின் சொல்லிற்கு ஏற்ப தனிமனிதனுக்கு உணவு இல்லையேல் ஜெகத்தினை அழித்திடுவோம் இருப்பதை இல்லாதவருக்கு பகிர்ந்து வாழ்வோம். அப்பொழுது தான் அபிரகாம் மடியில் இடம் கிடைக்கும். செல்வந்தனை போல கண்டுக்கொள்ளாமைதன்மையில் வாழ்ந்திட வேண்டவே வேண்டாம்.

## தவக்காலம் இரண்டாவது வாரம் (வெள்ளி)

**கடவுளால் படைக்கப்பட்ட அனைத்துமேபயனுள்ளதே:**

கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது. யாக்கோப்பு அவனுடைய சகோதரர்களால் எகிப்து வியாபாரிகளுக்கு விற்கப்பட்டார். பின்னர் அவராலே இஸ்ரேயல் குலம் முழுவதும் மீட்கப்பட்டது. இன்றைய வாசகம் நமக்கு மீட்பின் வரலாறை தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. இறைமகன் இகழப்பட வேண்டும். துன்பங்கள் பல வேண்டும் இறுதியாக மரணத்தை வென்று உயிர்ப்பை அளிக்கவல்லவர்

என்பதை காட்டுகிறது. தாமஸ் ஆல்வா எடிசன் 1000 முறை தோல்வியை கண்டிருந்தாலும் அவரால் உலகம் முழுவதும் ஒளிர்ந்துக் கொண்டிருக்கிறது. வால்டர் டிஸ்னியின் வரைபடங்கள் எல்லாம் ஒன்றுக்குஉதாவது என்றுதூக்கி வீசப்பட்ட அவரது உழைப்பு பின்னால் உலக சித்திரங்களின் சிறப்பம்சமாக மாறியது. மனவளர்ச்சிக்குன்றிய மாணவன் என்று அழைக்கப்பட்ட ஆல்பர்ட் ஐஸ்டின் principal of relativing கண்டுபிடித்து உலகையே திரும்பப் பார்க்க வைத்தார். அதுபோல திராட்சை தோட்ட தொழிலார்களின் அராஜக செயலில் பல்வேறு நபர்களை இழந்த உரிமையாளர் தம் ஒரே மகனை அனுப்பினார் (யோ 3:16) நாம் அனைவரும் வாழ்வு பெறும்பொருட்டு அது நிறைவாழ்வு பெறும் பொருட்டு அனுப்பப்பட்டார் (யே 10:10) ஆகவே நாம் அனைவரும் இத்தவக்காலத்தில் இறைவனின் அன்பை உணர்ந்து அன்பால் வாழ்வோம். அன்பால் உறவுகளை வளர்ப்போம்.

?ஆமென்.

## தவக்காலம் இரண்டாம் வாரம் (சனி)

மீக்கா 7 : 14?15, 18?20 ; லூக் 15 : 1?3, 11 ? 32

மனமாற்றம் … மனவலிமைதரும்
மனமாற்றம் மனவலிமைதரும்!
மனவலிமைமன்னிப்பு தரும்!
மன்னிப்போ… மலையையும் மடித்து
மடியில் போட்டுக் கொள்ளும்
உடல் வலிமைதரும்!

ஊதாரி மைந்தன் உவமைஇயேசு கூறிய உவமைகளில் மிகவும் சிறந்த உவமை. அனைத்து தரப்பு மக்களுக்கும் தெரிந்த உவமை. அனைவரும் எளிதாக புரிந்து கொண்டு, சிந்தித்து மனமாறி இறைவனிடம் திரும்பிவர அழைக்கும் அற்புதமான உவமை. இந்த உவமையின் முக்கிய கருப்பொருள், ஆயிரம் நல்லவர்கள் நல்வழியில் வாழ்வதை காட்டிலும், மனந்திரும்புகிற ஒரே கெட்ட மனிதனால் இறைவன் மிகுந்த இன்பம் அடைவார் என்பதாகும்.

தவக்காலத்தில் இருக்கின்ற நாம் இந்த உவமையை சிந்திப்பது கூடுதல் சிறப்பு. ஏனெனில் தவக்காலம் என்பது, தான் செய்த தவறை உணர்ந்து தன்னை திருத்திக்கொள்ள இறைவனால் வழங்கப்பட்ட மன்னிப்பின் காலம். இவற்றிற்கெல்லாம் மேலாக இறை மனித உறவை மேம்படுத்தும் காலம் இத்தகைய சிறப்பு மிக்க தவக்காலத்தில், இன்றைய நற்செய்தியின் வாயிலாக மனமாற்றத்தைப் பற்றி சிந்திப்பது

மிகவும் பொருத்தமானதாக கருதுகிறேன். மனமாற்றம் என்பது தீமையிலிருந்து விலகி நல்லவராம் கடவுளை நோக்கி திரும்புவதாகும். வாழ்வு முழுவதையும் மாற்றி நற்குணங்களோடு வாழ முயற்சிப்பதாகும்.

அத்தகைய முயற்சியில் ஈடுபட்டு, தீமையிலிருந்து விலகி ஒரு முழு மனிதனாக மாறிய ஊதாரி மைந்தனின் உவமைநமக்கெல்லாம் ஒரு சிறந்த பாடம், பணம், செல்வாக்கு இருந்தவரை அவனுக்குள் மாற்றம் இல்லை. அதையெல்லாம் இழந்த பிறகு தான் உண்மையான தேடலில் ஈடுபடுகிறான். அவனுக்குள் நிம்மதி இல்லை ; உறவு என்று சொல்ல எவரும் இல்லை என்பதை உணர்கிறான். உள்ளத்தில் ஒருவிதமான விரக்தியை உணர்ந்தான். அவனின் மனமாற்றமேஅவனுடைய மீட்பிற்கு, உறவிற்கும், மன்னிப்பிற்கும் அடிப்படையாக அமைகின்றது. மனம் மாறுகின்றவர்களுக்கு மன்னிப்பும், மீட்பும் உண்டு என்பதையும், நிறைவான மனமாற்றம் நிலையான மகிழ்ச்சியை தருகிறது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

ஆகவே பணம், புகழ், பதவி, செல்வாக்கு நமக்கு தேவை தான். அவையெல்லாம் இறைவனின் அன்பிலிருந்து நம்மைபிரிக்கிறது என்றால் ஊதாரி மைந்தனைப் போல அறிவு தெளிந்தவர்களாய் இறைவனிடம் திரும்பி வர அழைக்கப்படுகின்றோம்.



## தவக்காலம் மூன்றாம் ஞாயிறு

அருட்பணி. பிரான்சிஸ்
பூந்தமல்லி

நவீனகால உறவு எதன் அடிப்படையில் தொடர்கிறது என கேள்வி எழுப்பி சிந்திக்கும் பொழுது. அதிகார வர்க்கத்தின் அடிப்படையிலும், பதவி, பணத்தின் அடிப்படையிலும், அறிவு ? அறிவியல், அடிப்படையிலும், சாதிய? மொழி அடிப்படையிலும், வயது அடிப்படையிலும் அமைகிறது. இந்த அதிகாரம், பதவி, பணம், அறிவு, சாதி, மொழி இவைகளை கொண்டு மனிதர்களோடு மட்டும்தான் உறவாட முடியும். ஆனால் படைத்த இறைவனோடு உறவாட என்ன 'தகுதி' வேண்டும்?.

படைத்த இறைவனோடு உறவாட, அவரைக் காண "தூய்மையான மனம் வேண்டும்" "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் ? அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத் 5:8) இன்றைய ஞாயிறு வழிபாடு "தூய்மையான" இதயத்தை கொண்டு வாழ அழைப்பு விடுக்கிறது. அதிகாரம் படைத்த ஏரோது அரசனோ, சட்டத்தை கரைத்து குடித்த மறைவல்லுநர்களோ, கோவில் பூஜை செய்த யூத குருமார்களோ இயேசுவை கண்டு கொள்ள முடியவில்லை. மாறாக தூய்மையான உள்ளம் கொண்ட இடையர்கள், ஏழைகள், பாவிகள் இயேசு இறைமகன் என்பதை கண்டுகொண்டார்கள்.

எப்படி தூய்மையான வாழ்வு வாழ்வது? இன்றைய முதல் வாசகம் நமக்கு தெளிவான பாதையை கொடுக்கிறது. ஆம், யாவே கடவுள் மோயிசன் வழியாக பத்துக்கட்டளைகளை கொடுக்கிறார். இந்த கட்டளைகளின் நோக்கம் என்ன? அடிமைகளாக இருந்த இஸ்ராயேல் மக்களை எகிப்து நாட்டினின்று விடுதலை கொடுத்து, உரிமைகுடிமக்களாக மீட்டெடுத்த இந்த மக்கள் கடவுளை மந்து போனார்கள். சிலை வழிபாட்டை மேற்கொண்டார்கள், பாவத்தில் மூழ்கிபோனார்கள். அறுத்து போன உறவை புதுப்பிக்க இழந்து போன வாழ்வை மீட்டெடுக்க மோயிசன் வழியாக திருசட்டத்தை கொடுத்து தூய்மையான வாழ்வு வாழ அழைப்பு கொடுக்கிறார்.

இயேசு இன்று, எருசலேம் ஆலயத்திற்கு செல்கிறார். யூதர்களின் பாரம்பரிய மிக்க விழாவான பாஸ்கா விழாவில் பங்கெடுக்கிறார். எருசலேம் ஆலயத்தையும் பார்க்கிறார். எருசலேம் ஆலயமானது அழகுமிக்க ஆலயம். தினமும் காலை ஒன்பது மணி, மாலை மூன்று மணி அளவில் செம்மறி பலியாக ஒப்பு கொடுக்கப்படும். பெருவிழா நேரங்களில் புறாக்கள், செம்மறிகள், கன்றுகள் மற்ற விலங்குகளை

காணிக்கையாக பலி கொடுப்பார்கள் இயேசுவும் ஒரு யூதனாக இந்த நிகழ்வில் பங்கெடுக்கிறார்.

“ஆலயம்! ? இறைவன் வாழும் இல்லம்

புனிதமான இடம்

இறைவனின் சந்நிதி மனதுக்கு நிம்மதி”

புனித இடத்தை, இறைவனின் சந்நிதியை சந்தை இடமாக இருப்பதை பார்த்த இயேசு அதிர்ச்சி அடைகிறார். ஆலயத்தில் உள்ள ஆடு, மாடு, புறா விற்போரையும் நாணயம் மாற்றுவோரையும் துரத்தி அடிக்கிறார். ஆலயத்தை தூய்மைப்படுத்துகிறார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் மிகப் பெரிய உண்மையை விளக்குகிறார். நமது உடல் ஒரு இறைவன் வாழும் தேவாலயம், புனிதமான இடம். திருமுழுக்கின் வழியாக ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தூய ஆவி கொடையாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்த திருமுழுக்கின் வழியாக நமது உடல் தூய ஆவி வாழும் இல்லமாக மாறுகிறது. இதனைத்தான் புனித பவுல் அடிகளார் “நமது உடல் தூய ஆவியின் ஆலயம் என்பதை குறிப்பிடுகிறார்” (1கொரி 3;16)

நமது ஆண்டவர் இயேசு இன்னொரு அருமையான உண்மையை வெளிகொணர்கிறார். ‘‘இக்கோவிலை இடித்து விடுங்கள்; நான் மூன்று நாளில் இதை கட்டி எழுப்புவேன்” ஆம் தூய்மையாக வாழ்கிற உடலுக்கு உயிர்ப்பு உண்டு. சாவு என்பதே கிடையாது. “பரிசுத்தவான்கள் நீதியின் பொருட்டு உயிர் வாழ்வார்” என்கிறார் சங்கீத ஆசிரியர். ஆகவே தூய்மையான வாழ்வு வாழ்வோர் நிலைவாழ்பைப் பெற்றுக்கொள்வார்கள். தூய்மையற்ற உடல் அழிந்து போகும்; நிலைவாழ்வை இழந்து தவிக்கும் சகோதர! சகோதரிகளே! நமது உடலாகிய ஆலயத்தை எருசலேம் ஆலயத்தைபோல கள்வர் வாழும் குகையாக மாற்றி விடாதீர்கள்.

இறைவனை சந்திக்க தடையாக இருப்பது சந்தை ஆன்மீகம். புனிதர்களின் உருவம் தாங்கிய பண்டங்கள்; செபமாலைகள், ஏழைகளுக்கு சொந்தமில்லை ? அனைத்திற்கும் ‘யானை விலை’ ? ஆலயங்கள், வழிபாட்டுதலங்கள் வியாபார சந்தையாக மாறிக்கொண்டிருக்கிறது.

சகோதர! சகோதரிகளே!

திருவிவிலியம் வாங்குவதாலோ,

திருப்பண்டங்களை வீட்டில் வைப்பதாலோ

வெள்ளி ? தங்க செபமாலைகள் அணிவதாலோ

ஆடு ? மாடுகளை பலியிடுவதாலோ
அதிக அறிவில் மேலோங்கி இருப்பதாலோ
பணமும் ? புகழும் உச்சத்தில் இருப்பதாலோ
இறைவனை, நிலைவாழ்வை அடைந்துவிட முடியாது.
எங்கு தூய்மையான சிந்தனை, சொல், செயல் இருக்கிறதோ
அந்த பிள்ளைகளுக்கு நிலை வாழ்வு உண்டு.

## தவக்காலம் மூன்றாம் வாரம் - திங்கள்

**<u>அனைவருக்கும் இறையாட்சியில் பங்குண்டு :</u>**

இறைவனின் திட்டம் அனைவரும் மீட்கப்பட வேண்டும் என்பதே ஆதியிலே மனிதன் பாவத்தால் தூய இயல்பை இழந்துபோனான் சாவைத் தேடிக்கொண்டான். இழந்துபோன வாழ்வை அவனுக்கு கொடுக்க இறைவன் திருவுளம் கொண்டார். இந்த வாழ்வு ஒரு குறிப்பிட்ட இனத்தினற்கு மட்டுமல்ல இவ்வுலகம் முழுவதற்கும் அதில் உள்ள படைப்பு அனைத்திற்கும்.

இன்றைய முதல் வாசகத்தில் சிரியா நாட்டு நாமான் தொழுநோயிலிருந்து குணமடைகிறார். இவன் ஒரு படைத்தலைவன், தொழுநோயாளி மற்றும் புறவினத்தான். இஸ்ராயல் கடவுள் அனைவருக்கும் மீட்பு கொடுக்கிறவர் என்பதை உணர்கிறோம். சிரியா நாட்டு நாமான் உண்மையான கடவுளை கண்டுகொண்டான் வாழ்வு பெற்றான்.

நற்செய்தி வாசகம் எலியா இறைவாக்கினர் சாரிபத்தில் வாழ்ந்த கைபெண்ணிடம் அனுப்பப்பட்டார் என வாசிக்கிறோம். யார் இந்த கைம்பெண்? இவள் ஒரு புறவினத்தாள். ஒரு கைம்பெண் ஆதரவு அற்றவர். யோவே கடவுள் ஏழைகளின் கடவுளாக இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமைவாழ்வு கொடுக்க கடவுள் இவ்வுலகிற்கு வந்தார்.

தனது சொந்த மக்களால் ஏற்றுக்கொள்ளாத இயேசு புறவினத்தார், பாவிகள், ஏழைகள் மற்றும் அனாதைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இந்த இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் நிலைவாழ்வை பெற்றுக்கொண்டார்கள்.

திறந்த மனமும் உண்மையான அன்பும்
ஆழ்ந்த இறை நம்பிக்கையும்
பக்தி கலந்த தெய்வபயமும்
எதையும் எவரையும் ஏற்றுக்கொள்ள

தயாராக இருப்பவர்கள் மட்டுமே
இறைவனை ஏற்றுக்கொள்ள முடியும்.

இந்த விண்ணகம் அனைவருக்கும் உரிமைபேறான வீடு அதில் அனைவருக்கும் இடமுண்டு.

## தவக்காலம் மூன்றாம் வாரம் - செவ்வாய்

**மனிக்கும் மனிதன் மனித உருவில் தெய்வம் :**

உன் பாவங்கள் மலைபோல இருந்தாலும் நான் அதை வெண்பனி போல மாற்றுவேன். கடவுள் மன்னிப்பின் பிறப்பிடம். சிலுவையிலே தொங்கிக் கொண்டு அருமையான செபம் : தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில் இவர்கள் செய்வது என்னவென்று தெரியாது செய்கிறார்கள்.

கிறிஸ்தவனின் அடிப்படையான பண்பு மன்னிப்பு எத்தனை முறை குற்றத்தை பொறுத்துக் கொள்ள முடியும்.? அதுவும் எத்தலை காலம் மன்னிப்பு கொடுக்க முடியும்.? இறைவன் எண்ணிலடங்கா முறை பிறரை மன்னிக்க அழைப்பு விடுக்கிறார். பலமுறை பிறரை மன்னிக்க நமக்கு மனதிருக்கிறதா? இன்றை நவீன உலகில் அறிவால் மூளை வளர்கிறது ஆனால் இறைவனின் ஞானமும், நம்பிக்கையும் இருப்பதில்லை இதயம் சுருங்கிக்கொண்டிருக்கிறது.

இந்த சுருங்கிபோன இதயத்தில் விழுமியங்கள் சுரக்க மறுக்கின்றன. சுருங்கி போன இதயம் கொடுக்க மறுக்கிறது. மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள மன்னிப்பைக்கொடு' என அழகான சித்தாந்தத்தையும் இன்றைய நற்செய்தி கொடுக்கிறது. நாம் பிறருடைய சிறிய குற்றங்களை மன்னிக்கின்றபோது இறைவன் நமது மிகப்பெரிய பாவங்களை மன்னிக்கிறார்.

மன்னிக்க தெரிந்த பிள்ளைகள்
மன்னிப்பை கொடுக்கின்ற பிள்ளகள்
உண்மையாக இறைவனின் பிளைகளே!

## தவக்காலம் மூன்றாம் வாரம் - புதன்

**வெட்டி பேச்சல்ல விசுவாச செயலே வாழ்வு கொடுக்கும் :**

இறைவார்த்தையை கேட்பவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். மாறாக அதன்படி வாழ்பவர்களாகவும் இருங்கள். (யோக் 1:22) இறைவார்த்தையை வாழ்வாக்க இன்றைய வழிபாடு அழைப்பு விடுக்கிறது. இன்றைய முதல்வாசகத்தில் மோயிசன்

இஸ்ராயேல் மக்களைப் பார்த்து ஆண்டவருக்கு செவிகொடுத்து அதன்படி வாழ்வை அமைத்துக்கொள்ள அழைப்பு விடுகிறார்.

நற்செய்தி வாசகத்தில் இயேசு, ''திருச்சட்டத்தையோ, இறைவாக்குகளையோ, அழிக்க வந்தேன் என நீங்கள் என்ன வேண்டாம். அவற்றை அழிப்பதல்ல, நிறைவேற்றவே வந்தேன்". என்கிறார் திருச்சட்டம் என்பது மோயிசனால் கொடுக்கப்பட்ட சட்டங்களை குறிக்கிறது. இது 'தோரா' ஆகும். இறைவாக்கு என்பது இறைவாக்கினர்களை குறிக்கிறது. ஆக மோயிசனும் இறைவாக்கினர்களும் மெசியாவினுடைய வருகையைபற்றி போதனை செய்திருக்கிறார்கள்.

இயேசுவே அந்த மெசியா, மீட்பர், இவர்தான் திருச்சட்டத்தையும், இறைவாக்கினர்களையும் அவர்கள் கூறிய கூற்றையும் வாழ்வாக்கினார்கள்.

விண்ணரசில் இடம்பிடிக்கவேண்டுமானால் இறைவனின் திருச்சட்டத்தை வாழ்வாக்க வேண்டும். இறைவனின் திருச்சட்டம் என்பது இறைவனின் 'திருவுளம்' ? இறைவனின் திருவுளத்தை ஏற்று அதன்படி வாழ்கிறவர்கள் விண்ணரசின் உரிமையாளராக ஆகின்றனர்.

இம்மக்கள் என்னை உதட்டால் புகழுகின்றனர் ? ஆனால்

இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகுதொலைவில் உள்ளது.

## தவக்காலம் மூன்றாம் வாரம் - வியாழன்

ஏற்காத மனம் இழந்துபோகும் வாழ்வை

ஏற்றுக்கொள்ளாமை

ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று
உணரும் தருணத்தில் புத்திசாலியாகிறான்
உரு புத்திசாலி தன்னை புத்திசாலி என்று
பெருமைகொள்ளும் கணத்தில் முட்டாளாகிறான் ? அப்துல்கலாம்.

தன்னை அறிவாளியாக, நல்லவனாக நினைத்து கொண்டிருப்பவர்களுக்குக் கடவுளையும் மனிதர்களையும் ஏற்றுக்கொள்வதில் சிக்கல் வந்து விடுகிறது. இணைச்சட்ட நூலில் மோயிசன் இஸ்ராயேல் மக்களைப் பார்த்து. "நம் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைப்படியே நியமங்களையும், முறைமைகளையும் உங்களுக்குக் கற்றுத்தருகிறேன். எனவே, நீங்கள் போய் உரிமையாக்கிக்கொள்ளும் நாட்டில் அவற்றைப் பின்பற்ற வேண்டும்.

நீங்கள் அவற்றைப்பின்பற்றி நடங்கள்” என்றார். அவர்கள் அதன்படி நடந்தார்களா? அதை ஏற்றுக்கொண்டார்களா? இல்லை.

ஆம், வரலாற்றில் கடவுளை ஏற்றுக்கொள்ளாதவர்கள்
மனிதர்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அழிந்துபோனார்கள்.
தராசு தட்டில் கனமுடையது கீழே போகிறது.

அதுபோல பொருள் பற்று வந்துவிட்டால் மனம் அதிலே மூழ்கிவிடும்.

அருள் நிலையை அப்பொழுது அறிவதில்லை
துருப்பிடித்த இரும்பு போன்று உதவாது போய்விடுகிறது.
இந்நிலையில் மனம் எவரையும் ஏற்றுக்கொள்வதில்லை.

உயிர்களுக்கிடையே அடிப்படை ஒற்றுமையை அறியாதவன் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்கிறான். அயலாரை ஆண்டவனின் படைப்பாக காணதபோது அடிமைப் படுத்துகிறான்.

“இக்கட்டளைகளில் மிகச் சிறியது ஒன்றையேனும் மீறி
அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில்
மிகச் சிறியவர் எனக் கருதப்படுவர்.

இவை அனைத்தையும் கடைபிடித்துக் கற்பிக்கிறவர் விண்ணகத்தில்

பெரியவர் எனக் கருதப்படுவர் (மத் 5:19)

## தவக்காலம் மூன்றாம் வாரம் - வெள்ளி

**<u>மகனே வா... திரும்ப வா... என் அன்பில் நிலைத்திரு...:</u>**

புனித அகுஸ்தினர், சொல்வார். “அன்பு செய்துவிட்டு பிறகு எதை வேண்டுமானாலும் செய்யுங்கள்” ஆம் நிலைவாழ்வு பெற்றுக்கொள்ள “அன்பு” மிக முக்கியமாகும். இந்த உலகத்தை புரட்டிப்போட்ட மிக பெரிய சக்தி “அன்பு” விவிலியத்தின் சாராம்சம் இந்த அன்பு தான் ? இதனை மூன்று நிலைகளில் அறிந்து கொள்ளலாம்.

1. தன்னோடு அன்பு 2. இறைவனோடு அன்பு 3. பிறரோடு அன்பு.

இந்த மூன்று நிலைகளில் அன்பைப்பற்றி அறியாதவர்கள் பாவத்தில் உழல்கிறார்கள். ஏன் அன்பு செய்ய வேண்டும்? கடவுள் நாம் வாழ்வு பெரும்பொருட்டு இந்த உலகின் மீது அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார். அந்த அன்பை தன் மகன் வாயிலாக உலகிற்கு கொடுத்தார். அந்த மகன்இயேசு கிறிஸ்து, ‘தனது உயிரை கொடுத்து’ அன்பிற்கு இலக்கணமாக திகழ்கிறார். முதல் முதலில் கடவுள் இந்த உலகை அன்பு செய்த காரணத்தாலும், நம்மைஅன்பு செய்த

காரணத்தாலும் நாம் அவரை அன்பு செய்ய கடமைப்பட்டுள்ளோம்.

ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சாயலால் படைக்கப்பட்ட காரணத்தினால் அவனையும் எந்தவிதமான மொழி, இனம், சாதி, பாகுபாடின்றி அன்பு செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு மனிதனிலும் இறைவன் வாழ்கிறார்.

மனித வாழ்வு கடவுளை அன்பு செய்யவும், பிறரை அன்பு செய்யவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அன்பு செய்வோம் ? இறை சமூகமாக வாழ்வோம்.

## தவக்காலம் மூன்றாம் வாரம் - சனி

**இரக்கம் .... இறைவனின் எல்லையில்லா அன்பு :**

'பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்' என்கிறார் ஆண்டவர். நீதிமான்களை அல்ல பாவிகளையே அழைக்க வந்தேன் என்கிறார். இழந்துபோன ஆட்டையே, தவறிப்போன ஆட்டையே தேடி வந்தேன் என்கிறார். இவையெல்லாம் இறைவனின் எல்லையில்லா இரக்கத்தையும் அன்பையும் காட்டுகின்றன.

தவறுகளை ஏற்று மனம்வருந்தி ஆண்டவரிடம் செல்லுகின்ற போது உண்மையாகவே நம்மீது இரக்கமாயிருக்கிறார். இறக்கத்தான் பிறந்தோம் இறக்ககின்றவரை இரக்கத்தோடு இருப்போம் என்கிறார் அன்னை தெரசா. அதைவிட மேலாக மனிதர்களைப்பற்றி தணிக்கை செய்ய ஆரம்பித்துவிட்டால் அவர்களை அன்பு செய்ய நேரம் இருக்காது என்பார்.

ஆம் இறைவன் உடைந்த உள்ளத்தையே விரும்புகிறார். அதற்கு மருந்து போடவும் தயாராக இருக்கிறார். வரிதண்டுபவருடைய செபத்தைப்போல நமது செபமும் ஆண்டவர் முன்னிலையில் தாழ்ச்சியோடு நமது பாவங்களை அறிக்கையிடுவோம். எல்லையில்லா கருணையும் இரக்கமும் கொண்ட



# தவக்காலம் நான்காம் ஞாயிறு

அருட்பணி. M.பெரியநாயகம், SdC
சென்னை

**பாடல்:**

“இறைவன் நம்மை அன்பு செய்கிறார்
எந்த நிலையில் நாம் இருந்த போதிலும்
இறைவன் நம்மைஅன்பு செய்கிறார்”
இறைவனின் அன்புக் கிணறு மிகவும் ஆழமானது;
எனவே நாம் கொண்டு வரும் வாளி சிறியதாக இருத்தல் ஆகாது.

**இறை இயேசுவில் மிகவும் பிரியமான இறை உறவுகளே!**

இன்று தவக்காலம் நான்காம் ஞாயிறு. இந்த ஞாயிறு வாசகங்கள் வழியாக நாம் அகமகிழ்ந்திருக்க வேண்டும். களிகூர வேண்டும் என்றும், இறைவனின் தற்கையளிப்பு தம் மகன் வழியாக மனுக்குல மீட்புக்கு வழிவகுத்தது என்றும் தெளிவுப்படுத்தியதை வாசிக்கக் கேட்டோம். இன்றைய நற்செய்தி வாசகம் யோவான் நற்செய்தியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இது இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. முதல் பகுதியானது, தன்னை சந்திக்க வந்த பரிசேயரான நிக்கதேமுக்கு இயேசு சொல்லும் இறுதி வார்த்தையாக இருக்கிறது. நிக்கதேம் இயேசுவை கடவுளிடமிருந்து வந்தவர் என ஏற்றுக்கொண்ட அவரைப் பின்பற்ற விருப்பம் காட்டும் ஆர்வலராக இருப்பதும் விளங்குகிறது. அவர்களின் உரையாடலில் பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் எவ்வாறு வெண்கலப் பாம்பைப் பார்த்து வாழ்வு பெறுகிறார்களோ அதேபோல பாவ வாழ்வில் உழன்று கொண்டிருக்கிற மானுடம் தன் இறப்பு மற்றும் உயிர்ப்பில் நிலைவாழ்வும், மீட்பும் பெறுவர் என வெளிப்படுத்துகிறார்.

இரண்டாம் பகுதியானது, முதல் பகுதியின் இறையியலாக்கம் பெறுவதாய் அமைகிறது. பல்வேறு அங்கங்களை ஒளி மற்றும் இருள், நம்பிக்கை மற்றும் அவநம்பிக்கை, நல்லது மற்றும் கெட்டது, மீட்பு மற்றும் அழிவு இவைகளை உள்ளடக்கியுள்ளது. இயேசு கிறிஸ்து ஒருவரே உலகின் ஒளி ஆனால் மனுக்குலம் இருளையும், தீமைகளையுமேபின்பற்றவும், பற்றிக்கொள்ளவும் எத்தனித்துக் கொண்டிருக்கிறது. இறைவன் தன் ஒரே மகனை இவ்வுலக மீட்புக்காக கையளித்து, நம் பாவங்களை வெளிக்கொணர்ந்து, நம் பாவங்களை மன்னித்து நம்மைமீட்டெடுப்பதுதான் அவரின் ஒரே திருவுளம். அதுதான் நற்செய்தி, அதன் பொருட்டுதான் இத்தவக்காலத்திலே நாம் அகமகிழ்ந்து களிகூருவதற்கான காரணமாக அமைகிறது.

மூன்று வாசகங்களும் கடவுள் அன்பானவர், இரக்கமுள்ளவர் என்று விளக்கிக் கூறுகின்றன. அதன் உச்சக்கட்டம் தான் இன்றைய நற்செய்தியின் வெளிப்பாடு. யோவான் நற்செய்தி 3:16 விவிலியத்தின் தெளிவான விளக்கமாக அமைகிறது. இறைவனுடைய படைப்பு தொடங்கி அவரின் அன்புச் செயல்கள் வெளிப்பட்டுக்கொண்டே இருந்தாலும் அதன் நிறைவாக வெளிப்படுத்த "தம் ஒரேமகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்"

விவிலியம் முழுவதுமேகடவுள் அன்பைப்பற்றி விளக்குகிறது. கடவுள் உலகை அன்பு செய்கிறார் ? நாம் அதை அழிக்கிறோம். கடவுள் நம்மைஅன்பு செய்கிறார் ? நாம் ஒருவரையொருவர் கொன்று குவிக்கிறோம். கடவுள் தம் ஒரே மகனை கையளிக்கிறார் ? அவர் அன்பை வெளிபடுத்தி நாமும் ஒருவரையொருவர் அன்பு செய்ய அழைப்பு விடுக்கிறார்.

**<u>இறைவனின் அன்பு :</u>**

நாம் என்ன செய்தாலும், எப்படி வாழ்ந்தாலும் கடவுள் நம்மைத் தொடர்ந்து அன்பு செய்து கொண்டே இருக்கிறார். அவரின் அன்பு நிபந்தனையற்ற அன்பு; முழுமையான, நிரந்தரமான அன்பு, எப்படி?

நீ என்னை வெறுத்தாலும் ? நான் உன்னை அன்பு செய்கிறேன்.

நீ என்னைப் புறக்கணித்தாலும் ? நான் உன்னை அன்பு செய்கிறேன்.

நான் உனக்குத் தேவை இல்லை என்றாலும், நான் உன்னை அன்பு செய்கிறேன்.

நீ அழகோ, அழகில்லையோ ? நான் உன்னை அன்பு செய்கிறேன்,

நீ அதிகாரத்தில் இருக்கிறாயோ, இல்லையோ, நீ பணக்காரனோ, ஏழையோ, நீ எனக்குப் பயன்படுகிறாயோ, இல்லையோ ? நான் உன்னை அன்பு செய்கிறேன்.

**<u>மனித அன்பு :</u>**

நம் மனித அன்பு நிபந்தனை உள்ளது. பயன்பாட்டின் நிமித்தம்தான் இருக்கிறது.

நீ என்னை அன்பு செய்வதால், நான் உன்னை அன்பு செய்கிறேன்

நீ எனக்குத் தேவைப்படுவதால், நான் உன்னை அன்பு செய்கிறேன்.

நீ எனக்கு நல்லவனாய் தெரிவதால், நான் உன்னை அன்பு செய்கிறேன்.

நீ அழகாகவும் பணக்காரனாகவும் இருப்பதால், நான் உன்னை அன்பு செய்கிறேன்

நீ தலைமையில் இருப்பதால், நான் உன்னை அன்பு செய்கிறேன்.

நீ எனக்குப் பயன்படுவதால், நான் உன்னை அன்பு செய்கிறேன்.

ஆனால், இறைவனின் அன்பு இரக்கத்தையும், கருணையையும் கருப்பொருளாகக் கொண்டு இருக்கிறது. கடவுள் இரக்கம் காட்டுவதிலும், கருணையோடு இருப்பதிலும் வளமையானவராய் இருக்கிறார். இந்தக்கருத்தை இன்றைய இரண்டாம் வாசகம் அருமையாக எடுத்தியம்புகிறது (எபேசி 2:4)

கடவுளின் இரக்கத்தைப்பற்றி பின்வரும் மூன்று நிலைகளில் நாம் அறிந்து கொள்ளலாம்.

**1. கடவுளின் இரக்கம் கருணையுள்ளது:**

"பிறர் மகிழவேண்டும் என விரும்பினால் ? கருணைகாட்டு நீ மகிழவேண்டும் என விரும்பினால் ? கருணையோடு இரு" கருணை என்றால் துன்பப்படுகிறவரோடு இணைந்து துன்பப்படுவது அதுபோல இறைவன் நம்துன்பத்தில் நம்மோடு இருந்து நம்துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவித்தலின் வெளிப்பாடுதான் சிலுவைப்பாடுகளும், மரணமும்.

**2. கடவுளின் இரக்கம் மன்னிக்கும் தன்மை உடையது.**

ஒரு ஜெர்மானியப் பழமொழி, "கடவுள் நம் பாவங்களை மன்னிக்கத் தயாராக இல்லையென்றால், விண்ணகம் வெறுமையாகத்தான் இருக்கும். கடவுள் தன்மகன் வழியாய் நம் பாவங்களைச் சுமந்து, நம்மைஏற்றுக்கொள்கிறார். மன்னிப்புதான் நம் கிறிஸ்தவ வாழ்வின் சாராம்சம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

**3. கடவுளின் இரக்கம் நேர்மையும், நீதியும் கொண்டது.**

கடவுள் அன்பானவர், கருணையுள்ளவர் ஆனால் நீதியையும், நேர்மையையும் சமரசம் செய்யாதவர். எது கெட்டதோ, அது கெட்டது என்றும், எது பாவமோ அது பாவம் என்றும் சுட்டிக்காட்டக் கூடியவர். இறைவன் நம் பாவங்களைச் சகித்துக்கொள்ளாமல் நாம் மீண்டும் பாவம் செய்யாதவாறு நம்மைஅன்பு செய்கிறார். அவருடைய புனிதம் நம் பாவத்தால் கசக்கப்படுகிறபோது நம்மீது சினம் கொள்கிறார். இருந்தாலும், அன்பும், கருணையும் கொண்டு வழிநடத்துகிறார்.

எனவே! பிரியமானவர்களே, இத்தவக்காலத்திலே நாம் இறைவனின் இரக்கத்தை முழுமையாக உணர்வோம். அந்த இரக்கத்தைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள முன்வருவோம். நம் இறைவனைப் போல, கருணையோடும், மன்னிக்கும் தன்மையோடும் நேர்மைக்குக் குரல் கொடுப்பவர்களாகவும் மாறுவோம்.

“வாழ்க்கை நம்மைஉருவாக்குகிறது;
பாவம் நம்மைஉருக்குலைக்கிறது;
பள்ளி நாட்கள் நமக்கு அறிவு புகட்டுகிறது;
அன்பு நம்மைச் சீர்திருத்தம் செய்கிறது;

ஆனால், இயேசுகிறிஸ்து மட்டுமேநம்மைஉருமாற்றம் செய்ய முடியும் என்ற சிந்தையிலே இறைவனோடு நெருங்கி வருவோம், நம் உறவுகளோடு நெருக்கமாக இணைவோம், அன்பின் இறைவன் என்றென்றும் வாழ்த்தப்பெறுவராக….

## தவக்காலம் நான்காம் வாரம் (திங்கள்)

“நம்பிக்கை இழக்கும் மனிதன்
இறக்கும் முன்பே நடைபிணமாகிறான்”

<u>**இயேசுவில் பிரியமான இறை உறவுகளே!**</u>

மனிதர்களாகிய நாம் நம்பிக்கையில் நசிவடையும் போது மூழ்கிப்போகிறோம். ஆனால் நம்பிக்கை நமக்குள் நங்கூரமிடும்போது வாழ்வதற்கான காரணங்களை நாம் கண்டறிகிறோம். நுரையீரல்களுக்கு ஆக்சிஜன் (பிராணவாயு) எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு மனித நெஞ்சங்களுக்கு நம்பிக்கை முக்கியமாகிறது. தற்காலத்தில் பல மனிதர்கள் தவறான நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். எதை நம்ப வேண்டுமோ, யாரை நம்பவேண்டுமோ அதை நம்புவதில்லை. எதையெல்லாம் நம்பக்கூடாதோ, அவற்றையெல்லாம் நம்பித்திரிகின்றனர். வாஸ்து, சோதிடம், பில்லி, சூனியம், பூனை குறுக்கே போவது என்று பலவற்றையும் நம்புகின்றனர். பணமும், அதிகாரமும் அனைத்தையும் சாதிக்கும் என்று நம்புகின்றனர். இவ்வாறாக மனித வாழ்க்கை இயங்கிக் கொண்டிருக்க, கிறித்தவ விசுவாசம் என்பது உயிருள்ள நம்பிக்கை என்றும் ஆனால் நாம் பலவற்றை ‘கண்ணாடியில் மங்கலாகக் காண்கிறோம்’ (1கொரி 13:12) என்று புனித பவுலடியார் வெளிப்படுத்துகிறார். நாம் பொறுமையோடும், நம்பிக்கையோடும் இருந்தால் நமது தேடலுக்கான விடையைத்

தெரிந்து கொள்ளலாம். விடைதெரிந்த ஒருவர் இருக்கின்றார். அவர்தான் இயேசு.

எனவே! இத்தவக்காலத்திலே இன்றைய நற்செய்தியின் வழியாய் இறைவன் நம்மைஅவரின்மீது நம்பிக்கைகொள்ளவும், அவரின் வார்த்தைமீது பற்றுகொள்ளவும் அழைப்பு விடுக்கின்றார். ஏரோது அரசனின் அரண்மனையில் மிகப்பெரிய பதவியில் இருந்த அலுவலர் ஒருவர் வந்து இயேசுவை தன் இல்லத்துக்கு அழைக்கின்றார். ஆனால் இயேசுவோ, நீர் புறப்பட்டு போம், உம் மகன் பிழைத்துக்கொள்வான், என்று சொல்லி அவரது நம்பிக்கையை சோதிப்பதாக இருக்கிறது. எந்தவொரு ஆதாரமும், சான்றும் இல்லாமல் இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை வைத்தவராய் இல்லம் திரும்புகிறார். அவர் மகனும் குணமடைகிறான் நாமும் இம்மனமாற்றத்தின் நாட்களிலே.

**1. இயேசுவின் வார்த்தைமீது நம்பிக்கை வைப்போம்.**

அரச அலுவலரைப்போல, நம் செபங்களைக் கேட்டு இறைவன் சொல்கின்ற வார்த்தைக்கும் செவிமடுத்து நம்பிக்கையே வாழ்வோம். இயேசுவின் மீது நம்பிக்கை வைப்பதனால் மட்டுமேநாம் நிலையான மகிழ்ச்சியான வாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியும் (யோவா 11:26)

**2. இயேசுவின் வார்த்தை நம்மைசிறந்தவர்களாக மாற்றுகிறது.**

அரச அலுவலரின் நம்பிக்கை வழியாய் அவரது குடும்பம் முழுவதும் இயேசுவிடம் நம்பிக்கை கொள்கிறது. இயேசுவின் வார்த்தை மீது நம்பிக்கை கொண்டு, நாமும் நம்மைச் சார்ந்தவர்களை சிறப்பானவர்களாக்க முற்படுவோம். நம்பிக்கையோடு வாழ்வை எதிர்கொள்வோம்.

## தவக்காலம் நான்காம் வாரம் (செவ்வாய்)

"எந்த ஒரு மருத்துவரின் அலுவலகத்தில் உள்ள செடிகள் செத்துக்கிடக்கின்றனவோ, அந்த மருத்துவரிடம் செல்ல வேண்டாம்" எர்மா பாம்பெக்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், நாம் அனைவருமேஉடல் நலம் பெற்று வாழ விரும்புகிறோம். உடல் நலம் பெற நாம் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்க முனைகின்றோம். நாம் உடல்நலத்தோடு இருந்தால் மட்டுமேநாம் வேலை செய்கின்ற இடத்திலும், பள்ளியிலும் குடும்பத்திலும்,

குழுமத்திலும், சமூகத்திலும், உறவிலும், சிறந்து விளங்க முடியும். உடல் நலத்தோடு மனநலமும், ஆன்மீக நலமும் பெற்று வாழ்வதுதான் சிறந்த வாழ்வாக இருக்க முடியும்.

நண்பன் தன் நண்பனிடம் "நண்பா! நேற்று நான் சினிமாவிற்குச் சென்றுவிட்டு திரும்பிவரும்போது மிகப்பெரிய விபத்திலிருந்து தப்பித்தேன்! எல்லாம் கடவுளின் செயல்!" என்றான். அதற்கு நண்பன், "நீ எப்படி எனக்குத் தெரியாமல் சினிமாவிற்குப் போகலாம்?" என்றானாம். நண்பன் உயிர் பிழைத்ததை நினைத்து மகிழாமல் அவனில் குற்றம் கண்டுபிடித்தவனைப் போலத்தான் இன்றைய நற்செய்தியிலே 38 ஆண்டுகளாக முடங்கிக் கிடந்தவன் குணமடைந்ததை நினைத்து கடவுளுக்கு நன்றி செலுத்தாமல் ஓய்வு நாளைக் காரணம் காட்டி யூதர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதனை (38) ஆண்டுகளாக ஆதரவுக்கரம் ஏதும் நீட்டப்படாமல், ஒதுக்கப்பட்டிருந்த ஒரு மனிதரின் இடைவிடா நம்பிக்கைப் போராட்டத்திற்கு உயிர்கொடுத்த இயேசு நம் ஒவ்வொருவரையும் மனிதத்தைத் தூக்கிப்பிடிக்க அழைக்கின்றார். சட்டங்களின் பெயரால் மனிதம் நசுக்கப்படுவதையும், நல்ல செயல்களைக் கூட செய்யாமல் கடவுளின் பெயரால் சாக்குபோக்கு சொல்லி, தட்டிக்கழிக்கும் போக்கையும் அநீதி என்பதை தனது செயலால் நமக்குப் புரிய வைக்கின்றார்.

இயேசு வெளிப்படுத்திய மனிதத்தன்மையுள்ள செயல் நம்மைஇறைத்தன்மைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் எவ்வாறெனில், இத்தவக்காலத்திலே பயணிக்கின்ற நாம் நம்மைச்சுற்றியுள்ள உறவுகள் அனைவரும் இறைவனை அண்டி வரவும், அதனால் மனிதத்தைக் காக்கவும் வழித்துணையாய் இருக்கிற திருவருட்சாதனங்களில் முழுமையான பங்கேற்று இறைவனின் குணமளிக்கும் கொடையாய் பெற வழிசெய்வோம். அவர்களின் ஆன்மவாழ்வில் பங்கெடுப்போம் இன்றைய முதல் வாசகம் விவரிக்கின்ற ஆற்று நீர் பாயும் இடமெல்லாம் வாழ்வளித்துக்கொண்டே செல்வது போல, நமது வாழ்வும் மனிதத்தைத் தாங்கிப்பிடிக்கவும், நல்லவற்றை அளித்துதெளித்துக் கொண்டே செல்லும் ஆற்றுநீரைப்போல தொடர்ந்து ஓடட்டும், பிறரின் வாழ்வில் மகிழ்வோம்.

## தவக்காலம் நான்காம் வாரம் (புதன்)

"நாம் தனித்திருக்கும்போது திடீரென்று நமது அன்புக்குரியவருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கும் போதும், நம்

அன்பருக்கு நாம் கடவுள்; நம்மிடம் பேச யாரும் இல்லையே என்று நினைக்கிறபோது அந்தத்தனிமைநமக்குள் கடவுள்; நீங்கள் எதிர்பாராத ஒரு விந்தைப்பரிசு கிடைக்கிறபோது அதைத் தருகிறவர் கடவுள். எனவே! நம் உள்ளத்தின் உணர்வுகளையும், ஆசைகளையும் அறிந்தவர் கடவுள்"

**இறையேசுவில் பிரியமுள்ள இறை உறவுகளே!**

ஒரு தந்தை தன் மூன்று மகன்களுக்கும் ஒரு போட்டி வைத்தார். யார் உண்மையில் எனக்குப் பிடித்தமானதைச் செய்கிறீர்கள் என்று கண்டுப்பிடிப்பதற்காக உங்களைத் தொலை நாட்டிற்கு அனுப்பி வைக்கிறேன் என்றார். அவர்களும் புறப்பட்டனர். மூத்தவன் மலைகளைக் கடந்து விலைமதிப்பற்ற ஒரு கல்லைக் கொண்டு வந்தான். அடுத்தவன் கடல் கடந்து அரியதொரு மலரைக் கொண்டு வந்தான். கடைசி மகன் வெறுங்கையுடன் திரும்பினான். மற்றவர்கள் அவனைப் பரிகசித்தனர். அவனோ, தந்தையிடம் "தங்களுக்குப் பொன்னோ பொருளோ விலைமதிப்பற்ற பொருட்களோ கொண்டு வரவில்லை, எனக்கு ஒரு திட்டம் இருக்கிறது. தங்களுக்குப் பிறகு நான் என்னென்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுள்ளேன்" என்று கூறித் தனது திட்டத்தைத் தந்தையிடம் காண்பித்தான். தந்தை மூன்றாவது மகனையே தனது விருப்பத்தை நிறைவேற்றியவன் என்று புகழ்ந்தார்.

அன்பார்ந்தவர்களே! இன்றைய நற்செய்தியும் கடவுளை நம் தந்தையாகக் காண்பிக்கிறது. அந்த அன்பின் தந்தை நம்மிடம் விலையுயர்ந்த கலல்லையோ, அதிசயிக்கத்தக்க அரிய மலரையோ விரும்பவில்லை. மாறாக அவரின் அன்பு மகன் இயேசுவைப் போல அவரின் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுகிறார். அதுவே இறைவனின் திருவுளமும் ஆகும்.

நம் இறைவன் அன்பும், இரக்க குணமும் கொண்டவர். யாரையும் புறந்தள்ளாமல் எந்தவித பாகுபாடும் காட்டாமல் அனைத்து மக்களையும் தன் மக்கள் என்று நினைத்து அன்பைப் பொழிபவராக இருக்கிறார். தன்னை நோக்கித் தனது கரங்களை நீட்டித் துள்ளிக் குதிக்கும் குழந்தையைத் தாய் அரவணைப்பதைப் போல, கடவுளும் வாஞ்சையோடு நம்முடன் உறவாடுகின்றார். கடவுளின் அந்த அன்பு முகத்தை நாம் ஏனோ இருட்டடிப்பு செய்தும், மறந்தும் போகின்றோம். முதல் வாசகத்தின் இறுதி வரிகள் கடவுளின் கனிவுளத்தை பெற்றோரின் அன்போடு உருவசப்படுத்துகிறது. தாய் ? சேய் உறவோடு

ஒப்புமைப்படுத்துவதாய் அமைகிறது. எனவே தந்தையர்கள் தந்தை கடவுளைப் போல வாழ முற்படுவோம். எடுத்துக்காட்டான வாழ்வை நம் பிள்ளைகளுக்கு வாழ்ந்து காட்டுவோம். நம் தந்தையர்களிடம் கற்றுக்கொள்வோம்.

குறிப்பாக

இரக்கம் குணம், பொறுமை, நிதானம், நேர்மைத்தன்மை

உறுதியுள்ளவர்களாய் நீதியுள்ளவர்களாய், கீழ்ப்படிதல் ஆகியவனவாகும்

தந்தையைப் பின்பற்றும் பிள்ளைகளாய் இயேசுவின் வழியில் நடப்போம்.

## தவக்காலம் நான்காம் வாரம் (வியாழன்)

''நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள் என்பதைக் குறித்து கவனமாயிருங்கள் ஏனெனில் நீங்கள் ஒருவர் மட்டுமேபலருக்கு வாசிக்கக் கிடைத்த விவிலியமாக இருக்கலாம்"

**இறையேசுவில் பிரியமான இறை உறவுகளே!**

ஒரு வகுப்பறையில் ஆசிரியர் தன் மாணவர்களிடம் பில் கேட்ஸ்க்கும், அன்னை தெரசாவுக்கும் என்ன வித்தியாசம்? என்று கேட்டார். அதற்கு ஒரு மாணவி "பில் கேட்ஸின் சாதனை பணத்தால் நிகழ்ந்தது. அன்னை தெரசாவின் சாதனை அன்பினால் நிகழ்ந்ததோடு அவருக்குக் கோடிக்கணக்கான ஏழைகளின் வாழ்வில் இடத்தைப் பிடித்துத் தந்தது." என்றாள். அதுபோல பல்வேறு நபர்கள் பல்வேறு வழிகளில் இயேசுவுக்குச் சான்று பகர்ந்திருக்கின்றனர். நாம் எவ்வாறு சாட்சிய வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்ப்போம்.

நாம் நம்முடைய உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனத்தின் வழியாய் இயேசுவின் உண்மைச் சாட்சிகளாக மாறுகிறோம். இன்றைய நற்செய்தியில் நான்கு விதமான சான்றுகள் முன் வைக்கப்படுகின்றன.

1. அவரின் செயல்கள் (வச 26)
2. திருமுழுக்கு யோவானின் சான்று (செ 33; யோவா 1:19)
3. திருவிவிலிய வார்த்தைகள் (வச 39)
4. தந்தை கடவுளின் சான்று (வச 32, 37)

இந்தச் சான்றுகளையெல்லாம் அவர்கள் நம்பவில்லை என்றும், அதனால் மோசேவே உங்கள் மீது குற்றம் சுமத்துவார் என்றும் இயேசு தெளிவாக எடுத்தியம்புகிறார்.

நாம் இயேசுவில் உறுதிகொண்டு அவருக்கு உண்மைச் சாட்சிகளாய் வாழ இரண்டு வழிகள் உள்ளன.

**1. முரண்பாடற்ற வாழ்வு**

கடவுளின் உண்மைப் பிள்ளைகளாக வாழ்ந்தால் நாம் இறையன்பும், பிறரன்பும் நிறைந்தவர்களாய் இருப்போம். மகிழ்ச்சியில் திளைத்திருப்போம். நாம் இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையின் வெளிப்பாடு நம்முடைய அன்புச் செயல்களிலும், மகிழ்ச்சி வாழ்விலும் முழுமையாக வெளிப்படும்.

**2. விவிலிய வார்த்தையில் நம்பிக்கை**

தந்தை கடவுள் இயேசுகிறிஸ்துவுக்கு விவிலிய வார்த்தை வழியாக சான்று பகர்கின்றார். பழைய ஏற்பாடு முழுவதும் இயேசுவின் வருகையைக் குறித்துச் சான்று பகர்கின்றது. எங்கே பிறப்பார், எங்கே வளர்வார், அவருடைய பணி வாழ்வு எப்படி இருக்கும். அவர் எப்படி இறப்பார் என்றெல்லாம் தெளிவான சாட்சியம் பகர்கிறது. எனவே, இன்று இயேசு நாம் விவிலிய வார்த்தைகளை எப்படி அணுகுகிறோம்? இறைவனின் வார்த்தைகளை வாசிக்கும்போது நம் மனநிலை என்ன? நம் விவிலிய வாசிப்பு விவிலியத்தில் புலமைபெற வேண்டும் என்று இருக்கிறதா? அல்லது நிலைவாழ்வளிககும் வார்த்தையாய் இருக்கிறதா? என்று புடமிட்டுப் பார்ப்போம்.

எனவே! இறையன்பும், பிறரன்பும் கொண்டவர்களாய் தேவையில் உழல்வோரையும், ஏழைகளையும் தேடிச்சென்று, அவர்களோடு உடன்பயணித்து இயேசுவின் தடங்களில் பயணிப்போம். நம் சொல், செயல் மற்றும் சிந்தனைகள் வழியாக இயேசுகிறிஸ்துவுக்குச் சான்று பகர்வோம்.

## தவக்காலம் நான்காம் வாரம் (வெள்ளி)

“உங்கள் பயத்தை உங்களோடு வைத்துக்கொள்ளுங்கள்;
உங்கள் வீரத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளுங்கள்”
- ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்சன்

**இறையேசுவில் பிரியமான இறை உறவுகளே!**

முதல் வாசகம் சொல்கிறது, ‘‘நீதிமான்களைத் தாக்கப் பதுங்கியிருப்போம்” உலக நியதியிலும், உண்மைவாழ்விலும் யார் யாரெல்லாம் மனிதத்தைத் தாங்கிப் பிடிக்க முயன்றார்களோ அவர்கள் அனைவரும் எதிர்ப்பைச் சந்தித்தனர். எந்தவிதமான எதிர்ப்பும், நெருக்கடியும் அவர்களை முடக்கவில்லை. மாறாகத் தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் தகர்த்தெறிந்து தங்கள் வாழ்வையே உயிர்தியாகம் செய்து மாற்றம் கொண்டு வந்தனர்; வாழ்வு கொண்டு வந்தனர்.

அடிமைச் சந்தைகளை நடத்தி மனிதர்களை கூவிக் கூவி விற்கும் கொடூர முறையை அழிக்க நினைத்த ஆபிரகாம் லிங்கனைக் கொல்ல உலகம் வழிதேடியது, ஏழைகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் அநியாயங்களைத் தட்டிக்கேட்ட எல்சால்வதோர் பேராயரையும் இந்த உலகம் விட்டுவைக்கவில்லை. அவ்வாறேதான், ஏழைகளின் வாழ்வில் மாற்றம் கொண்டு வந்து கடவுளின் அன்பை உளம் குளிரச் சுவைக்க வைத்த இயேசுவையும் கூட ஒரு கும்பல் கொலை செய்யத் துடித்ததை இன்றைய நற்செய்தியில் பார்க்கிறோம். இயேசுவை பின்பற்றும் நாமும் நமக்கு வரும் ஏளனப் பேச்சுகளையும் ஏளனப் பட்டங்களையும் ஏற்று வீரத்தோடு போராடவேண்டும். நம் பயம் நம்மைவெற்றிக்கொள்ள விட்டுவிடக் கூடாது. மறைந்த நம் முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால், ‘‘நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சிலுவை மற்றும் உயிர்ப்பு இவைகளைக் காட்டிலும் நம்மைஅச்சுறுத்துவது வேறெதுவம் இல்லை” என்று விளக்கிக் கூறுகிறார்.

இயேசவைப் போல நாமும் வீரமும், துணிவும் உள்ளவர்களாகவும் வாழ்ந்து நற்செய்தியைப் பறைசாற்றுவதிலும், இறையரசை நிலைநாட்டுவதிலும் உறுதியாய் இருக்க முயல்வோம். ஏனென்றால் இறையன்பு அனைத்தையும் வெற்றிகொள்ள வழிவகுக்கும். இறையன்பு பயம் என்ற உணர்வை சக்தி என்ற உணர்வாக மாற்றும். எனவே! இத்தவக்காலத்திலே இயேசுவின் சிலுவைக்கும், அவரின் உயிர்ப்பு நிகழ்விற்கும் மட்டுமேபயம் கொண்டு இறைவனின் முழுமையான நம்பிக்கையும், துணிவும் கொள்வோம்.

## தவக்காலம் நான்காம் வாரம் (சனி)

“மனிதர்கள் ஒவ்வொருவரும், நான் பேசுவதைச் செவிகொடுத்து கேட்க யாரும் முன்வரமாட்டார்களா? யாராவது என்மீது அக்கறை

கொண்டு என்னைக் கவனித்துக் கொள்ள மாட்டார்களா? என்று ஏங்கித்தவிக்கின்றனர்"

**இறையேசுவில் பிரியமான இறை உறவுகளே!**

இன்றைய நற்செய்தியில் இயேசு பேசுவதை அனைத்து தரப்பு மக்களும், ஏன்? அவரது பகைவர்கள் கூட கேட்கிறார்கள். மக்கள் இயேசுவை மெசியா என்றும், இறைவாக்கினர் என்றும் பறைசாற்றுகின்றனர். காவலர்கள் கூட இயேசு போதிப்பதை கேட்கின்றன. அவர்களால் இயேசுவைக் கைது செய்ய முடியவில்லை.

ஆனால், இதற்கு நேர் எதிர்மாறாக பரிசேயர்களும், அவர்களை சார்ந்தவர்களும் இயேசுவின் குடும்ப பின்புலத்தை வைத்து அவரை நம்பமுன்வரவில்லை. நம்மையும் நம்முடைய குடும்ப பின்னணி மற்றும் நமது ஊரையும் பார்த்து மக்கள் கணக்கிடுவதையும், நம்மைத்தரம் பிரிப்பதையும் பார்க்க முடிகிறது. இதற்கு இயேசுவும், அவரின் காலமும் விதிவிலக்கல்ல துன்பதுயரங்கள் எல்லாருக்கும் பொதுவானவை. இருப்பினும் உண்மைக்காக, நீதிக்காக, அன்புக்காக வாழ்பவர்களுக்குத் துன்பங்கள், பழிச்சொற்கள், ஏமாற்றம் அதிகம் என்றால் அது மிகையாகாது.

இன்றைய முதல் வாசகத்தில் உண்மைஇறைவாக்கினர் ஏரேமியாவின் துன்பங்களை விரிவாகக் காண்கின்றோம். உண்மைக் கடவுள் யாவேயும் புறக்கணித்துவிட்டு, புறவினத்தாரின் தெய்வம் பாகாலை வழிபடுபதும், அவருக்குத் தூபமிட்டு பலி செலுத்துவதும், உடன்படிக்கை மீறும் செயல் என்றும் எடுத்தியம்புகிறார். உண்மைஇறைவனை விட்டு விலகிச் செல்ல முயன்ற மக்கள் நடுவில் செம்மறியாகத் திழ்ந்த எரேமியா போல, விவிலியத்தின் மையக்கருத்தைப் பற்றிக் கொள்ளாமல், தங்கள் மனப்பாடத்திறமையை பறைசாற்றுவதிலேயே குறிக்கோளாக இருந்த பரிசேயர்கள் இயேசவே வரவிருக்கிற மெசியா என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். மறைநூல் அறிஞர்கள் கடமைதவறுகின்றனர். ஆனால் பாமரர்கள் இயேசுவே ஆண்டவர் மெசியா, என ஏற்று பறைசாற்றுகின்றனர். எனவே! அவர்களின் எளிய இறைநம்பிக்கை நமக்கு முன்னுதாரணமாகட்டும். இயேசுவே மெசியா என்றும் இறைவாக்கினர் என்றும் பறைசாற்ற முற்படுவோம்.

பறைசாற்றுவதோடு மட்டும் நின்றுவிடாமல் உலகம் உண்மையை நாட வேண்டும் என்றும், இறைவனின் அருட்கொடையை ஏற்று குடும்ப, ஊர் மற்றும் நாட்டின் பின்புலத்தைப் பாராமல் தந்தை இறைவனின் அன்புக்கும், வழிநடத்துதலுக்கும் நம்மைமுழுமையாக அர்பணிக்க முன்வருவோம்.

# தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு

எரே 31:31-33 எபி 5:7-9 யோவான் 12 : 20-33

அருட்சகோ. இக்னேசியஸ் ஸ்டாலின், SHS
பூந்தமல்லி

## மடிந்து பலன் தருவோம்

இன்று தவக்காலத்தின் 5-ஆம் ஞாயிறை சிறப்பிக்கிறோம். இன்றைய இறைவார்த்தை வழிபாடானது மடிந்து பலன் தர நமக்கு அழைப்புவிடுக்கின்றது. எல்லா விதையும் நல்ல விதைதான் மண்ணில் விதைக்கின்றபோது ஆனால் அது பலன் தருவதும் தராததும் அதன் மடிகின்ற தன்மையில்தான் உள்ளது. தான் மடிந்து பலன்தர வேண்டுமென்று விரும்பும் விதை முதலில் தன் வீரியத்தை இழக்கவேண்டும். தன்னை வருத்தி கொண்டு சில காலங்கள் பொறுமையுடன் தன்னிலை மறந்து மண்ணில் புதைந்து, மண்ணிலிருந்து தனக்குத் தேவையாக உள்ள எல்லா சத்துக்களையும் தேர்ந்தெடுத்து, முழுமையாய் தன்னை இழக்கின்ற விதைதான் சிறிதுநேரத்தில் தன் பலனை பிறருக்கு வழங்கி மகிழ்கிறது.

ஒவ்வொரு மனிதருமேஉலகின் பிறப்பு ஒரு விதையாகத் தான். சிலர் மடிந்து பலன் தருகின்றனர்; பலர் மடிந்து மண்ணாகின்றனர். சமுதாயமெனும் நிலத்திலே தன்னை புதைத்தவர்கள் எல்லாம் இன்று மடிந்து பலன் தந்தவர்களாய் வரலாறு படைக்கிறார்கள். தன்னுடைய வாழ்வு விதையாய் மடிந்து பலன்தரவே என்பதை உணர்ந்த பேராயர். ஆஸ்கர் ரோமேரோ இயேசு என்னும் ஜோதியால் நெருப்பெடுத்து தன் விளக்கை ஏற்றியவராய் வாழத்துவங்கினார். “ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுப்பதே என் விசுவாசம், அநீதிக்கு எதிரான போராட்டத்தில் உயிரை இழப்பதும் ஒரு திருவருட்சாதனம்” என்று முழங்கி எல்சல்வதோரின் துன்புறும் துயருறும் மக்களுக்குமேதான் சொந்தமானவன் என்பதை உணர்ந்து அவர்களது உரிமைக்காய் போராடினார். இவரது ஆதரவைக் கண்டு ஆளும் வர்க்கம் அஞ்சினாலும், இவரை பழிவாங்கதுடித்தது. யார் எனக்கெதிராய் எழுந்தாலும், என்னை அழைத்த கடவுள் என்னோடு இருக்கிறார். எனவே நான் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் எல்சல்வதோரின் விடுதலைக்காக நான் விதைக்கும் விதைகள் என எண்ணி, அம்மக்களின் நல் வாழ்வுக்காய் உழைத்தார்.

1980?ம் ஆண்டு மார்ச் 24 அன்று திருப்பலி நிறைவேற்றுகையில், கடவுளின் அரசு ஏற்கனவே இம்மண்ணில் மலர்ந்துள்ளது. கடவுள் எழும்போது இப்பூமியானது எவ்வித குறையுமின்றி நியாயமான பூமியாக கடவுள் மாற்றுவார் என்றும் அநீதியும், பாவமும்

வளர்ந்துவிட்ட இந்தச் சமூதாயத்தை பாவம் களைந்த சமூகமாக மாற்ற நாம் எடுக்கும் எல்லாம் முயற்சிகளையும் கடவுள் ஆசீர்வதிப்பார் என்றும் கூறிய அவர், கோதுமைமணி மண்ணில் மடிந்தால் தான் பல கோதுமைமணிகளை உருவாக்கும், இல்லையேல் அது அப்படியே இருக்கும் என்று மறையுரையாற்றிக் கொண்டிருந்தபோது இவரை பழிவாங்கத் துடித்த ஆளும் வர்க்கம் பலிபீடத்திலே துப்பாக்கியால் சுட்டுக்கொன்றது.

கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் இந்த மறைசாட்சி பேராயர். ஆஸ்கர் ரோமேரோவைப் போன்று மடிந்து பலன் தரவே அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதுதான் தன்னுடைய இறப்பை முன்னறிவுக்கும் நமக்குத் தெளிவுப்படுத்துகிறார். நம்மைஇழக்க முன்வராது வெறும் தவச் செயல்களோடு மட்டும் இந்த தவக்காலத்தை நிறைவு செய்ய விரும்பினோம் என்றால் நமது தவக்கால முன்னெடுப்புகள் அர்த்தமற்றதாகிவிடும். நம்மைஇழக்க வேண்டும், மடிந்து பலன்தர வேண்டும் என்றால் இரண்டு செயல்கள் நம்மிலே வாழ்வாக்கப்படவேண்டும்.

1. முதல் வாசகத்திலே கேட்பதுபோல கடவுள் நம் உள்ளத்தில் பதிந்துள்ள சட்டத்தை நமதாக்கி நாம் அவரது மக்கள் என்ற உடன்படிக்கையிலே நிலைத்து வாழுகிறபோது நம்மால் மடிந்து பலன் தரமுடியும்.

2. இன்றைய இரண்டாம் வாசகத்திலே துன்புறும் தலைமைகுருவாம் இயேசு இறைமகனாயிருந்தும் துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்று குறிப்பிடுகிறார் பவுலடியார். நாமும் இயேசுவைப் பின்பற்றி துன்பங்கள் வழியே கீழ்படிதலைக் கற்றுக்கொள்கிறபோது நமது வாழ்வும் நமது தலைவர் இயேசுவின் அடிச்சுவட்டை ஒட்டியதாக, மடிந்து பலன்தரக் கூடியதாய் அமையும். இறை உடன்படிக்கையிலும், துன்பத்தின் வழி கீழ்படிதலையும் கற்று இயேசுவின் உண்மைச்சீடராய் மறைசாட்சி ஆஸ்கர் ரொமேரோவைப் போன்று மடிந்து பலன்தர இறையருள் வேண்டுவோம்.

## தவக்காலம் ஐந்தாம் வாரம் -திங்கள்

**யோசேப்பு கன்னிமரியாவின் கணவர்**

2 சாமு 7 :4-5, 12-14,16 உரோ 4:13,16-18, 22 மத் 1 : 16, 18-21, 24

இன்று அன்னையாம் திருச்சபை புனித யோசேப்பு கன்னி மரியாவின் கணவர் என்ற விழாவைக் கொண்டாடி மகிழ்கிறது. புனித

யோசேப்பை பற்றி நிறைய விவிலியத்தில் பேசப்படவில்லை என்றாலும் அவரைப் பற்றி சொல்லப்பட்ட பண்புகள் அவரது மேன்மையை சிறப்பாய் எடுத்தியம்புகிறது. ஒற்றை வரியில் யோசேப்பின் பண்பை திருவிவிலியம் சுட்டிக்காட்டியுள்ளது மத் 1:19-ல் பார்க்கிறோம், "அவர் ஒரு நேர்மையாளர்". இன்றைக்கு எங்கு நோக்கினும் பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்திருக்கிற சூழலில் நேர்மையாளராய் காண்பது அரிது. எனவே முதலில் இன்று நாம் யோசேப்பிடம் இருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் நேர்மையாய் இருத்தல்.

இரண்டாவதாக யோசேப்பு இறைசித்தத்திற்காய் காத்திருந்தார். மரியாள் அவர்கள் கூடிவாழும் முன் கருவுற்றிருந்தபோது மறைவாய் அவரை விலக்கிவிட திட்டமிட்டபோது, தன்னுடைய கனவில் பெற்ற இறைசித்தத்தை வாழ்வாக்கினார். நாமும் நம்முடைய வாழ்க்கையில் இறைசித்தத்தை எதிர்நோக்கி நமது முடிவுகளை எடுக்க வேண்டும்.

மூன்றாவதாக பிறரது துன்பத்தை தன் துன்பமாக அடையாளம் கண்டார். எனவே தான் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்காமல் மறைவாய் விலக்கிவிட விரும்பினார். பலநேரங்களில் பலரது குற்றத்தை ஊரறியச் செய்யும் நற்செய்தியாக அறிவிக்கும் நாம் பிறரது துன்பத்தை நம் துன்பமாக கண்டுகொள்ள வேண்டும்.

நான்காவதாக தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மரியாவின் மீதும், இயேசுவின் மீதும் முழுமையான அர்ப்பண உணர்வோடு பொறுப்பேற்றுக்கொண்டார். இன்று நாமும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நமது பிள்ளைகளை, பெற்றோரை அர்ப்பண உணர்வோடு பொறுப்பேற்று நடத்தினால் நம் குடும்பம் திருக்குடும்பமாக மாறும்.

யோசேப்பின் பண்புகள் நமதாகி நாமும் தூயவர்களாய் நம் இல்லங்களிலும், சமுதாயத்திலும் முன்மாதிரியாய் வாழ அவரது பரிந்துரையை நாடுவோம்.

## தவக்காலம் ஐந்தாம் வாரம் - செவ்வாய்

### நம் கடவுள் வாழ்வோரின் கடவுள்

எண் 21:4-9 யோ 8 : 21-30

எகிப்து நாட்டில் இஸ்ராயேல் மக்கள் அடிமைகளாய் வாழ்ந்தபோது அவர்களை விடுவிக்க மோசேயை இறைவன் அழைத்தபோது அவரது பெயர் என்ன? என்று மோசே வினவிய போது "இருக்கின்றவராக இருக்கிறவர் நானே" (வி.ப3:14) என்று வெளிப்படுத்திய இறைவன்

தான் வாழ்வோரின் கடவுள், வாழ்வுதர வந்த கடவுள் என்பதை மெய்பிக்கிறார். கடவுள் என்பவர் மக்களோடு வரலாற்றிலே, மனிதனுடைய அன்றாட வாழ்விலே உடனிருந்து வழிநடத்துகிறார் என்பதை பல்வேறு தருணங்களிலே புலப்படுத்தியுள்ளார். கடவுளின் பேரன்பை மறந்த இஸ்ரயேல் இனம் கடவுளுக்கும், மோசேக்கும் எதிராக எழுந்து தவறு செய்தபோது அவர்களை கண்டித்த இறைவன் அவர்கள் மனம் மாறுகிறபோது கொள்ளிவாய் பாம்பை உற்று நோக்கும் யாவரும் உயிர்பிழைப்பான் என்று கூறி உயிர்பிழைக்க செய்த கடவுள் அதன்வழி தன் மீட்புத்திட்டத்தை முன்னறிவிக்கிறார். இயேசு நம்முடைய பாவங்களுக்காய் இல்லாது சிலுவையில் உயர்த்தபடுவார், அவரது காயங்களால் நாம் குணமாகி நல்வாழ்வு பெறுவோம் என்பதை முன்னறவித்தார் இறைவன். இறைமகன் இயேசுவும் இன்றைய நற்செய்தியால் தன்னை முழுமையாகப் புரிந்து கொள்ளாத பரிசேயர்களை நோக்கி மானிடமகன் உயர்த்திய பின்பு 'இருக்கிறவர் நானே' என்று புரிந்து கொள்வீர்கள் என்று குறிப்பிடுகிறார்".

இன்றைய வாசகங்கள் கடவுள் வாழ்வோரின் கடவுளாக, தன்னை நமக்கு வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விலும் நாம் அவரை உற்றுநோக்கும்போது வாழ்வுபெறுவோம் என்பதை தெளிவுப்படுத்துகிறது. நம்மோடு வாழும் நம் கடவுளை இருக்கின்றவராக கண்டுகொள்ள நாம் தயாரா?

## தவக்காலம் ஐந்தாம் வாரம் - புதன்

**கடவுள் நம்மோடு**

தானியேல் 3:14 -20, 24, 25, 28 யோ 8 : 31-42

நவீன உலகில் இன்று மனிதர்களாகிய நாம் அதீத வளர்ச்சியைக் காண்கிறோம். இந்த அதீத வளர்ச்சி அழகான சோலைக்கு அழைத்துச் செல்வது போன்று கொண்டு சென்று பெரிய பள்ளத்தாக்கில் தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்கிறது. படைப்பு பொருட்கள் அனைத்தும் மனிதனை படைத்தவரிடம் கொண்டுபோய் சேர்க்கப்படைக்கப்பட்டவை. ஆனால் இன்று படைப்புப்பொருட்களே மனிதனுக்கு கடவுளாய் மாறிப்போனது. அலைபேசி இல்லாதபோது கூட அலைபேசி நம்மோடு இருப்பதை போன்று உணர்கின்ற நாம் கடவுள் நம்மோடு இருந்தும் நம்மோடு இல்லாத உணர்விலே பாவத்திற்கு அடிமையாகிறோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இறைமகன் இயேசு யூதர்களுக்கு

இதைத்தான் தெளிவுப்படுத்துகிறார். சட்டங்களும், உருவாக்கப்பட்ட சம்பிரதாயங்களும் மனிதனை கடவுளிடம் கொண்டு செல்லவும், கடவுள் நம்மோடு என்பதை உணர்த்தவுமேஉருவாக்கப்பட்டவை. ஆனால் வெறும் சட்டங்களை மட்டுமேகையில் பிடித்துக் கொண்டு அதன் இலக்கை மறந்த யூதர்கள், மதிப்பீட்டையும் மறந்து, கடவுளின் உடனிருப்பையும் உதறித்தள்ளினார். தாங்கள் செய்வது பாவம் என்ற உணர்வே இல்லாது வாழ்ந்ததால் தான், "உண்மையை அறிந்து கொள்ளுங்கள், அந்த உண்மைஉங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோ 8:32) என்று உரக்கச்சொல்கிறது இயேசு.

இன்றைய முதல் வாசகத்தில் வருகின்ற சாத்ராக்கு, மேசாக்கு மற்றும் ஆபேத்நெகா என்ற மூன்று இளைஞர்களும் கடவுள் நம்மோடு என்பதை உணர்ந்தால்தான் நெபுகத்னேசர் மன்னன் படைத்த பொற்சிலையை வணங்க மறுத்தனர். மன்னனின் ஆணையை மீறியதால் இவர்கள் மூவரும் தீச்சூளையில் தள்ளப்பட்டாலும் நாங்கள் வழிபடும் கடவுள் எங்களை மீட்கவல்லவர், அவர் எங்களோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையிலே துணிவோடு அதை எதிர்கொண்டு அரசரையும் கடவுள் தங்களோடு இருக்கிறார் என்பதை உணரச் செய்து உண்மைக் கடவுளை கண்டு கொள்ளச் செய்தனர்.

இன்று நம்முடைய வாழ்வு எப்படி? கடவுள் நம்மோடு என்கிற உணர்விலே எல்லாச்சூழலிலும் வாழ்ந்த இந்த மூன்று இளைஞர்களைப்போல உண்மையை நோக்கி பயணிக்கிறோமா? அல்லது யூதர்களைப் போன்று கடவுள் நம்மோடு என்கிற உணர்வற்று வாழ்கிறோமா?

## தவக்காலம் ஐந்தாம் வாரம் - வியாழன்

**அரைகுறை அறிவு ஆபத்தானதே....**

தொ. நூ 17 :3-9 யோ 8 : 51-59

தனக்குத் தெரியாததைக் கூட தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளும் மனநிலை இன்றோ, நேற்றோ பிறந்தது அல்ல என்பதற்கு இன்றைய நற்செய்திச் சான்றாக அமைகிறது. தங்களுக்குத் தெரிந்த அரைகுறை அறிவை கொண்டு, இயேசுவின் வார்த்தைகளை புரியாது அவரோடு விவாதம் செய்கிறார்கள் யூதர்கள். உனக்கு என்ன தெரியும், உன் கூற்று தவறானது, எங்களுக்கோ ஆபிரகாமைத் தெரியும், அவரைவிட நீ பெரியவனோ? என்று கேள்விக்கணைகளை தொடுத்து தங்களை அறிவாளிகளாக காட்டிக்கொள்ள விரும்பிய யூதர்கள் தங்களது

அறியாமையை ஏற்றுக்கொள்ளாது, மழுப்பிவிட்டு, இயேசுவின் மீதுதான் குற்றம் காண்கிறார்கள். அறிவுபூர்வமாய் பேசுவாக எண்ணி தங்கள் அறியாமையைத்தான் வெளிப்படுத்தினார்கள். அன்பின் மேன்மையை தனது கொரிந்தியருக்கு எழுதிய திருமுகம் 13வது அதிகாரத்தில் குறிப்பிடும் பவுலடியார், "நிறைவானது வரும்போது அறைகுறையானது ஒழிந்து போம்" (1கொரி 13:90) என்கிறார். இந்த அரைகுறையானது ஒழிந்து போக வேண்டுமென்றால் நிறைவானதை நாம் பெற வேண்டும். அந்த நிறைவைப் பெறதான் இன்றைய நற்செய்தியில் ''என் வார்த்தையை கடைபிடிப்போர் என்றுமேசாகமாட்டார்கள்" (யோ 8:51) என்று இயேசுக் குறிப்பிடுகிறார். ஆனால் அரைகுறை அறிவை கொண்ட யூதர்கள் அதை ஏற்க மறுத்தனர்.

இன்றைய நற்செய்தியில் நாம் சந்தித்த இயேசு அரைகுறை அறிவு ஆபத்தானது, நம்மைமுழுமையை நிறையை அடைய விடாது, தேடல் நிறைவைத் தேடியதாய் இருக்குமா?

''அறிவைப் பெறுவதற்கான முதல் படிகம் அறிவீனத்தை உணர்வதுதான்" ? சாக்ரட்டீசு

## தவக்காலம் ஐந்தாம் வாரம் -வெள்ளி

**<u>விமர்சனங்களை வித்தியசமாய் கையாளுவோம்</u>**

எரேமி 20 :10-13 யோ 12 : 31-42

நாட்டின் விடுதலைக்காய் பாடுபட்டு, உழைத்த மகாத்மா காந்தியடிகளின் வாழ்வை விமர்சிக்க விரும்பிய ஒருவர் அவரைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் எழுதி, ஒரு கடிதமாக காந்திக்கு அனுப்பிவைத்தார். தனது உதவியாளர் தன்னிடம் கொடுத்த கடிதத்தை படித்த காந்தி, அதிலே பெயர் இல்லாது மொட்டை கடிதமாய் அது வந்ததைக் கண்டாலும், சற்றும் சலனப்படாமல் அந்த கடிதத்திலிருந்து குண்டூசியை மட்டும் எடுத்துக் கொண்டு அந்த கடிதத்தை கிழித்து குப்பையில் போட்டுவிட்டு இந்த குண்டூசியை அங்கே வையுங்கள் நமக்கு பயன்படும் என்று கூறினாராம். சற்று அதிர்ந்து போன உதவியாளர் ஏன் இவ்வாறு செய்தீர்கள் என்று கேட்டபோது, எனக்கு எது பயன்படுமோ அதைமட்டும் நான் எடுத்துக் கொண்டேன் என்றாராம்.

பிரியமானவர்களே! வாழ்வில் விமர்சனங்கள் வருவது என்பது இயல்பானது. ஆனால் அதை நாம் எடுக்கும் விதம்தான் நம்மைபக்குவபடச்செய்கிறது என்பதை காந்தியின் இந்த வாழ்க்கை

நிகழ்வும் இன்று நாம் கேட்ட வாசகங்களும் நமக்கு எடுத்துக் கூறுகிறது. விமர்சனங்கள் வரும்போது அதை பொதுவாக நாம் 2 விதங்களில் நாம் கையாளுவதுண்டு. 1) நம்மைப்பற்றி விமர்சித்தோரிடம் சண்டையிடுவது 2) எப்படியாகினும் அவரை பழிவாங்க வேண்டும் என்று திட்டமிடுவது. ஆனால் இன்றைய வாசகங்கள் 2 விதமான புதிய யுக்திகளை நம்முன் வைக்கின்றது.

1. முதல் வாசகத்திலே எரேமியா தனக்கு எதிராக பலரும் விமர்சனங்களை எழுப்பி, பழிசுமத்துகிற வேலையில் நம்பிக்கையோடு அவர் அதை கடவுளின் கையில் ஒப்படைக்கத் துணிகிறார். அதைத்தான் ''ஆண்டவர் வலிமைவாய்ந்த வீரரைப்போல் என்னோடு இருக்கிறார். எனவே என்னைத் துன்புறுத்துவோர் இடறிவிழுவர். அவர்கள் வெற்றிபெற மாட்டார்கள். அவர்கள் விவேகத்தோடு செயல்படவில்லை (எரே 20:11) என்று குறிப்பிடுகிறார்.

2. இன்றைய நற்செய்தி வாசகத்தில் யூதர்கள் ஓய்வுநாளில் குணப்படுத்தியமைக்காய் கல்லெறிய வந்து, அவரை விமர்ச்சித்தபோது அவர்களோடு சண்டையிடாது தேர்ந்து தெளிவதைக் காண்கிறோம்.

இந்த தவக்காலம் நம்மையும் நமது வாழ்வில் விமர்சனங்கள் எழுகின்றபோது நம்பிக்கையோடு கடவுளிடம் அதை ஒப்படைத்துத தேர்ந்து தெளியவே அழைக்கின்றது. புனித பவுலடியாரும் தன்னுடைய வாழ்க்கையில் இந்த புதிய அணுகுமுறையைக் கொண்டதனால்தான் "போற்றுவார் போற்றலும் தூற்றுவார் துற்றலும் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல ; புகழுவார் புகழலும் இகழுவார் இகழலும் எங்களைப் பாதிப்பதில்லை. ஏமாற்றுவோர் என அவர்களுக்குத் தோன்றினாலும் நாங்கள் உண்மையான பணியாளர்கள்" (2கொரி 6:8) என்று சொல்ல முடிந்தது. நம்மால் இன்று பவுலடியாரைப் போல சொல்லமுடியுமா? முடியும், இயேசுவின் அணுகுமுறையும் இவைாக்கினர் ஒரேமியாலின் அணுகுமுறையும் நமதாகும்போது.

## தவக்காலம் ஐந்தாம் வாரம் - சனி

**<u>பூனைக்கு மணிகட்டும் எலியாவோம்....</u>**

எசே. 37 :21-28 யோ 11 : 45-57

ஒருமுறை எலிகள் எல்லாம் ஒன்று கூடி தங்களது நிம்மதியைக் கெடுக்கின்ற பூனைகளை ஏதாவது ஒன்று செய்ய வேண்டும் என்று

மாநாடு போட்டு பேசிக்கொண்டிருந்தது. பூனையிடமிருந்து நாம் தப்பிக்கவேண்டுமென்றால் அதற்கு மணி கட்ட வேண்டும் என்று முடிவு செய்தனர். ஆலோசனை முடிந்ததும் யார் பூனையின் கழுத்தில் மணிகட்டுவது என்று கேட்டபோது, ஒருவரும் முன்வரவில்லை. ஏனெனில் பூனைக்கு மணிக்கட்டச்சென்றால் நாம் நமது வாழ்க்கையே இழக்க நேரிடுமேஎன்று யாருமேஒத்துவராத நிலையில் ஒரு குட்டி எலி நான் மணிகட்டுகிறேன் என்று கூறி முன்வந்தது. நமது கூட்டத்தினர் நல்வாழ்வுபெற என் வாழ்வை இழந்தாலும் பரவாயில்லை என்று சொல்லிவிட்டு தூங்கிக் கொண்டிருந்த பூனையின் கழுத்தில் மணியை கட்டிவிட்டு திரும்பிய போது பூனை அந்த எலியைக்கொன்றது. தங்களுடைய நல்வாழ்வுக்காய் தன் வாழ்வை இழந்த குட்டி எலியை எண்ணி வருந்திய எலிகள் இந்த குட்டி எலியின் தியாகம்தான் இன்று நம்மைநிம்மதியாய் வாழச்செய்துள்ளது என்று பேசிக்கொண்டதாம்.

இன்றைய இறைவார்த்தை வழிபாடும் இதைத்தான் நமக்குச்சுட்டிக்காட்டுகிறது. அடக்குமுறைகளாலும், ஆணவத்தாலும், மக்களை அடக்கி ஆண்ட அதிகாரவர்க்கத்திலிருந்து அவர்களை விடுவித்து அவர்களுக்கு நல்வாழ்வு வழங்க ஒருவர் தேவைப்பட்டார். தன் உடனிருப்போரின் நல்வாழ்வுக்காய் தன் வாழ்வை இழக்கத்துணிந்த எலியை போன்று கடவுளின் மகனும் அதிகார வர்க்கத்தினருக்கு மணிகட்ட மனிதராய் பிறந்தார். அதற்காகவே தன் வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்தார். ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது என்று கயபா சொன்னதுகூட இயேசுவின் தியாக வாழ்வை குறித்துக்காட்டுவதாகத் தான் அமைகிறது.



இன்றும் இது போன்ற ஆதிக்கவர்க்கத்தினரை எதிர்த்து அடக்குமுறைகளை வீழ்த்த இச்சமூகத்திற்கு மணிகட்டும் எலிகள் தேவைப்படுகிறார்கள். நம் சமுதாயம் மாண்புபெற மாண்பிழக்கச் செய்யும் மாக்களுக்கு மணிகட்ட நாம் தயாரா?

# புனித வாரம்

## குருத்து ஞாயிறு

எசா 50:4?7, பிலி 2:6?11, மாற் 14:1? 15:47

போதகரே! ரபி! மெசியா! தாவீதின் மகனே! இறைவாக்கினரே! இறைமகனே! அற்புதரே! என்று ஆர்ப்பரித்து புகழ்ந்தது ஒரு கூட்டம்.

கலகக்காரன், குடிவெறியன், போசனப்பிரியன், பித்துப்பிடித்தவன், பாவிகளின் நண்பன், யூதரின் அரசன், கலிலேயன், தச்சன் மகன். எனவே "அவனை சிலுவையில் அறையும்" என்று வசைமொழி பாடியது இன்னொரு கூட்டம்.

**உண்மையில் இந்த மனிதன் யார்-**

எதிர்க்கப்படும் அறிகுறியாகப் பிறந்து
ஏற்றத்தாழ்வுகளை இமைகண்டு கொண்டு
அனுபவங்களை ஆசானாக்கி, சடங்குகளை செயல்பாடுகளாக்கி,
வழிபாடுகளை மாற்றத்தின் வாய்க்கால்களாய் மாற்றி
சிலுவை மரத்தால் சிகரத்தைத் தொட்டவர்
வெற்றி வீரராம் கல்வாரி நாயகன்
இயேசு கிறிஸ்துவே அந்த விடுதலை மனிதன்.

**நேர்த்தியாக தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தூதர் பன்னிருவருள்**

?ஒருவர் காட்டிக்கொடுத்தார்
?வேறொருவர் மறுதலித்தார்
?ஒருவர் நம்பவில்லை
?இருவர் பதவிகேட்டனர்
?மற்றவர் ஓடிப்போயினர்

இப்படி ஒட்டுமொத்தத்தில், இயேசுவின் வாழ்க்கை படுத்துறங்குவதற்கான பஞ்சு மெத்தையல்ல. மாறாக பாலைவனப்பாதை என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

இரண்டு வகையான பயணங்களை இன்றைய இறைவார்த்தைப் பகுதிகளில் நாம் காண்கிறோம்.

**1.இயேசுவின் மண்ணகப் பயணம் (பிலி 2:6-11) (The Spirituality of Descent)**

? சிறந்ததொரு கிறிஸ்தியல் பாடம் இது.

- கடவுள் தன்னையே வெறுமையாக்கி மனிதருக்கு ஒப்பானார். அடிமையின் உருவை ஏற்றார்.

? சாவுக்குக் கையளித்தார். அதுவும் சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்டார்.

தாழ்ச்சியின் உச்சக்கட்ட அடையாளம் இது. இதைத் தான் இன்றைய முதல் வாசகத்திலும் காண்கிறோம். அடிப்போருக்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோருக்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிபந்தனை செய்வோருக்கும் காறி உமிழ்வோருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை? (எசா 50:6)

எனவே இயேசுவுக்குக் கிடைத்த இந்த அவமான நிலை அவருடைய கோழைதனத்தால் அல்ல. அவருடைய தாழ்ச்சியால் கிடைத்த பரிசாகும்.

## 2. இயேசுவின் எருசலேம் பயணம் (The Spirituality of Ascent)

? வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேம் நுழைகிறார்

? பிலாத்துவுக்கு எதிரான அரசியல் அதிகாரத்தை மாற்றுகிற அமைதிப் பயணம்.

கழுதை ? தாழ்ச்சி, அமைதியின் அடையாளம்

மக்களின் போர்வைகள் ? சிவப்புக் கம்பளம்

ஒலிவக் கிளைகள் ? வெற்றியின் சின்னம் (ஒலிம்பிக்ஸ்)

எனவே இவையனைத்தும், இயேசுவின் மண்ணுலகப் பயணம் நிறைவடையப் போவதை படம்பிடித்துக் காட்டுகின்றன.

<u>**நடைமுறை வாழ்க்கைக்கு வருவோம்**</u>

1. துன்பத்தை ஏற்றுக்கொள்வது கோழைத்தனம் என்ற மனப்போக்கு நம் அனைவரது மத்தியிலும் பரவலாக உள்ள சிந்தனை.

? அவன் பேசத்தெரியாதவன்

? அவன் பிழைக்கத் தெரியாதவன்

? அவன் செத்தவன்.

என்றெல்லாம் சொல்லி மௌனத்தை, தாழ்ச்சியைக் கொச்சைப்படுத்துகிறோம்.

தவறும் அநீதியும், அநியாயமும் நம் பக்கம் இருந்தாலும்

? உறக்கப் பேசி

? மிரட்டிப் பேசி, தைரியமாய் பேசி

அநியாயத்தை நியாயப்படுத்தவும், பொய்யை உண்மையாக்கவும் நாம் தயங்குவதில்லை.

? என்னிடம் சொல்: பேசமாட்டாயா? உன்னைத் தீர்ப்பிடவும், விடுதலை செய்து அனுப்பவும் எனக்கு அதிகாரம் உண்டு? என்று பிலாத்து பலமுறை கேட்டபோதும் இயேசு பேசாதிருந்தார். அமைதி காத்தார். மௌனம் காத்ததால் உண்மையை சத்தமாகச் சொன்னார். நமது நடைமுறை வாழ்க்கையில் உண்மைக்கு நாம் எவ்வாறு சான்று பகர்கிறோம்?


2. அன்று இயேசுவை வரவேற்க, இயேசுவை ஆர்ப்பரிக்க சேர்ந்த கூட்டம் இயேசுவோ அல்லது அவருடைய சீடர்களோ விரும்பி சேர்த்த கூட்டமல்ல. மாறாக தாமாகவே சேர்ந்த கூட்டம்.

? இன்று தலைவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களை எவ்வாறு தொண்டர்களைச் சேர்க்கிறார்கள்.

? பணம் பட்டுவாடா செய்வது, உணவு பொட்டலங்களைக் காட்டி உட்கார வைப்பது, இலவசங்களைக் காட்டி ஏமாற்றுவது என்று

? தலைவருக்கு உரிய பாணி மாறிவிட்டது. மழுங்கடிக்கப்பட்டு விட்டது.

ஒருவேளை நாம் தலைவர்கள் என்றால், நம்மைப் பின்பற்றுவோர் காசுக்காகவும் பிழைப்புக்காகவும் சேர்ந்தவர்களா? அல்லது இலட்சியத்திற்காகவும் பிறர்நலனுக்காகவும் சேர்ந்தவர்களா?



# புனித வியாழன்

## குருத்துவம் & நற்கருணைப் பெருவிழா

(The Eucharist is the source of all Christian life (LG 11)

நற்கருணை ஒவ்வொரு கிறிஸ்துவ வாழ்வின் ஊற்றும் கொடுமுடியும் ஆகும் (இறைமக்களின் ஒளி என்கிற இரண்டாம் வத்திகான் சங்கத்தின் திருச்சபை குறித்த கொள்கைத்திரட்டு எண். 11 கூறுகிறது)

? கத்தோலிக்க திருச்சபையிலே எத்தனை கடவுள் இருப்பதை விசுவசிக்கிறோம்?

? தந்தை, மகன், தூய ஆவி என்கிற மூன்று ஆட்களாய் இருக்கிற ஒரே கடவுளை விசுவசிக்கிறோம்.

**1) நற்கருணை அன்பின் சின்னம் (symbol of love)**

தந்தையாம் கடவுள், மனிதர் நம்மீது வைத்த அன்பின் மிகுதியால் வார்த்தையாக இருந்த, இரண்டாம் ஆளாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார்.

யோவா 1:1 ? தொடக்கத்தில் வாக்கு இருந்தது ; அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது.

யோவா 3:16 ? தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு

பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார்.

யோவா 10:10 ? திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிலைவாழ்வை (நிறைவாகப்) பெறும்பொருட்டு வந்துள்ளேன். இறுதியாக, தூய பவுலடியார், இயேசுவின் இறைத்தன்மையையும் அவர் மனுவுறு ஏற்றத்தையும் அழகான கவிதையாக பிலிப்பியருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் விளக்குகிறார்.

பிலி 2:6?11 (காண்க) இணைச்சட்டம் 21:22?23

எனவே அடிப்படையிலேயே, நற்கருணை இறையன்பின் ஒப்பற்ற அடையாளமாக விளங்குகிறது. அவர் நம்மோடு தொடர்ந்து வாழ ஆசைப்படுவதை அறிவிக்கிறது. எனவே, இது வெண்ணிற அப்பமல்ல: மாறாக அன்பின் சின்னம்.

## 2) நற்கருணை ஒரு நினைவு (Memorial)

புதிய பாஸ்காவின் நினைவு

அன்று இஸ்ரயேல் மக்கள் (450ஆண்டுகள்) எகிப்தின் ? அடிமைத் தளையிலிருந்து விடுதலை வாழ்வுக்கு அழைத்துவரப்பட்டபோது, பாஸ்கா விழாவைக் கொண்டாடினர்.

**<u>ஒப்புமை:1</u>**

1. விப 12?வது அதிகாரம் ? (ஆண்டவரின் பாஸ்கா: கடந்து செல்லல்) ஒரே ஒரு செம்மறி ஆட்டுக்குட்டி ? அவர்களைக் காக்கும் சின்னமாக மாறியது.

எசாயா 52 மற்றும் 53?ம் அதிகாரம் ? அதேபோல, மனுக்குலத்தின் பாவங்களுக்காக கத்தாத செம்மறியாக இயேசு பலியானார் என்பதை இங்கு வாசிக்கிறோம்.

எசாயா 53:7 ? அவர் ஒடுக்கப்பட்டார்: சிறுமைப்படுத்தப்பட்டார்: ஆயினும் அவர்தம் வாயைத் திறக்கவில்லை. அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார்.

யோவா 1:29 ? இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்

**<u>ஒப்புமை-2</u>**

2) லேவி 16:21?22 ? இஸ்ரயேல் மக்களின் சமய வழக்கத்தில் இருந்த போக்கு ஆடு அனைவரது பாவங்களையும் சுமந்து கொண்டு பாலைவனத்தில் கொடிய மிருகங்களுக்கு பலியானது.

யோவா 19:17 ? இயேசு சிலுவையைத் தாமேசுமந்துக் கொண்டு, மண்டை ஓட்டு இடம் என்னுமிடத்திற்குச் சென்றார். புதிய ஏற்பாட்டின் போக்கு ஆடு இயேசுவே.

**<u>ஒப்புமை- 3</u>**

3) எண்ணிக்கை 21:6, 8 ? கொள்ளிவாய்ப் பாம்புகளும் வெண்கலப் பாம்பும்?

1 கொரி 1:18 ? சிலுவைப் பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே, ஆனால் மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின்

வல்லமை. புதிய ஏற்பாட்டில் சிலுவை மரத்தில் உயர்த்தப்பட்ட மீட்பின் சின்னம் (வெண்கலப் பாம்பு) இயேசுவே.

**ஒப்புமை- 4**

4) வி.ப. 16:31 ? இஸ்ரயேல் மக்கள் அவ்வுணவை மன்னா என்று அழைத்தனர்.

யோவா 6 : 58 ? விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு இதுவே: இது நம் முன்னோர் உண்ட உணவு போன்றது அல்ல. அதை உண்டவர்கள் இறந்து போனார்கள். இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வார்.

இவ்வாறு அனைவருக்கும் அனைத்துமாக மாறியுள்ள இயேசுவின் திருவுடலையும் திரு இரத்தத்தையும் நம் உண்ணும்போதெல்லாம் நாம் பருகும்போதெல்லாம் அவருடைய புரட்சிகர சீடத்துவ வாழ்விலும் நாம் பங்குபெறும் அழைப்பைப் பெற்றுள்ளோம்.

**இயேசுவின் சீடத்துவம் : பணிவிடை குருத்துவம்**

தலைவனாக இருக்க விரும்புகிறவன் அனைவருக்கும் பணியாளனாக இருக்கட்டும் என்ற மாற்று சிந்தனையை மாற்றத்தின் சிந்தனையாக இன்று இயேசு நம் அனைவரின் மனங்களிலும் விதைக்கிறார். எதையும் எதிர்பாராமல் பணியாளனாகவே இருக்க யாரும் ஆசைப்படுவதில்லை. ஆனால் இயேசுவின் சீடத்துவம் தொடக்கம் முதல் முடிவுவரை பணிவிடை குருத்துவத்தையே மையப்படுத்துகிறது. பகட்டு வாழ்க்கைக்கு மாற்றாக, அந்தஸ்துக்கும் முதலாலித்துவத்துக்கும் முழுக்குபோடும் இயேசுவின் சீடத்துவத்தில் நீங்களும் நானும் பங்கெடுக்கத் தயாரா? இயேசு குருத்துவத்தை நிறுவிய இந்நந்நாளில் நாம் அனைத்து அருட்பணியாளர்களுக்காகவும் செபிக்க வேண்டிய கடமைஉள்ளது. அருள் அடையாளங்களின் தொடக்கமாக திருமுழுக்கிலிருந்து இறந்து ஒருவரை கல்லறையில் அடக்கம் செய்யும் திருச்சடங்குவரை இறைமக்களின் நல் மேய்ப்பராக, இயேசுவின் மனநிலையோடு வாழ இத்திருநாள் வழங்கும் ஆழமுள்ள அர்த்தமுள்ள வழிபாடாகும்.

# புனித வெள்ளி

இன்று நாம் அனைவரும் நம்முடைய பாவங்கள் மற்றும் போக்கிரித்தனத்திற்காக இயேசுவை சிலுவையில் அறைந்துள்ளோம் என்கின்ற பழிவாங்கிய குணம் நம் முகத்தில் தெரிய நிற்கிறோம். தொடக்கத்தில் ஒரு அப்பாவி மற்றும் நல்லவனின் இரத்தம் சிந்தப்பட்டதற்காக காயீனிடம் கடவுள் வெகுண்டெழுந்தார். அதோடு விட்டுவிடாமல் அவன்மேல் கோபம் கொண்டு அவனைச் சபித்தார். அதே போல இன்றும் இன்னொரு அப்பாவியின் இரத்தமானது, தன்னோடு வாழ்ந்த மக்களாலேயே நிலத்தில் சிந்தப்பட்டிருக்கிறது. எனவே வானகத் தந்தை நம் எல்லோரையும் வியப்போடும் ஆச்சரியத்தோடும் பார்க்கிறார். எனவே பின்வரும் நிலைகளால் அவர் தன்னுடைய அன்புப் பிள்ளைகளாய் நம்மிடம் நியாயம் கேட்கிறார்.

**என் அன்பிற்கினிய தம்பி தங்கைகளே,**

என்னுடைய அன்பு மகனுக்கு நீங்கள் செய்திருப்பது என்ன? ஏன் என்னுடைய சாபத்தை உங்கள் மேலும் உங்கள் தலைமுறையினர் மேலும் வருவித்துக் கொள்கிறீர்கள்? நான் உங்கள் எல்லோரையும் மிகவும் அன்பு செய்தேன். எனவே தான் என்னுடைய ஒரே மகனையே உங்களுக்காக, உங்களை மீட்பதற்காக அனுப்பினேன். சரி, நான் உங்களை ஒன்று கேட்கட்டுமா? நீங்கள் என்னை எந்த அளவுக்கு அன்பு செய்திருக்கிறீர்கள்?

நான் உங்களை என் உருவிலும், சாயலிலும் உருவாக்கிறேன். என் மனதிற்கு நெருக்கமாக உங்களை அழகுற வடிவமைத்தேன். மிகவும் அழகாக உங்களை படைத்தேன். தாயின் கருவில் நீங்கள் உருவாகுமுன்பே நான் உங்களை அறிந்திருந்தேன். ஆனால் நீங்களோ என் அன்பு மகனுக்கு கொடுத்திருக்கும் பரிசைப் பாருங்கள். நீங்கள் அவர் கன்னத்தில் காரித்துப்பியும், கன்னத்தை கிழித்தும் வைத்திருக்கிறீர்கள். என் பிள்ளையின் உடலைக் கொன்றும், பல பகுதிகளாக கிழித்தும் வைத்திருக்கிறீர்கள். இதற்கெல்லாம் எனக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். ஏன், எதற்காக என்னுடைய அன்பு மகனுக்கு இதையெல்லாம் செய்தீர்கள்?

இயேசு யாரென்று உங்களுக்குத் தெரியுமா? அவன்தான் என் அன்பு பிள்ளை மற்றும் அவனில்தான் நான் மிகவும் பூரிப்படைகிறேன். அவனே வானகத்தின் எல்லையில்லா மகிழ்ச்சி. என்னுடைய படைப்புகளுக்கெல்லாம் அவனே இளவரசர். இந்த அண்ட சராசரத்திற்கே அவன்தான் முதன்மை. அவன்தான் என்னுடைய உருவம். அவனே என்னுடைய பூரிப்பு. ஆனால் இப்பொழுது

அவனை இழந்து நொறுங்கிப் போயும், வேதனையோடும் தனியே தவித்துக்கொண்டிருக்கிறேன். நான் இப்போது பிள்ளையை இழந்து தவிக்கும் அனாதை தந்தைதாய் உங்களால் ஆக்கப்பட்டேன்.

என்ன? கடவுளுக்கும் உணர்ச்சிகள் உண்டா என்று யோசிக்கிறீர்களா? நீங்கள் உங்களுடைய நேர்மையற்ற அறிவுத்திறனால் என்னை பார்த்து இத்தகைய கேள்விகளை கேட்பதை என்னால் உணர முடிகிறது. யார் நீங்கள் மற்றும் எங்கிருந்து வருகிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் என்னுடையவர்கள், என்னிலே ஒன்றரக் கலந்தவர்கள். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? நான் இறைவாக்கினர் எசாயா வழியாக ஒருமுறை சொன்னேன், பால் குடிக்கும் குழந்தையை தன் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உங்களை மறக்கவே மாட்டேன். இதோ, என் உள்ளங்கைகளில் உங்களைப் பொறித்து வைத்துள்ளேன். நீங்கள் முகத்தை மூடிக்கொண்டு அழுவீர்கள் என்றால் நானும் அழுவேன்! நீங்கள் மாரடித்துப் புலம்புவீர்கள் என்றால் நானும் புலம்புவேன். உண்மையை சொல்ல வேண்டுமானால் உங்கள் தாய் தந்தையர்களைவிட நான் உங்கள் மீது அதிக பாசம் கொண்டவன். என்னுடைய உணர்ச்சிகளும், கவலைகளும் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு கடினமானது. ஆறுதல் கூற முடியாத என் அன்பு மகனுக்கு நடந்த விபரீதத்தை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது என்முன் நடிக்காதீர்கள். என்னென்னவெல்லாம் என் மகனை சிலுவையில் அறைந்தது என்று உங்களுக்கு தெரியாததாக என்னை நம்ப வைக்காதீர்கள். வாயை மூடிக்கொண்டு உங்களுடைய மனச்சாட்சியோடு நீங்கள் பேசுங்கள். உங்களுடைய உள்மன அமைதி உங்களுக்கு எல்லாவற்றையும் எடுத்துரைக்கும். நீங்கள் வெளியிலே வெள்ளையடித்த கல்லறையாக உள்ளீர்கள். ஆனால் உங்களுக்குள் அழுகிய நாற்றம் தான் அடிக்கிறது. நீங்களோ நோய் உண்டுபண்ணக்கூடிய புழுவாக முழுவதும் உள்ளீர்கள். ஆனால் உங்களுக்குள் அழுகிய நாற்றம் தான் அடிக்கிறது. நீங்களோ நோய் உண்டுபண்ணக்கூடிய புழுவாக முழுவதும் உள்ளீர்கள். பாவம், தீமை, இருட்டு மற்றும் அழிவுச் செயல் இவையே நீங்கள் வரவேற்கும் விருந்தாளிகள். நீங்கள் என்னுடைய மதிப்பீடுகளை ஆடையாக அணிவீர்கள் என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் பாவத்தை மட்டுமேஆடையாக அணிந்துள்ளீர்கள். மேலும் உங்கள் இதயம் எனக்காக ஏங்கும் என்று நினைத்தேன். ஆனால் அதற்கு

மாறாக நீங்கள் என்னை அடித்திருக்கிறீர்கள்.

இதோ உங்கள் பாவங்களையும் மற்றும் அகில உலகத்தின் பாவங்களையும் போக்க செம்மறியாய் வந்த என் அன்பு மகனைப் பார்.

உங்களுடைய தூய்மையில்லா நடத்தைகள், போதைப் பழக்கங்கள், வன்முறை மற்றும் தேவையற்ற இணைப்புக்காக அவருடைய தூய்மையான கைகள் ஆணிகளால் அறையப்பட்டன.

உங்களுடைய தீய வழிகள், கவர்ச்சித் தன்மைகள் மற்றும் நழுவிச் செல்லும் தன்மைகளுக்காக அவருடைய தூய்மையான கால்கள் ஆணிகளால் அறையப்பட்டன. உங்களுடைய பதவி, பெயர் மற்றும் புகழுக்காக அவருடைய தூய்மையான தலை முள்முடியால் சூட்டப்பட்டது.

உங்களுடைய கீழ்த்தரமான, நிர்வாணமான மற்றும் உடம்பின் இச்சைகளுக்காக அவருடைய தூய்மையான உடலிலிருந்து ஆடைகள் நீக்கப்பட்டன.

உங்களுடைய பிரபலங்கள், அழகு மற்றும் கவர்ச்சிப் பண்புகளுக்காக அவருடைய தூய்மையான தோற்றமே கெடுக்கப்பட்டன.

எனவே உங்களுடைய அர்த்தமற்ற சடங்குமுறைகளை இப்பொழுதே நிறுத்துங்கள். நல்லவர்கள் போல நடிக்கும் பாசாங்கு தன்மையை நிறுத்துங்கள். உங்களுடைய வெளிவேடத் தன்மைக்கு இன்றே ஒரு முடிவுக்கட்டுங்கள். புகழாரம் என்கின்ற பேரில், நீங்கள் தப்பிப்பதற்கு பல வழிகளைத் கற்றுக் கொண்டீர்கள். நான் உங்களுடைய காணிக்கைகளாலும், பலியினாலும் எரிச்சலடையப்படுகிறேன். உங்களுடைய வழிபாட்டை நான் ஏற்றுக் கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது நீ மாறுவாயா?

கொடுக்கப்பட்ட அவசர மற்றும் மும்புரமான வாழ்க்கை நிலையில், நீ மாறுவாயா?

கடினமான அறிவாற்றல் மற்றும் தொழில் நுட்பத்தில் நீ மாறுவாயா?

சமயம் மிகுதிப்பாடு மற்றும் எதிர்வாதத்தன்மைகள் குறைதலின் அடிப்படையில் நீ மாறுவாயா?

கூட்டி, கழித்து, பெருக்கி, வகுத்துப் பாருங்கள்; நீங்கள் உங்கள் விருப்பப்படியே எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். நான் என்னுடைய மகனின் தியாக பலிக்காக முறையிடுவது நியாயத்தையே. உங்களுக்கு மனசாட்சி இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அவருடைய மரணத்தை அர்த்தமுள்ளதாக்குங்கள்.

# உயிர்ப்பு ஞாயிறு திருவிழிப்புத் திருப்பலி

சாவு முற்றிலும் ஒழிந்தது
வெற்றி கிடைத்தது.
சாவே உன் வெற்றி எங்கே?
சாவே உன் கொடுக்கு எங்கே? (1கொரி 15 : 54 ?55)

அன்பிற்கினியவர்களே, விழித்திருந்து எரியும் மெழுகுத்திரிகளுடன் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இவ்விரவு நேரம் சாதாரண இரவே அல்ல. அலகையின் கொடுக்கை நசுக்கிப்போட்டு, பெற்றெடுத்த தன் பிள்ளைகளுக்காக கடவுளே மனிதராகி பாவத்தின் விலைக்காக தன்னையே தாரைவார்த்து, வெற்றி வீரராய் உயிர்த்தெழுந்த புனித இரவே இவ்விரவு. இன்று நாம் நிகழ்த்துகின்ற அனைத்து திருவழிபாட்டு அடையாளங்களும் நமது மீட்பின் ஒப்பற்ற இரகசியத்தை வெளிப்படுத்துகின்றன.

**<u>வாசகங்களின் அடிப்படையில்:</u>**

ஒன்றன்பின் ஒன்றாக ஏழு வாசகங்களை நாம் வாசிக்கக்கேட்டோம். தொடக்க நூலில் கடவுள் உலகைப் படைத்ததில் இருந்து மீண்டுமாக தன் அன்பார்ந்த மைந்தர் வழியாக இவ்வுலகை மீட்டு, புதிய வானகமாகவும், புதிய வையகமாகவும் மாற்றிய அந்த மாபெரும் மறைபொருள் வெளிப்பாடு வரை அனைத்தையும் தெள்ளத்தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இன்றைய வாசகங்கள், அன்பு தான் கடவுள் செய்த அறிமுகம், அன்புதான் உலகை வெல்லும் அதிசயம், அன்பிற்கு உண்டோ அடைக்குந்தாழ் என்ற வள்ளுவரின் வாக்கு, அன்பே அனைத்துக்கும் அடிப்படை என்பதை ஆணித்தரமாக நமக்கு உணர்த்துகின்றது. இந்த இரவு நேரத்தை இவ்வளவு பக்தி பற்றுதலோடு கொண்டாடுவதற்கு அன்பே காரணம். அன்பின் மிகுதியாலேயே கடவுள் மனிதனைப் படைத்தார். படைத்தவர் நம்மைப் பார்த்துக் கொள்ளாமல் விட்டுவிடவில்லை. அதுதான் அவரது அன்பின் ஆழத்தை நமக்கு அடையாளப்படுத்துகிறது. தன் தூதர்கள், தலைவர்கள், அரசர்கள், ஆட்சியாளர்கள் வழியாக நிறைவாக்கிய கடவுள், மனிதன் இழந்த இறைமையை, புனிதத்தை தன் மகன் வழியாகவே மீட்டெடுக்க முடியும் என்றெண்ணி அவரையும் நமக்களிக்கத் திருவுளமானார். யோவான் நற்செய்தி 3:16?ல் நாம் வாசிக்கிறோம், தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு காட்டியிருந்தார்? . இதையே

இறங்கிவரும் ஆன்மீகம் என்று நாம் அழைக்கிறோம் (The Theology of the Descent ) எப்படி இறைநிலை அடைவது? என்று மனிதனுக்குத் தெரியாமல் பாவத்தில் உழன்று தவித்தபோது, கடவுளே மனிதனாகி பாவத்தின் உருவத்தை ஏற்கத் திருவுளமானார். தூய பவுலடியார் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் 2:6?11 வரையுள்ள இறைவசனங்கள் இயேசுவின் இறங்கிவந்த ஆன்மீகத்தை வெளிப்படுத்துகின்றன. ? கடவுள் வடிவில் விளங்கி அவர் .... கீழ்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்? .

இப்படி கடவுளின் மீட்புப் பணியை அன்பின் அடிப்படையில் அவர் செய்து முடித்ததை இன்றைய வாசகங்களின் பின்னணி நமக்கு விளக்குகின்றது.

**ஏறிச்செல்லும் ஆன்மீகம்:**

இயேசுவின் மானிடப் பயணத்தில் அவர் ஏறி இறங்கிய எண்ணற்ற மலைகளும் மலை அனுபவங்களும் நம் நினைவுக்கு வருகின்றன. பழைய ஏற்பாட்டில் பார்த்துக் கொண்டால் ஆராத்து மலை, சீனாய் மலை, மோரியா மலை, ஒரேபு மலை; தொடர்ந்து இயேசுவின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க எருசலேம் மலைகள் தாபோர் மலை, ஒலிவ மலை, கொல்கொத்தா மலை மற்றும் கலிலேய மலை ஆகியவை ஒவ்வொன்றும் தத்தம் சிறப்பம்சங்களைக் கொண்டவையாக உள்ளன. ஒவ்வொரு மலையனுபவமும் இறையனுபவத்தை நிறைவாக வழங்கியதை நாம் மறுக்க முடியாது. அதைவிட சிறப்பாக நாம் கவனிக்க வேண்டியதுயாதெனில், சிறப்பை அடைவதற்கு முன் சிறுமையைச் சந்திப்பதே மனித எதார்த்தம் என்பதை இந்த மலையனுபவங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**உதாரணத்திற்கு :**

| | | |
|---|---|---|
| எருசலேம் மலைகள் | ? | எருசலேம் தேவாலயத்தின் சிறப்பும் பெருமையும் |
| ஒலிவ மலை | ? | இயேசுவுக்கு தந்தையின் திருவுளம் முழுவதும் வெளிப்படுத்தப்பட்டது. |
| கொல்கொத்தா மலை | ? | இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு. |
| கலிலேய மலை | ? | இயேசுவின் விண்ணேற்பு |

எனவே, பெருமைஅடையவேண்டுமென விரும்பினால், கண்டிப்பாக சிறுமையை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டக்கூடாது.

கலிலேய மலையில் இயேசு விண்ணேற்றமடைவதற்கு முன்பாக, அவர் கொல்கொத்தா மலையில் சிதைக்கப்பட வேண்டியது அவசியமானதாக இருந்தது. தாபோர் மலையில் இயேசு உருமாறிய போதும் சீடர்களுக்கு இத்தகைய அறிவுரையையே வழங்கினார். நாம் இங்கேயே இருப்பது எத்துணை நன்று! என பேதுரு சொன்னபோது, இயேசு மகிமையை விடுத்து பாடுகளை அரவணைக்க விருப்பம் காட்டினார். எனவே ஏறிச்சென்றால் மட்டுமேஇறங்கிவந்த இறைமகனுக்கு உண்மைச் சாட்சியம் பகர முடியும் என்பதை அவர் மலையேறி நமக்கு கற்றுத்தருகிறார். பாடுகள் இன்றி பாதைகள் இல்லை; சறுக்கல்கள் இன்றி சாட்சியம் இல்லை ; வியர்வை இன்றி வெற்றி இல்லை என்று இயேசு தம் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றில் நாம் ஒவ்வொருவரும் அவருடைய பாடுகளை தனித்தனியாக நமது வாழ்க்கையில் சந்திக்க, நம் கல்வாரி மலைகளுக்கு ஏறிச் செல்ல வேண்டும். தூய அருஸ்தினார் கூறுகிறார்: ? நாம் ஈஸ்டர் கிறிஸ்தவர்கள்; அல்லேலூயாவே நமது கீதம்? . உண்மைதான்! ஆனால் ஈஸ்டர் வெற்றிக்கு நாம் தகுதியடைய முதலில் புனித வெள்ளி தியாக வாழ்வில் இயேசுவோடு இணைய வேண்டும். இதுவே நாம் ஏறிச்செல்லும் ஆன்மீகத்தின் வெளிப்பாடு!

**உண்மையா- அது என்ன-**

மனித வரலாற்றிலேயே கேட்கப்பட்ட ஞானமிக்க கேள்விகளுக்கு சிறப்புமிக்கதும் பேசப்படுவதுமான கேள்வி ? பிலாத்து இயேசுவிடம் கேட்ட கேள்விதான்! ? உண்மையா? அது என்ன?? கேள்வி கேட்ட பிலாத்து அதற்கான பதிலை எதிர்பார்த்தவன் அல்ல. கேள்வி கேட்டுவிட்டு அரண்மனை வாயிலை நோக்கிச் சென்றுவிடுகிறான். ஒருவேளை நேரம் கொடுத்திருந்தால் இயேசு உண்மைஎதுவென்று (அல்லது) யாரென்று சொல்லியிருப்பாரோ என்னவோ! ? தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், இறுதியில் தர்மமேவெல்லும் ? என்று சொல்ல நாம் கேட்டதுண்டு. உண்மையை



# தவக்காலப் பாடல்கள்

1. ஆயன் மந்தையைக் காப்பது போல
ஆண்டவர் நம்மைக் காக்கின்றார்.

2. இயேசு கிறிஸ்துவே எங்கள் ஆண்டவரே
நித்திய மகிமையின் மன்னரே உம்மைவாழ்த்துகின்றோம்

3. என்னை நேசிக்கின்றாயா 2
கல்வாரிக் காட்சியைக் கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பாயா

வானம் பூமி படைத்திருந்தும்
வாடினேன் உன்னை இழந்ததினால் ? 2
தேடி மீட்டிட பிதா அனுப்பியதால்
ஓடி வந்தேன் மானிடனாய் ? என்னை

பாவம் பாரா பரிசுத்தர் நான்
பாவி உன்னை அழைக்கின்றேன் வா ? 2
உன் பாவம் யாவும் சுமப்பேன் நான்
பாதம் தன்னில் இளைப்பாறவா

பாவத்தின் அகோரத்தைப் பார்
பாதகத்தின் முடிவினைப் பார் ? 2
பரிகாரச் சின்னமாய் கண்ட சிலுவையிலே
பலியானேன் பாவி உனக்காய் ? என்னை
உம்மைநேசிக்கின்றேன் நான் ?2
கல்வாரிக் காட்சியைக் கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பேனோ

4. கருணை தெய்வமேகண்பாரும்
என் பாவங்களை நீர் பொறுத்தருளும்

உடலும் மனமும் அறிவும் ஒன்றுசேர்ந்து
எம்மைவெறுத்ததையா

தேவக்கட்டளை வழியை மனம்
பன்முறை அறிந்தே வெறுத்ததையா
பாவச்சேற்றை வாழ்வில் எம்வாழ்வே
கொண்டு நிறைந்ததையா

பாதை தெளிவுறத் தெரிந்தும் ? அதைப்
பார்த்து நாங்கள் நடக்கவில்லை
உண்மைவிளக்கு எரிந்தும் ? அதன்
ஒளியின் அருகே வாழவில்லை
இறைவன் அன்பு அழைத்தும் ? அதை
உணர்ந்த பின்னும் திருந்தவில்லை

5. கல்மனம் கரைய கண்களும் பனிக்க
கைகளைக் குவித்தேன் இறைவா
என் மனம் வருவாய் இறைவா (2)
என்னகம் புகுந்து இதயத்தில் அமர்ந்து
பொன்னகம் புனைவாய் இறைவா (2) அங்கு

புன்மைகள் மறைந்து நன்மைகள் நிறைய
இன்னருள் தருவாய் இறைவா
பாசத்தைக் களைந்து பாவத்தை விலக்க
பாதத்தைப் பிடித்தேன் இறைவா (2) துயர்
வீசிடும் புயலும் வெகுண்டெழும் அலையும்
அமைந்திடப் பணிப்பாய் இறைவா
நான் எனும் அகந்தை நரகத்தை அழித்து
நல்லுலகமைப்போம் இறைவா (2) அங்கு
பூவெனும் இதயப் பீடத்தில் எனையே
பலியாய் அளிப்பேன் இறைவா

6. சுமைசுமந்து சோர்ந்திருப்போரே
என்னிடம் எல்லேரும் வாங்கள்

உங்களை நான் இளைப்பாற்றுவேன்
உங்களை நான் காப்பாற்றுவேன்
உங்களை நான் தேற்றுடுவேன்

உங்களை நான் ஏற்றிடுவேன்

உங்களை நான் நடத்திச் செல்வேன்
உங்களை நான் அன்பு செய்வேன்
உங்களை நான் அரவணைப்பேன்
உங்களை நான் வாழச்செய்வேன்

உங்களை நான் வளரச் செய்வேன்
உங்களை நான் ஒளிரச் செய்வேன்
உங்களை நான் மலரச் செய்வேன்
உங்களை நான் மிளிரச் செய்வேன்

7. தயை செய்வாய் நாதா என் பாவங்களை நீக்கி
அன்புடனே ஏழை என்மேல் இரக்கம் வையும்
அனுதபித்து என் பிழையை அகற்றுமையா
பாவமதை நீக்கி என்னைப் பனிபோலாக்கும்

தோசமெல்லாம் தீர்த்து என்னைத் தூய்மையாக்கும்
என் குற்றம் நானறிவேன் வெள்ளிடை மலைபோல்
தீவினையை மறவாதென் மனது என்றும் ? உம்
புனிதத்தைப் போக்கி நான் பாவியானேன் ? நீர்
தீமையென்று கருதுவதைத் துணிந்து செய்தேன்
உள்ளத்தில் உண்மையை நீர் விரும்புகின்றீர் ? என்
ஆத்துமத்தின் அந்தரத்தில் அறிவையூட்டும்
என் பாவம் தீர்ப்பாயின் தூய்மையாவேன்
பனிவெண்மைக் குயர்வாகப் புனிதமாவேன்

8. தவக்காலம் இது தவக்காலம்
விடிவுகள் மலந்திடும் அருட்காலம்
இருளின் வாழ்வு கார்காலம் ? அது
மறையவேண்டும் போர்காலம் ? 2
உறுதிகள் கொள்வோம் நிகழ்காலம் ? 2
உதய வாழ்வே எதிர்காலம்

உள்ளம் நிகழும் ஆராய்ச்சி அங்கு

பாவ  வாழ்வின் பொருட்காட்சி ? 2
கலைகள் களைந்து எழுந்திடுவோம் ? 2
நிலவும் அன்பின் அரசாட்சி

9. தேவகமாரா கேட்கிறதா என் தியான கீதம் கேட்கிறதா
இமைகள் திறந்து உங்கள் கண்கள்
எனை மட்டும் பார்கிறதா ? 2
உன்னைக் காண விழி கொடுத்தாய்

உன்னைப் பாட மொழி கொடுத்தாய்
பயணம் போக வழி கொடுத்தாய்
பாதை எங்கும் ஒளி கொடுத்தாய்
உன்னை நினைத்து உறுகிவிட்டேன்

என்னை உனக்கே கொடுத்துவிட்டேன் (2)
உனக்கே என்னைக் கொடுத்துவிட்டேன்

கண்ணீர் வெள்ளம் வருகிறது
கர்த்தர் பாதம் தொடுகிறது
என்னைப் போல ஆலயத்தில்
மெழுகுவர்த்தியும் அழுகிறது
உன்னை நினைத்து...

10. மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய்
மண்ணுக்குத் திரும்புவாய் மறவாதே என்றும்
மறவாதே மறவாதே மனிதனே
பூவும் புல்லும் போல் புவியில் வாழ்கின்றோம் ? 2
பூவும் உதிர்ந்திடும் புல்லும் உலர்ந்திடும்.
மரணம் வருவதை மனிதன் அறிவானோ ?2
தருணம் இதுவென இறைவன் அழைப்பாரோ

இறைவன் இயேசுவோ இறைப்பைக் கடந்தவர் ?2
அவரில் வாழ்பவன் இறந்தும் வாழ்கின்றான்.

11. ஊர்வலம் போகுது ?3 இறுதி ஊர்வலம் போகுது
அன்று இறைவனின் ஊர்வலம் இன்று மனிதனின்
ஊர்வலம்?2
அதில் மாண்புகள் மலர்ந்திடும் புது வாழ்வுகள் பிறந்திடும்

சுமையில்லாமல் பயணமில்லை சுவையில்லாமல்
வாழ்வுமில்லை?2 சுமைகளை விரும்பி
ஏற்றிடும் தோள்களில்
சுமையும் சுவையாகும் இறைவனின் வழியாகும்-2

வேதனையில்லாமல் பயணமில்லை
வெற்றியில்லாமல் வாழ்வுமில்லை(2)
துன்பமாம் சிலுவை வெற்றியின் சின்னம்
வேதனை உரமாகும் தேவனின் வழியாகும்?2

12. எங்கு போகிறீர் இயேசு தெய்வமே
எனக்காய் சிலுவையைச் சுமக்கும் தெய்வமே
குற்றம் எதுவும் இல்லா தேவனே
எம் குறையைத் தீர்க்கவே மரணம் ஏறிநீரே

பிறர் சுமத்தும் குற்றத்தைச் சுமக்க அருள் தாரும்
பாரச் சிலுவையோ எம் பாவச் சிலுவையோ
நீர் சுமந்தது எம் பாவச் சிலுவையோ

உன் உள்ளம் உடைந்ததோ எம்பாவ வாழ்க்கையால்
உலகின் பாவமோ சிலுவை வடிவிலே
நீர் தோளில் சுமக்கவே தளர்ந்து வீழ்ந்தீரே
எம் பாவச் சுமையினால் உன் உள்ளம் உடைந்ததோ

உடலே இரத்தத்தால் உருவில்லாமலே
எதிர் கொண்டாள் அன்னை ஏதும் பேசாமல்
அவர் உள்ளம் துடித்ததோ அன்புத் தாயின் வருகையால்

மனித வாழ்க்கையை உயர்த்தும் சிலுவையை
மறுக்க முடியாமல் சீமோன் வருந்தி சுமந்தாரே
பிறரன்பு பணியில் நிலைக்க அருள் செய்வீர்

துகள் படிந்த உம் திருமுகத்தையே
துணிந்த வெரோணிக்காள் துடைக்க வந்தாளே
நிலையாய் பதிந்ததோ உம் வதனம் துணியில்

புழுதி வீழ்ந்து எம் பாவ பளுவினால்
நீர் மீண்டும் எழுந்தது எம்மைமீட்கவே
உன் உள்ளம் உடைந்தோ என் பாவ வாழ்க்கையால்

வருந்தும் மகளிருக்கு மொழி நீர் நல்கினீர்
பாவிகள் நாங்களும் வருந்த வரம் தா
பொங்கும் கடல் போல உம் அன்பை அறிவாரோ

மூன்றாம் முறையாக நிலத்தில் வீழ்ந்திரே
கால் ஊன்றி நடந்திடும் நிலையும் தளர்ந்தீரே
என் அன்பு தேவனே எம் வாழ்வை மீட்கவா

உடைகள் களைத்திட உம்மைக் கொடுத்தீரே
மடைதிறக்கும் வெள்ளம் போல் உதிரம் சொரிந்தீரே
யாம் தூய்மையில் வாழ எமக்கு அருள்தரும்

மூன்று ஆணிகள் உம்மைத் துளைக்கவே
மீளாத் துயரினில் நீர் நொந்து வருந்தினீர்
உதிரம் வடிந்ததால் உம்மைஈந்தீரே

இன்னுயிர் அகன்றது இருளில் ஆழ்ந்தது
இயற்கை சீற்றமும் மரணம் அறிவித்தது
உம் அன்பாம் உயிரையே எமக்காய் ஈந்தீரே

துயருற்றுத் துடிக்க உள்ளம் நைந்திட
ஊயிரற்ற உடலை அன்னை சுமந்திட
ஆறாத் துயரினால் உம் அன்னை வருந்தினாள்

ஒடுங்கிய உடலோ துணியால் பொதிந்திட
நீ அடங்கிய கல்லறை உமக்குச் செந்தமல்ல
எம்பாவ செயல்களை அடக்க வரம் தாரும்

13. எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக
பழிகளைச் சுமத்தி பரிகசித்தார்?உயிர்
பறிந்திட எண்ணி தீர்ப்பளித்தார்

தாளாச் சிலுவை சுமக்க வைத்தார்?உம்மை
மாளாத் துயரால் துடிக்க வைத்தார்

விழுந்தீர் சிலுவைப் பளுவோடு மீண்டும்
எழுந்தீர் துயர்களின் நினைவோடு

தாங்கிட வொண்ணாத் துயருற்றே உம்மைத்
தாங்கிய அன்னை துயருற்றாள்

மறுத்திட முடியா நிலையிலே சீமோன்
வருந்தினார் தன்னை உம்மோடு

நிலையாய் பதிந்தது உம் வதனம்? அன்பின்
விலையாய் மாதின் சிறுதுணியில்

ஓய்ந்தீர் பளுவிளைச் சுமந்ததினால்?அந்தோ
சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்

விழிநீர் பெருக்கிய மகளிருக்கு அன்பு
மொழிநீர் நல்கி வழி தொடர்ந்தீர்

மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர்?கால்
ஊன்றி நடந்திடும் மெய் நொந்தீர்

உடைகளை களைந்திட உம்மைத் தந்தீர்?இரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர்

பொங்கிய உதிரம் வடிந்திடவே உம்மைத்
தொங்கிடச் செய்தார் சிலுவையிலே

இன்னுயிர் அகன்றது உம்மைவிட்டு பூமி
இருளினில் ஆழ்ந்தது ஒளிகெட்டு

துயருற்றுத் துடித்தார் உளம்நொந்து அன்னை
உயிரற்ற உடலினை மடிசுமந்து

ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு நீர்
அடங்கிய கல்லறை உமான்று

திருமகன் துயரத்தால்?உருகுந்தாயைக் கண்டுள்ளம்
கரையாதார் யாருண்டு?

அன்புள்ள திருமகன்?துன்பதுயர் அவஸ்தையுள்
தன் சீவன் தரக் கண்டாள்

பட்சஊரணி மாதாவே?பரிதவித்தே உம்மோடு
பாவி நான் அழச் செய்யும்

ஆதி இயேசுவை நேசித்தே?யான் அவருக்கினியனாய்
அன்பால் என்னுள்ளம் சுடும்

தேவதாயே தயை கூர்ந்து?பாவி என்னிருதயத்தில்
இயேசு காயம் பதியும்

சிலுவைக்கடியில் நின்று?தேவ தாயே உம்மோடே நான்
புலம்ப ஆசிக்கின்றேன்

கன்னிய அரச தாயே?என் கண்ணீரே உம்முடைய
கண்ணீரோ டேற்றருளும்

அன்பாம் அக்கினி மூட்டி?அடியேனைத் தீர்வை நாளில்
ஆதரிப்பீர் கன்னியே

மண் உடல் பிரிந்ததால்?வான் மோட்த்
தாத்துமம் சேர்ந்து
வாழவுஞ் செய்தருளும்

